சுடர்

அண்ணா மலர் · 1970



தில்லித் தமிழ்ச் சங்கம். மலர் 19. ✦ 60.கா

With best compliments

THE

INDO-SWISS SYNTHETIC GEM MANUFACTURING COMPANY LIMITED

MAIN ROAD METTUPALAYAM
(Coimbatore District)
INDIA

'Phone: Factory: 127 Office: 136
'Grams: "INDOSWISS"

MANUFACTURERS OF

ROUGH SYNTHETIC GEM STONE (SPINEL & CORUNDUM) IN VARIOUS COLOURS AND FINISHED ROUNDELS IN DIFFERENT SIZES. USED FOR THE MANUFACTURE OF WATCH JEWELS, CUP JEWELS.

&c. &c. &c.

SOLE DISTRIBUTORS
for Indian Union

G. S. & COMPANY

No. 6. Jaffersha Street
TIRUCHIRAPALLI-8
'Phone: 4006
Grams 'MANEK'

Rastha Gopalji
JAIPUR
'Phone: 72814
Grams 'INDOSWISS'

With best

Compliments

from:

WELL-WISHERS

To Sri. P. N. Appuswami

With best compliments from

J. G. Anantaswami

23. x. 70

Themis Pharmaceuticals

38, Suren Road,

BOMBAY-69.

HERCULES, PHILLIPS,

BSA

THREE WORLD RENOWNED BICYCLES

MADE IN INDIA BY

T. I. CYCLES OF INDIA

AMBATTUR, MADRAS-53.

Proprietors :

TUBE INVESTMENTS OF INDIA

MADRAS-1.

COPY OF LETTER

No. JE—3 (20) / 62/4351 Dated, New Delhi, the 28th June, 1962
5th Asadha 1814 (S)

Dear Sir,

Sub : EXEMPTION UNDER SECTION 11 & 88 OF THE INCOME TAX ACT, 1961, TO THE DELHI TAMIL SANGAM

Donations made to " The Delhi Tamil Sangam, New Delhi " will be exempt under Section 88 of the Income-Tax Act 1961 in the hands of donors subject to the limits and conditions prescribed in the said section.

Yours faithfully,
Sd. R. N. MUTTOO,
Commissioner of Income Tax.

PS. Original of this Certificate bears the seal of the Commissioner of Income Tax, Delhi.

FOR BETTER COMPLEXION

USE

REMY

SNOW & POWDER

With best compliments

from

SYNBIOTICS LIMITED

POST BOX NO. 129

WADI WADI, BARODA-7.

MANUFACTURERS OF

BULK ANTIBIOTICS, VITAMINS
AND
FINE CHEMICALS

PREMIER

COTTON SPINNING MILLS LTD.,

KANJIKODE WEST,
PALGHAT-7
KERALA.

Manufacturers of
QUALITY YARN
(Carded & Combed)

60s & 80s } Hank and cone.

அறிஞர் அண்ணா

தம்பிக்கு ஒரு சொல்

பச்சை விளக்காகும்—உன்
பகுத்தறிவு தம்பி
பச்சை விளக்காலே—நல்ல
பாதை பிடி, தம்பி

புரட்சிக்கவிஞர்

INDEX TO ADVERTISERS

1	Alembic Chemical Works	134
2	Alvitone Lab	39
3	Ananda Vikadan	41
4	Andhra Sugars	117
5	Aruna Sugars	141
6	Arya Vaidya Pharmacy	132
7	Abbott Laboratories	170
8	Balasubramania Foundry	129
9	Betrams-Scott	162
10	Binny	30
11	Bowreah Cotton Mills	85
12	Bliss & Cotton	93
13	British Motor Car	161
14	Cadbury Fry	191
15	Camphor & Allied	131
16	Cawnpore Woollen Mills	64
17	Century Flour Mills	30
18	Coca-Cola	78
19	Colour-Chem	122
20	Central News Agency	87
21	Dey's Medical	150
22	DGL (P) Ltd	118
23	E. Merck (I)	48
24	Easun Engg.	153
25	Enfield	97
26	Farmak Ltd	31
27	Fert & Chemicals, Travancore	150
28	Food Corporation of India	177
29	Forhans	42
30	Govt of India	88
31	GEEP	123
32	Hoechst	183
33	Hindustan Lever	191
34	Indian Tobacco	56
35	Indian Airlines	65
36	Indian Oil	163
37	Indian Bank	134
38	Indian Detonators	121
39	Indo Nippon	143
40	Indo Swiss	1
41	I. C. I.	178
42	Jairadha Industries	119
43	Kandaswamy Mudaliar	66
44	Kamal Printers	85
45	Kesoram Rayon	66
46	Kotharis	152
47	Kel Components	161
48	Larsen & Toubro	49
49	Loyal Textile Mills	163
50	Madura Mills	29
51	Mafatlal Services	57
52	Maschmeijer Jr (India)	168
53	Mocambo Restaurant	40
54	Mount Mettur Pharmaceuticals	58
55	Modi Enterprises	192
56	Modern Coffee House	176
57	M. R. Electronic	162
58	Mohan Meakin	32
59	National Company Ltd	56
60	Nirlon Synthetic Fibre	79
61	National Tobacco	94
62	Nestum	80
63	Pfizer Ltd	77
64	Premier Cotton Mills	7
65	Pharmed Pvt. Ltd.	154
66	Pure Drinks	124
67	Rallis India	183
68	Rampur Distillery	151
69	Rohit Pulp	132
70	Remy	5
71	Reckitt & Colman	151
72	Sandoz	120
73	Sanghi Motors	120
74	Shri Krishna Rao	39
75	Smith Kline & French	86
76	Standard Pharma	168
77	State Bank	133
78	Suraj Ind. Packing	131
79	South India Viscose	121
80	Southern Gas	58
81	Synbiotics Ltd	6
82	Southern Roadways	130
83	S R P Tools	133
84	Tamil Nadu Small Ind. Corpn.	119
85	Tamil Nadu Govt.	169
86	Tata Iron & Steel	50
87	Tata Chemicals	142
88	Tata Fison	184
89	Themis Pharmaceuticals	3
90	Tamilaga Unavu Viduthi	164
91	T. I. Cycles	4
92	Tinopal	144
93	Union Dairy	167
94	Union Carbide	165
95	Universal Radiators	184
96	Venkatachalam P.	96
97	Warner Hindustan	40
98	Well Wishers	95
99	Well Wishers	2
100	West Coast Paper	143
101	Wiley Eastern Pvt Ltd	154
102	Woodlands	49
103	White Horse Soap	87

சுடர்

ஸாதாரண ஸ்ரீ மலர் 19 1970

பொருளடக்கம்

பெரியார் வாழ்த்து	...	15
தமிழக முதல்வர் வாழ்த்து	...	16
புன்னகைப் பொன்முகம்	...	17
அண்ணா வரவேற்ற ஆகசுடு 15	...	33
எண்ணங்கள் எழுத்தாகி .. (கவிதைகள்)	..	43
சமயநெறியில் அண்ணா	..	51
அண்ணாவின் பேச்சு—ஒரு அம்சம்	..	59
தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள்	..	67
உயிர் காத்த உத்தமன்	..	81
அண்ணாயிசம் ஓங்குக!	..	89
அண்ணாவின் கடிதம்		98
சீர் திருத்தம் தந்த தமிழ்	..	99
ஜெபமாலை (கதை)	..	125
வரலாறு கண்ட காஞ்சி	..	135
மலேசியத் தேசிய இலக்கியம்	..	145
சமுதாயப் பணியில் திருப்பம்	..	155
கூட்டி எறி! (கவிதை)	..	165
இன்றைய அரசியல்	..	171
யாழ்ப்பாணக் கலாச்சாரத்தில் ..	..	179
தமிழின் முதல் கலைக்களஞ்சியம்	...	185
பேச்சாளர் உலகம்	...	193
அண்ணாவின் வாழ்விலே	...	199
கட்டிடம் எழுந்த கதை	...	203

குறிப்பு: கட்டுரை, கவிதைகளில் உள்ள கருத்துக்கள் மலர் ஆசிரியரின் அல்லது தமிழ்ச்சங்கத்தின் கருத்துக்களாக இருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. கருத்துக்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்பாளிகள்.

ஆசிரியர் குரல்

ஆயிரத்தோர் பூக்களிலே
அன்புமலர் ஒன்றெனவே
வாயெடுத்த பேர்களெல்லாம்
வாழ்த்திசைக்க வந்தமகன்,
கண்ணிமைகள் மூடிவிட்டான்—
காலவழி நின்றுவிட்டான்;—
எண்ணமெல்லாம் சோகநிறம்
ஏற்றிவிட்டுச் சென்றுவிட்டான்!

இந்தப் பெருமகனின் நினைவாக வருகின்ற மலரின் ஆசிரியப் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டதும், 'தமிழ் வழங்கும் நாடுகள் அனைத்தின் குரலும் இணைந்து ஒலிப்பதாக இம்மலரை உருவாக்க வேண்டும்' என்று முடிவு செய்தேன். அதற்கிசைய ஈழம், மலேசியம் முதலிய பகுதிகளின் குரல், இதிலுள்ள கவிதைகளிலும் கட்டுரைகளிலும் ஓரளவு ஒலிக்கக் காண்பீர்கள். கிடைத்த வாய்ப்பு, வசதிகளைக் கொண்டு இவ்வளவுதான் செய்ய முடிந்தது.

அரசியல், மேடைப்பேச்சு, நாடகம், புதிய இலக்கியம், சமுதாயச் சீர்திருத்தம், தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சி ஆகிய துறைகளில் ஈடுபட்டும் ஈடுபாடு கொண்டும் வாழ்ந்தவர் அண்ணா அவர்கள். எனவே, அந்தத் துறைகளில் சிறப்புப் பெற்றவர்கள் எழுதும் கட்டுரைகளைச் சேர்த்து மலருக்கு ஒரு முழுமைப் பொலிவைத் தர விரும்பினேன். நான் அணுகிய பெருமக்களில் சிலர், வழக்கம் போலவே, "இதோ அதோ" என்று நாளைக் கடத்திக்கொண்டே வந்து, கடைசியில் 'புன்முறுவல்' பூத்து விட்டார்கள்! ஆயினும் என் முயற்சி ஓரளவு நிறைவேறி உள்ளது என்றே நம்புகிறேன்,

அண்ணாவின் எழுத்துக்களையும் பேச்சுக்களையும்,—அவற்றின் மூலம் அவருடைய தனித்தன்மையையும் மீண்டும் நினைவுகூறும் வகையிலே,—அவருடைய சொல்லோவியங்களின் சில பகுதிகளையும் அவரது கருத்துமணிகளில் சிலவற்றையும் சேகரித்து இணைத்துள்ளேன். மலரில், அங்கங்கே கட்டங்களில் உள்ள சொல்மலர்கள் அனைத்தும் அண்ணாவின் கருத்துக்களே.

தமிழக அரசு செய்தி—விளம்பரத் துறையினர், "விடுதலை" ஆசிரியர் திரு. கி. வீரமணி, தி மு.க. தலைமைச் செயலகத்தைச் சார்ந்த திரு. க. சிவஞானம், திரு. சண்முகம், "நம் நாடு" ஆசிரியர் திரு. மா. செங்குட்டுவன், ஈழநாட்டுச் "சுதந்திரன்" ஆசிரியர் திரு. கோவை மகேசன் ஆகியோர் இம்மலரின் உருவாக்கத்துக்குப் (படங்கள், செய்திகள், மலர்கள், இதழ்கள் எனப் பலதந்து) பெரிதும் உதவியுள்ளார்கள். மற்றும் பல தோழர்கள் மலரின் உருவாக்கம் பற்றி நல்ல பல ஆலோசனைகளை வழங்கினார்கள்.

ஒரு சிலர் தவிர, ஏனைய தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்கள் பலரும் இந்த அண்ணா மலரணி பற்றிய செய்தியை உரிய காலத்தில் தமிழ் மக்களுக்குத் தெரிவித்தார்கள். இவர்கள் அனைவர்க்கும் என் நன்றியைத் தெரிவிப்பதோடு,—தமது 'அண்ணா அன்பாலும்' என் மீது கொண்ட நம்பிக்கையாலும்,—தம்முடைய பலகாலச் சேமிப்பாகிய இதழ்—மலர்—ஏட்டுக் களஞ்சியத்தையே எனக்குத் திறந்துவிட்ட செங்குட்டுவனாரை நெஞ்ச நிறைவோடு நினைத்துக் கொள்ளுகிறேன்.

பலர்பலர் வாரி வழங்கிய செய்திகளைத் தொகுத்து அடுக்கியதன் மூலம், இந்த மலரின் உருவாக்கத்துக்கு ஒரு கருவியாக மட்டுமே நான் இருந்தேன். இது சம்பிரதாயத்துக்காகச் சொல்வது அல்ல: இதுவே உண்மை. பல முதுபெரும் எழுத்தாள அறிஞர்கள் தங்கள் அரிய கருத்தோவியங்களை வழங்கினார்கள்; தமிழகத்திலும் ஈழவள நாட்டிலுமிருந்து,—எனக்கு அறிமுகமே இல்லாத பல அன்பர்கள்,—குறிப்புக்களையும் செய்திகளையும் தங்கள் தங்கள் வெளியீடுகளையும் ஆர்வத்தோடு அனுப்பி உதவினார்கள், தங்கள் அன்பால் என் பணியை இத்தனை எளிமைப்படுத்திய இவர்கள் அனைவரையும் நெஞ்ச நினைவுகளில் நிலைநிறுத்துகின்றேன்,

சாலை இளந்திரையன்

பெரியாரும்—அண்ணாவும்

பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவனம்
(திராவிடர் கழகம்)

தலைவர் .
ஈ. வெ. ராமசாமி

"பெரியார் மாளிகை"
திருச்சிராப்பள்ளி-17
12—8—70

அன்புள்ள அய்யா,

வணக்கம். தங்களின் அன்பான கடிதம் கிடைக்கப் பெற்றது மகிழ்ச்சி. நன்றி.

தில்லித் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் மறைந்த தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்களின் நினைவாக "அண்ணா மலர்" வெளியிட இருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைகின்றேன்.

அண்ணா அவர்களின் பெயரால் வெளியாகின்ற இம்மலர் அண்ணா அவர்களின் கொள்கை, இலட்சியம், தொண்டு, சமுதாயப்பணி ஆகியவைகளை விளக்குவதோடு மக்களின் மடைமை, அறியாமை, மூடநம்பிக்கை, முட்டாள்தனம் ஆகியவைகளைப் போக்கும் தன்மையில், சிறந்த அறிஞர்களின் கட்டுரைகளோடு சிறப்புற அமைய வேண்டுமென்று ஆசைப்படுவதோடு, போற்றுதலுக்கும் சிறப்பிற்குமுரிய இப்பணியிலீடுபட்டுள்ள தில்லித் தமிழ்ச் சங்கத்தாரை எனது உளமாரப் பாராட்டுகின்றேன்.

தங்களன்புள்ள,

ஈ. வெ. ராமசாமி

மு. கருணாநிதி
முதலமைச்சர்

அரசு தலைமைச் செயலகம்
தமிழ்நாடு
சென்னை-9

29-7-1970.

தில்லி தமிழ்ச் சங்கத்தினர் வெளியிட்டுவரும் 'சுடர்' இதழ் "அண்ணா மலராக" மலரவிருப்பது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

சொல்லைச் செயலாக்கி, சுவைத் தமிழைத் தென்றலாக்கி, அன்பின் உறைவிடமாய், பண்பின் திருவுருவாய் தமிழருக்காக—தமிழுக்காக வாழ்ந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

அவர் புகழ் கூறும் மலராக வெளிவரும், 'சுடர்' சிறப்புற அமைய எனது நல்வாழ்த்துக்கள்.

திரு. சாலை இளந்திரையன்
தில்லிப் பல்கலைக்கழகம்.
தில்லி-5.

புன்னகைப் பொன்முகம்

(இந்த வரலாறு அண்ணாவைப்பற்றி வெளிவந்துள்ள பல நூல்கள், சிறப்பு மலர்கள் முதலியவற்றின் துணை கொண்டு தொகுக்கப் பட்டது)

"இப்போது நான் அமைச்சராகிவிட்ட பிறகு எங்கெங்கோ கரங்களோ எனக்கு மாலையிடுகின்றன புதிய கரங்கள் என்பதற்காக அவற்றைப் பகைத்துக்கொள்ள மாட்டேன்; ஏனென்றால், நான் அனைவருக்கும் உரியவன். அனைவரது நல்ல நேசக் கரங்களையும் விரும்புகிறவன். சுபாவத்திலேயே பகைவர்களை நண்பர்களாக்கிக் கொள்ள வேண்டும் என்று உளமார நினைப்பவன்.."

1967ல் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற அண்ணாவுக்கு மதுரையில் ஒரு பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்த வரவேற்புக்குப் பதில் அளிக்குமுகமாக அண்ணா பேசியதின் ஒரு பகுதியே மேலே தரப்பட்டிருப்பது. ஒரு பேச்சுக்குப் பாயிரமாக அமைந்த இந்தக் குறிப்பு அண்ணாவின் வாழ்வையே சுருக்கமாகத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது. அவருடைய பொதுவாழ்வு, அதன் மூலம் சமுதாயத்தில் அவருக்குக் கிடைத்த போற்றல்— தூற்றல்கள், அவைகளை மீறி நீந்தி அவர் அடைந்த உயர்நிலை, அப்போது அவரை வந்து சூழ்ந்து கொண்டவர்கள் ஆகிய எல்லாவற்றையும் விளக்குவதோடு, பகைவரையும் நண்பராக்கிக் கொள்ளும் அண்ணாவின் பண்பையும் இக்குறிப்பு தன்னுள் பொதிந்து கொண்டுள்ளது.

1909ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15ம் நாள் காஞ்சியில் பிறந்த நடராசன் அண்ணாத்துரை, கல்வியாலும் பணிகளாலும் தமக்கே தனித்தமைந்த பேச்சு வன்மையாலும் படிப்படியாகப் பல உயர்வுகளைப் பெற்று, 1969 பிப்பிரவரி 2ம் நாள் நள்ளிரவில் உயிர் நீத்தபோது,—தமிழகம் மட்டுமல்லாமல் உலகின் கணிசமான ஒருபகுதி தன் கன்னத்திலே கண்ணீர்க்கோடு இட்டுக் கொண்டது. இந்த அறுபது ஆண்டு வாழ்வில் சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளைப் பொது வாழ்விலே கழித்த அண்ணாத்துரை அவர்கள், தமிழக வரலாற்றிலே இந்தக் குறிப்பிட்ட காலக்கட்டத்தின் தனியொரு பிரதிநிதியாக விளங்கிய கதையே அவருடைய வாழ்க்கைக் கதை; அதுவே அவருடைய வளர்ச்சிக் கதை ....

1935 வரை...

தமது இளமைக் கல்வியைக் காஞ்சிபுரத்தில் முடித்துக் கொண்ட நடராசன் அண்ணாத்துரை, உயர் படிப்புக்காகச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்தார். "இண்டர் மீடியேட்" தேர்வில் முதல்வகுப்பில் தேறிக் கல்லூரி முதல்வரின் கவனத்தைக் கவர்ந்தார். அவருடைய ஊக்க மொழிகளாலும் உதவியாலுமே, — பீ. ஏ. வகுப்பில் சேர இருந்த அண்ணா,— ஆனர்சு என்னும் பீ. ஏ. மேனிலை வகுப்பில் சேர்ந்து, 1934ம் ஆண்டில் எம். ஏ. பட்டம் பெற்றார்.

கல்லூரியில் படித்து வந்த காலத்திலேயே சென்னையிலிருந்த சில பேச்சு அரங்கங்களில் கலந்துகொண்டு, சிறந்த பேச்சாளருக்குரிய இயல்புகள் தம்மிடம் இருப்பதை வெளிப்படுத்தி வந்தார் அண்ணா. அக்காலத்தில், ஒதுக்கப்பட்டும் தாழ்த்தப்பட்டும் கிடந்த பெரும்பான்மைத் தென்னிந்தியர்களின் மேம்பாட்டுக்கு உழைப்பதையே அடிப்படைக் கொள்கையாகக் கொண்ட நீதிக்கட்சிபல இளைஞர்களைக் கவர்ந்துவந்தது. அந்தப் பெரும்பான்மைத் தமிழரில் ஒருவர் என்ற முறையிலும், தமது நாவன்மையும் சமுதாய நோக்கும் பொதுப் பணிக்கு உரிய கருவிகள் என்னும் உணர்வாலும், படிப்பை முடித்ததும் பொது வாழ்வில் ஈடுபடவே விரும்பினார் அண்ணா. ஆனால், "உத்தியோகம் புருஷ லட்சணம்", "தவிட்டுக்குச் சேவித்தாலும் சர்க்காருக்குச் சேவிக்க வேண்டும்" என்னும் பழமொழிகள் நடுத்தரக் குடும்பங்களில் செல்வாக்குப் பெற்றிருந்த காலம் அது. அண்ணாவின் பெற்றோரும் அவர் ஏதாவது "உத்தியோகம்" பார்ப்பதையே விரும்பினார்கள். குடும்ப நிலையையும் அவர்களின் விழைவையும் கருத்திற்கொண்டு, வேலை தேட முயன்றார் அண்ணா அவர் தேடிய வேலை அவருக்குக் கிடைக்கவில்லை;

கிடைத்த பள்ளி ஆசிரியர் வேலையில் அவர் நீண்டநாள் இருக்கவில்லை.

இந்த நிலையிலேதான், 1935ல் திருப்பூரில் நடந்த செங்குந்த வாலிபர் மாநாட்டில் பெரியார் ஈ. வெ. இராமசாமியைச் சந்தித்தார் அண்ணா. ஏற்கனவே நீதிக்கட்சியில் தொடர்பு கொண்டிருந்த அவருக்குப் பெரியாரின் சீர்திருத்தக் கொள்கைகள் மிகவும் பிடித்தன. எனவே, அந்த முதல் சந்திப்பே, அண்ணாவை முழுமையாகப் பெரியாரின் இயக்கத்துக்கு இழுத்துக் கொண்டது.

1937ல்...

1936ல் வெளியிடப்பட்ட சைமன்குழு அறிக்கையின் அடிப்படையில் நடந்த தேர்தலில், அதுவரை ஆளும்கட்சியாக இருந்த நீதிக்கட்சி தோல்வியடைந்தது; வெற்றிபெற்ற காங்கிரஸ் கட்சி, திரு. இராசகோபாலாச்சாரியாரின் தலைமையில் 1937ல் ஆட்சிப்

குடியரசுத்தலைவருடன் அண்ணா

பொறுப்பை ஏற்றது. முதலமைச்சரானதும், ஆச்சாரியார் தமிழ்ப் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாகக் கற்றுத்தர வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார். தமிழர் நலப் பணிகளில் ஈடுபட்டிருந்த பெரியாருக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும், இது, அரியதொரு வளர்ச்சி வாய்ப்பாக அமைந்தது. தமிழகத்தில் பொங்கி எழுந்த இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை வகைப்படுத்தி வழிநடத்தும் பொறுப்பை ஏற்றார் பெரியார்;

அண்ணுவும், நமது நாவன்மையே படைக்கலமாக அவருக்குத் துணை நின்ருர். தமிழகத்தின் பல துறைப் பெருமக்களும் இந்தி எதிர்ப்பு அணியில் திரண்டார்கள். தமிழகம் எங்கும் சூருவளிப் பயணம்செய்து இந்தி எதிர்ப்பு உணர்ச்சிக்கு உரமிட்ட அண்ணு சிறை செய்யப்பட்டார்; அவருடைய பொது வாழ்வின் முதல் அத்தியாயமும் தொடங்கியது.

மாறிய தமிழகம்

பத்தொன்பதாம் நூற்ருண்டிலும் 20ம் நூற்ருண்டின் தொடக்கத்திலும் தமிழகத்தின் சிந்தனைப் போக்கில் ஒரு பெரிய மாறுதல் ஏற்படத் தொடங்கியது: பலகாலமாக வெளிப்படா திருந்த சங்க இலக்கியம் அப்போதுதான் வெளிவந்து உலவியது; மேல்நாட்டு அறிஞர்கள் சிலர், தென்னிந்திய மக்களின் வாழ்க்கை, மொழிகள், வரலாறு முதலியவற்றை ஆராய்ந்து, "ஆரிய நாகரிகத்துக்கு இணையானதும், சில வகைகளில் அதனினும் மேம்பட்டதும் முந்தியதுமான திராவிட நாகரிகம் ஒன்று இந்தியாவின் தென் பகுதியில் நிலவியிருந்தது" என்றும், "இப்போது தமிழ் மக்களே அந்த நாகரிகத்திற்குப் பெரிதும் உரியவர்களாக விளங்குகிருர்கள்" என்றும் கருத்துத் தெரிவித்தார்கள்.

இந்து மதத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறையையே பல காலமாக மேற்கொண்டு வந்திருந்த தமிழ் மக்களில் படித்த பெருமக்கள், தாங்கள் இந்து நாகரிகத்தினும் மேம்பட்ட சமயச் சார்பற்ற ஒரு நாகரிகத்துக்கு உரியவர்கள் என்று எண்ணத் தலைப்பட்டார்கள். அத்தகைய பாரம்பரியம் உடைய தங்களின் நிலை தங்கள் மண்ணிலேயே மிகத் தாழ்ந்ததாக இருந்து வருவதை எண்ணிக் கசப்பும் கொதிப்பும் அடைந்

> **சுதந்திரம்**
>
> பெரும்பாலான மக்கள், 'சுகமாக வாழவேண்டும்' என்பதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கிருர்கள். அது தவறும் ஆகாது. அந்தச் சுகவாழ்வுக்கு, என்ன வழி என்று சிந்தித்தபோது கிடைத்த பல எண்ணங்களிலே மிக முக்கியமானது சுதந்திரம் என்ற கருத்து.

தார்கள். அரசியல், சமயம், சமுதாய நடைமுறைகள் ஆகியவற்றில் தாங்களும் தங்கள் மொழி, கலை முதலியனவும் இடம் பெறும் வண்ணம் நிலைமை மாற வேண்டும் என்று கிளர்ந்தார்கள். இதன் விளைவாகத், தென்னகத்துப் பார்ப்பனர் அல்லாத பெரியவர்கள் கூடி 1916ல் அமைத்ததே தென்னிந்திய நல உரிமைச் சங்கம். இச்சங்கம், பார்ப்பனர் அல்லாதார்க்குக் கல்வி, அலுவல் சலுகை, சமுதாயச் செல்வாக்கு முதலியன தேடித்தந்து அவர்களின் நீண்ட நாள் இழிவைப் போக்கும் பணியையே தலைமைப் பணியாகக் கொண்டிருந்தது.

இயக்கம் மலர்ந்தது

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்மானத்தைத் தமிழகக் காங்கிரஸ் இயக்கம் ஏற்றுக்கொள்ளாததால், 1925ல் அதிலிருந்து பிரிந்து, சுயமரியாதை இயக்கம் கண்டு, சீர்திருத்தப் பணியாற்றி வந்த பெரியார் இராமசாமி, ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தில் இந்த இயக்கத்தோடு ஒருங்கு இணையலானதில் வியப்பு ஏதும் இல்லை. இந்தி எதிர்ப்பு அறப்போரில் சிறை சென்ற பெரியாரை,



பிரதமருடன் அண்ணா

அவர் சிறையில் இருக்கும்போதே, 1938 டிசம்பரில் நீதிக்கட்சியினர் தங்கள் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். பெரியார் அமைத்த சுயமரியாதை இயக்கமும் நீதிக்கட்சியும் ஒரே தலைமையின் கீழ் வந்தது தமிழக அரசியலில் ஒரு முக்கியமான திருப்பத்தை உண்டாக்கியது. அதுவே, 'வெள்ளையனுக்குச் சார்பான கட்சி, சரிகைத் தலைப்பாகைக்காரர்களான சர், ராவ்பகதூர், திவான் பகதூர்களின் கட்சி' என்றெல்லாம் குறை கூறப்பட்ட நீதிக்கட்சி தனது குறைகளை ஒவ்வொன்றாகக் களைந்துகொண்டு வரவும், பொதுமக்களின் இயக்கமாகப் புதிய வடிவம் பெறவும் வாய்ப்பாயிற்று: அதுவரை "ஆங்கில ஆட்சிக்கு உட்பட்ட உரிமை ஆட்சி" என்னும் 'டொமினியன் ஸ்டேட்டஸ்' கோரிவந்த நீதிக்கட்சி, 1938ல் பெரியாரின் தலைமையில், "இந்தியாவுக்கு

முழு விடுதலை வேண்டும்" என்று தீர்மானம் நிறைவேற்றியது. 'பார்ப்பனரல்லாத மக்களின் நலன்' என்னும் நீதிக்கட்சியின் பொதுக் கோட்பாடும் 1939, 1940ம் ஆண்டுகளில், "தமிழ்நாடு தமிழருக்கே" என்னும் நாட்டுரிமை முழக்கமாக உருப்பெற்றது. 1944ல் சேலத்தில் நடந்த மாநாட்டில் நீதிக்கட்சியின் பெயரே "திராவிடர் கழகம்" என்று மாற்றப்பட்டது. அந்த மாநாட்டிலே தான் சாதி ஒழிப்பு, அந்நிய அரசு தந்த பட்டங்களைக் கைவிடுதல், அந்நிய அரசு தரும் பதவிகளை ஏற்க மறுத்தல் என்பன பற்றிய திட்டவட்டமான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

நீதிக்கட்சியின் வரலாற்றில், மேலே குறித்த மாறுதல்கள் அவ்வளவு எளிதாக நிகழ்ந்துவிடவில்லை; பார்ப்பனரல்லாத மக்களின் பெயரால் பதவிகளும் சமுதாயக் கவுரவமும் பெற்ற பெருந்தனக்காரர்கள் கடுமையான முட்டுக்கட்டைகளைப் போட்டார்கள்: பெரியாரைத் தலைமைப் பதவியிலிருந்து தள்ளிவிட முயன்றார்கள்; நீதிக்கட்சியின் பொதுச் செயலாளராகப்

மன்னர்கள்

மாடமாளிகை கூடகோபுரங்களில் மட்டுமே மன்னர்கள் பிறந்த காலம் மலையேறி விட்டது. பட்டிதொட்டிகள் எங்கணும், குடிசைகள், குச்சுவீடுகள் அனைத்தும் இந்நாட்டு மன்னர்களின் பிறப்பிடமாய்த் திகழ்ந்திடும் நேரம் இது.

பொறுப்பேற்றிருந்த அண்ணாவை உயிரச்சம் காட்டிப் பயமுறுத்திப் பார்த்தார்கள்! அண்ணா எதற்கும் அஞ்சாமல், தமது நாவன்மையாலும் செயல் திட்பத்தாலும் எதிர்ப்புகள் சரிந்து விழச் செய்தார்; திராவிடர் கழகம் என்னும் தமிழர் மறுமலர்ச்சி இயக்கம் மக்கள் ஆதரவு என்னும் வலுவான அடிப்படையின் மீது எழுந்து நின்றது. அண்ணாவுடைய அரசியல் வாழ்வுக்கும் இப்போது திட்டவட்டமான ஒரு களம் கிடைத்து விட்டது.

திராவிடத் தேசியம்

1942ல் "திராவிட நாடு" என்னும் வார இதழைத் தொடங்கினார் அண்ணா. "விடுதலை"யில் எழுதியது போலவே, 'திராவிட நாடு' இதழிலும் தனித் தமிழ்நாடு, மேன்மை பெற்ற திராவிட நாகரிகம் என்பவை பற்றி அழுத்தமான ஆதாரங்களுடன் கட்டுரைகள் எழுதினார். இவைகளின் விளைவாக, நாட்டிலே பார்ப்பனிய எதிர்ப்பு உணர்ச்சி மிகுந்து எழுந்ததோடு, தமிழ்த் திராவிடத் தேசிய உணர்ச்சி ஒன்றும் வடிவம் கொண்டது. ஆரிய இந்து மதத்தையும், அதன் துணையோடு நிலைபெற்ற சாதி அமைப்பையும் உறுதிப்படுத்தும் போக்கில் அமைந்த புராணம்,

இதிகாசம், இலக்கியம், வழிபாடு ஆகியவற்றுக்கு எதிரான குரலும் வலுவாக எழுந்தது: "ஆரிய மாயை" முதல் "கம்பரசம்" வரை அண்ணா அக்காலத்தில் எழுதிய பல நூல்கள் அந்தக் குரலின் பல்வேறு வடிவங்களே.

வழக்கமான புராணப் பிரசங்கங்களும் இலக்கிய ரசனைப் பேச்சுக்களும் மலிந்த தமிழ்ச் சொற்பொழிவு மேடை, அண்ணா வின் பகுத்தறிவுப் பிரச்சார முனைப்புக் கொண்ட பேச்சினால், புதியதோர் எழுச்சியைப் பெற்றது. தமிழ்ப் பேச்சுக்கலை, கெட்டித்துப் போன மரபுகளை மீறி, உயிர்த்துடிப்புடன் வளர லாயிற்று. புதிய மிடுக்கு, புதிய கருத்து, இளைஞர்களின் நெஞ்சை எட்டிப் பிடிக்கும்படியான பொருள்களையும் காட்சி களையும் உவமைகளாக்கும் போக்கு, குட்டிக்கதைகள், அளவான நகைச்சுவை, நாடோடிக் கதைப் பாடல்களில் வருவது போன்ற சொல்லடுக்கு—பொருள் அடுக்குகள் இவைகளே அண்ணாவின் பேச்சில் அமைந்த சிறப்பு இயல்புகள். இதனால் தமிழ் இளைஞர் உலகமே அவர் பக்கம் திரண்டுவிட்டது.

இவ்வாறு வந்தவர்களெல்லாம் கருத்துப் புதுமை கண்டே வந்திருந்தார்கள். ஆனாலும், அவர்களெல்லாம், ஆடல் பாடல் களாலேயே பெரும் பெருஞ் சிந்தனையாளர்களை இருந்த இடம் தெரியாமல் ஆக்கிய இந்துமதம் தழைத்த நாட்டின் மக்களே என்பதை அண்ணா மறக்கவில்லை; அவர்களை அவரவர்களின் இயல்புக்கும் விழைவுக்கும் ஒத்த தடங்களில் திருப்பிவிட வேண்டிய பொறுப்பு அவருக்கும் அவர் சார்ந்த இயக்கத்துக்கும் உண்டாயிற்று. எனவே, நாடகம், திரைப்படம் போன்ற கலை களில் அவர் கவனம் செலுத்த வேண்டியதாயிற்று. முள்ளை முள்ளால் எடுப்பதுபோல், நாட்டிலே மடமையையும சமுதாயக் கேடுகளையும் பரப்பிய (இலக்கியம், நாடகம், திரைப்படம் முதலிய) கலைகளைக் கொண்டே அவைகளை முறியடிக்கும் முயற்சி யில் இறங்கினார் அண்ணா.

அவருடைய பேனா நாவல்களையும், நாடகங்களையும், சிறு கதைகளையும் எழுதிக் குவித்தது. சிவாஜி கண்ட இந்து ராஜ்யம், சந்திரோதயம், நீதிதேவன் மயக்கம் போன்ற கருத்துப் பிரச்சார நாடகங்களோடு, ஓர் இரவு, வேலைக்காரி முதலான நாடகங்களை உருவாக்கியதன் மூலம் "தமிழகத்தின் பெர்னார்ட்ஷா" என்னும் சிறப்பும் அவரை வந்தடைந்தது.

ஒருபுறம் அண்ணாவின் செல்வாக்கு கொடிவீசிப் படர்ந்து கொண்டிருந்தாலும், "நாத்திகம் பேசி நாத்தழும்பேறியவர், ஆபாச நடைக்காரர், காமச்சுவைப் பேச்சுக்காரர், பொருளற்ற அடுக்குமொழிக் காதலர்" என்றெல்லாம் பலர் அவரைப் பழித்தும் வந்தார்கள். தமிழகத்தின் ஆங்கில—தமிழ் ஏடுகள் அவருக்கோ அவர் சார்ந்த இயக்கத்துக்கோ போதிய மதிப்பும்

விளம்பரமும் தரவில்லை தாழ்த்தப்பட்டும் ஒதுக்கப்பட்டும் கிடந்தவர்கட்குப் பணி செய்யப்போன அவரையும் தாழ்ந்தவ ராகவே, நாகரிக மேட்டுக்குடியினர் கருதி வந்தார்கள்.

தடம் பிரிந்தது

இதன் காரணமாகவோ அல்லது தமது பணிகளால் தமிழகம் மாறிவிட்டது என்று கருதியதாலோ, அண்ணா தமது கொள்கைகளில் சில அடிப்படையான மாறுதல்களை ஏற்று வந்திருப்பது தெரிகிறது. இதன் காரணமாகத்தானோ என்னவோ, திராவிடர் கழகத்தில் சிறிய விரிசல் ஒன்று 1947க்கு முன்பே புலனாகத் தொடங்கியது:

மாணவர்களை இயக்கத்தில் இழுப்பதைப் பெரியார் விரும்ப வில்லை; ஆயினும் திராவிட மாணவர் இயக்கம், அவருடைய வெறுப்பையும் பொருட்படுத்தாமல் செயற்பட்டது. அடுத்து, 'திராவிட கழகத்தார் எல்லோரும் கருப்புச் சட்டை அணிய

கேரள முதல்வருடன் அண்ணா

வேண்டும்' என்று பெரியார் விதித்தது அண்ணாவுக்குப் பிடிக்க வில்லை. 1947 ஆகஸ்டு 15ம் நாளைத் துக்க நாளாகக் கொண்டாட வேண்டும் என்று பெரியார் விட்ட அறிக்கையை மறுத்து, 'அது திராவிடர் கழகத்தாராகிய நமக்கும் கொண்டாட்ட நாளே' என்று அறிக்கை விட்டார் அண்ணா. அதைத் தொடர்ந்து 1947ல் தூத்துக்குடியில் நடந்த மாநாட்டில் அண்ணாவும் அவரைச் சார்ந்த சிலரும் கலந்து கொள்ளவில்லை.

1948ல் நடந்த இந்தி எதிர்ப்பு அறப்போரிலும், அதே ஆண்டில் ஈரோட்டில் நடந்த திராவிடர் கழக மாநில மாநாட்டிலும் அண்ணு வந்து கலந்து கொண்டாலும்—அவர்களுக்கிடையே ஒற்றுமை ஏற்பட்டுவிட்டது போன்ற ஒரு தோற்றம் மேம்போக்காகத் தெரிந்தாலும்—இருவரின் பிளவு அதன் பின்னர் அடியோடு மாறவே இல்லை. 1949ல் பெரியார் செய்து கொண்ட திருமணம், உள்ளுக்குள் நிலவிய பிளவை வெளியே கொண்டுவந்து நிரந்தரமாக்கிவிட்டது.

தி. மு. கழகம் பிறந்தது

பதினுலு ஆண்டுகளை ஒரு குறிப்பிட்ட திசையில் நடந்தே கழித்துவிட்ட அண்ணுவும் அவரனைய இளந்தலைமுறைத் தலைவர்களும் பெரியாரிடமிருந்து விலகி வேருெரு கட்சியில் போய்ச் சேரமுடியாத அளவுக்குத் தனி முத்திரை பெற்றிருந்தார்கள்; பேச்சையும் மூச்சையும் கொட்டி வளர்த்த கொள்கைகளைச் செயலற்றுப் போகவிட்டு ஒதுங்கி இருப்பதும் அவ்வளவு எளிதாக இல்லை. எனவே, தோழர்களின் துணையுடன் 17-9-1949ல் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்து அதன் முதலாவது பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்ருர் அண்ணு. தி. மு. கழகத்தின் தொடக்க விழாவிலேயே, அதன் அடிப்படைக் கொள்கைகளுக்கு விளக்கம் தரப்பட்டது:

"திராவிட முன்னேற்றக் கழகம் எந்தவிதத்திலும் திராவிடர் கழகத்துக்கு எதிரானது அல்ல; எதிர் நோக்கம் கொண்டதும் அல்ல; கொள்கை ஒன்றே...இரு கழகங்களும் இரு திக்குகளிலுமிருந்தும் வடநாட்டு ஏகாதிபத்தியத்தை ஒழித்து, வைதிகக் காட்டை அழித்துச் சமதர்மப் பூங்காவைத் திராவிடத்தில் செழிக்கச் செய்தல் வேண்டும்".

அடிப்படைக் கொள்கைகள் ஒன்ருக இருந்தாலும், நாளடைவில் தி. மு. கழகம் அந்தக் கொள்கைகளில் சிலவற்றைக் கைவிட்டும், சிலவற்றில் மென்மை கடைப்பிடித்தும் தனது உருவத்தை மாற்றிவரத் தலைப்பட்டது: பெரியாரின் வழியில் முழு நாத்திகம் பேசிவந்த அண்ணு, "ஒருவனே தேவன்" என்னும் கொள்கையை எடுத்துப் பேசத் தொடங்கினர். அதாவது, அவருடைய கொள்கை நாத்திகம் என்ற தடத்தை விட்டுச் சமயச் சீர் திருத்தம் என்ற தடத்துக்கு மாறியது. 1956ல் அரசியலில் நேரடிப் பங்கு கொண்டு தேர்தலில் நிற்பது என்று முடிவு செய்தபின், வடநாட்டு ஆதிக்க எதிர்ப்பு, பார்ப்பனீய எதிர்ப்பு என்னும் கொள்கைகளையும், அண்ணு, முன்பு போல் காரசாரமாக வலியுறுத்த முடியவில்லை

1952ல் தி. மு. கழகம் நேரடியாகத் தேர்தலில் ஈடுபடாவிட்டாலும், திராவிட நாடு பிரிவினையை ஆதரிப்பதாக வாக்குறுதி

அளித்தவர்களை ஆதரித்தது; 1957ல் அதையும் தேர்தல் அறிக்கையில் ஒரு பகுதியாக்கி, 15 இடங்களைப் பிடித்தது. அதே தேர்தலில் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு ஈ. வெ. கி சம்பத்து, திராவிடநாட்டுப் பிரிவினைக் கொள்கையில் நம்பிக்கை தளர்ந்தவராக, 1961ல் கழகத்திலிருந்து பிரிந்தார். இப்பிரிவு கழகத்தின் செல்வாக்கை மிகுதியாகப் பாதிக்கவில்லை. ஆயினும், 1963ல் கொண்டுவரப்பட்ட பிரிவினைத் தடைச்சட்டம் காரணமாகத் தி. மு கழகம் திராவிட நாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டது. 1967 பொதுத் தேர்தலுக்கு வரும்போது, பழைய திராவிடர் கழகக் கொள்கைகளில் பலவற்றை அண்ணாவும் கழகமும் வலியுறுத்தாமல் விடவேண்டிய சூழ்நிலை உருவாகி விட்டது.

தமிழகத்தில் தமிழ் ஆட்சி

1967 தேர்தலில் தி. மு. கழகத்துக்குக் கிடைத்த எதிர்பாராத பெரிய வெற்றி அண்ணாவின் வாழ்வில் பெரியதோர் திருப்பமாகவும் வளர்ச்சிப்படியாகவும் அமைந்தது. திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் பல்லாண்டுகளாக எடுத்துரைத்து வந்த தமிழாட்சியே உருவாகிவிட்டது போன்ற ஒரு உணர்ச்சி தமிழ் மக்களிடையே பரவியது. பல கட்சிக்காரர்கள், தி. மு. கழகத்தைக் கொள்கையில்லாக் கட்சி என்று பழித்து வந்தாலும், விடுதலை இந்திய வரலாற்றில் தமிழகத்தில் ஏற்பட்ட ஒரு பெரிய திருப்பத்துக்குத் துணைநின்ற கட்சி என்ற பெருமை அதற்கு இருக்கவே செய்கிறது. அந்தப் பெருமையில் ஒரு கணிசமான பங்கு அக்கட்சியின் நாயகனாகிய அண்ணாவுக்கே உரியது என்பதும் மிகையாகாது.

இலக்கிய உலகில்

சிறந்த மேடைப் பேச்சாளர், சீர்திருத்தவாதி, அரசியல் வாதி என்ற அளவில்—குறிப்பாக அரசியல்வாதியாக மட்டுமே —இன்று மிகுதியாகச் சித்திரிக்கப்படும் இப்பெருமகன் ஒரு சிறந்த எழுத்தாளர் என்னும் உண்மை இன்னும் போதிய அளவு வலியுறுத்தப் பெறவில்லை. இலக்கிய ஆய்வாளர்களின் எந்த அளவுகோலுக்கும் ஈடுகொடுக்கக்கூடிய சில சிறுகதை, நாடகங்களை அவர் படைத்திருந்தாலும், சீர்திருத்தப் பிரச்சார முனைப்புள்ள எழுத்து என்பதே அவருடைய படைப்புக்களின் தனித்தன்மை.

எழுத்துக்கலையைப் பற்றிய அடிப்படைக் கோட்பாடு இப்போது வெகுவாக மாறியுள்ளது: 'கலை கலைக்காகவே' என்ற கொள்கை விழுந்து, 'கலை வாழ்க்கைக்காகவே' என்னும்

கொள்கை எழுந்துள்ளது. இந்தக் கொள்கையின் ஆழ—அகலங்கள் இன்னும் தெளிவுபடுத்தப்படவில்லை. அவை தெளிவுறும்போது, அவ்வக்காலத்திய நடைமுறைகளில் படிந்துள்ள கேடுகளைச் சிவித்தள்ளி அவைகளில் இணைந்த நலன்களை ஊட்டி

அண்ணாவுடன் சங்கத்தின் முன்னாள் செயலர் திரு விசுவநாதன். நடுவில் அமர்ந்திருப்பவர், திரு செழியன் பா. உ.

ஊக்கும் கருத்துக் கூர்மை உள்ள எழுத்தே இலக்கியம்'' என்னும் கருத்து உருவாகும். அப்போதுதான், ஆய்வாளர்கள் அண்ணா போன்ற கருத்துமுனைப்பு எழுத்தாளர்களே சிறந்த இலக்கியவாணர்கள் என்பதை உணர்வார்கள்.

அரிய பண்புகள்

ஒரு தனிமனிதர் என்ற முறையில் அண்ணா எவ்வளவு பேரியல்புகள் உடையவர் என்பது அவருடைய இறுதி நாட்களில்தான் உலகுக்குத் தெரிந்தது: நீண்ட பாரம்பரியம் உடைய காங்கிரசை வீழ்த்தி, மக்கள் அவர் கழுத்தில் வெற்றி மாலையைச் சூட்டியபோது அவர் காட்டிய பொறுப்புணர்ச்சி—அடக்க உணர்ச்சி—அவருக்கு எல்லாரிடமும் நல்ல பெயரை உண்டாக்கிற்று.

1968ல் (அமெரிக்க) யேல் பல்கலைக்கழகம் அவரை வரவேற்றுப் பட்டம் வழங்கிப் பாராட்டியது. அப்போது,—பிரிவினை வாதியாகவே பலகாலம் அறியப்பட்டிருந்த அவரிடம் இந்திய அரசியல் பற்றிக் கேட்டு—மத்திய அரசுக்கு எதிராக அவர் பேசுவார் என்று எதிர்பார்த்தவர்கள் அடியோடு ஏமாந்து போனார்கள். தம் நாட்டுச் சிக்கல்களை வெளியாரிடம் விவரிக்காத அடக்கம் அவருக்குப் பெருஞ்சிறப்பைத் தந்தது.

முற்றிய நிலையில் இருந்த தமது நோய்க்கு வெளிநாட்டில் சிகிச்சை பெற்றுத் திரும்பிய அவர், மருத்துவர்களின் ஆலோசனையையும் மீறி உழைப்பில் ஈடுபட்டார். உடல் நலனைக் காரணம் காட்டித் தமது கடமையான மக்கள் பணியிலிருந்து ஒதுங்கியிருக்க அவர் மனம் ஒப்பவில்லை. எனவேதான், 2-2-1969ல் அவர் இறந்தபோது, போர்க்களத்தில் வீரனுக்கு ஏற்பட்ட வீர மரணமாகவே அதைக் கருதி, அவருக்காகத் தமிழகம் முழுமையுமே கண்ணீர் அஞ்சலி செலுத்தியது...

குறை மறைத்த கொடுமுடிகள்

அண்ணாவின் வாழ்வையும் சாதனைகளையும் நினைக்கும்போது, 'எதையும் நேர ஒழுங்குப்படிச் செய்யாதவர், எதிலும் திட்டவட்டமான விரைந்த முடிவு எடுக்காதவர், சட்டத்துக்கு அஞ்சித் தமது கட்சியின் அடிப்படைக் கொள்கையையே கைவிட்டவர்' என்றெல்லாம் சொல்லப்படுகின்ற குறைகள் நம் மனத்தில் எழுவதில்லை; ஏன், அவர் வரலாற்றை எண்ணும் போது, கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோதே அவருக்கும் இராணி அம்மையாருக்கும் திருமணம் நிகழ்ந்தது என்னும் செய்திகூட நம் நெஞ்சில் தோன்றுவதில்லை. தமிழகத்தின் ஒரு பெரிய வரலாற்று எழுச்சியில் பின்னிப் பிணைந்து, அதை உருவாக்கியும் அதனால் உருவாகியும் இயங்கிய அவருடைய வாழ்வை எண்ணும்போது, அவர் ஒரு சிலருக்கோ ஒரு குடும்பத்துக்கோ உரியவர் என்ற நினைப்பே வருவதில்லை!

தென்னிந்திய நல உரிமை இயக்கம், பெரியாரின் அனல் வேகச் சுயமரியாதைப் பகுத்தறிவுப் பிரச்சாரம், இந்த இயக்கங்களால் தமிழகத்தின் பல துறைகளிலும் எழுந்து நிமிர்ந்த ஒரு புத்துணர்ச்சி என்னும் இவைகளின் விரைவான இயக்கச் சுழற்சியில் தோன்றித் தோன்றி மறையும் ஒரு புன்னகைப் பொன் முகமாகவே அண்ணாவின் வாழ்க்கை நம் நெஞ்சில் பதிகிறது.

'Take me to your leader!'



If he has anything
to do with textiles, bring him
to Madura Mills.

Naturally.

Madura Mills represent the best in Indian textiles today.

5 lakh spindles—the biggest collection under one roof in the whole East. 10 textile units in 4 main groups (Madurai, Ambasamudram, Tuticorin and Serampore.)

Over 19,000 workers, operating nearly half a million spindles and eleven hundred looms. Annual consumption of cotton worth around Rs. 14 crores. And the quality of every product backed by one of the best equipped Textile Quality Control laboratories in India.

No wonder our fame has spread far and wide. Last year it brought us export earnings to the tune of over Rs. 7.5 crores.

When facts can speak for themselves, you'll see why we set such store by facts. They also speak for the leader. To wit: Madura Mills.

HARVESTS OF MADURAI Madura Mills Co. Ltd. Madurai.

FOOD BECOMES MORE APPETISING
WHEN PREPARED WITH
RISING SUN BRAND

MAIDA, SOOJI & ATTA

Manufactured By :

CENTURY FLOUR MILLS LIMITED

INDIAN CHAMBER BUILDING (1ST FLOOR)
ESPLANADE, MADRAS—1.

Grams : "MATHOORAN"

Phone :
Office : 21043 (2 lines
Mill : 61701

With the compliments of :

BINNY LIMITED

BUCKINGHAM & CARNATIC MILLS

SALES DEPT.,
"Carnatic House"

STEPHENSON ROAD,
MADRAS-12.

With best compliments from :

FARMAK LIMITED

REGISTERED OFFICE:

Station Road

AHMEDNAGAR

Manufacturers of:

PICKLES CHUTNEYS SQUASHES
AND SYRUPS

Suppliers of:

FIVE-MEN COMPO PACK TO THE
DEFENCE SERVICE

Phone: 718 - 719 Grams: "PICKLE"

Gold Coin

Real APPLE JUICE

Sparkling & Non sparkling

So delicious.
So nourishing

The delicate flavour and true taste of freshly picked apples make Gold Coin Real Apple Juice a perfect drink. So fresh tasting so inviting.

Over 115 years' experience distinguishes our products

MOHAN MEAKIN BREWERIES LTD. ESTD. 1855
Mohan Nagar (Ghaziabad) U.P.

MMB-NP-506

அண்ணா வரவேற்ற ஆகஸ்டு 15

டாக்டர் ந. சஞ்சீவி

(சென்னைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக உள்ள டாக்டர் சஞ்சீவி அவர்கள் தமிழகம் நன்கு அறிந்த கட்டுரையாளர், ஆய்வாளர், பேச்சாளர். நாடறிந்த சுதந்திரப் போராட்டத்துக்கு முன்பே தமிழகத்தில் விடுதலைப் போர் முரசு கொட்டிய பூலித்தேவர், மருதுபாண்டியர் ஆகியோரைப் பற்றிய ஆய்வு நூல்கள் எழுதிப் புகழ் பெற்றவர். தமிழ்ப் புதின முன்னோடியாகிய வேதநாயகம் பிள்ளை அவர்களின் வாழ்வும் பணியும் பற்றி அண்மையில் இவர் செய்துள்ள ஆய்வு குறிப்பிடத் தக்கது. அரசியல், இலக்கியம், வரலாறு ஆகிய வற்றில் ஆழ்ந்த ஈடுபாடு உடைய அவர் அண்ணா வின் ஒரு கட்டுரை பற்றிச் செய்துள்ள இக் கணிப்பை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.)

ஆகஸ்டு 15 ஆம் நாள் இந்திய வரலாற்றில் மட்டுமின்றி இன்பத் தமிழக வரலாற்றிலும்—அரசியல் தமிழிலும், தமிழ் அரசியலிலும்—தனிச்சிறப்புப் பெற்ற நாள் என்றே சொல்ல வேண்டும். காரணம், பேரறிஞர் அண்ணா ஆகஸ்டு 15 பற்றித் தமது திராவிட நாடு வார இதழில் (10-8-1947ஆம் நாள் வெளியீட்டில்) எழுதிய—பொன் தகட்டில் வைர எழுத்துக்களால் பொறிக்கத்தக்க—கட்டுரையே ஆகும்.

தலை ஊற்று

தமிழ்க் கட்டுரைக் கலையையும் தமிழக அரசியல் வரலாற்றையும் ஆய்வார்க்கு அக்கட்டுரை இன்றியமையாத கருத்துக் கருவூலமாகும். பேரறிஞர் அண்ணாவே பின்னாளில் கைவிட்டு விட்ட 'தனித்திராவிட'க் கோரிக்கை தவிர அதில் மறுக்கத் தக்கது (?)—மறக்கத்தக்கது (?)—எதுவுமே இல்லை எனலாம்.

'ஆகஸ்டு பதினைந்து' என்ற தலைப்பில் தாமே கையொப்ப மிட்டுப் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏழு பக்கங்கட்குச் சற்றே மேலாகத் 'திராவிடநாடு' இதழில் எழுதியுள்ள கட்டுரை 23 ஆண்டுகட்கு முன், 37 வயதில், பேரறிஞர் அண்ணா அவர்கட்கு இருந்த எழுத்தாற்றலையும் எண்ண ஆற்றலையும் உள்ளங்கை நெல்லிக்கனியாய் உலகுக்கு உணர்த்த வல்லதாகும். எல்லாவற் றிற்கும் மேலாக அக்கட்டுரையே பேரறிஞர் அண்ணாவின் அரசியல் வாழ்வுக்கு ஓர் அகமுக—உள்ளார்ந்த திருப்பம் என் பதும் ஊன்றிக் கற்பார்க்கு எளிதில் விளங்கத்தக்க உண்மை

யாகும். நாம் அறிந்த வகையில் இன்று தி. மு. க. நாடாளு மன்றக் கட்சியாய் மாறி ஆட்சியில் அமர்ந்திருப்பதற்கும்—ஏன்? —பெரியாரிடமிருந்து பிரிந்து தி. மு. க. தோன்றியதற்குமே தலை யூற்றாக விளங்குவது பேரறிஞர் அண்ணாவின் 'ஆகஸ்டு பதினைந்து' கட்டுரையே எனலாம். (1) இரு எதிரிகளில் ஒரு எதிரி ஒழிந்த நாள் (2) உலகம் முழுவதும் கவனிக்கும் சம்பவம் (3) நாம் பிரிட்டிஷாரின் அடிமைகள் அல்லீ (4) ஒரு தவறு இன்னொன்றுக்கு சமாதானமல்ல (5) மதிப்பை உயர்த் தும் நாள் (6) விழாக் கொண்டாடுவது தவறோ துரோகமோ அல்ல என்ற பக்கத் தலைப்புகளோடு அச்சாகியுள்ள அக்கட்டுரை திரும்பத் திரும்பப் படிக்கத்தக்கது; ஆராயத் தக்கது.

வரலாற்று வாழ்வு

"ஆகஸ்டு பதினைந்தாம் தேதி, இந்திய சுதந்திர தினம், புதிய இந்திய சர்க்காரின் அமைப்புநாள்.

ஆகஸ்டு 15ந் தேதி, பாகிஸ்தான் வெற்றி நாள். புதிய பாகிஸ்தான் சர்க்கார் அமைப்பு நாள்.

ஆகஸ்டு 15ந் தேதி, பிரிட்டிஷ் ஆட்சி, இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் ஒழியும் நாள்,

உலகிலேயே பேசப்படும் நாள்

வரலாற்றிலே இந்நாள் இடம் பெறுகிறது.

அந்நாளிலே, இந்தத் துணைக்கண்டத்திலே 200 ஆண்டு கட்கு மேலாகப் பறந்து கொண்டிருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத் யக் கொடி, பாகிஸ்தான், இந்தியா, ஆகிய இரு அரசு வட்டா ரங்களிலிருந்தும், இறங்குவதுடன், இரு இடங்களிலும் சுதந் திரக் கொடிகள் பறக்கவிடப்படுகின்றன.

இந்திய பூபாகத்திலே, பிரிட்டிஷ் ஆட்சி கூடாது, சுயாட்சி யும் சுயநிர்ணயமும் வேண்டும் என்பதற்காக முறையே காங்கி ரசும், முஸ்லீம் லீகும், பணிபுரிந்து வந்தன. ஆகஸ்டு 15ந் தேதி பிரிட்டிஷ் ஆட்சி நீங்குவதால், அந்நாள் வெற்றி நாளாகக் கொண்டாடப்படுகிறது, இருகட்சிகளால் மட்டுமல்ல இரு சர்க்காராலும்..."

இப்படி ஆரம்பமாகிறது கட்டுரை. இம்முன்னுரைப் பகுதி யாலேயே பேரறிஞருக்குப் பிரிவினையில் இருந்த ஈடுபாடு புலனா கும்; அரசியல் மாற்றத்தை அகக்கண் கொண்டு காட்சிப்படுத்

தும் ஆற்றல் அவருக்கு இருந்தமை விளங்கும்; அரசியல் விடுதலையைக் கொண்டாடுவது கட்சிகள் அல்ல சர்க்கார்கள் என்ற வேறுபாட்டை அவர்கள் அனைவருக்கும் விளங்கவைக்கும் வீறு பாடும் தெளிவாகும்.

"நாட்டு மக்கள் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்படுவதும், மக்களின் பிறப்புரிமையாகிய, சுயராஜ்யத்துக்காக, தாங்கள் சரி என்று கொண்ட திட்டங்களின்படி நடந்து அதனால் ஏற்பட்ட கஷ்டநஷ்டங்களை, சிறைவாசத்தை, தீவாந்திர சிட்சையை, தூக்குமேடையைக்கூட மனமுவந்து ஏற்றுக் கொண்ட தியாகிகளுக்கு, வீரத்தை, தியாகத்தை, கொண்ட கொள்கைக்காக கஷ்டநஷ்டம் ஏற்கவேண்டும் என்ற கோட்பாட்டை மதிக்கும் திராவிடர் கழகத்தாராகிய நாம், வீர வணக்கம் செலுத்த வேண்டும்!"

பேரறிஞர் அண்ணாவின் அடிநெஞ்சில் அழுந்திக்கிடந்த நாட்டுப் பற்று இச்சொற்களில் இருள் கிழித்து வெளி வரும் உதயசூரியனைக் காட்சி அளிக்கிறது அல்லவா?

"நிர்வாகத் தலைவரின் அறிக்கை...அதிலே, ஆகஸ்டு 15 துக்கநாள் என்று குறிக்கப்பட்டது. அதற்குப்பிறகு ஆகஸ்டு

> **தீர்ப்பு**
>
> தீர்ப்பு என்றாலே அது நியாயமானது என்று பலர் நினைக்கிறார்கள். தீர்ப்பு நியாயமானது, முடிவானது என்றால் மீண்டும் நாம் அதற்கு மேலுள்ள நீதிமன்றங்களுக்கு ஏன் செல்ல வேண்டும்?

15ல் கலந்து கொள்ளக்கூடாது என்று "விடுதலை" அறிவித்தது.

"இந்தப் போக்கு விளக்கம் தருவதாகவோ, நமது எதிர்காலத்தைச் செம்மைப் படுத்தும் முறையாகவோ தோன்றவில்லை.

"நம்முடைய வீர இளைஞர்கள் மீது, இதுநாள் வரையிலே, சுமத்தப்பட்ட பழிச்சொல், நாம் பிரிட்டிஷாரின் அடிமைகள் என்பது.

"அந்தப் பிரிட்டிஷாரின் ஆட்சி முடியும்போது, நாம் துக்கம் கொண்டாடுவது இந்தப் பழிச்சொல்லை, நாமாகவே நம்மீது சுமத்தும்படி, அவர்களை வற்புறுத்தி அழைப்பதாகும்.

"நமது வாழ்நாளில் நாம் பிரிட்டிஷ் ஏகாதிபத்ய ஆட்சியை ஏற்க விரும்பாதவர்கள்—அது ஒழியவேண்டும் என்ற நோக்க முடையவர்கள்—காங்கிரசார் பழி சுமத்தியதுபோல நாம் பிரிட்டிஷாரின் அடிமைகளல்ல என்பதை விளக்க நமக்கு இருக்கும் ஒருநாள்—, கடைசிநாள் ஆகஸ்டு 15. நாம் ஏன் அச்சந்தர்ப்பத்தை இழந்து அழியாத பழிச்சொல்லைத் தேடிக் கொள்ள வேண்டும்?..."

உள்ளத்தை உருக்கும் இச்சொற்கள் பேரறிஞரின் பழியஞ்சும் பெருந்தன்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு; வயிற்று வாழ்வினும் வரலாற்று வாழ்வே வாழ்வு என அவர் மதித்த—மாண்ட—மாண்பை நிலைநாட்டும் நேர்மொழிகள்.

"ஆகஸ்டு 15ந்தேதி பற்றி, ஏற்கனவே, பல அறிக்கைகள் வெளிவந்துவிட்டனவே இப்போது வேறுவிதமாகக் கருத்தை வெளியிட்டால் என்ன பயன்? எப்படி ஏற்கனவே கொண்ட போக்கை மாற்றிக் கொள்வது என்று கேட்கத் தோன்றும். நான் வெளியிடும் விளக்கம், சற்றுத் தாமதித்து வெளிவந்தது என்ற போதிலும், இவ்விதமான கருத்து, மத்ய திராவிடர் கழகம், கழகப் பத்திரிகை நிலையம், எல்லா ஊர்களிலுமுள்ள திராவிடர் கழகங்கள் ஆகிய இடங்கட்கு, பொள்ளாச்சி திராவிடர் கழகத்தாரால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டது.

"பொள்ளாச்சியில், திராவிடர் கழகத்தாரை, சுதந்திர விழாவில் கலந்து கொள்ளும்படி, அவ்வூர் காங்கிரசார் அழைத்தனர். அதுபோன்றே வேறுபல ஊர்களிலும் அழைப்புகள் கிடைத்தன. அழைப்புப் பெற்ற பொள்ளாச்சித் திராவிடர் கழகம், 'ஆகஸ்டு பதினைந்தாம் நாளை நாம் துக்கநாள் என்று கொள்ளக் கூடாது, உண்மையிலேயே அந்நாள் நமக்கும் மகிழ்ச்சி நாள்தான்' என்று தீர்மானம் நிறைவேற்றி, எல்லாத் திராவிடர் கழகங்களுக்கும் அனுப்பி வைத்தது.

"பொள்ளாச்சித் திராவிடர் கழகத்தார் ஏற்கனவே வெளியிட்டிருப்பதால், இப்போது நான் வெளியிடும் இந்தக் கருத்துக்கள், திடீரென, கழகத்துக்கு வந்து சேருகின்றன என்றும் கூறமுடியாது.

"இவ்வளவுதூரம், ஆகஸ்டு 15ந் தேதியைத் துக்கநாள் என்று அறிக்கைகள் மூலம் வெளியிட்டுவிட்டு, இனி எப்படி

அதனை மாற்றுவது என்று கேட்பதானால், இப்போதும் காலம் கடந்துவிடவில்லை, இனியும் மாற்ற முடியும் என்பதை விளக்க விரும்புகிறேன்.

"சில ஆண்டுகளுக்கு முன்பு, கம்பராமாயணத்தைக் கொளுத்துவதற்கெனப் பெரியார் அறிக்கை வெளியிட்டு, விசேஷ மாநாடு சேலத்தில் கூட்டப்பட்டது. நான் தலைமை வகித்தேன். காலை நிகழ்ச்சியிலே கூட்ட கம்பராமாயணம் கொளுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியே சொற்பொழிவுகள் நடைபெற்றன. பிற்பகலிலே சர் சண்முகம் தந்தி கொடுத்தார், கொளுத்த வேண்டாம் என்று. அதன் படியே, கொளுத்துவது அதே இடத்தில், அதே நேரத்தில் கைவிடப்பட்டது. அது, சரியா தவறா என்பது அல்ல, இப்

அறிவுப் பிரச்சாரம்

தாழ்ந்த தமிழகத்தை உயர்த்த வேண்டும் என்றும், இன்று மக்கள் மனதில் படிந்திருக்கும் மூடநம்பிக்கைகளை—தமிழ்ப் பண்பாட்டிற்கு மாறான கருத்துக்களை அகற்றி, அங்கே பண்டைய உயர்ந்த கருத்துக்களைக் குடியேற்ற வேண்டும் என்னும் நினைப்புகள் தோன்றியிருக்கின்றன. இந்த நினைப்புகள் பாமரமக்கள் மனத்திலும் தோன்ற, நாட்டில் எங்கும் அறிவுப்பிரச்சாரம் செய்யப்படவேண்டும்.

போது பிரச்னை. அந்தக் கடைசி நேரத்திலேயும் செய்யவேண்டுமென்று கருதப்பட்ட காரியம், வேறு ஒருவரின் யோசனையின் படி கைவிடப்பட்டது.

"ஆகவே, ஆகஸ்டு 15ந்தேதி பற்றித் திராவிடர் கழகம் தன் கருத்தை இந்த நேரத்திலும் மாற்றிக் கொள்ளமுடியும் மாற்றிக் கொள்ளலாம், முறையுங்கூடத்தான். அதற்கு முன் மாதிரியாகச் சேலம் சம்பவம் இருக்கிறது.

எனவே இப்போதும், ஆகஸ்டு 15ந்தேதிபற்றி, திராவிடர் கழகத்தின் போக்கை மாற்றலாம்".

மேற்கண்ட சொற்கள் பேரறிஞர் அண்ணவுக்கே உரிய—'அடிமடியில் கைவைக்கும்'—அசைக்கமுடியாத வாதத்திறத்துக்கு மறக்கமுடியாத மற்றுமொரு சான்று: சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திக்கிறார் பேரறிஞர் அண்ணா.

இனி, படிக்கப் படிக்க நம் மூச்சை அள்ளும் ஆகஸ்டு பதி னைந்து கட்டுரையின் மணிமுடியான பகுதி :

"இவ்வளவு கூறும் நான், இதற்கு முன்பு கழகம் எடுத்துக் கொண்ட, எந்த முக்கியமான திட்டத்துக்கும் வேலைமுறைக் கும் கட்டுப்படாமல் இருந்துவந்தவனல்ல... திட்டங்களைக் கண்டித்ததோ—மாற்றவேண்டுமென்று கூறினதோ—கட்டுக்கு அடங்க மறுத்ததோ இல்லை. ஆனால் இந்த ஆகஸ்டு 15 ந்தேதி பற்றிய பிரச்னை, உண்மையாகவே, என்போல் எண்ணற்றவர் கட்கு மனவேதனை தரக்கூடிய விதத்திலே, தவறான முறையிலே திருப்பப்பட்டிருக்கிறது. ஆகவேதான் ஆகஸ்டு 15ந் தேதியை துக்கநாள் என்று அறிவித்து, அதற்காக அறிக்கைகள் வெளி யிட்டு வருவது தவறு என்று தெரிவிக்கலானேன். ஆகஸ்டு 15ந் தேதி நாமும் கலந்து கொண்டாட வேண்டிய மகிழ்ச்சி தரும் நாள், உலகத்தின் முன்பு நம் மதிப்பை உயர்த்தும் நாள் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். நம்புவதுடன், ஆகஸ்டு 15ந்தேதி விழா கொண்டாடுவது, எந்தவகையிலும் தவறோ, துரோகமா அல்ல என்று எண்ணுகிறேன்.

"இது கட்சிக் கட்டுப்பாட்டையும் தலைவரின் அறிக்கையை யும் மீறுவதாகும் என்று கருதப்பட்டு, என்மீது ஒழுங்கு நட வடிக்கை எடுக்க முன்வருவதானாலும், என் வாழ்நாளில், பிரிட் டிஷ் ஆட்சி கூடாது என்ற கொள்கையைக் கொண்டவனே நான் என்பதை மக்களுக்குக் கூற எனக்கிருக்கும் ஒரே நாளான கடைசி நாளான, ஆகஸ்டு 15ந்தேதியின் முக்கியத்துவத்துக் காக வேண்டிக் கட்சியின் கடுமையான நடவடிக்கைக்கும் சம்மதிக்க வேண்டியவனாகிறேன்.

"தலைவரும் கட்சியும், என் போக்கு தவறு என்று கருதி என்னைக் கட்சியைவிட்டு நீக்கினாலும் நான், சமூக சீர்திருத்தம், பொருளாதார சமத்துவம், திராவிடத் தனிஅரசு என்னும் அடிப்படைக் கொள்கைகளைக் கட்சிக்கு வெளியே இருந்தாகி லும் செய்து வருவேன் என்பதைக்கூறி, இந்த அறிக்கையை முடிக்கிறேன், வணக்கம்... சி. என். அண்ணாத்துரை.

ஆம் அறிஞர் அண்ணா ஓர் உயர்ந்த மனிதர்—உணர்வுலகத் தியாகி—மனசாட்சி மனிதர். கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு முறையே அவர் உயிர்—உள்ளம்—உடல்!

With compliments from:

●

SRI KRISHNA RAO

CONTRACTOR

ANDAMAN HARBOUR WORKS

P. O. CHATHAM, PORT BLAIR.

DRINK

★ ALVITONE

★ ALVIMILK

For Extra Energy

ALVITONE LABORATORIES

PALLAVARAM MADRAS-43.

With best compliments from

Warner—Hindustan Ltd.

WARANGAL ROAD

UPPAL HYDERABAD-39 [A.P.]

MOCAMBO

THE HOME OF THE ELITE FOR LUXURY COMFORT AND INDIAN HOSPITALITY AT ITS BEST WE SERVE THE BEST. WE SERVE THE QUICK BUSINESS LUNCHES IN TOWN, WITH A CONNOIS-SEUR'S CHOICE OF DRINKS VIVIAN AND THE FABULOUS SUPERDELICS ENTERTAIN YOU AT TEA TIME. DINNER DANCE NIGHTLY WITH THE THE BEST FOOD IN TOWN AND SWEET ODIEN WITH THE VERSATILE

MOCAMBO COMBO

Phone : 24—0482 Bar : 24—9896

எல்லோரும்
இன்புற்றிருக்க
நினைப்பதுவே யல்லாமல்
வேறொன்றறியேன்
பராபரமே!

ஆனந்த விகடன் · 151 மவுண்ட் ரோடு · சென்னை

Regular Brushing With

Forhan's Toothpaste Checks Gum Troubles and Tooth Decay

Unsolicited testimonials from young and old alike praise the amazing results of Forhan's Toothpaste in checking gum troubles and tooth decay.

"I am a regular user of Forhan's Tooth Paste and Forhan's Tooth Brush. It is really very effective with pleasant smell. I have never come across any dental disease since I started using Forhan's Tooth Paste with the help of Forhan's Tooth Brush."

S.R.P., Deolali

"I take pleasure to write you that your effective Forhan's paste solved all my gum problems to my entire satisfaction. Now all the members of our family depend on Forhan's."

S.R., Howrah

* *These testimonials can be seen at any office of Geoffrey Manners & Co. Ltd.*

Forhan's the toothpaste created by a dentist

For proper dental care use Forhan's Toothpaste and Forhan's Double-Action Toothbrush night and morning...and see your dentist regularly!

FREE! COLOUR BOOKLET ON "CARE OF THE TEETH AND GUMS"

For this booklet, available in various languages, send this coupon with 10 p in stamps (to cover postage) to Manners Dental Advisory Bureau, Post Bag No. 10031, Bombay 1.

Name ....

Address ....

....

Please underline language wanted: English, Hindi, Marathi, Gujarati, Urdu, Bengali, Tamil, Telugu, Malayalam or Kannada.

CMGM

எண்ணங்கள் எழுத்தாகி...

அவர் இருந்த போதும் இறந்த போதும் தமிழ் மக்களின் நெஞ்சிலே கிளைத்த எண்ணங்கள் இவை. நினைத்தவர் பலபேர்; நிகழ்த்தியோர் சிலர்கள். அவருள்ளும் சிலரே இங்கே காண்பவர்கள்.

தலைசிறந்த பேச்சுவல்லோன் தமிழ வீரன்—
தமர்என்றும் தான்என்றும் நினைப்ப தன்றித்,
தமிழ்நாட்டின் நலத்திற்கே உயிர் உடல்கள்
அமைகஎன இரவுபகல் உழைக்கும் மேலோன்.

—புரட்சிக்கவிஞர்

பண்டுறையும் தமிழறத்தை மறைத்து வைக்கும்
பகையுளத்தை நண்பறத்தால் விளக்கம் செய்தே
வெண்டமிழால் நாடகத்தை நடித்துக் காட்டி
விழிப்புணர்ச்சி தூண்டியவர் அண்ணு அன்ருே?

—கி. அரங்கசாமி

கேடுதரும் கொள்கைகளும் தமிழர் நாட்டைக்
கிட்டிநின்ற மாயைகளும் அவனைக் கண்டால்
ஓடிஒளிந் தேபதுங்கும்! அதற்குத் தக்க
உறுதிமிகும் நெஞ்சுரத்தால் உயர்வுற் ருனே!

—க. அ. ஆறுமுகம்

ஆண்டுக்கொரு புதுமைதரும் அறிவுத் திருமாறன்—
ஆட்சிக்கொரு வழிகூறிடும் அரசுக் கலைவாணன்!
மீண்டுந்தமிழ் முடிசூடிட விரையும் படைவீரன்—
மீட்சிக்கென வேல்தாங்கிய வெற்றித்தமிழ் வேந்தன்!

—கண்ணதாசன்

மொழியால் தமிழன், இனத்தால் திராவிடன்;
வழியால் இந்தியன், வாழ்க்கையால் ஆசியன்;—
கமழ்கின்ற மனவளத்தால் காசினியில் ஒருமனிதன்!

—அய். உலகநாதன்

நெருப்பினிலே தமிழ்செய்து
நீசர்களின் முன்போட்டான்!—
தண்ணீரில் தமிழ்செய்து
தவித்தவர்கள் முன்வைத்தான்!

—காசி ஆனந்தன்

நாட்டைக் கெடுத்துவரும் நாணப் பழநூல்கள்
கேட்டைப் பெருக்கிவரும் கீழான இந்நாளில்,
மூடப் பழக்கம் முடிவுற்று மூலையிலே
ஓட உழைப்பாய்நீ, ஒப்பற்ற செந்தமிழே.

—தமிழ்மாறன்

தொட்டால் சிந்தனை சுரக்கும் ஈரோட்டுப்
பட்டறை தந்த கட்டிப் பிளாட்டினம்!
பகுத்தறிவு என்னும் பாசறை விட்டே
கள்ளரை நோக்கித் துள்ளி எழுந்தவேல்!

— முருகுசுந்தரம்

விற்றூணும் அரசியலின் கலைய ரங்கம்,
வெற்றிதரும் முத்தமிழின் இசைய ரங்கம்,
காற்றூடும் முல்லைமலர் இதழ ரங்கம்,
காஞ்சியண்ணா காட்டுகின்ற கருத்த ரங்கம்!

—குடியரசு

'ஏன்சாதி, எதற்குமதம்?' என்று கேட்க
எதுமூலம்?—பகுத்தறிவே மூலம்! எங்கள்
மேன்மைக்கிங் கார்மூலம்?—அவரே மூலம்;—
மிகச்சிறந்த அவர்பேச்சே ஆதிமூலம்!

—பொன்னிவளவன்

இடிபோட்ட பேச்சுக்கும்
இணங்காதோர் அண்ணாவின்
பொடிபோட்ட உரைக்கன்றோ
புத்துணர்ச்சி பெற்றாரே!

—இரா. இளங்குமரன்

கூப்பிட்ட குரலை மதித்தார்—உள்ள
குறைகளைத் தீர்த்திடச் சட்டம் விதித்தார்
காப்பியம் போற்றும் தலைவர்—கடமை
கண்ணியம் கட்டுப்பா டேந்திய அறிஞர்!

—மு. சிக்கந்தர்

நாராசச் சொல்கொண்டு நாள்முழுதும் திட்டிடினும்
பாராமல் தன்செயலே பார்த்திருப்பார்—'வாராமல்
வந்திட்ட மாமணியே, வாழ்க' என்று கூறிடினும்
சிந்தியார் கொண்ட சிறப்பு.

—இரா. மணவழகன்

சுமைசுமையாய்க் கனத்துவரும் சரித்தி ரத்தில்
சுவைசுவையாய் நிகழ்ச்சிகளை எழுத வைத்தான்;
குமைச்சலுள்ள அரசியலை நற்பண் பாட்டால்,
குற்றாலச் சாரலெனக் குளிரச் செய்தான்!

—கா. மு. உமர்

துன்புடையார் ஏழைகளின் துயரைப் போக்கத்
துடிதுடித்துச் செயல்புரியத் தொடங்கு தற்கு
முன்பவனை எமதூதர் மொய்ம்பில் கொண்டார்;—
முத்தமிழ்க்கும் துணைஇழப்பாய் முடிந்த தையோ!

—நாமக்கல் கவிஞர்

மக்களின் நன்மை எனும்இசையை
வழங்கும் வீணை உடைந்ததுவோ?
திக்கினில் எங்கும் தமிழ்காக்கும்
சிங்க நாதம் அடங்கியதோ?

பு. ரா. சுப்பிரமணியன்

வீணை மடியும், விரல்மடியும்,—தெய்வீக
கானம் ஒருபோதும் காற்றோடு மடிவதில்லை!

—செ. இராசதுரை

நீயி லாத மேடை—என்றும்
நெய்யி லாத சோறு!
நீயி லாத மன்றம்—தெய்வம்
நின்றி ராத கோயில்!

—மு. தியாகமணி

குலைநடுக்கம் தம்பியர்க்குக் கொடுக்க லாமோ?
கும்பிஎலாம் கொப்பறையாய்க் கொதிக்கும் போது
நிலநெடுக்கிப் புலம்புதற்கும் சொற்கள் காணோம் ;—
நீர்வளர்த்த குளிர்தமிழும் கொதிக்கக் கண்டோம்!

—கோவை இளஞ்சேரன்

நாவீறு காவிரியின் நடனம் என்றே
நாடெல்லாம் போற்றவந்த தலைவா! இன்று
சாவீறு தந்துவிட்ட தென்றல், பொய்! பொய்!
சரித்திரத்தின் பொன்னேடு சரிவதுண்டோ?...

—மீனவன்

சுதிசேர்த்துப் பண்தொடுத்துச்
சுவைப்பாட்டுத் தொடங்கையிலே
விதிசேர்த்த வேதனையோ
வீணை உடைந்ததம்மா!

—அப்துல் ரகுமான்

மேகம் கருகருத்து
மின்னல் எழக்கண்டே,
'தாகம் தணியமழை
சாய்க்கும்' என்று காத்திருந்தேன் ;—
நெஞ்சம் வறண்டதுவே,
தென்மேகம் தீய்ந்ததுவே!

—சாலை இளந்திரையன்

கனியும் மொழியும் உணர்வும்
கருத்தும் கலந்து அருத்த
இனியும் வருமோ ஒருவன்,
இவன்போலும் எம்மவர்க்கே!

—துரை. மாணிக்கம்

யாங்கள் மனம்விரும்ப ஈர்த்த ஒரேதலைவன் ;
ஈங்கெமக்கு யாவுமாய், இன்ப வழிகாட்டி ;—
மாண்ட தமிழ்க்கனலை ஆண்டிருபத் தைந்தாய்
மூண்டெறியச் செய்த மூதறிஞன்!

—ஆனந்தம்

அலைகடல் முழக்கம் பேச்சில் இருக்கும்,
அரிமா உருவம் அதனுல் பிறக்கும்!
அன்னை தமிழான் வாழும் வரைக்கும்
அண்ணு பெயரும் அழியாதிருக்கும்!

—து. காசிநாதன்

கூட்டில் இருந்த தமிழரசி
கூவித் திரிந்து பறந்திடவே,
கொள்கை வீரா! தமிழ்நாடு
கோட்டம் அமைத்தாய்! புகழ் கொண்டாய்!

—சொக்கு சுப்பிரமணியன்

தமிழ்வானில் வட்டமிட்டுச் சுற்றிச்சுற்றித்
தனக்குநிகர் இல்லையெனப் பாடிப்பாடி
அமிழ்தனைய இசைபரப்பி நம்மை எல்லாம்
அகம்மகிழச் செய்ததொரு வானம் பாடி...

—முடியரசன்

குறள்குறளாய்நம் அண்ணுவின்
குணத்தைப் புலவர் பாடுகிருர் ;
கூற்றும் தலையைக் குனிந்துகொண்டே
கொற்றப் புகழைக் காணுதடா!

—சுத்தானந்தபாரதி

இன்னுமவர் எழுதிவைத்துச் சென்றி ருந்தால்
எத்தனையோ கருத்துக்கள் கிடைத்தி ருக்கும் ;—
இன்னுமவர் ஓய்வெடுத்துக் கொண்டி ருந்தால்
இதற்குள்ளே எமன்சந்தித் திருக்க மாட்டான்!

—சுரதா

300 YEARS MERCK DARMSTADT 1668–1968

E. Merck

DARMSTADT
GERMANY

E. MERCK (INDIA) PRIVATE LIMITED

HEAD OFFICE: SHIV SAGAR ESTATE 'A', DR. ANNIE BESANT ROAD, WORLI, BOMBAY-18 WB.
BRANCHES: BOMBAY • CALCUTTA • DELHI • MADRAS

Attention Tourists!

Grams : WOODLANDS, MADRAS

Phone : 83111 (16 lines)
Telex : MS 7198

STAY AT

WOODLANDS HOTEL

1/23, Edward Elliots Road
MYLAPORE, MADRAS-4.

BRANCHES:

Madras Woodlands Hotel

5, Sampangi Tank Road
BANGALORE-25

Phone : 74111
Tex : BG. 399

WOODLANDS HOTEL

Jog Falls, Shimoga District
Phone : 22

K. KRISHNA RAO
Founder

WITH COMPLIMENTS FROM:

LARSEN & TOUBRO LIMITED

ENGINEERS

P. O. Box 278
BOMBAY

P. O. Box 619
CALCUTTA

P. O. Box 323
NEW DELHI

Post Bag No. 5247
MADRAS.

எங்கள் பலம் எஃகும்,
மக்களுமே. மனிதன் வெறும்
உணவினால் மட்டுமே உயிர்
வாழ்வதில்லை. ஆதலால்
நாங்கள் ஜாம்ஷெட்பூரில் இசை,
நடனம் மற்றும் மனிதனுடைய
உணர்ச்சிகளை வெளிப்படுத்தும்
இதர கலைகளையும் பேணி
வளர்த்து வருகிறோம்.
டாடா ஸ்டீல்
TS-7050A

சமய நெறியில் அண்ணா

கரிகாலன்

(அண்ணாவைப் பற்றி இதுவரை வெளிவந்துள்ள புத்தகங்களுள் "அண்ணா—ஒரு நோக்கு" என்னும் புத்தகம் மிக முக்கியமானது. அண்ணாவின் பலதுறைச் சாதனைகளைத் தெளிவாக ஆராய்ந்து விளக்கும் இதன் ஆசிரியரான திரு. கரிகாலன் ஈழநாட்டைச் சேர்ந்தவர். லண்டன் பல்கலைக்கழக பீ. ஏ. பட்டதாரியான இவர், இன்று அரசியலில் இருந்து ஒதுங்கியிருப்பினும், பலகாலம் தமது பேச்சாலும் எழுத்தாலும் சிறந்த அரசியல் பணி புரிந்தவர். தமிழர் நல அறப்போரில் ஈடுபட்டுச் சிறை சென்றவர். சீர்திருத்தக் கட்டுரைகளும் சமுதாயக் கருத்துக்களை ஊட்டும் சிறுகதைகளும் எழுதிப் புகழ்பெற்றவர். அண்ணாவைப்பற்றி அவர் எழுதியுள்ள நூலில் உள்ள ஒரு கட்டுரையின் சில பகுதிகளை இங்கே தருகிறோம்.)

அண்ணாவின் சமயநெறி விவாதத்திற்கு விளைநிலமாகும். மத மாச்சரியங்களைச் சாடுவதில் அண்ணா தொடக்க காலத்தில் காட்டிய தீவிரமும், இடைக்காலத்திலே இப்போக்கில் விரவிய இங்கிதமும், இறுதிக்காலத்திலே உறுதியாக நிறுவப்பட்ட 'சமரச சகவாழ்வு' கொள்கையும் சமயத்துறையில் அன்னாரை அடையாளம் கண்டு கொள்வதில் மயக்கத்தை உண்டு பண்ணுவன. சமயத்துறையில் அண்ணாவின் நிலை பற்றி மூன்றுவிதமான கருத்துக்கள் நிலவ இடமுண்டு. (1) கடவுளையே மறுத்துரைத்த நாத்திகன் என்பது: 'நாத்திகம் பேசிப்பேசி நாத் தழும்பேறியவர்கள்' என வைதிகர்களால் சாடப்பட்டவர்கள் அண்ணாவும் அவரது அணியினரும். அண்ணாவின் பரந்தாமனுக்குப் பகிரங்கக் கடிதம், பரமசிவனுக்குப் பகிரங்கக் கடிதம், தேவலீலைகள் போன்ற எழுத்துக்கள் இக்கருத்தை வலியுறுத்துவன. (2) சமயத்தின் நன்மை தீமைகளைப் பகுத்துணர்ந்து மூடநம்பிக்கைகளை மட்டும் சாடிய பகுத்தறிவுவாதி என்பது: 'பல்லவ நாடுதந்த பகுத்தறிவுச் சிங்கம்' என விதந்தோதப் பெற்றவர் அண்ணா. அன்னார் தீட்டிய நல்லதம்பி (திரைப்படம்) இரங்கூன் இராதா (நாவல்), புராணமதங்கள் என்பன இக்கருத்தை நிறுவுவதற்கு ஏதுவானவை. (3) பதினோரும் நூற்றாண்டிலே கிறித்துவ மண்டலத்தின் மதபீடங்களிலும் மடாலயங்களிலும்

ஊடறுத்துப் பரவிய ஊழல்களையெல்லாம் களையப் புறப்பட்ட மாட்டின்னூ தரை யொத்த மதப்புரட்சியாளர் அண்ணா என்பது: அண்ணாவின் சொர்க்கவாசல் (திரைப்படம்) போன்ற படைப்புக்கள் இக்கருத்தை ஊக்குவிப்பன.

வேற்றுச் செல்வாக்கிற்கு எதிராக

அண்ணாவின் சமயக் கண்ணோட்டங்கள் எவ்வெக் காலக் கட்டங்களில், எத்தகைய சமூக அரசியல் பின்னணியிலிருந்து எத்தகைய பின்னணிக்கெதிராக வெளிவந்தன என்பதை எண்ணிப் பார்ப்போர் அன்னாரை நாத்திகன் என நாத்தடிக்கக் கூறார். அண்ணாவின் ஆரம்ப, இடை, இறுதிக்காலங்களில் ஏற்பட்ட வேறுபாடுகளுக்கும் இந்த சமூக அரசியல் பின்னணிகளின் மாறுபாடே காரணமாகும்.

திருவெண்ணெய்நல்லூர் சிவலிங்கமும் எள்ளெண்ணெய் ஊற்றும் செக்கும் ஆரியவாத அனுச்சாரங்களினால் பாமரப் பார்வைக்கு ஒரே அமைப்புடன் காட்சிதந்த நாட்கள். அன்று தமிழர் சமயம் எது, ஆரியர் சமயம் எது எனப் பிரிக்கமுடியாத படி சமயச் சம்பிரதாயங்களும் சடங்குகளும் பிணைந்துபோய்க் கிடந்தன. வைதீகமும் வர்ணாச்சிரம தர்மங்களும், பிராமணீ

> **சமூக நாடகங்கள்**
>
> சமூக நாடகங்கள் எனின் அவை நல்ல சீர்திருத்தக் கருத்துக்கள்—மனைவாழ்க்கையில் மாத்திரமன்றி பொருளாதாரம், படிப்பு, அரசியல், தொழில் வகை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டனவாக இருத்தல் அவசியம்.

யமும் தமிழ்நாட்டுக் கோவில்களில் தர்பார் நடத்தின. இத்தனையும் ஆரியம்தான் என உறுதி செய்வது போன்று சமஸ்கிருதம் கோவில்களில் கோலோச்சிற்று. அத்தகைய சூழ்நிலையில் இத்தனையும் "ஆரியமாயை" தான் என அண்ணா என்ற ஈட்டி பாய்ந்து சமயத்தை, சம்பிரதாயங்களை, சடங்குகளைத் தாக்கியதில் ஆச்சரியமென்ன?

பின்னணியில்

எத்தகைய சமூக, பொருளாதார, அரசியல் பின்னணியிலிருந்து இந்த ஈட்டி பாய்ந்தது என்பதையும் நோக்கவேண்டும்: பிராமணர்கள் நாட்டின் சகல துறைகளிலும் ஆதிக்கம் செலுத்துகின்றனர். பிராமணிய ஆதிக்கத்தை எதிர்த்துப் பெரியார் காங்கிரசை விட்டு வெளியேறிவிட்டார். இன்னும் பலர் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். பிராமணர் அல்லாதார் நீதிக்கட்சியை நிறுவியுள்ளனர். தமது அரசியல் ஆதிக்க

பலத்தைக் கொண்டு ஆரியர்கள் இந்திமொழியைத் தமிழர்மீது திணிக்க முற்படுகின்றனர். இதனை எதிர்த்து 1937ம் ஆண்டு தொட்டுத் தமிழர்கள் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர். சமுதாயத்துறையிலே, திராவிட இனம் ஆரியர்களால் திணிக்கப்பட்ட சாதிமுறையால் பிளவுண்டு சின்னபின்னமாகிக் கிடக்கிறது. சாதிமுறைக்கு நான்மறைகள் ஆதாரம் தருகின்றன. 'நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக' என ஏத்தி நான்மறைகளைத் தமிழ் மக்கள் ஏற்றுவிட்டனர். "பாதி ஆரியநெறி மீதிதான் எமது நெறி, தமிழர் நெறி" எனக்கூறுவது பாமரமனத்தில் பதியக் கூடிய பலமான வாதமாகத் தெரியவில்லை. முழுவதையுமே ஆரியமாக்கி நிராகரிப்பதன் மூலம்தான் தமிழ் மக்களை மீட்கமுடியும் என்ற நிலை இருந்தது.

இந்த நிலையில், ஆரிய ஆதிக்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிராமணீயம், பிராமணர்களைத் தமது முகத்திலிருந்து உருவாக்கிய கடவுள், அந்தக் கடவுளின் பாஷையான சமஸ்கிருதம், அதனை மூல மொழியாகக் கொண்ட ஆதிக்க இந்தி இவை ஒரு புறமும், இவைக்கெதிராக எளியனை சூத்திரத் தமிழனும் இந்தி ஆதிக்கத்தால் இடர்ப்பட்ட தமிழ் மொழியும் எதிரும் புதிருமாக அணிதிரண்டுள்ளது போன்ற அரசியல், சமூக, பொருளியல் பின்னணியிலிருந்து புறப்பட்ட ஈட்டி, எதிர்ப்புறத்தில் தோன்றிய அத்தனை சக்திகளையும் ஆரியத்தின் அரண்களாக எண்ணித் துளைக்க முற்பட்டமை வியப்புக்குரியதல்ல; ஒருவகையில் அன்று அது அவசியமே.

தமிழர் சால்பில் உருவான தெய்வீகத்தை, சமயநெறியை அண்ணா எதிர்க்கவில்லை என்பதை அன்னாரது இடைக்காலத்து எழுத்துக்களும் பேச்சுக்களும் தெளியத்தந்தன. மூடநம்பிக்கைகளைக் கண்டிக்க முற்பட்ட அவர் சமயச் சான்றோர்களும், சித்தர்களும், சிவநெறிச் செல்வர்களும் நிறுவிய தளத்தின் மீது நின்றே கண்டித்துள்ளார்.

திருமூலரின், 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற திருமொழியைத் தமது தாரக மந்திரமாகக் கொண்ட அண்ணா நாத்திகராக முடியாது.

"கண்மூடி வழக்கங்கள் மண்மூடிப் போகட்டும்"

—(வள்ளலார்)

"செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திட லாமென்றே எண்ணி யிருப்பர்
பித்த மனிதர்.......'

—(பாரதியார்)

"இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆய்அலன்..."

—(ஏணிச்சேரி முடமோசியார்)

"கோயில்முழுதும் கண்டேன் கோபுரமேறிக் கண்டேன்
தேவாதி தேவனை நான் தேடியும் கண்டிலனே"

—(கவிமணி)

இன்னோரன்ன மேற்கோள்களைக் காட்டியே அண்ணா தம் சமயக்கருத்துக்களை நிறுவத் துடித்தார் என்பதைக் கொண்டு அவர் மேற்கொண்டது மத இகழ்ச்சியல்ல, மதப்புரட்சி என்பதும், அவர் தூண்டியது தெய்வ நிந்தனையல்ல, தேர்ந்த சிந்தனையென்பதும் தெளிவாகும்.

அங்ஙனமாயின் அண்ணா தூண்டிய சிந்தனையின் நோக்குத் தான் என்ன? அதனை அவர் வாயிலாகவே கேட்போமே. கேட்கின்றார் அண்ணா, "ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்த சரஸ்வதி படத்திற்கு ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்த கற்பூரத்தைக் கொளுத்தித் தலையில் குட்டிக் கொள்கிறாயே. நியாயமா இது? உனக்கு வெட்கமாக இல்லையா" என்று. "தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன் மெய்வருந்தக்

> **இடைவெளி**
>
> நாம் சினிமாவுக்குப் போகிறோம். 3மணி நேரம் நடக்கக்கூடிய அந்த சினிமாவிலும் 15 நிமிடம் இடைவெளி விடுகிறார்கள். ஆனால், பிள்ளைகளைப் பெறுவதில் இடைவெளியே இல்லாமல் இருக்கிறோம்!

கூலிதரும்" என வள்ளுவன் கூறியதை அனுபவ உணர்வோடு கூறுகிறார் அண்ணா; அவ்வளவுதான். வள்ளுவன் வாசகத்திலுள்ள 'உம்' விகுதியை அண்ணா மறுக்கவில்லை; 'படத்தையும் கற்பூரத்தையும் உனது முயற்சியால் உருவாக்கி வணங்கிக் கொள்' என்கிறார். 'எனது புனித யாத்திரைத்தலங்கள் இந்நாட்டின் நாலாபக்கங்களிலுமுள்ள தொழிற்சாலைகளே' என்று அமரர் நேரு கூறியதும் இக்கருத்தேயாம்.

மூட நம்பிக்கைகள்

அண்ணாவின் புரட்சிகரமான மதக்கருத்துக்கள் தமிழகத்தில் வரவேற்கத்தக்க ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தின என்பதை எவரும் மறுக்க முடியாது. கல்வியறிவற்ற பாமரமக்களிடையே நிலவிய அறிவுக்கொவ்வாத மூடநம்பிக்கைகளை முற்றாக ஒழிக்க முடியாவிடினும், ஓரளவுக்காவது கட்டுப்படுத்திய பெருமை அண்ணாவுக்குண்டு. கண்மூடித்தனமான சமயச் சடங்குகளிலும் சம்பிரதாயங்களிலும் காலத்தையும் பணத்தையும் விரயம் செய்த பாமர மக்களிடையே ஒருவிதப் புத்தறிவைப்

பாய்ச்சிய அண்ணா. படாடோபமற்ற சிக்கனமான சீர்திருத்தத் திருமணங்களை ஊக்குவித்ததனால் ஏழைமக்கள் உய்ந்துள்ளனர். இராகு காலத்தில் திருமணம், மரணயோகத்தில் வேட்பாளர் மனுதாக்கல் போன்ற செயல்களை உற்சாகப்படுத்தி சமுதாயத்தின் சிந்தனையைத் தூண்டி வளர்த்துள்ளார். அறியாமையிலே மூழ்கிக்கிடந்த பாமரன் இனந்தெறியாத சம்பிரதாயங்களுக்கு அஞ்சி அடங்கிக் கிடந்த பரிதாப நிலையைத் தன் பகுத்தறிவுப் பணியால் போக்கியுள்ளார்.

பரிணாம வளர்ச்சி

அண்ணாவின் தொடக்க காலத் தீவிர நோக்குக்கும் இறுதிக் கால நோக்குக்கும் இடையே ஏற்பட்ட மாற்றங்கள் ஒருவரின் கருத்து, கண்ணோட்டம், இவற்றின் பரிணாம வளர்ச்சியைப் புலப்படுத்துவனவாகும். எந்தெந்தச் சக்திகளுக்குஎதிராக அண்ணாவின் தீவிரவாதம் அன்று பிரயோகிக்கப்பட்டதோ, அந்தச் சக்திகள் இன்று வலுவிழந்து விட்டன. பிராமணீயச் செல்வாக்கு பெயர்த்தெறியப்பட்டுவிட்ட காலக்கட்டத்தில், ஆரிய ஆதிக்கத்தின் பிரதிநிதியான இந்தித் திணிப்புக்கு எதிராகத் தமிழகம் முழுவதுமே திரண்டெழுந்து போர்கொடி உயர்த்தியுள்ள போது அன்று தூங்கிக் கிடந்த தமிழகத்தோடு பேசிய தொனியில இன்று விழித்துக் கொண்ட தமிழகத்தோடு பேச வேண்டிய அவசியம் அண்ணாவுக்கு இல்லை.

மேலும், தமிழ்மொழியின் வாழ்வையும் வளத்தையுமே தனது வாழ்வின் வேட்கையாகக் கொண்ட அண்ணா, அம்மொழியின் உயிர்நாடியான இலக்கியங்களுடன் இரண்டறக் கலந்து விட்ட சமய இலக்கியங்களின் தொன்மையும் வன்மையும் அறிந்திருந்தார். அவை தமிழ்வாழ்வின் பிரிக்கவொண்ணாத ஓர் பெரும் பகுதி என்பதையும் அறிந்திருந்தார். அத்தகைய இலக்கியச் செல்வங்களையும், அவை கூறும் சேதிகளையும், அச்சேதிகள் தமிழ்மக்கள் சிந்தையிலே நிரந்தரமான நிலைக்களனைப் பெற்று விட்டன என்பதையும் அறிந்திருந்தார். இதனால், முதலமைச்சரான அண்ணா கோவிலுக்கு விளக்கேற்றி வைத்த பவ்வியத்தையும் அறிந்தோம். இராஜாஜியின் தொடர்பு அண்ணாவின் கருத்தோட்டத்திலே ஏற்படுத்திய தாக்கமும், நாடாளுமன்றக் கட்சி என்ற நிலையில் நாட்டுமக்களின் நினைப்பை ஒட்டிச்செல்லும் நோக்கமும் அண்ணாவின் இறுதிக்காலக் கண்ணோட்டங்களை ஓரளவு செப்பனிட்டிருக்கலாம் மரணப் படுக்கையில் அண்ணா மயங்கிக் கிடந்த வேளையில், நாட்டுமக்களனைவரும் தங்கள் அன்புத் தலைவன் உயிரைக் காக்குமாறு ஆண்டவனிடமல்லவா வேண்டி நின்றனர்! எனவே தமிழ்நாட்டு மக்கள் அண்ணாவை அறிந்து கொண்டது நாத்திகனாக அல்ல; அண்ணா தன்னை அவர்களிடம் அறிமுகம் செய்ததும் நாத்திகனாக அல்ல.

With the best compliments of :

India Tobacco Company Limited

Largest Manufacturer and Exporter
OF
Quality carpet backing cloth
AND
Manufacturer of
HESSIAN CLOTH & BAGS
SACKING CLOTH & BAGS
AND TWINE

NATIONAL COMPANY LIMITED
18A, BRABOURNE ROAD,
CALCUTTA-1.
Phone: 22 8431(5) Cable - 'WIDELOOM(C)'


With Best Compliments of
MAFATLAL
GROUP

WITH BEST COMPLIMENTS FROM

THE SOUTHERN GAS LIMITED,

803, PRASAD CHAMBERS,
NEAR ROXY CINEMA,
BOMBAY 4.

Regd. Office:
M. G. ROAD,
ERNAKULAM,
COCHIN—16.

Factory:
UDYOGAMANDAL,
ALWAYE,
KERALA.

Mount Mettur Pharmaceuticals Limited

(Manufacturers of ethical pharmaceuticals)
Specialist in manufacture of:
TRANSFUSION SOLUTIONS
Under rate contract with Directorate General of Supplies & Disposals. Suppliers to Kerala Health Services Department, State Hospitals, Railways etc.
Vitamin & Special Injections
Elixirs & Tablets

Factory & Administrative Office:
Tiruvanmiyur, Madras—41.
(Telephone: 73170/74401/74888 —Grams: PHARMLAB)
DEPOT:
XXI/338, Convent Road, Ernakulam.

அண்ணாவின் பேச்சு - ஒரு அம்சம்

மு. வில்வநாதன்

(வேலூர், திரு. மு. வில்வநாதன் அவர்கள் அண்ணாவின் எழுத்திலும் பேச்சிலும் பேரீடுபாடு கொண்டவர். சுமார் இருபது ஆண்டுக் காலமாக அண்ணா நிகழ்த்திய உரைகளையும் எழுதிய சொல்லோவியங்களையும் திரட்டிப் பேணி வருகிறார் இவர். அண்ணாவின் எழுத்து பேச்சு முதலியன வெளியான இதழ்கள், மலர்கள், நூல்கள் யாவும் இவரிடம் உண்டு. தி. மு கழகத்திலே உள்ள இளைய வழக்கறிஞர்களுள் ஒருவரான இவர் அண்ணாவை எவ்வளவு அறிந்தவர் என்பதை விளக்க, அண்ணாவின் ஆயத்தமில்லாத பேச்சுக்கள் பற்றிய இந்தக் கட்டுரை ஒன்றே போதுமானது.)

"அண்ணாத்துரைப் பற்றி நான் அறிமுகப்படுத்துவது என்பது அர்த்தமற்ற வீண்வேலை. ஒருவேளை அவர் வேண்டுமானாலும் என்னை அறிமுகப்படுத்த வேண்டியிருந்தாலும் இருக்குமே தவிர, நான் அவரை அறிமுகப்படுத்த வேண்டியது என்பது அர்த்தமற்ற சங்கதி" என்று 1948ஆம் ஆண்டு ஈரோட்டில் நடைபெற்ற திராவிடர்கழகத் தனி மாநாட்டில் தந்தை பெரியார் இராமசாமி கூறிவிட்ட பிறகு, 1970ஆம் ஆண்டு அண்ணாவை நான் அறிமுகப்படுத்துவது என்பது 'கொல்லன் தெருவில் ஊசி விற்ற கதை' போலாகும்.

பேச்சாளர் மீது கல் வீசினோர், பிறிதோர் நாள், மாலை தூக்கி வரும் காட்சிகள் நிரம்பிய விசித்திரபுரி, மேடை.

மேடைப் பேச்சு என்பது காலட்சேபமும் அல்ல; வசன சங்கீதமும் அல்ல; இனிமைச் சுவையை எல்லோருக்கும் அளிக்கும் நாவாணிபமும் அல்ல: கைகட்டிக் கேட்கும் மக்கள் எதிரே நடத்தும் உபதேசமும் அல்ல; உயிர்ப் பிரச்னைகளைப் பற்றிய கருத்துக்களை வெளியிடும் களம், மேடை.

படித்தார்—தெளிந்தார்

உலகில் எத்தனையோ பேச்சாளர்கள் இருந்தனர். அவர்கள் தாம் பேச வேண்டிய 'பொருள்' அல்லது 'தலைப்பு' பற்றி முன் கூட்டியே தெரிந்து கொள்ளுவார்கள். அல்லது தேர்ந்தெடுத்து அறிவிப்பார்கள் அந்தத் தலைப்பை ஒட்டிப், பேச்சை முன் கூட்டியே தயாரித்துக் கொள்ளுவார்கள். இது நடைமுறை வழக்கம். ஆனால் 'தலைப்பு' என்ன என்பது முன்கூட்டியே

தெரியாத நிலையிலும், எந்தத் தலைப்பைத் திடீரென்று தந்தாலும், தட்டுத் தடங்கல் ஏதுமின்றி, சுவை குன்றாமல், பேச வேண்டிய பொருளை விட்டு விலகாமல், மணிக்கணக்கில் பேசும் வழக்கத்தை, முதன்முதலில் செயற்படுத்திய 'ஆற்றல் வீரர்' அண்ணா.

'மாலை'க்கு முதற்பொருள் 'மணமுள்ள' மலர். அதுபோல 'பேச்சு'க்கு முதற்பொருள் சுவையும், பயனுமுள்ள 'கருத்து'க்கள் அந்தச் சுவையும் பயனுமுள்ள கருத்துக்களைப் பெறுவதற்குச் சுவையும் பயனுமுள்ள ஏடுகளைப் படிக்க வேண்டும்;

> **அருமை தெரிகிறது**
>
> எவ்வளவு சிந்தனை, எத்தனை இரவுகள் விழித்து எதிர்ப்பைப் பார்க்காமல், கேலி கண்டனங்களைப் பொருட்படுத்தாமல், ஆபத்துக்கு அஞ்சாமல், மூளை குழம்புமே கண் குருடாகுமே என்று யோசிக்காமல், கஷ்டப்பட்டு விஞ்ஞான சாதனங்களைக் கண்டுபிடித்தவர்களெல்லாம் மேல்நாட்டார்கள் எனவே தான், அவர்கள் விஞ்ஞானத்தைப் போற்றுகிறார்கள். அவர்களுக்கு அதன் அருமை தெரிகிறது; அதனிடம் அதிக மதிப்பு வைத்திருக்கிறார்கள்.

அந்த ஏடுகளில் உள்ள பயனுள்ள கருத்துக்களைக் கல்வி எடுக்க வேண்டும்; எனவே, "கண்டதைக் கற்கப் பண்டிதர் ஆவார்" என்ற பழமொழிப்படி, அரசியல், பொருளியல், சமூக இயல், வரலாறு, இலக்கியம், சமயம், சித்தாந்தம், இதிகாசம், புராணம் போன்ற பலதிறப்பட்ட நூல்களைக் கசடறக் கற்றார்.

"இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்றது
உணர விரித்துரையா தார்"

என்ற வள்ளுவர் குறளைக் கற்றதனால், தான் படித்தவைகளில் பயனுள்ளவைகளைச் சுவைபட எடுத்துக் கூறினார். சிறந்த பேச்சாளராக சிறந்த சிந்தனையாளராக இருக்கவேண்டும்; சிறந்த சிந்தனையாளராக சிறந்த படிப்பாளராக இருக்க வேண்டும். ஆகவே, 'பாடை ஏறினும் ஏடது கைவிடேல்' என்ற பழமொழிக்கு இலக்கானார்; அதில் வெற்றியும் கண்டார்.

தலைப்பு இல்லாமலே...

அண்ணா முன்கூட்டியே தலைப்புத் தெரியாமலும், தயாரிப்பு இல்லாமலும் பேசிய பேச்சுக்களுக்கு எத்தனையோ சொற்பொழிவுகளை எடுத்துக்காட்டாக இயம்பலாம்.

சென்னை கிறித்தவக் கல்லூரியில் அண்ணாவைப் பேச அழைத்திருந்தார்கள். பேசும் முன் அண்ணா, எனக்கு என்ன

தலைப்புத் தந்துள்ளீர்கள் என்று கேட்டார். 'தலைப்பு இல்லை" என்றார் மாணவச் செயலாளர். உடனே, அண்ணா தலைப்பில்லை என்ற தலைப்பில் பேச ஆரம்பித்தார்:

"ஒரு நாடு தலைமை பெற வேண்டுமானால் அது சிற்றுரிமை மட்டும் பெற்றால் போதாது; முற்றுரிமை பெற்றாக வேண்டும். நாடு என்ற தலைப்புக்கே, முழு அதிகாரம் அந்த நாட்டு மக்களுக்கு இருக்க வேண்டும் என்பதுதான். அரசியல் இலக்கணம். தமிழ் நாடு முழு அதிகாரம் பெறவில்லை; எனவே, தமிழ் நாட்டுக்குத் தலைப்பு இல்லை

"இந்திய நாட்டுக்குத் தலைப்பு இந்தியா என்று இருக்கிறது. இந்தி மொழித் தலைப்பு இருக்கிறது. பிற மொழியாளர்களுக்குத் தலைப்பு இருக்கிறது. தமிழ் நாட்டுக்குத் தலைப்பு இல்லை; தமிழ்க் குலத்துக்குத் தலைப்பு இல்லை; தமிழனுக்குத் தலைப்பு இல்லை" என்று ஒரு மணி நேரம் சொற்பொழிவு ஆற்றினார்.

தயாரிப்பு இல்லாமலே ..

ஒருநாள் அண்ணாமலை நகரில் அண்ணா மேடைக்கு வந்த பிறகு, 'ஆற்றோரம்' என்ற தலைப்பில் பேசும்படி பணித்தார்கள். அண்ணா எழுந்தார். தோழர்களும், 'ஆற்றோரம் என்றால் எப்படிப் பேசப் போகின்றார்' என்றே நினைத்துக்கொண்டிருந்தார்கள்.

அண்ணா 'உலக சஞ்சாரம்' புறப்பட்டார். "மிசிசிபி, மிசௌரி என்ற ஆற்றங்கரையிலுள்ள அமெரிக்க நாகரிகமும், தேம்ஸ் ஆற்றங்கரையிலுள்ள ஆங்கிலேய நாகரிகமும், டான், வால்கா நதிக்கரையிலுள்ள ரஷ்ய நாகரிகமும், ரைன் ஆற்றங்கரையிலுள்ள ஜெர்மானிய நாகரிகமும், போ ஆற்றங்கரையி

> **இறங்கிய அரசியல்**
>
> படித்தவர்கள் அரசியலிலிருந்து ஒதுங்கியிருப்பதால் தான், கற்றறிவாளர்கள் அரசியலில் கருத்துச் செலுத்தாமையாலதான் யார்யாரோ அரசியலில் ஈடுபட்டு, தாம் படித்த அளவுக்கு—தமக்குத் தெரிந்த தரத்துக்கு அரசியலை இறக்கிவிட்டார்கள்.

லுள்ள இத்தாலிய நாகரிகமும், யாங்கஸ்டியாங் நதிக்கரையிலுள்ள சீன நாகரிகமும், நைல் நதிக்கரையிலுள்ள எகிப்திய நாகரிகமும், ஐராவதி ஆற்றங்கரையிலுள்ள பர்மிய நாகரிகமும், இயூப்ரடீஸ், டைக்ரீஸ் ஆற்றங்கரையிலுள்ள மெசபடோமியா நாகரிகமும், கங்கை யாற்றங்கரையிலுள்ள ஆரியர் நாகரிகமும், காவிரி ஆற்றங்கரையிலுள்ள தமிழர் நகாரிகமும் ஒன்றல்ல .. !" இப்படிப் பல பேசி, சொன்மாரி பொழிந்தார்.

இவ்வளவையும் பேச, உலகப் பூகோளம் அண்ணாவுக்கு அத்துப்படியாகி இருக்கவேண்டும்; உலக நாகரிகத்தின் வரலாறு தெள்ளத் தெளியப் புரிந்திருக்க வேண்டும் அல்லவா?

சென்னைக் கல்லூரி ஒன்றில் அண்ணாவைப் பேச அழைத்தனர். பேச 'பொருள்' ஒன்றும் தரவில்லை. அதை அறிந்த அண்ணா அவர்கள் பொருள் என்ற தலைப்பில் பேச ஆரம்பித்தார்கள். உலகப் பொருளாதாரம், இந்தியப் பொருளாதாரம், தமிழ் நாட்டுப் பொருளாதாரம் முதலியவைகளை மணிக்கணக்கில் அலசினார். அன்று பொருளாராய்ச்சி நிபுணர்களுக்கே புதுப் பாடம் தந்துவிட்டார். இவ்வளவையும் தந்து பொருளாதாரப் புலியாய்ப் பேசக் காரணம், அவர் ஒரு பொருளாதார எம். ஏ. பட்டதாரி என்பது மட்டுமல்ல; உலகப் பொருளியலை ஆழ்ந்து படித்ததே.

அறிஞர் அண்ணா

கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில் ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடாகி இருந்தது. அதில் அண்ணாவும் வேறு பலரும் உரையாற்ற அழைக்கப்பட்டிருந்தனர். குறிப்பிட்டிருந்த நேரங் கடந்தும், அண்ணாவைத் தவிர, பிற பேச்சாளர்கள் கூட்டத்துக்கு வரவில்லை. இதனால் அங்குக் குழுமியிருந்த மக்களுக்குப் பெரும் மனக்குறை ஏற்பட்டுவிட்டது. அதனை அறிந்த அண்ணா அவர்கள் சலிப்பை அகற்ற ஓர் உத்தியைக் கையாண்டார். பிறர் பேச வேண்டிய தலைப்புக்களையும் தாம் பேச வந்த தலைப்பினையும் எடுத்துக்கொண்டு, முன் குறிப்பு ஏதும் இன்றி, தட்டுத் தடங்கல் இல்லாமல் அண்ணா ஒவ்வொரு தலைப்பை ஒட்டியும் மிக அழகாகப் பேசி முடித்தார். பல்வேறு தலைப்புக்களையும் வைத்து முன் தயாரிப்பு இன்றியே உரையாற்றிய அண்ணாவின் ஆற்றலைக் கண்டு கல்கி அவர்கள் வியப்பில் ஆழ்ந்தார். உளமாரப் பாராட்டினார். அத்துடன் பொது மக்கள் முன்னிலையில் அண்ணா அவர்களுக்கு அறிஞர் என்ற பட்டத்தையும் சூட்டி மகிழ்ந்தார்.

ஆங்கிலத்திலும்...

'தமிழில்தான் அண்ணா அவர்களால் எந்தப் பொருள் பற்றியும் முன் தயாரிப்பு இன்றிப் பேச முடியும், ஆங்கிலத்தில் அப்படிப் பேச முடியுமா?' என்ற கேள்வி எதிரிகளின் எண்ணத்தில் ஏற்பட்டது. அண்ணாமலை நகரில் அண்ணாவைப் பேச அழைத்தனர். மேடைக்கு அண்ணா வந்த பிறகு "தீப்பொறி" என்பது பற்றிப் பேசுங்கள் என்றனர். அண்ணா, தமிழிலா? ஆங்கிலத்திலா? என்று வினயமாகக் கேட்டார். ஆங்கிலத்தில்தான் பேசுங்கள் என்றனர். Spark என்ற தலைப்பில் பேச ஆரம்பித்தார். "I rarely speak English but that does not mean my English is rare" என்று ஆரம்பித்தார். ஆரம்பமே எதிரிகளுக்கு

ஈட்டி முனைபோல் தாக்கியது. இரண்டு மணி நேரம் 'தீப்பொறி' பறக்க ஆங்கிலத்தில் சொற்பொழிவு ஆற்றினர். கேட்டவர்கள் கிறுகிறுத்துப் போயினர். ஆங்கிலம் அறிந்தவர்கள் 'மகுடி' சத்தம் கேட்ட 'பாம்பு' ஆயினர்.

அம்பலம் ஏறியது

இதனுல்தான், சென்னைப்பல்கலைக்கழகப் பேராசிரியர், டாக்டர் இராசமாணிக்கனர், "1936க்கு முன்வரை இவ்வளவு அழகாகப் பேசிய இளைஞரை இத்தமிழகத்தில் நான் கண்ட

> **இந்தக் காலம்**
>
> சாமானியர்களின் சகாப்தம் இது. இது குறித்து எத்தகையவர்கள் எத்துணைக் கருத்து வேறுபாடு—மாறுபாடு கொண்டு இருந்தாலும், சாமானியர்களின், ஏழை எளியவர்களின் எண்ணங்கள் ஈடேற்றப்பட்டுத் தீரும் நேரமிது என்பதனை மறந்திடவே முடியாது. "ஏழை சொல் அம்பலம் ஏறும் காலம்" என்பதும் சரியே!

தில்லை. வாதத்திறமை, பேச்சுத்திறமை, உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்துவரும் சொற்கோவை இவையனைத்தும் அவர் சொற்பொழிவில் வெளிப்பட்டன. அவர் ஒரு பிறவிப் பேச்சாளர்" என்றார்.

"தலைசிறந்த பேச்சுவல்லோன்" என்றார் புரட்சிக்கவி பாரதிதாசன்.

"மிகச் சிறந்த பேச்சாளி" என்றார் மகாகனம் 'வெள்ளி நாக்கு' ஸ்ரீனிவாச சாஸ்திரி.

"தமிழில் பேசுவதற்கு வெட்கப்பட்டவர்கள் எல்லாம் தமிழில் பேசுவதை இப்பொழுது பெருமை என்று எண்ணுகிறார்கள். இது அண்ணாத்துரையின் பேச்சுத் தொண்டால் விளைந்த பயன்" என்றார், (1944ஆம் ஆண்டு கோவை, ஜி. டி. நாயுடுவின் கோபால் பாக் இல்லத்தில் நடந்த தமிழ் எழுத்தாளர் மாநாட்டில்) 'அனுமான்' பத்திரிகை ஆசிரியர் ரா. நாராயண அய்யங்கார்.

மேடைப் பேச்சில் அண்ணா பல உத்திகளைக் கையாண்டார். நிரம்பப் படித்தார். படித்தவைகளை மறக்காமல் மனதில் தேக்கிக் கொண்டார். மக்களுக்குத் தேவையான கருத்துக்களைத் தெளிந்தார்; தெரிந்தவைகளை எடுத்துச் சொன்னார்; சொன்னவைகளுக்குச் சுவை கூட்டினார். எனவேதான் அவர் 'ஏழை' என்றாலும் அவர் சொல் 'அம்பலம்' ஏறியது; அரங்கேறியது.

LAL-IMLI & DHARIWAL

THE TWO GREAT NAMES IN WOOLLENS THAT HAVE BROUGHT WARMTH AND CHEER TO YOU AND TO YOUR FAMILY THROUGH WINTERS FOR ALMOST EIGHT DECADES

For all your requirements of woollens

Worsteds, Polyester/Wool Fabrics, Rugs, Blankets, Knitting yarns, Knitwear

CONTACT

LAL-IMLI OR DHARIWAL

The Cawnpore Woollen Mills,
KANPUR

AND

The New Egerton Woollen Mills,
DHARIWAL

Branches of

THE BRITISH INDIA CORPORATION LTD.,
KANPUR.



AND VALUABLE FOREIGN EXCHANGE FOR INDIA

Very few Indian Airlines' services are international.
Yet, in the last ten years, India's domestic airline has earned
Rs. 46 crores by flying foreign tourists on its extensive network—across
Indian Skies and all in FOREIGN EXCHANGE.
For 1969-70, the figure is likely to be Rs. 8.50 crores. 10% more than in the previous year. Indeed, in each of the last three years, fully **ONE-FIFTH** of our annual Passenger Revenue has been from tourists and all FOREIGN EXCHANGE.

mcm/iac/214

Best compliments to
DELHI TAMIL SANGAM

S. KANDASWAMY MUDALIAR

Provision & S. K. Coffee Works

15/16, Jeenis Road,
Saidapet, Madras-15.

With best compliments from :

KESORAM RAYON

P.O. NAYASARAI
DT. HOOGHLY
(WEST BENGAL)

Manufacturers of :

Royon Yarn, Kesophane,
Sulphuric Acid,
Alum etc.

தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள்

(தனி வாழ்வும் பொது வாழ்வும், ஒட்டுமாங்கன்று போல், ஒன்றோடு ஒன்று கலந்துவிடும் வகையில் வாழ்ந்தவர் அண்ணா. அவருடைய வாழ்வின் பல நிகழ்ச்சிகள் சிந்தனைக்குரிய சீர்மை வாய்ந்தவை. அவற்றைத், தாமேயாகவும் பிறர் மூலமும் தெரிந்து மகிழ்ந்த பெரு மக்கள் நமக்காக அவற்றை இங்கே சொல்லுகிறார்கள். அவர்கள் அனைவருக்கும் நம் நன்றி உரியது.)

பொது வாழ்வில் அண்ணா

1934ல் எம். ஏ. பட்டம் பெற்று வெளிவந்தபின் அண்ணாவை நீதிக் கட்சியினுள் இழுப்பதற்கு அப்போது "ஜஸ்டிஸ்" ஆங்கில ஏட்டின் பொறுப்பாளராக இருந்த திரு. டி. ஏ. வி. நாதன் அவர்களும், "சண்டே அப்சர்வர்" ஆங்கில ஏட்டின் ஆசிரியர் திரு. பி. பாலசுப்பிரமணியம் அவர்களும் மிகவும் முயன்றனர். அவர்கள் முயற்சி வீண்போகவில்லை. அண்ணா நீதிக் கட்சியில் நேரடியான பங்கு ஏற்று உழைப்பதற்கு இசைந்தார். ஒரு வைரக் கல்லின் ஒளிவீச்சைப் பெறும் பேற்றினை நீதிக் கட்சி பெற்றது.

—அ. மறைமலையான்

சொந்த பாணி

ஆயிரத்துத்தொள்ளாயிரத்து முப்பத்து நான்காம் ஆண்டு என்று நினைக்கிறேன். சென்னை ஜார்ஜ் டவுன் ஏழுகிணறு வட்டத்தில் உள்ள ஒரு வீட்டு மேன் மாடியில் "காம்ரேட் லிட்டரரி பார்லிமெண்ட்" சார்பில் ஒரு பொதுக்கூட்டம். ஏதோ ஒரு விஷயம் பற்றி (அக்காலத்திய அரசியல் நிலை குறித்துத்தான் எனக் கருதுகிறேன்) கோபாலரத்னம் பேசினார்; செங்கல்வ ராயன் சொற்பொழிவு ஆற்றினார். பாலசுப்பிரமணியம், இன்னும் யார் யாரெல்லாமோ பிரசங்கம் செய்தார்கள். கடைசியாக வந்தார் ஒருத்தர். (ஐந்தடி இரண்டு அங்குலம் உயரம் இருக்கும். சம்புஷ்டியான சரீரம்; அறிவு தீட்சணியத்தை வெளிப்படுத்தும் அகன்ற நெற்றி; ஆழ்ந்த சிந்தனையில் மிதக்கும் பெரிய கண்கள்; ஆட்களைக்கவரும் எடுப்பான மூக்கு. மீசை சரியாகக் கூட அரும்பவில்லை.) "தோழர்களே!" என்றார் கூட்டத்தினரைப் பார்த்து. அவ்வளவுதான், அருவி பொழிவதைப் போல அவர் பேசிய ஆங்கிலப் பேச்சு யாவரையும் பிரமிக்க வைத்தது. அவர் உள்ளத்திலிருந்து எழும் சந்தர்ப்ப உணர்ச்சிக்கேற்பச் சொற்கள் சரளமாக வெளிவந்துகொண்டிருந்தன. பொருள் பொதிந்த அவர் பேச்சில் தெளிவு இருந்தது. அவர் எடுத்துக்கொண்ட கட்சியை நிலைநாட்டத் தர்க்கரீதியாகப் பேசினார்.

அவர் பேச்சில் இன்னொரு விசேஷமிருந்தது. அதாவது, அவர் பிறரை 'இமிடேட்' பண்ணாமல் சொந்த பாணியிலேயே பேசியதுதான். அக்காலத்தில் மேடையில் பேச விரும்பும் இளைஞர்கள் அக்காலப் பிரபல பேச்சாளர்களின் பாணியில் பேசிப் பழகுவது வழக்கம். பேச்சை மட்டுமல்ல; பிரபல பேச்சாளர்கள் பேசும்போது செய்யும் அங்க சேஷ்டைகள், நடையுடை பாவனைகளையும் 'இமிடேட்' செய்பவர்கள்கூட இருந்தனர். ஆனால் "அந்த ஆசாமி" அவ்வாறு செய்யவில்லை. அவர் யார் என்று எண்ணுகிறீர்கள்? அவர்தான் இன்று அறிமுகமே தேவையில்லாத அளவு பெரும் பிரசித்தி பெற்று விளங்கும் அண்ணாதுரை.

—நாரண துரைக்கண்ணன்

அண்ணாவின் மும்மணிகள்

அலுவலகங்கள், வணிக நிலையங்கள் மற்றும் இவைபோல் எப்பொழுதாவது மட்டுமே பொதுமக்கள் செல்லக்கூடிய இடங்களில் 'உத்தரவு அன்னியில் உள்ளே வரக் கூடாது' என்னும் முறையில் அறிவிப்புக்கள் காணப்படும். இது எதிர்மறை வடிவில், 'வரவேண்டா' என்று வந்தவரைப் புறக்கணிப்பதுபோல் இருக்கின்றது. இதில் ஏதோ பண்பாட்டுக் குறை தொனிப்பது போலவும் இருக்கின்றது. ஆனால் கேள்விமுறையில்லாவிடினும் பணிமனை சீர்கெடும். கண்டிப்பும் இருத்தல் வேண்டும்; அதே வேளையில் கனிவும் இருத்தல் வேண்டும். இந்த நாகரிக நன்முறையைத் தோற்றுவித்தவர் பேரறிஞர் அண்ணா: காஞ்சியில் அவருடைய 'திராவிட நாடு' அச்சகத்தில் காணக் கிடக்கும் அறிவிப்பினைக் கண்ணுற்றவர் இதனை உணர்வர்: 'உத்தரவு பெற்று உள்ளே வருக' என்பதே அது. வந்தவரை வரவேற்கும் கண்ணியமான முறையில் உத்தரவு பெற வேண்டிய கட்டுப்பாட்டுடன் வந்தவரின் செய்தி கேட்க வேண்டிய கடமையுணர்வோடு இவ்வாசகம் அமைந்திருக்கின்றது.

> **புது வாழ்வு**
>
> பழைய காலத்தைப் போல நாம் நடக்க முடியாது. நடக்கத் தேவையுமில்லை. புதிய கருத்துக்களைத் தைரியத்துடன் கவனித்து ஏற்று புதுவாழ்வு நடத்த நம்மை நாம் தயாராக்கிக் கொள்ள வேண்டும்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் மறக்க இயலாத மும்மணிகளை உலகிற்குணர்த்திய ஒப்பற்ற தலைவன் ஒரு தொடரிலேயே அம்மூன்றினையும் செயலிற் காட்டி ஒளி திகழச் செய்துவிட்டான்.

—நா. தண்டபாணி

சென்னை இளஞ்சிங்கம்

'அண்ணா' அவர்களைப் பற்றிப் பிற்காலத்தில் நினைக்கும் பொழுது, காஞ்சிபுரத்துடன் இணைத்துப் பார்க்கிறோம். 'காஞ்சி தந்த கருவூலம்' என்று பூரிப்புடனும் பெருமையுடனும் குறிப்பிடுகிறோம் ... ஆனால் 1937ல் அண்ணா அவர்கள் தமிழ் நாட்டு மேடையில் தோன்றிய பொழுது "சென்னைத் தோழர் சி. என். அண்ணாத்துரை" என்றுதான் அறிமுகப்படுத்தப் பட்டார்.

22-8-37இல் துறையூரில் நடைபெற்ற மகாநாட்டுக்கு வரவேற்புக்குழுத் தலைவராக இருந்த செல்லிபாளையம் தோழர் கே. வி. பெருமாள் அவர்கள், தமது வரவேற்புரையில், மகாநாட்டுத் தலைவரைப் பற்றிக் கூறியதாவது: "சென்னை இளஞ்சிங்கம், 'நவயுகம்' ஆசிரியர் சி. என். அண்ணாத்துரை எம். ஏ. அவர்கள் தலைவராக இச்சந்தர்ப்பத்தில் நமக்குக் கிடைத்துள்ளது பற்றி அளவற்ற மகிழ்ச்சி அடைவதுடன், நமது மனமார்ந்த நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்."

—இரா. செழியன்

விசாரணை

முதன்முதலாக அண்ணா அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்குச் சென்றிருந்தபோது, மாணவர்கள் அண்ணா அவர்களை எத்தனையோ கேள்விகள் கேட்டார்கள் : 'ஆங்கிலத்தில் எதுவரை படித்திருக்கிறீர்கள்?' என்றனர். 'எம். ஏ. வரை' என்றார், அண்ணா. 'என்ன பாடம்' என்றனர், மாணவர்கள். 'பொருளா

> **போதுமா?**
>
> பசித்தவன் பழங்கணக்குப் பார்த்துப் பார்த்துப் பூரித்தான் என்பதுபோல இடிந்த கோட்டை கொத்தளங்கள், கூடகோபுரங்கள், மாடமாளிகைகளைக் கண்டு களித்திடுகிறோம். அவற்றின் ஓரத்திலமர்ந்து பழங்கதை—பழம்பெருமை பேசி நமது புலமையைக் காட்டிக் கொள்கிறோம். இதுமட்டுமே போதுமா?

தாரம்' என்றார் அண்ணா. 'அப்படியானால் கார்ல்மார்க்ஸைப் பற்றிப் படித்திருப்பீர்களே? என்று வினவினர். 'ஆம். படித்திருக்கின்றேன்' என்றார். உடனே, அவர்களெல்லாம், 'கார்ல்மார்க்ஸின் தத்துவங்களைப் படித்த பின்புமா இந்தக் கண்றாவி ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்திருக்கிறீர்கள்?' என்று கேட்டனர். அப்போது அவர்களுக்கு அண்ணா, 'நான் ஜஸ்டிஸ் கட்சியில் நுழைந்திருப்பது அதிலுள்ளவர்களையெல்லாம் வெளியே துரத்தி விட்டு உங்களைச் சேர்த்துக் கொள்ளத்தான்' என்று கூறினார். அன்று

அம்மாணவர்களிடம் அண்ணு கூறியது போலவே, சீமான்களிடம் சிக்கியிருந்த ஜஸ்டிஸ் கட்சி பாட்டாளிகளின் கட்சியாக—ஏழைகளின் கட்சியாக மாறியது.

—வெற்றிவீரன்

காஞ்சிக் காதல்

அண்ணு ஒருநாள் வானெலியில் பேசிய ஒரு செய்தி இன்றும் என் நினைவில் நிழலாக உள்ளது. அதாவது, சென்னையைக் காட்டிலும் காஞ்சி சிறப்புடைய நகரம் என்று சொல்லவேண்டும் என்பது அவர் அவா. அதற்காக அவர், "சென்னைக் கடற்கரையில் எந்த மாமன்னரும் வந்து தண்ணீர் பருகியதில்லை. ஆனல் காஞ்சியில் உள்ள வேகவதி ஆற்றில் மாமன்னர்கள் எல்லாம் வந்து தண்ணீர் பருகிய செய்திகள் மெத்த உண்டு!" என்று கூறினர். அவர் காஞ்சி நகரின்பால் கொண்ட பற்றினை விளக்க இந்த ஒரு சான்றே போதுமானது.

—மோசூர் வாசுகி

அரைத்த மாவையே...

திருச்சி வானெலி நிலையத்தில் இருந்து, 'பொதுமக்களுடன் தொடர்பு கொள்வதற்கான வழிமுறைகள்' என்ற வரிசையில் "பேச்சு மேடை" என்று பேசுமாறு அண்ணுவுக்கு அழைப்பு வந்தது. அதற்கு முன்னல் ஒருதடவை அதே தலைப்பில் அதே நிலையத்தில் அண்ணு பேசி இருக்கிருர். மீண்டும் அதையே பேச அண்ணு விரும்பவில்லை. நான் எப்படியும் வானெலியில் பேச வேண்டும் என்று விரும்புவீர்களானல் இந்தத் தலைப்பு

> **இன்றைய சமுதாயம்**
>
> எத்தனையோ சிக்கல்களுக்கிடையே—முரண்பட்ட மூட நம்பிக்கைகளுக்கிடையே,—அறிவாளி அறிவற்றவனையும், இருப்பவன் இல்லாதவனையும், பலமுள்ளவன் பலமற்றவனையும் சுரண்டிச் சுகபோகியாக வாழ்ந்திட வாய்ப்பும் வசதியும் அமைந்ததாகத்தானே இன்றைய சமுதாயம் இருக்கிறது!

வேண்டாம்; நாட்டில் கண்காட்சிகள் பல நடக்கின்றன—அதனல் மக்கள் கருத்து வளர்கிறதா—அல்லது கடை வியாபாரம் பெருகி, பொருள்கள் அதிக விலைக்கு விற்கப்படுகின்றனவா? என்ற கருத்தை விளக்கிப் பேச ஏற்பாடு செய்யுங்கள்; நான் பேசுகிறேன் என்று திருச்சி வானெலி நிலையத்துக்கு எழுதினர் அண்ணு. ஆனல் அந்த திருச்சி வானெலி அதிகாரியோ, தாம் கொடுத்த தலைப்பில்தான் பேசவேண்டும் என்ருர். வானெலியில்

எப்படியாவது பேசவேண்டும் என்று அண்ணு ஆசைப்பட்டால் எதைப்பற்றியும் பேசலாம்; அப்படி ஆசைப்படும் பருவத்தைக் கடந்து விட்டவர் அண்ணு.

—வெற்றிவீரன்

குள்ளன்

கழகத்தை அண்ணு துவக்கிய காலத்தில் அண்ணுவின் தாக்குதல்களால் புண்ணுன பழமை விரும்பிகளும் அந்தக் காலப் பண்டிதர்களும், 'குள்ளனுக்குக் குள்ளப்புத்தி' என்றும் 'நெட்டையனை நம்பினலும் குட்டையனை நம்பக்கூடாது' என்றும் அண்ணுவை எதிர்த்துக் கீழ்த்தரமாக மக்களிடையே பிரச்சாரம் செய்தார்கள்.

சென்னைக் கடற்கரையில் ஒருமுறை அண்ணு, "என்னைக் குள்ளன் என்று சொல்லுகிருர்கள். இப்படிச் சொல்கிறவர்களெல்லாம் அகத்தியனைத் தலைமேலே தூக்கிவைத்துக் கொண்டிருக்கிறவர்கள். ஏனையா...தமிழைத் தந்த உங்கள் அகத்தியனே குள்ளன்தானே? அண்ணுத்துரை மட்டும் குள்ளனுக இருக்கக் கூடாதா? உங்கள் நியாயம் என்ன நியாயம்?" என்று பேசினர்.

> **செல்லாத டிக்கெட்டு**
>
> போன ஆண்டு கொடுத்த இரயில் டிக்கெட், அளவிலும் நிறத்திலும் ஒரேமாதிரியாக இருந்தாலும், அதை வைத்துக் கொண்டு இந்த ஆண்டு போக ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அதைப்போல நாம் காலத்தை வைத்துக் கருத்துக்களைக் கணக்கிட வேண்டும்.

அண்ணுவின் இந்தச் சொற்பொழிவின் பின், பழமை விரும்பிகள் அண்ணுவைக் குள்ளன் என்று ஏச முன்வந்ததில்லை!

—குங்குமநாதன்

கால்நடையாகவே...

கூட்டங்களுக்கு அண்ணு போகிருர் என்ருல், ஒரு சிறு ஊர்வலம் அளவுக்கு அவருடன் கூட்டம் செல்லும்; இதனுலேயே பெரும்பாலும் அண்ணு அவர்கள், வண்டிகளில் போக முடிவதில்லை. இத்தனைப் பேர்களையும் ஏற்றிக்கொண்டு செல்ல, இப்போதைய பஸ் கூடப் போதுமானதாக இருந்திருக்காதே.

—க. சிவஞானம்

மறக்க முடியாத நடிப்பு

அவர் நடித்த, சந்திரமோகன், நீதிதேவன் மயக்கம் ஆகிய இரு நாடகங்களையும் நான் பார்த்திருக்கிறேன். சந்திரமோகன் நாடகத்தில் அவர் காகபட்டராக வந்து புலித்தோல் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு சிவாஜி மகாராஜாவோடு வாதிடும் கட்டம் மறக்க முடியாத ஒன்று. அந்தக் கட்டத்தில் அறிஞர் அண்ணு அவர்களின் நடிப்பும் பேச்சும் எவ்வளவோ சிந்தனைகளை மக்களுக்கு ஊட்டின என்று சொல்லவேண்டும். நீதிதேவன் மயக்கம் நாடகத்தில் அண்ணு இராவணனுகத் தோன்றி குற்றவாளிக் கூண்டிலே நின்று கொண்டு வாதிடும் கட்டம் மிக அற்புதமானது.

—தி. க. ஷண்முகம்

நட்புப் பெருந்தகை

1953 ஆண்டில் இந்தச் சிறுநிகழ்ச்சி நடந்தது : அப்போது நான் மதுரை "கலைமணி" நாடக மன்றத்தில் நடிகனுகப் பங்கு பெற்றிருந்ததை உதறிவிட்டு, தென்னுற்காடு மாவட்டத்தில் திருச்சி, கோவை, மதுரை, சேலம், சென்னை ஆகிய ஊர்களுக்குச் செல்பவர்கள் சற்று இளைப்பாறும் நடுச்சந்தியாக விளங்கும் உளுந்தூர்ப் பேட்டையில் சிறுதொழில் செய்யும் சாதாரண ஆளாக இருந்து வந்தேன்.

அண்ணுவிடம் நான் நெருங்கிப் பழகியதில்லை. எப்போதோ நாடகத்தில் தலைமையேற்ற போது மட்டுமே அவர் என்னைப் பார்த்திருக்கிருர். நடுவில் சில சமயங்களில், உளுந்தூர்ப் பேட்டை கழக நண்பர் வீட்டில் அண்ணு அவர்கள் தங்கியிருந்த போது பார்த்ததுண்டு. இந்தச் சிறு நட்பின் தொடர்பைக் கொண்டு, செய்வாரோ மாட்டாரோ என்ற மனத்தயக்கத்தினுடே, நவாப் ராஜமாணிக்கம் நாடகக் குழுவில் இருந்து விலகி வந்த நண்பன் நித்தியானந்தத்தை ஏதாவது ஒரு நாடகக்

> **பட்டப் படிப்பு**
>
> உலக நல்லறிஞர் பல்லோரும் ஆழ்ந்தறிந்து, ஆராய்ந்து, போற்றிப் பேணி மேன்மையாகப் பக்குவப் படுத்தி உருவாக்கியுள்ள நற்சிந்தனைகளின் சிறப்புத் தொகுப்பு—செழுமையான எண்ணங்களின் செறிவான சுருக்கப் பதிப்புத்தான் பட்டப்படிப்பு.

குழுவில் சேர்த்து முன்னுக்குக் கொண்டுவரும்படி கேட்டு, அண்ணு அவர்களுக்கு ஒரு வேண்டுதல் கடிதம் கொடுத்தனுப்பினேன். கோடியிலே ஒருவனுகிய நான் கூப்பிட்ட குரலுக்கு, விடுத்த அன்புக் கோரிக்கைக்கு, இனிய முகத்துடன் செவிசாய்த்

தார் அண்ணா. நித்தியானந்தத்தைத் தன்னுடன் இரண்டு மூன்று ஆண்டுகள் வைத்திருந்து உபசரித்து, கழகப் பாடக ராக்கி, நண்பரின் வாழ்க்கையில் செழுமைக்கு வழிகாட்டிய அவருடைய அன்புப் பெருக்கு—நட்பின் பெருமை—இன்னும் என் உள்ளத்தில் நீங்காமல் நிறைவு பெற்று இருக்கிறது.

ஆ. நடராசன்

இரண்டல்ல, மூன்று !

1953ம் ஆண்டின் முதுமைக் கட்டம். புதுக்கோட்டை அரசினர் கல்லூரியில் உற்சாகம் கரைபுரண்டு ஓடுகிறது. நகரில் உள்ள பெரிய மனிதர்கள், அதிகாரிகள், பேராசிரியர்கள் அனைவரும் முன்வரிசையில்; இடம் கிடைக்காத மாணவர்களும் பொது மக்களும் குதிங்காலை உயர்த்திக் கொண்டு பேச்சுக் கூடத்தைச் சுற்றி நிற்கின்றனர்.

தலைமை வகித்த ஆக்டிங் பிரின்ஸ்பால் திரு. பஞ்சாபகேச சாஸ்திரிகள், அண்ணாவின் பேச்சுக்கு தான் தலைமை ஏற்றதே ஒரு புதிர் என்றும், எனவே அந்தத் தலைப்பிலேயே (Paradox)

> முதல் அத்தியாயம்
>
> சிந்திக்க தொடங்கிய மனிதன்—முதல் சிந்தனையாளன், இயற்கை வளத்தை, தனது வாழ்வு வசதியாக அமையும் வகைக்குப் பயன்படுத்தத் தொடங்கியதின் விளைவு, நாகரிக வாழ்வின் ஆரம்பக் கட்டம்; முதல் அத்தியாயம்.

அண்ணா பேசுவார் என்றும் அறிவித்ததுதான் பாக்கி; சிங்கம் போல அண்ணா எழுந்தார். எழுபது நிமிடங்கள் ஆற்றொழுக்கான அற்புதமான ஆங்கிலத்தில் எண்ணக் கலவைகளை விதவிதமாகத் தந்து கூட்டத்தினரை மெய்மறக்கச் செய்தார்.

பேச்சு முடிந்தது. முன்னாள் புதுக்கோட்டை திவான் ஜனாப் கலிபுல்லாசாகெப் அவர்கள் பக்கத்தில் அமர்ந்திருந்தவரிடம், "No notes—Never faltered! [கையிலே சிறு குறிப்பும் இல்லை. தேடினாலும் ஒரு குற்றம் கிடைக்குமா?] என்று வியந்து பாராட்டினார். நீதிபதி ஏ. எஸ். பி. அய்யரோ, மேடைமேல் ஏறி அண்ணாவின் கரம்பற்றிக் கைகுலுக்கிவிட்டு, "மிஸ்டர் அண்ணாத்துரை, இரண்டே இரண்டு காரியங்களுக்குத்தான் என்னால் சேர்ந்தார் போல ஒரு மணி நேரம் இருக்கையில் இருக்க முடியும். ஒன்று

நான் தீர்ப்பு எழுதும்போது; இரண்டாவது எம். எஸ். அவர்களின் இன்னிசை கேட்கும்போது; மூன்றாவதாக என்னை வசீகரித்து அடிமைப்படுத்திவிட்டது தங்களின் ஆழங்காணமுடியாத சொற்பொழிவு" என்றார்!

—சந்தனத்தேவன்

விட்டில் பூச்சி

திண்டுக்கல் மாரியம்மன் திடலில் இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. கழக முன்னணியினர் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தனர். மேடையில் அமர்ந்திருந்த அண்ணா திடீரென்று தமது கைகளை முதுகுப்பக்கம் விட்டுக் கொண்டு இப்படியும் அப்படியுமாக நெளிந்து கொண்டிருந்தார். பின்னர் அருகில் இருந்தவரிடம் காதோடு காதாக ஏதோ

> **சாதி வேற்றுமை**
>
> "இன்னுமா சாதி வேற்றுமையைப் பற்றிப் பேசுகிறீர்கள்?—அது எங்கே இருக்கிறது?" என்று சிலர் கேட்கக்கூடும். சாதிப் பாகுபாடுகள் இன்னும் அழிந்தொழியவில்லை. ஆனால், அது இப்போது தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வழிகளைத் தேடி அலைகிற நிலைக்கு ஆளாகியுள்ளது.

கூறினார். அவர் உடனே அண்ணாவின் பின்பக்கம் சென்று சட்டையைத் தூக்கி ஒரு விட்டில் பூச்சியை எடுத்துக் கீழே போட்டு நசுக்கினார். விளக்குகளைச் சுற்றிக் கொண்டிருந்த விட்டில் பூச்சி ஒன்று எப்படியோ சட்டைக்குள் சென்று அண்ணாவின் நடுமுதுகில் குடைந்து தொந்தரவு கொடுத்திருக்கிறது.

சிறிது நேரத்தில் அண்ணா பேச எழுந்தார்: "இதோ இங்கே ஒளிவெள்ளத்தைப் பாய்ச்சிக் கொண்டிருக்கும் விளக்குகளைச் சுற்றிக் கொண்டிருக்கும் விட்டில் பூச்சிகள் அவற்றையே சுற்றிக் கொண்டிருந்தால் நாம் அவைகளை எதுவும் செய்யப் போவதில்லை. ஆனால் அந்தப்பூச்சி தெரியாத்தனமாக நமது சட்டைக்குள் நுழைந்து நடுமுதுகைக் குடையும்போதுதான் எப்படியாவது அதைப் பிடித்து நசுக்கி விடுகிறோம். அதுபோல வடக்கிலிருக்கும் இந்தியானது அங்கேயே இருக்குமானால் நமக்கும் அதற்கும் எவ்விதத் தகராறுமில்லை. ஆனால் இங்கு வந்து நம்மை அடக்கி ஆள நினைத்து நமக்குத் தொல்லை தரும்போதுதான் விட்டில் பூச்சியை நசுக்குவது போல இந்தியை எதிர்த்து விரட்ட வேண்டும்" என்று பேசியதும் கைதட்டல் விண்ணைப் பிளந்தது.

—கி. கலைமணி

விளக்கு மட்டும்

1957ஆம் ஆண்டு அண்ணா காஞ்சித் தொகுதியில் தமிழகச் சட்டசபைத் தேர்தலில் நின்றபோது ஒரு நாள் வீட்டினுள் ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறார். இரவு மணி இரண்டு. வீட்டு வாசலில் யாரோ சிலர் மெல்லிய ஒலியில் பேசும் குரல் கேட்கிறது பாரையால் குழி தோண்டும் ஓசையும் கேட்கிறது. அண்ணாவின் எழுத்து வேகம் தடைப்படுகிறது. பேச்சுக்குரலோ சரியாகப் புலப்படவில்லை. அரைமணி நேரம் சென்றது. பேச்சுக்குரல், குழிதோண்டும் ஓசை எதுவுமே இல்லை. அண்ணா மட்டும் வெளியே வருகிறார்; வாசலில் புதிதாக ஒரு தட்டியை இரண்டு மூங்கில் கம்புகளை நட்டு மாட்டி வைத்திருக்கிறார்கள். அதில்

> **எங்கள் கொள்கை**
>
> தமிழன் யாருக்கும் தாழாமல்—யாரையும் தாழ்த்தாமல், எவரையும் சுரண்டாமல்—எவராலும் சுரண்டப்படாமல், யாருக்கும் எசமானாக இல்லாமல்—உலகில் எவருக்கும் அடிமையாக இல்லாமல் நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதே எங்களது தலையாய கொள்கை.

என்ன எழுதியிருக்கிறது என்று இருளில் தெரியவில்லை. கண்ணாடி மூடியிட்ட ஒரு விளக்கைக் கொண்டுவந்து அண்ணா படிக்கிறார். வாயால் சொல்லவும் கையால் எழுதவும் தரமற்ற இழிந்த வார்த்தைகளால் அண்ணாவைத் திட்டி அதில் எழுதியிருக்கிறார்கள். அண்ணாவுக்கு வந்தது சினமா? இல்லை; சிரிப்பு. உள்ளே சென்று ஒரு கயிறு கொண்டு வந்தார். விளக்கைத் தட்டியில் ஒளிபடுமாறு கட்டினார். "இந்த விளக்கு மட்டும் அண்ணாதுரையின் தானம்" என்று எழுதிவிட்டுப் போய்விட்டார். மறுநாள் அனைவரும் படித்தனர். தட்டியைக் கட்டியவர்களுக்கும் அவர்களுடைய கட்சியினருக்கும் வெட்கமாகப் போயிருக்காதா?

—தஞ்சை அமுதம்

அண்ணா தந்த பொற்கிழி

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்கு நிதி திரட்டி அளிக்கும் பெரும் பொறுப்பினை அண்ணா அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

நிதி வழங்கும் நிகழ்ச்சியின் போது, அண்ணா கொடுப்பது போலவும், பாரதிதாசன் அதைப் பெற்றுக் கொள்வது போலவும் படம் பிடிக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். அண்ணா, கையிலே பொற்கிழியை வைத்துக்கொண்டு, "இதை நான் கொடுத்து நீங்கள் வாங்குவதாக இருக்கக் கூடாது. என் கையில் உள்ளதை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். அப்படியே படம்

எடுக்கலாம்'' என்றார். புரட்சிக்கவிஞர், "வேண்டாம்! புலவன் என்றாலே வாங்குபவன்தான். அதிலும் உங்கள் கையால் வாங்குவதில் இரட்டிப்பு மகிழ்ச்சி'' என்று கூறி அண்ணாவைக் கொடுக்கச் சொல்லித் தமது கையால் பெற்றுக் கொண்டார்.

—மா தருமராசன்

அண்ணாவுக்குப் பிடித்த உணவு

24-12-65 அன்று டெல்லி சென்னை டீலக்ஸ் ஏ.ஸி. எக்ஸ்பிரஸ் வண்டியின் முதல்வகுப்புப் பெட்டியில் அறிஞர் அண்ணா அவர்கள் பிரயாணம் செய்தார்கள். அன்று வண்டியின் டைனிங் காரில் நான் சமையல்காரனாக வேலை செய்துகொண்டு இருந்தேன்.

அண்ணா அவர்கள் வருவதை அறிந்திருந்த நான், வண்டி புதுடெல்லி ரயிலடியை விட்டவுடன், வண்டியின் உள்வழிப் பாதை வழியாக முதல்வகுப்புப் பெட்டிக்குச் சென்று அண்ணாவின் எதிரில் நின்று "ஸார்'' என்றேன். 'தி ஹ்யூமன் பாண்டேஜ்' என்ற ஆங்கில நாவலைப் படித்துக் கொண்டிருந்த அண்ணா, "என்ன தம்பி?'' என்று அன்பாகக் கேட்டார். அண்ணாவை 'ஸார்' என்று அழைத்த என் தவற்றுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, "தங்களுக்குத் தேவையான உணவுகளை நானே செய்து கொண்டு வந்து தருவேன்'' என்றேன்; மகிழ்வோடு அனுமதி தந்தார், அண்ணா.

அவர் பிரயாணம் செய்த மூன்று நாட்கள், ஒவ்வொரு வேளையும், "தங்களுக்கு இஷ்டமான உணவு என்ன சொல்லுங்கள், செய்து தருகிறேன்'' என்று அண்ணா அவர்களைக் கேட்பேன். அவரோ, அன்றைய 'மெனு'வைக் கேட்டு அதில் உள்ள உணவுக்கே 'ஆடர்' தருவார்; கடைசிவரை அவருக்குப் பிடித்த உணவைச் சொல்லவே இல்லை!

வண்டி சென்னை சென்டிரலை நெருங்க அரைமணி நேரம் இருக்கும் போது அண்ணா அவர்களிடம் விடை பெறப் போனேன். "நீ செய்து கொடுத்த உணவு நன்றாக இருந்தது; சுவைத்து, ரசித்துச் சாப்பிட்டேன்'' என்றார் அண்ணா. எனக்கு நல்லாசி கூறி, அதை எழுதிக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டேன். அப்படியே எழுதிக் கொடுத்தார் அண்ணா. நானும் இரு கரம் கூப்பி வணங்கி விடை பெற்றேன். இன்று கைகூப்பி நிற்கிறேன், அண்ணாவின் படத்திற்கு முன்னால்...

—ஏ. மோகனசாமி

With best

Compliments

from:

pfizer

"Coca-Cola" is the registered trade-mark of The Coca-Cola Company.



हर मौक़े
पे रंग,
कोका-कोला
के संग!

Enjoy
Coca-Cola

With compliments from :-

NIRLON

SYNTHETIC FIBRES & CHEMICALS LIMITED

115 Mahatma Gandhi Road

BOMBAY - I.

Tel. No. 317473

They have energy for action. Sure.

But they need extra proteins for growth!

HIGH PROTEIN CEREAL FOOD

Mothers! Here's why NESTUM is ideal for growing children:

★ NESTUM is an easily digestible cereal food, super-charged with proteins. Gives children strength plus extra proteins vital for all-round growth of the *body* and *mind*.

★ NESTUM is pre-cooked. Stir it with cream, honey, milk or, more delicious, with Milkmaid condensed milk—and serve up as a nourishing drink at breakfast. Nestum makes tasty meals too. Just add it to meat or vegetable soups or broths! Start your growing children on Nestum now!

Readily available everywhere.

NESTUM with curd
4 tablespoonsful of NESTUM. 1 cup curd. Sweeten curd to taste, then add NESTUM.

NESTUM with milk
5 tablespoonsful of NESTUM. Milkmaid condensed milk diluted to required consistency. With fresh milk add sugar to taste.

A Nestlé product

NESTUM proteins for all-round growth–mind and body both

உயிர் காத்த உத்தமன்

சா. கஜேந்திரன்

(அண்ணாவின் குடும்ப நண்பராகிய திரு. கஜேந்திரன், அண்ணா முதல்வராக இருந்தபோது அவருடைய நேர்த்துணையாளராகவும் பணியாற்றினார். சுயமரியாதை இயக்கம், நீதிக்கட்சி, திராவிடர் கழகம் ஆகியவற்றில் பங்கு கொண்டு உழைத்தவர், கஜேந்திரன் சென்னையில் இயங்கும் மைய—மாநில உறவு ஆய்வுக் குழுவின் துணைச் செயலராகப் பணியாற்றிவரும் இவர் தி. மு கழகத்தின் துவக்கத்துக்குக் காரணமானவர்களில் ஒருவர். அவர் எழுதிய "என் தலைவர் அண்ணா" என்னும் கட்டுரையில் ஒரு பகுதியை இங்கு வெளியிடுகிறோம்.)

1968 ஜூன் 15. அன்றைய தினம் காலையிலிருந்தே எனக்குச் சிறு வயிற்றுவலி. வலியுடன் நான் முதலமைச்சர் அண்ணா வீட்டிற்கு வந்தேன். அண்ணாவின் பக்கத்தில் அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருந்தேன். நேரம் ஆக ஆக வலி அதிகமாகிக் கொண்டே வந்தது. பிற்பகலில் வீட்டுக்கு வந்துவிடலாமா என்று கூட எண்ணினேன். வயிற்றில் வலி இருப்பதை யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் அலுவல்களில் ஈடுபட்டேன்.

வருத்தம் தேங்கிய முகம்

மாலை மணி நான்கு. வழக்கமாக அண்ணா அவர்களை நான் அரசினர் பொது மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் ஏன்?

முதல்வர் அண்ணாவுக்கு வலது தோளில் வலி வருவது உண்டு. அதற்காக மருத்துவர்கள் கட்டளைப்படி மருத்துவ மனைக்குச் செல்ல வேண்டும். அங்கு தனி இடத்தில் சிறிது நேரம் சிகிச்சையை மேற்கொள்வார், அண்ணா. இந்த வலி காரணமாக அண்ணாவுக்கு வலதுகை தூக்கப்பட வேண்டிய அளவுக்கு தூக்க வராது.

அன்றைய தினம் 4 மணிக்கு எனக்கு வயிற்றுவலி கடுமையாகி விட்டது. வாந்தி எடுக்க வேண்டும் போல் தோன்றியது.

அண்ணா மாடியிலிருந்து கீழே இறங்கி வந்து கொண்டிருந்த சமயம், வழக்கம் போல் 'கஜேந்திரன்' என்று கூப்பிட்டார். அப்போது பின்கேட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்த நான்

"அண்ணா, எனக்கு என்னவோ வயிற்றுவலி காலையிலிருந்தே இருக்கிறது..." என்று சொல்லி விட்டேன்.

அண்ணா வருத்தம் தேங்கிய முகத்துடன், ஏன் அப்போதே சொல்லவில்லை? சரி. இப்போது என்னோடு வா, டாக்டரைக் கவனிக்கச் சொல்கிறேன்" என்றார்.

நான் சமாளித்துக் கொண்டு "அது ஒன்றுமில்லை அண்ணா. நீங்கள் மட்டும் ஜி. எச் சுக்கு சென்று வாருங்கள். இங்கு சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டால் சரியாகி விடும். மாலை நிகழ்ச்சியில் கலந்து கொள்ள உங்களோடு வருகிறேன்" என்று சொல்லி விட்டு வீட்டுக்குப் பின்புறமுள்ள குளியலறைக்குச் சென்றேன்.

கார் காத்திருந்தது

அண்ணா மருத்துவ மனையிலிருந்து திரும்பிய பின்னர் தாம் வந்து அவரைத் தென்னிந்திய பிலிம் வர்த்தக சபைக்கு அழைத்துச்செல்வதாக அப்போதைய பொதுப்பணி அமைச்சர் கலைஞர் கருணாநிதி என்னிடம் கூறியிருந்தார். அவர் வருவதால் எனக்குக் கவலையில்லை. அண்ணாவைக் கலைஞரிடம் ஒப்படைத்துவிடடுப் பேசாமல் என் இல்லத்துக்குச் சென்று பூரண ஓய்வு எடுத்துக் கொண்டால், மறு நாள் வழக்கம்போல் என் பணிகளைக் கவனிக்க அண்ணாவின் இல்லமாம் தாயகத்திற்கு வந்துவிடலாமென்று மனதிற்குள் திட்டமிட்டிருந்தேன். திட்டமிட்டிருந்தபடி எனது இல்லத்திற்குச் சென்றிருந்தால், உலகத்திலிருந்தே அன்று இரவு நான் விடை பெற்றிருப்பேன், மனைவியையும் மக்களையும் அண்ணாவையும் தவிக்க விட்டு!

> **இலக்கியம்**
>
> இலக்கியம் மனிதனது அறிவை வளர்க்கிறது; மனிதனுக்குத் தெளிவை ஏற்படுத்துகிறது; நன்மை தீமைகளை எடுத்துக் காட்டுகிறது; மனிதனது சிந்தனையைக் கிளறி விடுகிறது.

முகம் கழுவிக் கொண்டு வெளியே வந்து பார்த்தால்...அங்கே அண்ணா இல்லை; அவருக்குப் பதில், அவர் விட்டுச் சென்ற முன்னாள் துணைமேயர் தேவராசனின் கார் எனக்காகக் காத்திருந்தது.

"அண்ணா மருத்துவமனைக்குச் சென்று விட்டார். உங்களை இந்தக் காரில் கட்டாயம் கூட்டிவரச் சொன்னார்..." என்று அங்குள்ள உதவியாளர் சாமிநாதன் சொன்னார்.

எனது உடல்நிலையைப் பரிசோதித்துக் கொள்வதென்று மருத்துவ மனைக்குச் செல்ல எனக்குக் கொஞ்சமும் விருப்பமில்லை. வேறு எவர் பணித்திருந்தாலும் தேவையில்லை என்று கூறி மறுத்திருப்பேன். அண்ணா எந்தக் கட்டளையிட்டாலும் அதனைச் சிரமேற்றுங்கி நடப்பதுதான் வாழ்வின் லட்சியம் என்று என்னுள்ளம் எப்போதோ தீர்மானித்து விட்டிருந்ததாகையால், அவரது ஆணையை மீறக்கூடாது என்று அச்சத்துடன் மருத்துவ மனைக்கு விரைந்தேன்.

தக்க சமயம்

அண்ணா என்னை மருத்துவரிடம் காட்டி விவரத்தைக் கூறினார். அண்ணா அன்றைய சிகிச்சையை முடித்துக் கொணடு சென்றதும், என்னைச் சோதித்தார்கள். 'அப்பெண்டிசிட்டிஸ்' என்னும் குடல் சம்பந்தமான நோய் எனக்கு ஏற்பட்டிருப்பதாகவும் அது முற்றிய நிலையில் இருப்பதாகவும் கடைசி வேளையில்



அண்ணாவின் அமைச்சரவை

நான் வந்திருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டது. எனக்கு அறுவை சிகிச்சை அன்றே செய்யவேணடும் என்பது அண்ணாவுக்கும் அறிவிக்கப்பட்டது: அண்ணா மருத்துவமனைக்கு மீண்டும் வரும் வரை என்னைப் பற்றித் தொலைபேசியில் மருத்துவர்களிடம் தொடர்பு கொண்டு என் நிலையை விசாரித்துக் கொண்டிருந்தாராம்.

அன்று மாலை மவுண்டுரோடு பிலிம்சேம்பர் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பின்னர் வேறு முக்கிய அலுவல்களைக்

கவனித்துவிட்டு முதல்வர் அண்ணா மருத்துவ மனைக்கு வந்த பின்னரே அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அண்ணா வருவதற்குள்ளாக அறுவை சிகிச்சைக்கு என்னைத் தயார் படுத்தினார்கள்.

எனக்கு முழுமயக்கம் நீண்ட நேரம் நீடித்திருக்க வில்லையாம். வலி தாளாமல் அரைமயக்க நிலையில் அவதிக்குள்ளானேனும். அறுவை சிகிச்சை முடிந்து படுக்கை வண்டியில் ஆபரேஷன் தியேட்டரிலிருந்து வெளியே வந்தபோது நான் "அண்ணா, அண்ணா!" என்று வாய்விட்டு முனகிக் கொண்டதாகப் பிறகு எனக்குச் சொன்னார்கள். அண்ணா என்னைத் தொட்டுத் தடவி இன்மொழிகள் புகன்று ஆசுவாசப்படுத்தினாராம்.

தனிவார்டில் என்னைப் படுக்க வைக்கும்போது இரவு மணி ஒன்று. முதல்வர் அண்ணா என்னருகிலேயே இருந்தார். மருத்துவர்களிடம் என்னைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு, ஒரு மணிக்கு பிறகே அண்ணா வீட்டுக்குச் சென்றார். அண்ணா அன்றிரவு உணவு உட்கொள்ளவில்லை.

"இவரைத் தக்க சமயத்தில் அழைத்து வந்தீர்கள். நோய் முற்றிவிட்டது. இவர் இப்போது வராதிருந்தால் இன்று இரவு வலி ஏற்பட்டுள்ள குடல் வெடித்து இவர் பிழைத்தெழுவது அபூர்வமாக இருந்திருக்கும்" என்று மருத்துவர்கள் சொன்னதை இன்று நினைத்தால்கூட என் மனைவி கலக்கமுறுவதை நான் காண்கிறேன்.

மறக்க முடியுமா?

தாயின் பரிவு, தந்தையின் அன்பு, அண்ணாவின் ஆதரவு ஆகிய குணநலன்களை என்னைப் பொறுத்தவரையில் நிதரிசனமாகக் காணமுடிந்தது, அண்ணா அவர்களிடம். நாள் தவறாமல் பலநாட்கள் என்னை மருத்துவமனையில் கண்டு எனது மனைவிக்கும் ஒன்றுவிட்ட தம்பி விசுவநாதனுக்கும் தைரியம் கூறிவிட்டுச் சென்றிருக்கிறார்.

அறுவை சிகிச்சைக்குப் பின் இரண்டு மூன்றுமுறை என்நிலை கவலைக்கிடமாகி மருத்துவர்களே நம்பிகை இழந்து விட்டபோது என்னைச் சூழ்ந்திருந்தவர்கள் துக்கம் தாளாமல் தவித்துக் கொண்டிருந்த வேளையில் என் உள்ளத்தின் ஒலி, தமது உடல் நிலையைப் பற்றிக் கூடக் கவலைப்படாமல் என்னைப்பற்றியே அச்சமயங்களிலெல்லாம் கவலைப்பட்டுக் கொண்டிருந்தாராம்.

என் உயிரைக் காப்பாற்றிய அண்ணாவை அவர் தம் அன்பை, அவர் காட்டிச் சென்ற பாதையை என் உயிர் உள்ளளவும் மறக்கமுடியுமா?

With best compliments from

kamal printers

1-7-155 bakaram
hyderabad 20

Always insist on

BOWREAH FABRICS

Specialities:—

2 x 2 Plain & Fancy Rubia Full Voil, Wash & Wear H.T. Rubia & 2 x 2 Poplin, Dyed & Printed S. F. Lawn & Cambric, Fine Printed & Dyed Poplin, Fancy Doria, Deep Shade Poplin, Cord Coating Shirtings etc.

ALSO SIZED BEAMS & HOSIERY YARN

Manufactured by :

BOWREAH COTTON MILLS CO., LTD.

21, STRAND ROAD, CALCUTTA-1.
Phone - 22-9601 (6 lines) Tele : BOWREAH

STIFF
PAINFUL JOINTS?
Relieve pain immediately with Iodex. Its healing ingredients penetrate deep and give you instant relief.
Iodex is now available in a convenient new tube packing.
RUB IN IODEX– RUB OUT PAIN
IODEX
IODEX cum Methyl Salicylate
SK&F
IODEX®
SMITH KLINE & FRENCH (INDIA) LTD., BOMBAY-1.
(Incorporated in England with Limited Liability)

AIR MAIL EDITION OF
HINDU AND SWADESAMITRAN
now available in Delhi
on the evening of the publication
HOME DELIVERY ARRANGED

LOCAL AGENTS

CENTRAL NEWS AGENCY

Head Office:
23/90, Connaught Circus,
NEW DELHI-1.
Phone: 45942 & 45943

தூய வெண்மையான சலவைக்கு

ஒயிட் ஹார்ஸ் சோப்

துணிமணிகளை
பூரண துப்புரவாக்கி
வெண்மையாக
பிரகாசமாக
புதுமையோடு
வெளிவரச் செய்கிறது.

D. பங்காரு செட்டி
நேஷனல் இண்டஸ்டிரீஸ்,
சென்னை-21
போன்: 53358, 51388


EACH ACCORDING TO HIS NEED
We are not talking of politics but of savings and investments. When you invest your savings in the new 7-Year National Savings Certificates, you can choose according to your needs from any of the three series that are now on sale. All of them offer attractive returns, income tax concessions and wealth tax benefits.
II ISSUE
TAX-FREE interest about 5% compound payable at maturity.
*IV ISSUE
TAXABLE interest 7¼% payable annually. Tax will not be deducted at source.
III ISSUE
TAX-FREE interest 5% payable annually.
*Interest will qualify for tax exemption up to Rs. 3,000 in a year, alongwith interest on deposits in banking companies etc.
For details, contact any post office or your District National Savings Organizer.
NATIONAL SAVINGS ORGANIZATION

அண்ணாயிசம் ஓங்குக!

தில்லை வில்லாளன்

(இளமை முதலே திராவிடர் கழகத்திலும் திராவிட முன்னேற்றக் கழகத்திலும் பங்குகொண்ட இவர் ஓர் வழக்கறிஞர். இப்போது 'ராஜ்ய சபா' என்னும் மாநிலங்களவையில் உறுப்பினராக இருக்கிறார்; அந்த அவையிலுள்ள தி. மு. க. குழுவின் தலைவரும் இவரே. கழக எழுத்தாளர்களிலே குறிப்பிடத்தக்க ஒருவராகிய தில்லைவில்லாளன், அண்ணாவின் பாணியிலேயே பல சிறுகதைகளையும், நாவல், கட்டுரைகள் முதலியவைகளையும் படைத்துள்ளார். அண்ணா அமைத்த கட்சிக் குடும்பத்தின் ஓர் உறுப்பினர் என்ற முறையில், அண்ணாவின் மீது தலைநாள் முதலே தமக்கு இருந்து வந்துள்ள அன்பையும் நன்மதிப்பையும் இந்தக் கட்டுரையில் அழகுற விவரிக்கிறார் தில்லை வில்லாளன்.)

பேரறிஞர் அண்ணா, உலகப் பெருந்தலைவராக வளர்ந்து மறைந்தார். உலகத்தவர் கண்களுக்கு, அவர் உருவம், வளர்ந்து, உயர்ந்து—அண்ணாந்து கண்டு வியந்திடும் பெற்று, கண்ணீர் வெள்ளத்தில் மிதந்து, இவ்வுலகை விட்டுக் கடந்தார். ஆனால், என்னைப் பொறுத்து, அவர் எளிய அண்ணனாகவே இருந்து போய்விட்டார். அவரை மனதில் அண்ணனாக ஏற்று எத்தனையோ ஆண்டுகளாகி விட்டன. அண்ணன் வார்த்தைகளிலே சொல்ல வேண்டுமானால், 'அரைக்கால் சட்டை வில்லாளனிலிருந்து அட்வகேட் வில்லாளன் வரை' அவரே அண்ணன், தலைவர் எல்லாம். அவரே தலைவராகாத காலத்திலிருந்து, அவர், இன்னொரு பெருந்தலைவருக்கு, தளபதியாக இருந்தயிநிலையிலிருந்து, எனக்குத் தலைவர், 'வழிகாட்டி' அனைத்தும்.

'தம்பி' சொன்னது

1948ம் ஆண்டிலேயெ, அண்ணா என்று ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டேன். (சென்னைத் தோழர் சூரி என்பவரே, அதன் பதிப்பாளர். அதன் விலை ஆறணா) அதன் வரிகளை மீண்டும் நினைவுபடுத்திக் கொண்டால், என்னை நானே, தட்டிக்கொடுத்துப் பாராட்டிக் கொள்ளலாம். ஏனெனில், அவ்வளவு 'தீர்க்க தரிசனம்' எனக்கிருந்திருக்கிறது; திரிகால ஞானியாக இருந்திருக்கிறேன்...அதில், உலகத்தலைவர்கள் பட்டியல் ஒன்று

கொடுத்து, அவர்கள் அத்தனைப் பேரையும் சேர்த்து வழித்துக் குழைத்து வடித்தெடுத்த சிலை அண்ணா என்று எழுதியிருந்தேன்.

அதுமட்டுமா? நான் 'தம்பி' என்ற வாரஏடு ஒன்றினை நடத்தினேன். அதில் அண்ணாயிசம் என்றபுதிய தத்துவம் பிறக்கப் போகிறது என்று குறிப்பிட்டிருந்தேன். அது பொய்த்ததாகத் தெரியவில்லை. உலகத்தில் எத்தனையோ இசம்கள் புறப்பட்டு, பரவி, வளர்ந்து, மறைந்து, நிறைந்து எப்படி எப்படியோ உள்ளன. ஆனால் அண்ணாயிசம் இப்பொழுது பிறந்து, வளர்ந்து, செழித்து ஓங்கி நிற்கிறது.

அண்ணாவின் தத்துவம்

'அண்ணாயிசம்'—என்ன புதிய தத்துவம் பேசத் தொடங்கி விட்டானே, இவன் என்று கருத வேண்டாம். இது புதிய அரசியல் தத்துவம், தமிழகத்திற்கு உரியது—உலகத்திற்கு ஏற்றது. உலகத்தில் எத்தனையோ அரசியல் கட்சிகள் ஏற்பட்டிருக்கலாம். அதில் தலைவர், தொண்டர் என்ற பிரிவைத்தான்



உலகத் தமிழ் மாநாடு

பார்த்திருக்கலாம். ஆனால், அண்ணா தத்துவப்படி, தலைவர் தொண்டர் இல்லை அண்ணன் தம்பிகள் ஏற்பட்டனர். அவர் கட்சி வளர்க்கவில்லை; அவர் குடும்பம் ஏற்படுத்தினார். அதற்கு இணைப்புச் சக்தியாக சகோதரபாசம் ஏற்படச் செய்தார். அதனாலே அவர் வெற்றி பெற்றார்.

அது மட்டுமல்ல, அவரது அரசியல் தத்துவத்தில், அவர் எவரையும் புண்படுத்தக் கூடாது என்பதை வலியுறுத்தினர். கருத்து வேறுபாடு இருக்கலாமே தவிர ஆள் மாறுபாடு இருக்கக் கூடாது என்பதைத் தெள்ளத் தெளிவாக எடுத்து விளக்கினர். அவரது பேச்சில் நகைச்சுவை இருக்கும்—நையாண்டி மிளிரும்—கேலி நிறைந்திருக்கும். ஆனல் எதிர்க்கட்சியினரைப் புண்படுத்தும் போக்கு இருக்கவே இருக்காது. அவரது அரசியல் எதிரிகளும் அவர் பேச்சைக் கேட்டு, சிரித்து மகிழ்ந்து சிந்திப்பரே தவிர சினந்து, இழிந்து பேசுவதில்லை. இதுதான், அண்ணயிசத்தின் அடிப்படை உண்மையாகும். இதைத்தான் அவர் கண்ணியம் என்று அடிக்கடி கூறிவந்தார்.

அண்ணு வலியுறுத்தியவை

அடுத்து, அவர் வலியுறுத்தியது. அவரவர் கடமையை, அவரவர் இடத்திலிருந்து செய்தாலே, நாட்டுக்குத் தொண்டாற்றியதாக அமையும் என்பதாகும். எல்லோரும் ஒரே முறையில், ஒரே இடத்தில் நின்றுதான் பொதுத்தொண்டாற்ற வேண்டும் என்று அவர் குறிப்பிடவில்லை. எல்லோரும், அரசியல்வாதிகளாக மாறி, பொது மேடைகளில் நின்று முழக்கமிட்டாலே,

> **என் ஆசை**
>
> சர்வாதிகாரமும், கொடுங்கோன்மையும் பூண்டோடு கருவறுக்கப்பட்டாக வேண்டும். பகட்டும், வெற்றுரைகளும், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிடும் பொல்லாங்கும் அழிந்திடல் வேண்டும். அப்போதுதான் மனிதத்தன்மை, மானுடத்தின் மாண்பு அரசோச்ச முடியும். இச்சீரிய செயலில் ஈடுபடத்தக்க செயல் வீரர்களைப் பல்கலைக் கழகங்கள் ஆண்டுதோறும் பட்டதாரிகளாகத் தயாரித்து அனுப்பிக் கொண்டே இருக்க வேண்டும் என்பதே எனது பேராவல்.

பொதுத் தொண்டாற்றியதாக ஏற்றுக் கொள்ளப்படும் என்ற தத்துவத்திற்கு அவர் என்றும் எதிரியாகவே இருந்துவந்தார். வயலில் வேலை செய்யும் வரதனும், வழக்கு மன்றத்தில் வாதாடும் வாசுதேவனும், பள்ளியில் பிள்ளைக்கு பாடம் சொல்லும் பரமனும், ஆலையில் பாடுபடும் அம்பலமும், சாலையில் பாரம் சுமக்கும் சுப்பனும், அரசாங்கத்தில் ஊழியம் புரியும் அரசப்பனும், கட்சியில் அங்கம் வகிக்கும் கண்ணப்பனும், அவரவர் துறையில், தமது கடமையைச் செய்தால். நாட்டுக்குத் தொண்டாற்றியதாகவே முடியும் என்று அவர் வலியுறுத்தி வந்தார்.

கடமையை எப்படிச் செய்ய வேண்டும் என்பதை அவர் வள்ளுவர் போல் வகைப்படுத்திச் சொன்னார். கடமையாற்றும் பொழுது, கட்டுப்பாடு வேண்டும். இதனை, இதனால், இப்படிச் செய்திட வேண்டும் என்று முறையறிந்து, நெறிதெரிந்து, நேரம் உணர்ந்து, கடமையைச் செய்யவேண்டும். அப்படிச் செய்யா விட்டால் அது கடமையாற்றியது ஆகாது. ஆகவேதான், அவர் வளர்த்த கட்சியில் இந்த மூன்று அடிப்படை உண்மைகளுக்கு அதிக முக்கியத்துவம் தந்து வருகிறார்கள்.

அவர் அடுத்தபடியாக, தன் தத்துவத்திற்கு, புதிய உண்மையை அனுபவ மூலம் தந்தது, ஒற்றுமையாகும். இன்று அரசியலில் காண்பது, நிலையற்ற தன்மை அல்லவா? கட்சி மாறும் காட்டு போக்கு அல்லவா? நிமிடத்திற்கு நிமிடம் 'காடு பாயும்' கேடு கெட்ட நிலையல்லவா? இது கூடாது என்பதை, பேச்சு எழுத்து இவைகளால் அல்ல—தனது கடைசி

> **பகுத்தறிவுப் புத்தகங்கள்**
>
> பழமையின் பிடியிலிருந்து நீங்க—விதியின் சுழலி னின்று விடுபட—மேலுலக வாழ்வுப் போதையிலிருந்து தெளிந்திட—உலகியல் அறிவுச்சுடர்கள், பகுத்தறிவுப் புத்தகங்கள், ஏராளமாகப் பரப்பப்பட வேண்டும் மக்களிடையே.

மூச்சால் அவர் தந்துவிட்டுப் போனார். அவர் மறைந்து விட்டால், அவரது தம்பியரிடையே, ஒற்றுமையிருக்காது, ஆளுக்கு ஒரு பக்கம் பிய்த்துக் கொண்டு நிற்பர் என்று அரசியல் சோதிடர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் நடந்தது என்ன? அவர் கள் ஆருடம் பொய்த்தது—ஒற்றுமை—நிலைத்தது,—அறிஞர் இடத்தில் கலைஞர்—கலைஞர் தலைமையில் நாவலர் முதல் அனை வரும் என்று படைவரிசை திருத்தியமைக்கப்பட்டு நிலைத்து விட்டன.

இறைவனாகிவிட்டார்

அண்ணா இன்று, உலகத்தின் கண்களில், இந்திய நாட்டில் விடுதலைக்குப் பிறகு ஏற்பட்ட பெருந்தலைவர்களில் ஒருவராக வளர்ந்து மறைந்து விட்டார். தமிழகத்தில் இன்று எங்கும் எதிலும், எப்பொழுதும் நீங்காது நிலைத்து விட்டார்: சிலையாய் நிற்கிறார், எண்ண அலையாய் மக்கள் மனக்கடலில் இருக்கிறார். எக்காரியம் எவர் செய்தாலும், அவரை நினைந்து வணங்கி நடத் திடுகின்றனர். அவர் தலைவராய், வழிகாட்டியாய், ஏன், இன்று வணங்கும் இறையாய் மாறிவிட்டார்! அண்ணாயிசம் பிறந்து விட்டது,—இந்த எளியவன் தீர்க்க தரிசனம் பெற்றவன் என்பது தும் உண்மையாகிவிட்டது. அண்ணா வாழ்க! அண்ணாயிசம் ஓங்குக!

PREVENT CHAPPING OF

PRETTY FACE!

LOVELY HANDS!!

USE

ALMOND BENZOIN
GLYCERINE
HAND LOTION

BLISS & COTTON

DISPENSING & FAMILY CHEMISTS

12-E, CONNAUGHT PLACE,

NEW DELHI.

PHONE: 42170

பார்!

புதுயுகத்தின் புதுமை!

கவர்ச்சியான புதிய பாக்கெட்டில் நம்பர் டென்

நீங்கள் விரும்பி அனுபவிக்கும் சுவையும் மணமும் நிறைந்தது நம்பர் டென்.

இந்தியாவின் சிறந்த வர்ஜீனியா புகையிலை நிறைந்து இருப்பது நம்பர் டென்.

இத் தொழிலில் மிகவும் புகழ் பெற்றவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு கலவை செய்யப்பட்டது நம்பர் டென்.

மிக மென்மையான சிகரெட்டைப் புகையுங்கள்

நம்பர் டென்னையே

புகையுங்கள்

CI/NTN-63-T

best wishes

from

a

WELL WISHER

Sold all over

PV

SAMBAR POWDER

ESTD: 1860

P. VENCATACHELLUM CONDIMENTS, MADRAS-1

Enfield Serves You

VILLIERS MK 12 & MK 25	The Prime Movers for Pumping sets. compressors, Generators, Lawn mowers, Power Tillers, Paddy Threshers.
Agro Industrial Engines	and a wide variety of other applications.
LS 34 engines	For Knap sack sprayer, used for plant protection.

Motor cycles tested and trusted by the common man

THE ENFIELD INDIA LIMITED,

TIRUVOTTIYUR MADRAS-19.

அண்ணாவின் கடிதம்

பேரன்புடைய பெரியார் அவர்கட்கு, வணக்கம்.
என் உடல் நிலை நல்லவிதமாக முன்னேறி வருகிறது.
வலியும் அறுவைக் காரணமாக இருந்து வந்த நோய்க்
குறியும் இப்போது துளியும் இல்லை. பசியின்மையும்
நீங்கியும் இருக்கிறது. டாக்டர் மில்லரின் மேற்பார்வையிலே
சிகிச்சைகள் முடிவதும் இங்கே இருந்துவிட்டு நவம்பர்
முதல் வாரம் புறப்பட எண்ணியிருக்கிறேன். இங்கே நான்,
மிகமும், செழியன், ராஜாராம், டாக்டர் சதாசிவம்
ஆகியோர் உடனிருந்து கனிவுடன் என்னைக் கவனித்துக்
கொள்கிறார்கள். சென்னை மருத்துவமனையிலும், விமான
நிலையத்திலும் தாங்கள் காட்டிய பரிவுடனும் கலக்கத்துடன்
இருந்த தோற்றம் இப்போதும் என் முன் தோன்றியபடி
இருக்கிறது. ஆகவேதான் கவலைப்பட வேண்டியதில்லை
நிலையும் நீங்கிவிட்டது என்பதை விளக்கமாகத் தெரிவித்
திடுகிறேன். தங்கள் அன்புக்கு என் நன்றி. தங்கள்
உடல்நிலை ... தங்கள் ... மனச் சோர்வுடன்
இருந்த நான் மார்க்கட்டுரை ... எனக்கு
... ...
... ... , ...
... ...
... ...
... ...
... ...
... ...
... ...
... ...
... ...
... ... வணக்கத்தைத் தெரிவிக்கவும். அன்பு வணக்கங்கள்.

தங்கள் அன்புள்ள
அண்ணாதுரை.

நியூயார்க்
10/10/68

சீர்திருத்தம் தந்த தமிழ்

[சமூகச் சீர்திருத்தம் என்பது, எந்த ஒரு சமூகத்திலும், எந்த ஒரு காலக் கட்டத்திலும் ஏதாவது ஒருவகையில் இருந்து கொண்டு தான் இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரை, பலநூறு ஆண்டுகளாக, "ஏதோ நானும் இருக்கிறேன்" என்று இருந்து வந்த இப்பணி, பெரியார் ஈ. வெ. இராமசாமியின் காலத்தில்தான் வரிந்து கட்டிக் கொண்டு எழுந்து நின்றது. எனவே, அவரைத் தொடர்ந்தவர்களின் சமூகச் சீர்திருத்த எழுத்திலும் பேச்சிலும் ஒரு துணிவு, ஒரு கிண்டல், ஒரு ஏளனக் குறிப்பு இடம் பெற்றுத் தமிழ் (எழுத்து, பேச்சு) நடைக்கே ஒரு புதிய மிடுக்கையும் கவர்ச்சியையும் தந்தது. இந்தப் புதிய பட்டறையில் உருவான அண்ணாவின் தமிழ் நடையை விளக்கிக் காட்டும் பொருட்டு, சீர்திருத்த நோக்கே அவருடைய பலநிலைப் பேச்சுக்களையும் எழுத்துக்களையும் ஊடுருவி நிற்கும் தன்மையை விளக்கும் பொருட்டு— அவருடைய எழுத்து, பேச்சுக்களின் சில பகுதிகளை இங்கே தருகிறோம்.]

மறுமலர்ச்சி

நாட்டிலே பல்வேறு துறைகளிலேயும் மறுமலர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. புதியதோர் நிலைக்கு நாடு தள்ளாடித் தள்ளாடி, நிச்சயமாகச் சென்று கொண்டிருக்கிறது. புதிய நிலையை அடைந்தால் நம்நாடு உலகிலே முன்னணியில் உள்ள நாடுகளில் ஒன்றாக முடியும் என்ற நம்பிக்கை கொண்டவர், இந்தத் திருப்பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இன்று எந்தத் துறையைக் கவனித்தாலும் குமுறலும் கொந்தளிப்பும் தெரிகிறது—அச்சம் சிலருக்கு, சந்தேகம் பலருக்கு; மிகமிகச் சிறுபான்மையினருக்கு மட்டுமே தெரிகிறது, புதிதாக ஓர்நிலை நாட்டுக்கு உருவாகிக் கொண்டு வருகிற உண்மை.

வெடித்துக் கிடக்கும் வயல், பட்டுப்போகும் நிலையில் உள்ள மரம், உலர்ந்து கொண்டு வரும் கொடி, வற்றிக் கொண்டிருக்கும் குளம்—இவை போல, சமுதாயத்தின் நிலையும் நினைப்பும் நடவடிக்கையும் ஆகிவிடும் போது, இந்த அவலநிலையைப் போக்கியாக வேண்டுமென்ற ஆர்வமும் போக்க முடியும் என்ற நம்பிக்கையும் போக்கக் கூடிய அறிவாற்றலுங் கொண்ட ஒருசிலர் முன் வருகிறார்கள், அறிவுப்பண்ணைக்குப் பணியாற்ற. அவர்களை நாடு வரவேற்பதில்லை; நையாண்டி செய்யும். மதிப்பளிப்பதில்லை; மாச்சரியத்தை வாரி வீசும். துணைபுரிவதில்லை; தொல்லை தரும். எனினும் அந்த ஒரு சிலர் ஓயாது உழைத்து, சலிப்பு, கோபம், வெறுப்பு, பகை என்னும் உணர்ச்சிகளுக்குப் பலியாகி

விடாமல் புன்னகையும் பெருமூச்சும் கலந்த நிலையில் பணி புரிந்து, பட்ட மரம் துளிர்விடும் வரை, படர்ந்துபோக இருந்த விளக்கு மீண்டும் ஒளிவிடும் வரையில் பாடுபட்டு வெற்றி கண்டு மறுமலர்ச்சியை உண்டாக்கி வைக்கிறார்கள்.

குமாஸ்தாவின் பெண்

"நான் திகில்பட்டுக் கொண்டிருந்தது போலவே என் திருமணம் நடந்தது. என்னை மனைவியாகப் பெற்ற மகானுபாவருக்கு ஐம்பது வயதுக்கு மேலிருக்கும். நரைமயிர்; நல்ல கருப்புச் சாயம் பூசிக் கொண்டிருந்தார். பல் பல போய்விட்டன; பொய்ப் பற்கள் கட்டிக் கொண்டிருந்தார். கன்னங்களில் குழி, கைகால்களில் படை; அதை மாற்ற சந்தனம் பூசிக் கொண்டிருந்தார். உடலோ உலகில் உழன்றதால் இளைத்துப் போயிருந்தது. அதன் மீது பளபளப்பான பட்டு சரிகைப் போர்வைகள் அவருக்கு. இந்த லட்சணத்திலே காசநோய்! எனக்கு முன்பு அவருக்குப் படுக்கையறைப் பதுமைகளாக இருந்துவிட்டு பரந்தாமன் திருவடி நிழலை அடைந்த பத்தினிமார் மூவர்; நான் நாலாந்தாரம் அவருக்கு. அவரிடம் பணம் இருந்தது. ஏழ்மையில் நெகிழ்ந்து கொண்டு நானிருந்தேன். 'கிடாபோல் வளர்ந்தவளை எவனுக்

> **பலசரக்கு வியாபாரம்**
>
> 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்ற உன்னதக் கொள்கைக்கும் நாமே உரியவர்கள்; ஆண்டவன் பத்து அவதாரம் எடுத்தான் என்பதற்கும் பாடல் எழுதுகிறவர்கள் நாம்! பல சாதிகள் இருக்கும் என்ற கொள்கைக்கும் உடன் பட்டவர்கள் நாம்; 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற கொள்கைக்குள் நாம் வாரிசு என்று நீண்ட நாளைக்குப் பலசரக்கு வியாபாரம் நடத்த முடியாது.

காவது பிடித்துக் கட்டிவைக்காமலிருக்கலாமோ?' என்று கேட்க ஊரிலே பல பித்தர்கள் இருந்தனர். எத்தகைய பொருத்தமும், தட்சணை தந்தால் சரியாக இருக்கிறதெனக் கூறும் சோதிடர் சிலர் இருந்தனர். உலகிலே எது இல்லை? பளபளப்பான தோலைப் போர்த்துக் கொண்டிருக்கும் பாம்பு இல்லையா? எப்படியோ ஒன்று, என் கழுத்தில் தாலி ஏறிற்று; அவர் முகத்திலே களை உண்டாயிற்று. வீடோ மாடோ குறைச்சலான விலைக்குக் கிடைத்துவிட்டால் மகிழும் முதலாளிபோல் அவர் என்னைப் பூரிப்போடு பார்ப்பார். என் இளமை, அழகு யாவும் அவருக்குத்தானே சொந்தம்! இவ்வளவு லலிதமான பொருளை மிக மலிவாக வாங்கிவிட்டோமே என்ற சந்தோஷம் அந்த வியாபாரிக்கு. பூரிப்பான வைரமோதிரத்தைத் தொட்டுத் தொட்டுப் பார்த்துக் கொள்ளும் டம்பக்காரன் போல் அவர், நான் போகும் போதும் வரும் போதும் என்னைப் பார்த்துக் களிப்பார். அவருக்கு ஆனந்தந்தான். மூன்று மனைவிகள் இறந்ததும், இத்தகைய 'முத்து' எனக்குக் கிடைக்கவேண்டிய இருந்ததால்தான் என்று கூடச் சொன்னார்!

"எனக்குத் திருமணம் நடந்தது திவ்யமான நாளாம். மங்கள மான முகூர்த்தமாம். மங்களத்தின் லட்சணம் மறுமாதமே தெரிந்து விட்டது. கழனியைச் சுற்றிப் பார்த்துவிட்டு வரச் சென்ற கணபதி சாஸ்திரிகள்—என் கணவர் கால்வழுக்கிக் கீழே விழுந்து சில நாட்கள் படுக்கையில் இருந்து விட்டு பரலோகப் பிராப்தியானார். நான் விதவையானேன். சகுனத் தடையா னேன். சமுதாயத்தின் சனியனானேன். பெற்றோரின் கண்களில் நீர்வழியும்படியான நிலை பெற்றேன். தீயை மிதித்தவள் போல் தங்கை சாந்தா திகில் அடையக் கூடிய உருவைப் பெற்றேன். என் இளமையும் எழிலும் போகவில்லை. என் கண்ணொளி போக வில்லை. நான அபலையானேன் ஆனால் அழகியாகத்தானிருந் தேன். தாலி இழந்தேன்; ஆனால் சாய்ந்த தளிர் போலிருந்தே னேயன்றிச் சருகாக இல்லை. குங்குமமிழந்தேன்; ஆனால் பொட் டிடாத என் நெற்றியும் பொலிவுடன்தான் இருந்தது. 'பார்சிக் காரிகள், பொட்டிடுவதில்லை. நம்ம காந்தாவின் முகம் அவாளு டையதைப் போலவே இருக்கிறதென்று அக்கம்பக்கத்தில் பேசு

நமது பண்பாடு

நமது அழியாச் செல்வங்களான பண்பாடும் நாகரிக மும் காலத்தில் மூத்தவை. பழம்பெருமை படைத்திட் டவை. ஆனால், அவையெல்லாம் இளமை குன்றி, மூப்பு மேலிட்டு, வடுக்களும் சுருக்கங்களும் விழுந்து, நைந்து தொய்ந்த தேக்க நிலைக்குப் போய்க்கொண்டிருக்கின்றன. அவற்றிற்கு இளமை உரமிட்டு மீண்டும் கருத்துரம் பெற் றிடச் செய்திடல் வேண்டும். காலத்திற்கேற்ற புத் துணர்ச்சியும் புதுப் பொலிவும் ஊட்டுதல் வேண்டும்.

வார்கள் வாடாத பூவாக இருந்தேன்; ஆனால் விஷவாடை உள்ள மலர் என்று உலகம் என்னைக் கருதிற்று. அது என்னு டைய குற்றமா? எனக்கு மணம் செய்வித்துவிட வேண்டும் என்று துடித்தவர்கள் இன்று எனக்குத் துணையாகவா இருந்தார் கள்? 'ஏதோ அவள் எழுத்து' என்று கூறிவிட்டு, 'என்ன செய்ய லாம், கொடுத்து வைக்காதவள்' என்று கூறிவிட்டு, அவரவர்கள் காரியத்தை அவரவர்கள் கவனிக்கத் தொடங்கினார்கள்.

உலகினிடம் வெறுப்பு உண்டாக எனக்கு இந்த ஒரு சம்பவம் போதாதா? ஒழுங்காக, நாணயமாக, நாலுபேருக்குப் பயந்து நடந்து கொள்ள வேண்டும் என்று கூறுகிறார்களே அதை நான் ஏன் பொருட்படுத்த வேண்டும்? என்னை இந்த உலகம் ஒழுங்கா கவா நடத்திற்று? சாகப் போகும் கிழவனுக்கு சல்லாபக் கருவி யாக்கிற்று; இது ஒழுங்குதானா? என் இளமை அவனுக்குப் பலி யிடப்பட்டது; நியாயமா அந்தச் செயல்? அவன் இறந்ததும், நான் இருந்தும் இறந்தவளாக வேண்டும் என்று உலகம் கட்டளை யிட்டது; நீதியாகுமா? உலகத்திலே கொடுமைக்கு ஆளான நான் நன்றி செலுத்தி நல்லவளாக வாழ வேண்டுமே. நல்லவள் என்றால் என்ன பொருள்? நாதனை இழந்த நாரி, வாழ்வை இழந்து வாடுவதுதானா? என் வாழ்வு என் பொருள் அல்லவா?

அதனை, இறந்த என் கணவருடன் சேர்த்து வைத்துக் கொளுத்தினர்களே, அதையும் நான் சகித்துக் கொள்ள வேண்டுமாம்! எத்தனை எத்தனையோ விதவைகளின் விதியை எனக்கு உதாரணம் காட்டினர்கள்.

"ஜாக்ரதை! சர்வ ஜாக்ரதையாக இருக்க வேண்டும்! நாலு பேர் எதிரே வரவிடாதீர்கள்! காலமோ கெட்டுப் போச்சு, பெண்ணே சிறுசு. மூக்கும் முழியும் சுத்தமாக, அச்சுப் பதுமை போல் இருக்கிறது. தப்பித்தவறி ஏதேனும் நேர்ந்துவிட்டால் தலைமுறை தலைமுறைக்கும் கெட்ட பெயர் நீங்காது" என்று என் பெற்றோருக்கு உறவினர் புத்திமதி கூறலாயினர். வெந்த புண்ணிலே வேலிட்டனர். நாங்களோ ஏழைகள். என்ன சொன்னலும் தலையை அசைக்கத்தானே வேண்டும். செல்வன் வீட்டிலே சென்று இதுபோல் சொன்னல், நாக்கைத் துண்டிப்பார்கள். ஏழைக் குமஸ்தாவிடம் உறவினருக்கு என்ன பயம். எல்லாம் உனது நன்மைக்குத்தான் என்று ஒரே வார்த்தையில் முடித்துவிடுகிருர்கள். "காந்தா நல்லவள்தான், இருந்தாலும் அறியாதவள்; யாரும் கொஞ்சம் கண்காணிப்பாகத்தான் இருக்க வேண்

அண்ணுமலைப் பேருரை

டும்" என்றுரைத்தனர் அப்பாவிடம். எவ்வளவு அக்கறை பாருங்கள்! எங்கள் ஏழ்மையைக் கண்டு உதவி செய்ய யாரும் முன்வரவில்லை. என் வாழ்வு கொள்ளை போவதைத் தடுக்க யாரும் வரவில்லை. எல்லாம் முடிந்து நான் விதவையானதும், என் விதவைத் தன்மையைக் கெட்டுப் போகாமல் பார்த்துக் கொள்ளும்படி எச்சரிக்கை செய்ய, உபதேசிக்க உற்ருர் வந்தனர். அவர்களுக்கிருந்த கவலையெல்லாம் குலப் பெருமைக்குப் பங்கம்

வரக்கூடாது என்பதுதான். என்னைப் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. எனக்கு வீடே ஜெயில், அப்பா, அம்மா காவலாளிகள், உறவினர் போலீஸ், ஊரார் தண்டனை தரும் நீதிபதிகள். இது உலகம் எனக்கு உண்டாக்கி வைத்த ஏற்பாடு. இதற்காகவா நான் பிறந்தேன்! ..''

மகிழ்ச்சித் திருநாள்

ஆகஸ்டு 15ந் தேதி .. இந்தியச் சுதந்திர தினம்; புதிய சர்க்காரின், இந்திய சர்க்காரின் அமைப்புநாள்.

ஆகஸ்டு 15ந் தேதி .. பாகிஸ்தான் வெற்றி நாள். புதிய பாகிஸ்தான் சர்க்கார் அமைப்புநாள்.

ஆகஸ்டு 15ந் தேதி .. பிரிட்டிஷ் ஆட்சி, இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் ஒழியும் நாள்.

உலகிலே பேசப்படும் நாள்.

வரலாற்றிலே இந்நாள் இடம்பெறுகிறது .....

ஆகஸ்டு 15ந் தேதி... பிரிட்டிஷ் ஆட்சியின் முடிவு நாள்; புதிய சர்க்கார்களின் தொடக்க நாள்.

'புதிய சர்க்கார்கள் எவ்வண்ணம் இருக்கும்? .. பலன்கள் யாவை?... பாமர மக்களின் நலன்கள் புதிய சர்க்கார்களால் எம்முறையிலே கவனிக்கப்படும்?' என்பவைகள், தனிப்பட்ட—இனிக் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள்.

> **மாற்றுக்கட்சிகள்**
>
> மோட்டார் நன்றாக ஓட விசையிருந்தால் மட்டும் போதாது, தவறான வழியில் செல்லாமல் தடுக்கும் பிரேக்கும் இருக்கவேண்டும். அதுபோல சனநாயகக் காலத்தில்,—குடியரசு வந்த பிறகு—நல்லாட்சி நடக்க வேண்டுமானால் ஆளுங்கட்சி ஒன்று இருந்தால் மட்டும் போதாது; மாற்றுக் கட்சிகளும் இருக்க வேண்டும.

திராவிடர் கழகத்தாராகிய நாம், 'அந்நிய ஆட்சியாகிய ஆங்கில ஆட்சி கூடாது' என்பதை வலியுறுத்தி வந்திருக்கிறோம்.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி கடுமையாக நடைபெற்ற நேரத்தில் சென்னையில் நடைபெற்ற மாகாண (ஜஸ்டிஸ்) மாநாட்டில், பூரண சுயேச்சைத் தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறோம்.

பல வருட காலமாகவே, 'அந்நிய ஆட்சி நீங்கத்தான் வேண்டும்; அதுதான் எமது விருப்பம்; ஆனால் அதற்காகக் கையாளும் முறைகள் சரியானவை அல்ல என்று தோன்றுவதால், நாங்கள் இம்முறைகளை ஆதரிக்கவில்லை; நாங்கள் காங்கிரசை எதிர்க்கின்றதாலேயே, சுயராஜ்யத்துக்கு விரோதிகளல்லர்; அந்நிய ஆட்சியை விரும்புபவர்கள் அல்லர்' என்பதை, ஆயிரமாயிரம் மேடைகளிலே பேசியிருக்கிறோம்.

"வெள்ளைக்காரனை நீங்கள், நாளைக்குப் போ என்று சொன்னால், நாங்கள், இன்றே போ என்றுதான் கூறுகிறோம்" எனப் பேசியிருக்கிறோம்.

"வெள்ளைக்காரனைக் கண்டிக்கவும், வெறுக்கவும், விரட்டவும் காங்கிரசுக்காரர்களுக்கு இருக்கும் உரிமையை விட எங்களுக்கு அதிக உரிமை இருக்கிறது" என்று கூறி வந்திருக்கிறோம்.

"பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சி ஒழிய வேண்டும். ஒழிக்கப் பாடுபடுவோம்; பிரிட்டிஷ் ஆட்சி நமக்குக் கேடு பல செய்திருக்கிறது. எனவே, நம்முடைய வெறுப்புக்கும் கண்டனத்துக்கும் ஆளாக வேண்டியதேயாகும்" என்பதைப் பன்முறை எடுத்துச் சொல்லி,—நம்மை மற்றக் கட்சியினர், 'ஏகாதிபத்திய தாசர்கள்'



வரவு செலவுத் திட்டம்

என்று கூறியது வீண் பழி என்பதை எடுத்துக்காட்டி வந்ததுடன், போருக்குப் பிறகு, வந்த ஆட்சி தானாகவே விலகும் என்று முன்கூட்டியே கூறிய நாம், அந்த ஆட்சி விலகும் நாளான ஆகஸ்டு 15ந் தேதியை, மகிழ்ச்சி தரக்கூடிய நாளாகவே கருத வேண்டும். அதுவே இதுவரை நாம் கொண்ட போக்குக்கும் நமது கொள்கைக்கும் ஏற்றது......

ஆகஸ்டு விழாவிலே கலந்துகொண்டால் விளையும் தீமை என்ன? 'வெள்ளை ஆட்சிக்குப் பதிலாக வேறோர் ஆட்சி வருகிறது. அது வேதனையல்லவா?' என்று கேட்கப்படுகிறது......

நமது கொள்கையின் மூலம் பலம் கிடைத்தால், இந்த ஆட்சியும், எதேச்சாதிகாரம் செய்யும் எந்த ஆட்சியும் செல்லும்

வழி போய்த்தானே தீரும்? ஆகஸ்டு 15 இதைக்கூட நமக்கு அறிவிக்கும் நாள் ஆயிற்றே! ஏன் அன்று நாம் கலந்துகொள்ளக் கூடாது? .....

நமது வாழ்நாளில், நாம் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியை ஏற்க விரும்பாதவர்கள்—அது ஒழியவேண்டும் என்ற நோக்க முடையவர்கள்—காங்கிரசார் பழி சுமத்தியது போல் நாம், பிரிட்டிஷாரின் அடிமைகளல்லர் என்பதை விளக்க நமக்கு இருக்கும் ஒரு நாள்—கடைசிநாள்—ஆகஸ்டு 15. நாம் ஏன் அந்தச் சந்தர்ப்பத்தை இழந்து, அழியாத பழிச்சொல்லைத் தேடிக் கொள்ள வேண்டும்?

ஆகஸ்டு 15ந் தேதி—நாமும் கலந்து கொண்டாட வேண்டிய மகிழ்ச்சி தரும் நாள்; உலகத்தின் முன்பு நம் மதிப்பை உயர்த்தும் நாள்—என்று மனப்பூர்வமாக நம்புகிறேன்; நம்புவதுடன், ஆகஸ்டு 15ந் தேதி விழாக் கொண்டாடுவது, எந்த வகையிலும் தவறோ துரோகமோ அல்ல என்று எண்ணுகிறேன்......

அடிகளின்வெற்றி

"இந்தியா என்றோர் நாடுண்டு—அங்கு ஏலம், கிராம்பு பெறுவதுண்டு; பொன்னும் பொருளும் மிக உண்டு—போக்கறியாதார் நிரம்ப உண்டு" என்ற அளவில், பதினாறும் நூற்றாண்டிலே உலகம் அறிந்திருந்தது. பிறகு படிப்

> **ஆசிரியர் பாடு**
>
> ஒரு ஆண்டுக்குள் இத்தனை பாடங்கள் நடத்த வேணடும் என்று கட்டுத்திட்டம் ஆசிரியர்களுக்கு இருப்பதால் பொதுஅறிவை விளக்கிக் கூறுவது இயலாத காரியமாகும். ஆசிரியர்களுக்குத் தகுந்த திறமை இருக்கிறது; பயிற்சி இருக்கிறது. ஆனால் அதை எடுத்துச் சொல்ல நாட்கள் இல்லை. அவர்கள் தங்கள் ஆர்வத்தை அடக்கிக் கொண்டு கால அளவில் பாடத்திட்டத்தை முடிக்க வேண்டும் என்று இருக்கிறார்கள்.

படியாக இந்தியா பிரிட்டிஷ் பிடியிலே சிக்கிவிட்டது அப்போது, 'இந்தியா என்றோர் நாடுண்டு—அது ஆங்கிலேயருக்கு நல்ல வேட்டைக்காடு' என்று உலகம் இழித்தும் பழித்தும் பேசிக் கொண்டது.

திலகர் காலத்திலே—விடிவெள்ளி தோன்றுவது போல் விடுதலைக்கு முயற்சி செய்யப்பட்டது என்ற போதிலும், காந்தியார் காங்கிரசுக்குள் புகுந்த பிறகே, "இந்தியா என்றோர் நாடுண்டு—அங்கு விழிப்பும் எழுச்சியும் உண்டு" என்று உலகம் அறிந்து கொள்ள முடிந்தது.

காந்தியாரின் புகழொளி மூலமே உலகம், இந்தியாவைக் கண்டு வந்தது.

தன்னலமற்ற—விளைவுபற்றிக் கவலையற்ற—போராட்ட மனோபாவத்தை, நாட்டிலே காந்தியாரால்தான் உண்டாக்க முடிந்தது.

அதற்கு முன்பு வரையில், விடுதலை கோரி மனுச்செய்யும் மேதாவிகளிடமே நாடு இருந்தது.

அவருடைய உருவமோ, உடலமைப்போ, பேச்சோ, நடவடிக்கையோ, இராணுவ மனப்பான்மையை ஏற்படுத்தக் கூடிய விதமாக இல்லை; ஆனால், அவரால் இராணுவங்களையும் எதிர்த்து நிற்கக்கூடிய வீர உணர்ச்சியை இலட்சக்கணக்கானவர்களுக்கு உண்டாக்க முடிந்தது!......

வெள்ளி முளைத்தது

காரிருள் விலகிவிட்டது—விடிவெள்ளி முளைத்துவிட்டது. 17-9-49 அன்று திராவிட முன்னேற்றக் கழகம் முகிழ்த்துவிட்டது.

செப்டம்பர் 17 வரலாற்று ஏட்டில் ஒரு பொன்னாள்! புது மணம் பூரிக்கும் நன்னாள்! முன்னேற்றம் முகிழ்த்த நாள்! நாட்டின் சுட்டி முனைகள்—இளைஞர்—உள்ளம் பூத்துக் குலுங்கிய புதுநாள்! கருமேகம் கிழித்து, வெள்ளி முளைத்த நாள்! வெற்றிப் படையின் வீரச்சங்கொலி எழுப்பிய நாள்! 'முயற்சி திருவினையாக்கும்' என்ற முதுமொழி கொண்டு, முன்னேற்றக் கழகம் கண்ட நாள்!

நம் பணி பெரிது. ஏழ்மைச் சமுதாயத்தை இன்ப பூமியாக்கும் இலட்சியப் பாதையில் நடந்து கொண்டிருப்பவர்கள் நாம். நமது பாதை பெரிது—இலட்சியம் பெரிது—கொள்கை பெரிது.

நல்லதொரு புத்துலகப் பூங்காவைச் சிருஷ்டிக்க வேண்டியவர்கள் நாம். கட்சியின் நரம்பு நாடி சதையாக இருக்கும் இளைஞர்களாகிய நம்முடைய பணி பெரிது! பெரிது! மிகப் பெரிது! நல்லெண்ணம், நற்பண்பு, கண்ணியம், 'கட்சிக் கொள்கைகள் வளர்க்கப்பட வேண்டும்' என்ற கடமை நம்மிடம் இருக்கிறது. நம்முடைய சேவையை நாடு எதிர்பார்த்து நிற்கிறது.

காலம் இருக்கிறதே, அது ஒரு கட்டியக்காரனல்ல—நமக்காகக் காத்துக் கொண்டிருக்க. மோதிக் கொண்டிருக்கும் காலத்தில் நாட்டுநிலை—நம் கட்சிநிலை—பற்றிய கவலைகள்—ஆளவந்தாராலும், நாம் எந்தப் பிற்போக்குச் சக்திகளை முறியடிக்க முனைந்திருக்கிறோமோ அவைகளாலும் அதிகமாகி விடும்—வளர்ந்து விடும். அவைகளைச் சமாளிக்க வேண்டியவர்களும் நாமாகத்தான் இருப்போம்.

பொதுவாழ்வு மிகவும் புனிதமானது. அந்தப் புனிதப் பாதையில், கொள்கை ஆசை காரணமாகக் குதித்துவிட்ட ஆயிரக்கணக்கான இளம் வீரர்கள்—செயலாற்றும் செம்மல்கள்—குடும்பக் கவலை கொள்ளாத உறுதி கொண்டோர்

கூட்டம் நாம். வாழ்வு அளிக்கும் நிதி, களங்கமற்ற நல்ல பெயர்—கண்ணியம்—இவைதாமே ஒழிய வேறல்ல. இவை இல்லாவிடின், மனிதன், வர்ணம் பூசிய களிமண்தான். எனவே கண்ணியப்பொறுப்புடன் நாம் கடமையாற்ற வேண்டும்.

நம்மிடம் உழைக்கும் சக்தி இருக்கிறது—அதைத்தான் நம்புகிறோம். நம் சக்திதான் கட்சி—பிறவல்ல—என்றாகிவிட்டது.

அதோ—கண்ணுக்கெட்டாத தூரத்தில் மங்கலாகத் தெரிகிறது—அதை அடைய, முன்னேற்றம் என்ற விளக்கைக் கையிலேந்தி நிற்கிறோம். நம் உழைப்பு—அந்தச் சுடர் விளக்கின் திரியாகட்டும். நம் சாதனைகள்—அச்சுடரொளிக்கு ஊற்றும் எண்ணெய் ஆகட்டும்.

'வாழ்க திராவிட முன்னேற்றக் கழகம்—வளர்க அதன் கொள்கைகள்—என்று வீரமுழக்கம் செய்து, வெற்றிப்பாதை நோக்கி விரைந்து செல்வோம். வெற்றி நமதே.

பொங்கல் வாழ்த்து

இந்த உலகத்தின் எழில் யாவும் பொய்யல்ல, மெய்! மெய்! எனும் உணர்வும் அந்த எழிலினையும் பயன்தனையும் நுகர்ந்திடவும், வளர்த்திடவும் முனைதல் மாந்தர் கடன் என்ற மெய்யறிவும், அந்தக் கடமையினைச் செம்மையாய்ச் செய்து முடிக்க ஆற்றல் மிக வேண்டும்—அவ்வாற்றல், கூட்டு முயற்சியினால் மிகுந்த

> **முயற்சிக்க வேண்டும்**
>
> அன்புடன் வாழ வேண்டிய மக்களிடம் இனம், நிறம், நாடு, மதம் எனும் பல்வேறு காரணங்காட்டி, வெறுப்பை ஊட்டி ஊட்டிக் கெடுக்கிறோம். அன்பு அரசோச்சினால் அவனியே சுவர்க்கமாகும். 'ஐயன் செய்து தருவார்' என்று இராமல் மனிதன் முயற்சிக்க வேண்டும். அவன் வெற்றி பெறத்தான் போகிறான்.

சிறப்பெய்தும் என்றதோர் நல்லறிவும், இருள் நீங்கி ஒளி காண்போர் இதயம் மலராகி இன்புற்றிருப்பது போல், நல்வாழ்வதனைக் குலைக்கும் நச்சரவு போன்ற நினைப்புகளும், நிலைமைகளும், நிகண்டுகளும், அமைப்புகளும் நீடித்திருக்கவிடல் நன்றல்ல, நலம் மாய்க்கும் என்பதறிந்து, அறிவுக் கதிரினையே எங்கெங்கும் பரவச் செய்து எல்லோரும் இன்புற்று வாழ்ந்திடலே இயற்கை நீதி எனக்கொண்டு பணி புரியும் ஆர்வமும், பெற்றிடப் பயன்படும், இந்தப் பொங்கற் புதுநாள்.

காலைக்கதிரவன், மாலை மதியம். ஆடிடும் பூங்கொடி, பாடிடும் அருவி, கொஞ்சிடுங் கிள்ளை, துள்ளிடும் வெள்ளிமீன், மருண்டவிழி மான், ஒளிவிடு விண்மீன், சிரித்திடும் முல்லை, பேசிடும் புறாக்கள், பழமுதிர்சோலை, வளமிகு வயல்கள்—எதுதான், தம்பி, அழகாக இல்லை! எதுதான் தம்பி, இன்பம் தராதிருக்கிறது! வா! வா! என்று வாயால் அல்ல, சிறு கரத்தால்

அழைத்திடும் குழவி காண்போன் களித்திடுவது போலத்தான், முற்றிய கதிர் நிரம்பிய வயலின் ஓரத்தில் சென்றிடும் உழவனுக்குக் காற்றால் அசைந்தாடும் பயிர் மகிழ்ச்சி அளிக்கிறது. அந்தி நேரத்துச் செவ்வானத்தைக் கண்டதுண்டா? கண்டிருப்பாயே. எப்படி அந்த அழகு? உன்னைப் போய்க் கேட்கிறேனே. உன்னை முதன் முதலாகக் கண்டபோது உனக்கு வாய்த்தவளின் முகம் வெட்கத்தால் சிவந்திருக்குமே, நீ அதை அல்லவோ எண்ணிக் கொண்டிருக்கிறாய்! இருப்பினும் இதனைக் கேட்டிடு தம்பி. எழிலோவியம் நிரம்ப உளது நம்மைச் சுற்றி. ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் வகையான அழகு ததும்புகிறது. ஆனால் அந்தப் புறத்தழகு மட்டுந்தான், அவை நமக்களித்திடுகின்றன என்றால், அவை பெருமைக்குரியனவாகா. புறத்தழகு காட்டி நம்மை மகிழ்விப்பதுடன், அவை தமது தன்மையின் காரணமாக நமக்கு மிகுந்த பயனையும் வழங்குகின்றன. நம்வாழ்வு சிறப்படைய அவை துணை செய்கின்றன. சிறப்படையவா...வாழ்வே, அவை நமக்கு வழங்கிடுகின்றன!

வானத்திலே தோன்றிடும் வண்ணக் குழம்பு, காணற்கரிய தோர் ஓவியம்; ஆமாம்; ஆனால் கண்ணுக்காக மட்டுமோ அஃது உளது? இல்லை, தம்பி கருத்துக்காக. 'என் அழகைக் கண்டிடு, இதயம் மலர்ந்திடும்!' என்று மட்டும் கூறி மையல் ஊட்டிடும் சாகசக்காரி அல்ல, இயற்கையாள்? 'என்னைக் கண்டிடு, அறிந்திடு, முழுவதும் உணர்ந்திடு, என் தன்மையினை ஆழ்ந்து பார்த்திடு, பயன்பெறு!' என்று கூறிடும் வள்ளல் அந்த வனிதை.

இயற்கையாள் நமக்களித்த எண்ணற்ற பொருள்கள் பெற்றோம்; இன்றவை மனையில் மங்கலம் சந்திடக் காண்கிறோம். ஆயின இப்பொருள் தம்மைப் பெற்றோர் எத்தனைபேர் என்ற கணக்கினை மறக்கலாமோ—அதற்கான காரணம் அறியாதிருக்கப்போமோ! மண்மகள் தந்தாள் இந்த மஞ்சளும் மாபலாவும்; வாழையும் செந்நெலும் பிறவும் அந்தச் செல்வியின் கரத்தால் பெற்றோம்; பெற்றதால் பெற்றோம் இன்பம்: பெறுகின்றனரோ அதனை மற்றோர் என்று எண்ணிடத் தவறல் தீது; ஏனெனில் இயற்கை அன்னை, இங்கு இவை தம்மைத் தந்தது, எவரும் இன்புற்றிருக்க; சிலருக்குப் பலவும், பலருக்குத் துளியுமற்ற பாழ்நிலைக்காக அல்ல. இத்தனை தந்த பின்னும் இத்தரை மீதில் எத்தனை எத்தனையோ மாந்தர், என் செய்வோம் என்றழுதல், இல்லையே என்று கூறி இடும்பையின் பிடியில் சிக்கித் தத்தளித்திடுதல் கண்டு, தாங்கிக் கொள்வதுதான் உண்டோ?

அழுது கிடக்கின்ற மக்களுக்கு, புதுவாழ்வு, முழுவாழ்வு, நல்வாழ்வு அளித்திட, பொருள் அளவு அதிகமாமே என்றெண்ணி மருளாமல், பரிவுடன் அவர் நிலையைப்பார்த்து, நலன் தேட முனைந்திடுதல் வேண்டும் என்று கேட்டிடுகின்றனர், அழிவு ஒரு நாள், அழுகுரல் ஆறுநாள்—வேண்டுகோள் ஒருநாள், ஆகட்டும் பார்க்கலாம் என்று சில நாள். பிறகு 'அதது அததன் வழிப்படி சென்றிடும்' என்ற முறையிலே எண்ணத்தை ஓட

விட்டு விடாமல் தமிழக மக்கள் மனம் குளிர, பிற நாட்டவரும் கேட்டு மகிழத்தக்க விதத்தில், அரசு செயலாற்ற வேண்டு கிறேம். செய்வர் என்று எண்ணி, அந்த நம்பிக்கை தன்னேயே, ஒளியாக்கிக் கொண்டு. இருண்ட கண்களில் அதனை ஏற்றி விழா வினுக்குரிய இந்நாளில், தமிழகத்தோர்க்கு என் கனிவுமிகு வாழ்த்துக்களைச் செலுத்துகிறேன்

சட்ட மன்றத்தில்...

(1)

சட்டமன்றத் தலைவர் அவர்களே, துணைத்தலைவர் அவர்களே, தங்களுடைய கட்டளைக்கு அடங்கி நல்ல முறையில் தங்களுடன் ஒத்துழைத்து இந்தச் சபையின் கண்ணியத்தைக் காப்பாற்று வதில் இந்தப் பகுதியில் அமர்ந்திருக்கிற எங்களுக்கு உண்மையில் நல்ல நம்பிக்கையும் இதிலே பிறருக்கு நம்பிக்கை ஏற்படச் செய்ய வேண்டுமென்ற உறுதிப்பாடும் இருப்பதை இந்த நேரத் தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசியல் உலகத்தில், நம்நாட்டு ஜனநாயக ஆட்சியில் என் போன்றவர்களுக்கு இத்தகைய சட்டமன்றத்தில் அநுபவம் இல்லாதது மட்டுமல்ல பொதுவாக பிற ஜனநாயக நாடுகளோடு ஜனநாயக முறையில் செயல்படுகிற நம்முடைய நாட்டை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இது சிறு குழந்தைப் பருவத்தில் தான் உள்ளது என்பதை நாம் நன்ருக உணர்ந்திருக்கிருேம். இந்த நிலையில் நல்ல ஜனநாயகப் பண்புடன் வளர்ந்திருக்கும் தாங்கள். இந்தப் பக்கத்திலுள்ள எங்களில் சிலர் யாராவது சில சமயங்களில் கொஞ்சம் குறும்பாக, குழந்தைத்தனமாக நடந்து கொண்டாலும், தாய்போன்று எங்களை அன்புடன் அணைத்து அதிகமாக அடிக்காமல்; கருணையோடு சீராட்டி வளர்ப்பீர்கள் என்று உறுதியாக நம்புகிறேன்...

எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கிற நாங்கள், ஆளும் கட்சி செய்கின்ற காரியங்கள் அத்தனையையும் எதிர்ப்போம் என்று அல்ல. ஆளும் கட்சிக்கும், எதிர்க் கட்சிக்கும் உள்ள உறவு, மாப்பிள்ளைக்கும், மாப்பிள்ளைத் தோழர்களுக்கும் உள்ள உறவு போல இருக்க வேண்டுமென்று கருதிக்கொண்டிருப்பவர்கள் நாங்கள். சிற்சில நேரங்களில் மாப்பிள்ளை, தம்முடையத் தோழர்களின் குறும்புகளை வெறுப்பது போல ஆளும் கட்சியில் உள்ளவர்கள் எங்களைக் கருதக்கூடும். அப்படிப்பட்ட நேரத்தில் நாங்கள் மிகவும் சோர்ந்து போகாமல் இருக்க, தாங்கள் அருள் கூர்ந்து தங்களுடைய நியாயமான தீர்ப்புகளை வழங்கவேண்டு மென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்...

நம் நாட்டில் அரசியலில் மட்டும் அல்ல, ரெயில் வண்டிப் பிரயாணத்திலும் கூட, யார் முதலில் வண்டியில் ஏறி இடம் பிடித்துக்கொள்கிருர்களோ அவர்கள் அடுத்து வருகிறவர்களைத் துரத்துவதைப் பார்க்கிருேம். சட்ட மன்றத்திலும் அந்த மனப் பான்மை நீண்ட காலத்திற்கு இருக்கத்தான் செய்யும். பின்னே

வருகிறவர்கள் முன்னே வண்டியில் ஏறிக்கொண்டு தங்களை ஏற விடாமல் தடுக்கிறவர்களின் மனம் புண்படாமல் மெள்ள உள்ளே ஏறி நுழைந்துகொள்வதைப் போலத்தான் நாங்களும் தட்டுத் தடுமாறி இந்த சபைக்குள் நுழைந்து கொண்டிருக்கிறோம். இந்த அரசியல் ரெயில் வண்டிக்குள் ஆதிக்கம் வாய்ந்தவர்கள் இருப்பார்கள். அவர்கள் முகம் சுருங்கும் வகையில், அவர்களைப் பார்த்து காலை மடக்கிக் கொள்ளுங்கள் என்று நாங்கள் சொல்வதற்கு முன்னாலேயே, நீங்கள் உங்களுடைய கருணைப் பார்வையினாலேயே அவர்கள் காலை மடக்கிக் கொண்டு எங்களுக்கும் இடம் தரச் செய்யவேண்டும். நியாயத்திற்காக, கருணை உள்ளத்தோடு நீங்கள் தீர்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தங்களுடைய ஆட்சியின் கீழ் இந்த மன்றத்தின் கண்ணியம் உண்மையிலேயே சிறப்புறும் என்று சொல்லி, இந்தச் சபையின் கண்ணியத்தையும் கௌரவத்தையும் காப்பதில் எங்களுக்கும் ஏதாவது பங்கு கிடைக்குமானால் மகிழ்ச்சி அடைவோம் என்று கூறி வணக்கம் தெரிவித்துக்கொள்கிறேன்.

(30—4—1957)

—(2)—

ஹரிஜன முன்னேற்றத்திற்கு என்று குறிப்பிட்டுக் கேட்கிற நேரத்தில், ஹரிஜன நலனுக்குச் செலவிட என்று கேட்பதைக் காட்டிலும், ஹரிஜனங்களுடைய நலனுக்காக இன்ன இன்ன காரியங்களைச் செய்திருக்கிறோம், செய்யப் போகிறோம் என்பதாக ஆராய்ந்து அலசிக் காட்டி இருக்கலாம். ஹரிஜனங்கள் பெரும் பெரும் தொழில்களிலும் உயர்ந்த உத்தியோகங்களிலும் இருப்பதாகக் காட்டுகின்ற நேரத்தில் காங்கிரஸ் கட்சி ஏற்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, காங்கிரஸ் கட்சி ஏற்படுமா என்று காங்கிரஸ்காரர்களே ஐயமுற்றுக் கொண்டிருந்த காலத்திற்கு

> **அறிவுக்கு ஏற்றதா?**
>
> எந்தக் காலத்துப் பழக்கமானாலும் சரி, 'அது இந்தக் காலத்துக்குப் பொருந்துகிறதா? வாழ்க்கைக்கு தேவையானதுதானா? அறிவுக்கு ஏற்றதா?' என்றுதான் நாம் பார்த்துப் பின்பற்ற வேண்டுமே தவிர, அந்தக் காலத்துப் பழக்கம் என்பதற்காகவும் கண்ணை மூடிக்கொண்டு எதையும் அர்த்தமற்றும், பொறுத்தமில்லாமலும் பின் பற்றக் கூடாது.

முன்னால், காங்கிரஸ் கட்சி நாட்டை மீட்குமா என்று அரசியல் உலகத்தில் ஐயப்பாடு இருந்தபோதே, இதே மாநிலத்தில் தாழ்த்தப்பட்ட பெருங்குடி வகுப்பைச் சேர்ந்த M. C. ராஜா மந்திரியாகவும், ஸ்ரீ சிவராஜ் என்ற பெருங்குடி மகன் சட்டக் கல்லூரிப் பேராசிரியராகவும், சிவசண்முகம் வேறு துறையில் நல்ல திறமை பெற்றவராகவும் அகில இந்தியாவுக்கும்—அகில இந்தியா என்ன—உலகம் முழுவதற்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் குறைபாடுகளை எடுத்துக்காட்ட அமரரான டாக்டர் அம்பேத்கார் விளங்கியிருப்பதையும் மறந்துவிடுவதற்கில்லை.

ஹரிஜன பிரச்சினையைக் கவனித்துப் பார்த்தால், ஒவ்வொரு கட்டத்தில் ஒவ்வொருவருடைய துணையை அவர்கள் நாட வேண்டியிருக்கிறது. ஆங்கில ஆட்சி வந்தவுடன்தான் ஹரிஜன மக்கள் முதன் முதலில் நாகரிகமாக நடத்தப்பட்டார்கள் என்பதை அக்காலத்தில் வெளிவந்த இலக்கியத்தைப்பார்த்தால் தெரியும். அவர்கள் தான் முதன்முதலில் தாழ்த்தப்பட்டவர் களைத் தொட்டார்கள். அவர்கள் தொட்டுக் கொடுத்த பண்டங் களை உண்டார்கள். அதன் மூலமாக அந்தச் சமூகத்தைப் பிடித் திருந்த கஷ்டம் அந்த காலத்தில் நீங்க வழி ஏற்பட்டது. ஓரள வுக்கு மதிப்பு கிடைத்தது. அதற்குப் பிற்பாடு ஏற்பட்ட வெள்ளைக்கார ஆட்சியில் நான் முன்பு படித்துக் காட்டியபடி 1919ல் ஏற்பட்ட லேபர் இலாக்காவின் மூலம் அவர்களுடைய குறைபாடுகளைப் போக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. அதற்குப் பிற்பாடு ஜஸ்டிஸ் கட்சி காலத்தில் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது.—சபாநாயகர் மூலமாக இந்தச் சபைக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்—மதுரை மாவட்டத்தில் ஜில்லா போர்டு தலைவராக இருந்த காலஞ்சென்ற எங்கள் பெரும் தலைவர்களில் ஒருவரான சௌந்தரபாண்டியன் அவர்கள் ஆதித் திராவிடரை பஸ்ஸில் ஏறக் கூடாது என்ற கொடிய சட்டத்தை நீக்கி, 'அவர்களை ஏற்றாவிட்டால் மோட்டார்களுக்கு லைசென்ஸ் தரப்படமாட்டாது' என்று ஒரு சட்டத்தை வகுத்தார்கள். 'அந்தக் காலம் எப்படிப்பட்டது? அந்தக் காலத்தில் போடப் பட்ட சட்டம் எங்கே? இந்தக் காலத்திலே போடுகிற சட்டம் எங்கே?' என்று உங்கள் கவனத்திற்குக் கொண்டுவரச் சொல் லுகிறேனே தவிர, நாங்கள் ஒன்றும் புதிதாகப் பெரிதாகச் செய்துவிட்டோம் எனப் பெருமையடித்துக் கொள்ளச் சொல்ல வில்லை

கலப்புத் திருமணத்தை ஆதரிப்பதற்கு முன், மற்றொன்றை யும் யோசித்துப் பார்க்க வேண்டும். கலப்புத் திருமணம் செய்து விட்டு அதற்குப் பிறகு பிறக்கும் குழந்தைகள் சமுதாயத்தில் எப்படி ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்கிற பிரச்சினையை நாம் தீர்க்க வேண்டும். சமுதாயத்தில் சாதி மனப்பான்மையை ஒழித்து, சாதிப் பாகுபாடுகளையும் நீக்க வேண்டும். சாதிப் பாகு பாட்டை யார் ஆதரித்தாலும் சரி, எந்த உரிமையின் பெயரால் ஆதரித்தாலும் சரி, எத்தனை பழைய ஏடுகளை எடுத்துக்காட்டி னாலும் சரி, சாதிபேதம் ஆகாது! இந்தச் சமுதாயத்தின் சாதி மனப்பான்மை மாற்றப்பட்டாலொழிய கலப்புத் திருமணத்தால் பிறக்கின்ற குழந்தைகள் தாங்கள் மணம் செய்துகொள்ளுகின்ற நேரத்தில் நல்லபடியாக சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்கள். ஆர்வத்தின் காரணமாகக் கலப்புத் திருமணம் செய்துகொண்டு, பின்னர் அதன் மூலம் பிறக்கின்ற குழந்தை கள் சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்படாத நிலைமை நீடித்தால்

பிரச்னை தீர்ந்துவிட்டதாகக் கருத முடியாது. ஆகவே கலப்புத் திருமணம் அதிகமாகப் பரவ வேண்டுமானால், அடிப்படையிலே நாட்டிலுள்ள சாதி மனப்பான்மை ஒழிக்கப்பட வேண்டும் என்பதை அறிவும ஆர்வமும் உடைய அமைச்சருக்கும் இப் பேரவையின் உறுப்பினர்களுக்கும் சபாநாயகரின் மூலமாகக் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

கலப்புத் திருமணம் என்பது லட்சியத்துக்காகச் செய்யப் படுவது மாத்திரம் அல்லாமல் நம் சமுதாயத்தையே மாற்றி அமைக்க எடுத்துக்கொள்ளப்படுகிற ஒரு தேசிய முயற்சியாக இருக்க வேண்டும். இந்தத் தேசிய முயற்சி, முயற்சி அளவிலே இல்லாமல் நிச்சயமாகச் செயல்பட வேண்டும் அப்போதுதான் நிச்சயமாக சாதிபேதத்தை ஒழிக்க முடியும். ஆகவே, உடனடி யாக சாதி பேதத்தைப் போக்குவதற்காக நல்ல சீர்திருத்தப் பிரச்சாரத்தில் நாட்டை ஆளுகின்ற சர்க்கார்—சகல துறை களிலும் திட்டங்களிலும் ஈடுபட்டாக வேண்டும்.

"சாதியை உண்டு பண்ணினவர்கள் திருந்திவிட்டார்கள்,— உலகப் போக்கை உணர்ந்து மாறிவிட்டார்கள். ஆனால் இதர சாதிக்காரர்களால் விளையும் தொல்லைதான் அதிகம்" என்பதாக ஒரு உறுப்பினர் குற்றம் சாட்டினார், அது உண்மைதான். சாதிப் புற்று தோன்றிவிட்டதனால், அதிலே தோன்றியவை பலபல. இன்றைக்கும் கிராமப்புறங்களிலே தம்தம் உரிமைகளை நிலை நாட்டிக் கொள்வதற்குப் போராடத்தான் போராடுகின்றன. தூங்கிக் கொண்டிருப்பவனைத் தேளும் கொட்டும் பாச்சையும் கடிக்கும். ஏமாந்தால் பாம்பும்தான் காலைச் சுற்றிக் கொள்ளும். இவற்றில் எதற்குக் கொடிய விஷம் அதிகம் என்பது அல்ல பிரச்னை. எந்தப் புற்றிலிருந்து அவை வெளிப்பட்டவை எனக் கண்டு, அந்தப் புற்றையே அழித்தாலொழிய அதிலிருந்து கிளம்புகின்ற இந்த விஷ ஜந்துக்கள்—தேள், பாச்சை, பாம்பு நாட்டிலே பரவிக்கொண்டுதான் இருக்கும். புற்றையே அழிக்கும் வேலையில் மிகத் துரிதமாக ஈடுபட்டாக வேண்டும்.

அமைச்சர் அவர்கள் அன்றொரு நாள் ஹரிஜன மக்களின் நிலைமையை எடுத்துக் கூறியபோது "இப்பொழுதுதான் என் தங்கைகளின் கழுத்தில் வெள்ளியையும் தங்கத்தையும் பார்க் கிறேன்" என்று உணர்ச்சி ததும்பச் சொன்னது இன்றும் என் னுடைய செவியிலே ஒலித்துக் கொண்டிருக்கிறது. உண்மையி லேயே இந்தப் பிரச்னையை நன்றாக அறிந்தவர்—பெரியதலைவர் என்றும் பெருமைப்பட்டு,—அந்தச் சமுதாயத்தை ஒடுக்கும் வேறு எந்தச் சமுதாயத்தையும் கண்டிப்பதற்குப் பூரண உரிமை உடையவர் இன்றைக்கு அந்த இலாகா பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்து இந்த நேரத்தில் நான் சொல்லுவேன், நீங்கள் எங்களை விரும்பி ஆதரித்தாலும் சரி, ஆதரிக்காவிட்டாலும் சரி, ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக் கொள்ளாவிட்டாலும். மதிப்பளித்தாலும் மதிப்பளிக்காவிட்டா லும் ஒன்றை மட்டும் உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்பு கிறேன்; உங்கள் நிழலைப்போல் ஹரிஜன முன்னேற்றத்திற்குப் பாடுபடுவோம் நானும் என் கட்சியினரும் என்பதைச் சொல்லி,

இந்த மான்யக் கோரிக்கையின் பேரில் கொண்டுவந்துள்ள வெட்டுப் பிரேரணையின் மீது என் கருத்துக்களைக் கூறிக் கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன்.

20—7—57

அந்த வசந்தம்

எனக்கென்று ஒரு வசந்தகாலம் இருந்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகு—ஆண்டு பலவற்றுக்குப் பிறகு—அந்த 'வசந்த கால'த்தை நினைவிலே கொண்டு, இன்றைய கவலைமிக்க நாட்களிலே எழ முடியாத புன்னகையைத் தருவித்துக் கொள்கிறேன்.

பெரியாருக்கு, அந்த 'வசந்தகாலமும்' தெரியும், இன்று நான் பொறுப் பேற்றுக் கொண்டிருப்பதால் எழுந்துள்ள கவலையும் நன்கு புரியும்.

வசந்தகாலம் என்றேனே, அந்த நாட்களில், நான் கல்லூரியிலிருந்து வெளியேறி அவருடன் 'காடுமேடு' பல சுற்றி வந்த நிலை. அந்தக் 'காடுமேடு'களில், நான் அவருடன் தொண்டாற்றிய போது, வண்ணவண்ணப் பூக்கள் குலுங்கி மகிழ்வளித்ததைக் கண்டேன், நறுமணம் எங்கும் பரவிடக் கண்டேன்.

அப்போது, கலவரம் எழாமல் ஒரு பொதுக் கூட்டத்தை ஒழுங்காக நடத்தி முடித்திட முடிந்தால் போதும்; பெரிய வெற்றி என்று பெருமிதம் தோன்றும். புறப்படும் முன்னர் தலைபோகும்,—தாடி போகும்—தடிபோகும்—உயிர்போகும்— என்ற மிரட்டல் கடிதங்களைப் படித்திட வேண்டிய நிலை. 'அண்ணாத்துரை! இதைப் பார்த்தாயா?' என்று ஒரு கடிதத்தை வீசுவார். 'ஆமாமய்யா!' என்று பொருளற்ற ஒரு பதில் தருவேன். வருகிறாயா என்று என்னைக் கேட்க மாட்டார், வருவேன் என்பது அவருக்கு நன்று தெரியுமாதலால், செல்வோம். பெரியாரின் பேருரை நிகழ்த்தப்படும். வந்தவர்களில், உருட்டல் மிரட்டல் கடிதம் எழுதியவர் இருந்திருப்பின், அடுத்த கூட்டத்துக்கு அவர் ஐயாவுக்காக "மாலை" வாங்கிக்கொண்டுதான் வருவார்; அத்தகைய தெளிவும் வாதத்திறமையும் பேச்சில் கிடைக்கும். அத்தகைய தெளிவுரைப் பெற்றுப் பெற்று, தமிழரில் பலர், பலப்பலர் திருந்தினர் என்பது மட்டுமல்ல, தமிழகத்திலேயே ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டு விட்டிருக்கிறது.

ஒருவர் புறப்பட்டு, ஓயாது உழைத்து, உள்ளத்தைத் திறந்து பேசி, எதற்கும் அஞ்சாது பணியாற்றி, ஒரு பெரிய சமூகத்தை, விழிப்பும் எழுச்சியும் கொள்ளச் செய்வதில் வெற்றி பெற்ற வரலாறு, இங்கன்றி வேறெங்கும் இருந்ததில்லை.

அந்த வரலாறு துவக்கப்பட்ட போது நான் சிறுவன். அந்த வரலாற்றிலே புகழேடுகள் புதிது புதிதாக இணைக்கப்பட்ட நாட்களிலே. ஒருபகுதியில், நான் அவருடன் சேர்ந்து பனியாற்றி இருக்கிறேன். அந்த நாட்களைத்தான் என் வசந்தம் என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

பெரியாருடன் இணைந்து பணியாற்றியவர் பற்பலர். அவருடன் மற்றப் பலரைவிட இடைவிடாது இருந்திடும் வாய்ப்பைப் பெற்றிருந்தவன் நான். அந்த நாட்கள் எனக்கு மிகவும் இனிமையான நாட்கள். இன்றும் நினைவிலே கொண்டு வரும் போது, இனிமை பெறுகிறேன்.

எத்தனை எத்தனையோ கருத்துக்களை உரையாடலின் மூலம் தந்திருக்கிறார். எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்பதனை நான் கற்றுணரும் வாய்ப்பும் தந்தார். பொதுத் தொண்டாற்றுவதில் ஓர் ஆர்வமும், அகமகிழ்வும் மனநிறைவும் பெற்றிடச் செய்தார்.

கோபத்துடன் அவர் பலரிடம் பேசிடக் கண்டிருக்கிறேன்; கடிந்துரைக்கக் கேட்டிருக்கிறேன்; 'உன்னை எனக்குத் தெரியும் போ!' என்று உரத்த குரலில் கூறியதைக் கேட்டிருக்கிறேன்; ஒருநாள் கூட என்னிடம் அவர் அவ்விதம் நடந்துகொண்டதில்லை. எப்போதும் ஒரு கனிவு, எனக்கென்று, தனியாக வைத்திருப்பார். என்னைத் தமது குடும்பத்தில் பிறவாத பிள்ளை எனக் கொண்டிருந்தார்.

நான் கண்டதும் கொண்டதும் அந்த ஒரே தலைவரைத் தான்.

இப்போது நான் உள்ள வயதில் அவர் இருந்தார், நான் அவருடன் இணைந்தபோது, முப்பது ஆண்டுகளுக்கு முன்பு. அதற்கு முன்பு முப்பது ஆண்டுகள் அவர் பணியாற்றி வந்திருக்கிறார்.

இந்த ஆண்டுகள் தமிழரின் வரலாற்றிலே மிக முக்கியமான ஆண்டுகள்; 'திடுக்கிட வைக்கிறாரே! திகைப்பாக இருக்கிறதே! எறிச்சலூட்டுகிறாரே! ஏதேதோ சொல்கிறாரே?' என்று கூறியும், 'விட்டுவைக்கக் கூடாது! ஒழித்துக் கட்டியாக வேண்டும்! நானே தீர்த்துக் கட்டுகிறேன்!' என்று மிரட்டியும், தமிழகத்துள்ளாரில் பலர் பேசினர்; ஏசினர்; பகைத்தனர்; எதிர்த்தனர்; ஏளனம் செய்தனர்; மறுப்பு உரைத்தனர்; ஆனால் அவர் பேச்சைக் கேட்ட வண்ணம் இருந்தனர்; மூலையில் நின்றாகிலும், மறைந்திருந்தாகிலும். அந்தப் பேச்சு ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நடந்தபடி இருந்தது; எதிர்த்தவர்கள்; ஏளனம் புரிந்தவர்கள், ஏனோதானோ என்று இருந்தவர்கள், தத்தமது நிலை தன்னாலே மாறிடக் கண்டனர்; கொதித்தவர்கள் அடங்கினர்; மிரட்டினோர் பணிந்தனர்; அலட்சியம் செய்தோர் அக்கரை காட்டினர்; அவருடைய பேச்சோ! அது தங்குதடையின்றி வேகம் குறையாமல், பாய்ந்தோடி வந்தது; மலைகளைத் துளைத்துக்கொண்டு, கற்களை உருட்டிக் கொண்டு, காடுகளைக் கழனிவளம் பெறச் செய்துகொண்டு,—ஓசை நயத்துடன். ஒய்யார நடையுடன், அங்கே பேசுகிறார், இங்கே பேசுகிறார், அதைக் குறித்தும் பேசுகிறார், இதைக் குறித்துப் பேசுகிறார் என்று தமிழகம் இந்த ஐம்பது ஆண்டுகளாகக் கூறிவருகிறது.

'மனதிற்பட்டதை எடுத்துச் சொல்வேன், எது நேரிடினும்' என்ற உரிமைப்போர், அவருடைய வாழ்வு முழுவதும். அதிலே அவர் கண்ட வெற்றி மிகப் பெரியது. அந்த வெற்றியின் விளைவு அவருக்கு மட்டும் கிடைத்திடவில்லை. இன்று அனைவரும் பெற்றுள்ளனர், அந்த வெற்றியின் விளைவுகளை. இந்தத் தமிழ

தலைமைச் செயலகத்தில் அண்ணா படம்

கத்தில் தூய்மையுடன் மனதிற்குச் சரியென்று பட்டதை எவரும் எடுத்துரைக்கலாம் என்ற நிலை உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. அறிவுப் புரட்சியின் முதல்கட்ட வெற்றி இது. இதற்கு முழுக்க முழுக்க, பொறுப்பாளர் பெரியார். இந்த வெற்றி கிடைத்திட அவர் ஆற்றிய தொண்டின் அளவு மிகப்பெரிது.

தமிழகத்தில் இன்று அவரால் ஏற்பட்டுள்ள இந்த நிலை, இந்தியாவில் வேறு எங்கும் காணமுடியாது. பிறபகுதியினர் இதுபற்றிக் கேள்விப்படும் போது, வியர்த்துப் போகின்றனர். "அப்படியா! முடிகிறதா! நடக்கிறதா! விட்டு வைத்திருக்கிறார்களா!" என்று கேட்கிறார்கள்; சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு.

அரித்துவாரம், கல்கத்தா, பாட்னு, சாரான்பூர், காசி, லாகூர், அலகாபாத், அமிர்தசரஸ்—மேலும் இது போன்ற பல நகர்களில், என்னையும் உடன் அழைத்துக் கொண்டு பெரியார் சுற்றுப்பயணம் செய்தபோது, ஒவ்வொரு ஊரிலும் இது போலத்தான் கேட்டனர். யார்? அந்த ஊர்களிலே உள்ள பகுத்தறிவுவாதிகள்!

அந்த இடத்துப் பகுத்தறிவுவாதிகள் படிப்பார்கள், பெரிய பெரிய ஏடுகளை; எழுதுவார்கள், அழகழகான கட்டுரைகளை. கூடிப்பேசுவார்கள், சிறிய மண்டபங்களில்; போலீஸ் பாது காப்பு பெற்றுக் கொண்டு! இங்கு? இங்கா. அவர் பேசாத நாள் உண்டா? குரல் கேட்காத ஊர் உண்டா? அவரிடம் சிக்கித் திணருத பழமை உண்டா? எதைக் கண்டு அவா திகைத்தார்! எதற்கு அவர் பணிந்தார்? எந்தப் புராணம் அவரிடம் தாக்கு தலைப் பெருதது? 'ஏ! அப்பா! ஒரே ஒருவர், அவர் நம்மை அக்கு வேறு ஆணி வேருக எடுத்தெடுத்து வீசுகிருரே' என்று இந் நாட்டை என்றென்றும் விடப்போவதில்லை என்று எக்காளமிட் டுக் கொண்டிருந்த பழமை அலறலாயிற்று. புதுப்புதுப் பொருள் கொடுத்தும், பூச்சு மெருகு கொடுத்தும், இன்று பழமையின் சில பகுதிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்ருலும், விழுந்த அடியால், அடித்தளம் நொறுங்கிப் போய்விட்டிருக் கிறது என்பதனை அறியாதார் இல்லை.

எனவேதான், பெரியாருடைய பெரும்பணியை நான்—ஒரு தனிமனிதரின் வரலாறு என்றல்ல—ஒரு சகாப்தம்—ஒரு கால கட்டம்—ஒரு திருப்பம் என்று கூறுவது வாடிக்கை.

அக்ரமம் தென்படும்போது, மிகப் பலருக்கு, அது தன்னைத் தாக்காதபடி தடுத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமும், ஒதுங்கிக் கொள்வோம் என்ற பாதுகாப்பு உணர்ச்சியுந்தான் தோன்றும். எதிர்த்து நிற்கவேண்டும் என்ற எண்ணம் எளிதில் எழுவதில்லை. பெரியார், அக்ரமம் எங்கு இருந்திடக் கண்டாலும், எந்த வடிவிலே காணப்படினும், எத்துணை பக்கபலத்துடன் வந்திடினும், அதனை எதிர்த்துப் போரிடத் தயங்குவதில்லை.

அவர் கண்ட களம் பல; பெற்ற வெற்றிகள் பலப்பல. அவர் தொடுத்த போர் நடந்தபடி இருக்கிறது. அவர் வயது 89. ஆனல் போர்க்களத்திலேதான் நிற்கிருர்!

அந்தப் போரில், ஒரு கட்டத்தில் அவருடன் இருந்திடும் வாய்ப்பினைப் பெற்ற நாட்களைத்தான் 'வசந்தம்' என்று குறிப்பிட்டேன்.

மேலும் பல ஆண்டுகள் அவர் நம்முடன், நமக்காக, வாழ்ந் திருக்க வேண்டும். தமிழர் வாழ்வு நல்வாழ்வாக அமைவதற்கு, பன்னெடுங்காலமாக இருந்துவரும் கேடுகள் களையப்படுவதற்கு, அவருடைய தொண்டு தொடர்ந்து அளிக்கப்பட்டு வரும் என்பதில் ஐயமில்லை.

With best compliments from

THE ANDHRA SUGARS LIMITED

Registered Office :

VENKATARAYAPURAM, TANUKU, WEST GODAVARI DISTRICT,
ANDHRA PRADESH
Telegrams : "SUGARS"

Manufacturers of

ACETIC ANHYDRIDE, ACETIC ACID, ETHYL ACETATE,
AND SODIUM ACETATE, INDUSTRIAL ALCOHOL,
AND DENATURED SPIRITS, SUGAR,
SUPERPHOSPHATE, SULPHURIC ACID,
CAUSTIC SODA, CHLORINE, HYDROCHLORIC ACID.

With compliments from

DGL PRIVATE LIMITED

Manufacturers of

Complete range of Fire Fighting Equipment and Appliances including Fire Engines

SERVICE STATION EQUIPMENT
CENTRALISED
LUBRICATION EQUIPMENT
LIGHT ENGINEERING STORES

Regd. Office:

14-M Block, Connaught Circus. New Delhi-1.
Telephone: 45028 Grams: GARAGE

Branch:

10, Shahnajaf Road, Hazrat Ganj, Lucknow.
Telephone: 25253 Grams: GROWMORE

தமிழக வளமையிலும் வளர்ச்சியிலும்
எமது கூட்டுப் பணி

தமிழ் நாடு சிறு தொழில் நிறுவனத்தின் உற்பத்திகள்

* எஃகு அலமாரிகள்
* சோபா செட்
* கட்டில்கள்
* அலங்கார மேஜைகள்
* நாற்காலிகள்
* கால் அணிகள்
* டைனிங் டேபிள்
* தோல் பெட்டிகள்
* டிரான்சிஸ்டர் தோல் உறைகள்
* சூப்பர் எனமல் காப்பர் வைண்டிங் வையர்
* கண்கவர் பீங்கான் கோப்பைகள்

விவரங்களுக்கு :

டான்சி விற்பனை அகம்

113, என். எஸ். ஸி. போஸ் ரோடு, சென்னை - 1
"லக்ஷ்மி" 312, கிராஸ்கட்ரோடு, கோவை - 12.

நிர்வாக இயக்குனர் :
தமிழ் நாடு சிறு தொழில் நிறுவனம், சென்னை - 2.

ஜெயராதா

மாவரைக்கும் இயந்திரம்



சிறியது! அடக்கமானது! அழகானது!

¾ லிட்டர் ஊறவைத்த
தான்யங்களை 30 நிமிடங்களில்
இட்லி தோசை வடை முதலிய
வைகளுக்கு அறைக்க ஏற்றது
மற்றும் பெரிய அளவு மிஷின்களும்
கிடைக்கும்.

பிரதிநிதி
ஸ்ரீ வீரமாகாளி சப்ளையர்ஸ்
கடை நெ. 77,
புது முனிசிபல் மார்க்கட்
லோதி காலனி, புதுதில்லி-3.

ஜெயராதா இண்டஸ்ட்ரீஸ்
கணபதி நகர்,
மாயூரம்
தஞ்சை மாவட்டம்
போன்: 416

With best compliments from

SANGHI MOTORS

With best compliments from :

M/s. Sandoz (India) Limited.

"SANDOZ HOUSE"
DR. ANNIE BESANT ROAD,
WORLI, BOMBAY-18 WB

with best compliments from

south india viscose limited

coimbatore-18.

with best compliments from

indian detonators ltd.

With the best compliments of

Colour-Chem Limited

RAVINDRA ANNEXE,
DINSHAW VACHHA ROAD,
194, Churchgate Reclamation,
BOMBAY—20.

Manufacturers of :

PIGMENT EMULSIONS, SYNTHETIC RESIN BINDER MATERIALS AND ORGANIC PIGMENT POWDERS

YOUR FRIEND IN THE DARK
Whether you're searching for your keys,
fixing a fuse or checking a puncture.....
nothing can help you like a GEEP flashlight.
Behind its perfect light is the power of
GEEP cells and GEEP bulb.
Compare it with any other. Its switch.
Its focussing. Its sturdiness. You'll
find GEEP the best.
Always buy GEEP flashlights with Geep
bulbs and cells.
GEEP
SYMBOL OF QUALITY

For friendly hospitality

Here's a happy combination to offer family or guests ! A tray of inviting food—and to top off the treat, Ice-cold Coca-Cola. For this is the sparkling, wholesome refreshment that has a way with food-that freshens your taste, brings out flavour. Next time you serve a snack-serve Coca-Cola with it !

Coca-Cola

SIGN OF GOOD TASTE

IN OVER 100 COUNTRIES

Bottled under authority of The Coca-Cola Company by

PURE DRINKS (NEW DELHI) PRIVATE LTD.

ஜெபமாலை

சி. என். அண்ணுத்துரை

(தமது பொதுவாழ்வின் ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தை "வசந்தகாலம்" என்று கூறி மகிழ்கிருர் அண்ணு. அந்த 'இளவேனில்' காலத்தில் அவர் எழுதிய ஒரு கதையை,—"ஜெபமாலை முதலிய 5 சிறுகதைகள்" என்னும் தொகுதியில் முன்பே வெளிவந்த கதையை,—இங்கே மறு வெளியீடு செய்கிறோம்.)

"எங்கே என் ஜெபமாலை? ஐயோ! ஜெபமாலையின்றி நான் ஒரு கணமும் உயிர் தரியேனே! என் உயிருக்கு உயிர், ஜெபமாலையல்லவா ? என்வாழ்வுக்கு வழிகாட்டி, இருதயத்துக்கு இன்பம், துயர் நீக்கும் துணை, கதியளிக்கும் காவல், ஜெபமாலையாயிற்றே. ஜெபமாலையின்றி நான் எப்படி இருக்க முடியும்?

"என் எதிரே, முத்து, ரத்னம், தங்கம், பட்டு எல்லாம் இருந்தும் என்மனம், ஜெபமாலையையே நாடுகிறது. ஜெபமாலை என்னை ஆட்கொண்ட பிறகு, வேறு எதற்கும் நான் அடிபணிய மாட்டேன். ஜெபமாலை வேண்டும், இப்போதும், எப்போதும், என்னுடனேயே இருந்தாக வேண்டும். கொண்டு வா ஜெபமாலையை!"

ஜெபமாலை, ஒளிந்திருந்த இடத்திலிருந்தே, 'களுக்' கெனச் சிரித்தாள். எவ்வளவு பசப்புகிருன், என்னென்ன புரட்டுப் பேசுகிருன்; உண்மையா அவனுடைய உரை? இல்லை! உள்ளத்திலிருந்தா வந்தன? கிடையாது; உதட்டளவுதான். ஏன் ஜெபமாலை, ஜெபமாலை என்று உருகுபவன் போல நடிக்கிருன்? இலாபமிருப்பதால்.

ஜெபமாலை, கோபுரநாதன் மகள். ஊரெங்கும் கோபுரநாதனுக்கு மதிப்பு. ஜெபமாலையை மணந்ததால், அந்தக் குடும்பச் செல்வாக்கு ஆண்டிக்கு கிடைத்தது. ஆண்டி வேலை வெட்டி செய்யாமல், பரிமளமாக வாழ்ந்ததே ஜெபமாலையின் தயவினுல்தான். ஜெபமாலையுடன் ஆண்டி வாழ்ந்ததால்தான், ஆண்டிக்கு, ஊரிலே, செல்வம், செல்வாக்கு எல்லாம். கண்ணியமும் காணிக்கையும் கிடைக்கும்படி செய்ததாலேயே ஜெபமாலை மீது, ஆண்டி, தனக்கு அமோகமான காதல் இருப்பதாகக் கூறினுன். ஆண்டியின் மனதுக்குச் சந்தோஷ

மூட்டுவது, ஜெபமாலையின் 'சிபாரிசு' பெற உதவும்; அந்தச் சிபார்சு, கோபுரநாதனின் உதவியை தமக்கு வாங்கித் தரும். ஊரார் ஆண்டியை ஆதரித்ததன் மர்மம் இதுவே. ஆண்டிக்குத் தெரியும் ஜபமாலையின் அருமை பெருமை. ஆண்டியின் 'அன்பு' வெறும் வேஷமே தவிர, உண்மையல்ல. ஜெபமாலையின் தயவால் செல்வாக்குப் பெற்றதும், ஆண்டியின் மனம், தங்கத்திடம் தாவும். முத்து, ரத்னம், பட்டு என்று கண்ட கண்டபடி இருக்கும், ஆண்டி தேடும் காதல். ஜெபமாலை இதை அறிந்தே நகைத்தாள். ஊராரோ, ஆண்டிக்கு ஜெபமாலையிடம் உள்ள அன்பே அன்பு. தங்கம், முத்து, ரத்னம், பட்டு எங்கும் மனதை அலையவிடவில்லை பார், எவ்வளவு உறுதி, உள்ளன்பு என்று புகழ்ந்தனர், பைத்தியக்காரர்கள். ஜெபமாலையைப் பெற்றுவிட்டால், பிறகு, ரத்னமும் முத்தும் பட்டும் தங்கமும் ஆண்டியின் அடிதொழ வருகிறார்கள் என்ற தைரியமல்லவா அவனுக்கு. "உங்கள் எதிரே சொல்கிறான், ஜெபமாலையே உயிர் என்று; நீங்கள் போய்விட்டதும் என்னை ஏறெடுத்தும் பார்க்கமாட்டான். தங்கத்தின் தளுக்கு, முத்துவின் மோகனப் பார்வை பட்டுவின் பளபளப்பு—இவைகளிலே சொக்கி விடுவான். நான் கிடப்பேன் ஒரு மூலையில், கவனிப்பாரற்று. இதை அறியாமல், என்னையே அவன் உள்ளன்போடு நேசிக்கிறான் என்று எண்ணி ஏமாறுகிறீர்களே!" என்று ஜெபமாலை எண்ணிச் சிரித்தாள்.

ஆண்டி, உள்ளே சென்றான், சிரிப்புச் சத்தத்தை கேட்டு.

"ஜெபமாலை. வா. ஏன் தயக்கம்?"

"ஏன் வரவேண்டும்? நயவஞ்சகராகிய தங்களிடம்?"

"நமக்குள் இருக்கும் தகராறு பிறகு பார்த்துக்கொள்வோம். நாலுபேர் எதிரே, என்னை அவமானப்படுத்தி விடாதே, வா."

"முடியாது, உன் மோசடிக்கு, நான் எத்தனை காலம் உடந்தையாக இருப்பது? நீ ஊரை ஏய்க்கிறாய், என் மீது அமோகமான அன்பு இருப்பதாகக் கூறி. அவர்களும் நம்பி, உன் அடி பணிகிறார்கள். இந்த நயவஞ்சக நாடகத்துக்குத் தானே நான் பயன்படுகிறேன். என்னிடமா உனக்கு உண்மையிலே அன்பு? ஊரை நீ ஏய்க்கலாம், என்னை ஏமாற்ற முடியுமா?"

"ஜெபமாலை. உன்னால் நான் உயர்வு அடைந்தேன்; உன்னை நம்பித்தான் வாழுகிறேன். உன் அருள் இல்லா

விட்டால், நான் ஊராரால் ஒரு காசுக்கும் மதிக்கப்படத்தான் மாட்டேன். உத்தம குண ஜெபமாலே, என்னை இந்தச் சமயம், கைவிடலாமா?''

"இப்படிப் பசப்பிக் கொண்டே இருப்பானேன்?''

"பழகி விட்டேன் அப்படி. என்ன செய்வது?''

''இந்த 'மோசடி'க்கு நான் உடந்தையாக இருந்தால்கூட இன்னும் நெடுநாளைக்கு உன்காலம் இப்போது உள்ளது போலவே இருக்குமென்று நினைக்காதே.''

"ஜெபமாலே. ஏன் உனக்கே உன் சக்தியிலே, சந்தேகம்? வேண்டாம். நீ இருக்குமட்டும் எனக்கு ஒரு குறையுமில்லை.''

"அதுதான் தவறு என்று சொல்கிறேன். காலம் இப்படியே இராது. ஜெபமாலேயிடம் காட்டும் அன்பு வெறும், வேஷம், உண்மையான அன்பு தங்கத்திடம் என்று ஊரார் தெரிந்து கொள்வார்கள். இப்போதே அந்தத் தெளிவு ஏற்பட்டுக் கொண்டுதான் வருகிறது.''

"ஜெபமாலே. நீயா இப்படிப் பேசுகிறாய்? நீ யாருடைய மகள்? எப்படிப்பட்ட குடும்பம்?''

"கோபுரநாதருக்கே கூடத்தான், இப்போது குறைந்து வருகிறது செல்வாக்கு.''

"ஏன்''

"ஏன்'' ஜெபமாலே போன்ற மகளை, உன் போன்றவர் வர்களுக்குத் தந்து விட, அந்தச் சம்பந்தத்தைத் துணையாக வைத்துக்கொண்டு, நீ ஊரை ஏமாற்றுவதால்தான்''

"நான் என்ன ஏமாற்றினேன், ஜெபமாலே?''

'விரிவாகக் கூறவா? வயிறு எரிகிறது. ஊராரின் உபத்திரவம் அத்தனையையும், கோபுரநாதரிடம் எடுத்துக் கூறித் தீர்த்து விடுவதாகக் கூறுகிறாயல்லவா?''

"ஆமாம்''

"ஊரார் ஏன் நம்புகிறார்கள்? உன் திறமையை மதித்தா?''

"இல்லை. என்னுடன் நீ இருப்பதால்.''

"ஊராரின் தொல்லை தீருகிறதோ?''

'இல்லையென்றுதான் சொல்ல வேண்டி இருக்கிறது.''

"நீ, உண்மையிலே கோபுரநாதரிடம் முறையிட்டுக் கொள்வது, மக்களின் கஷ்டத்தைப் போக்குங்கள் என்றா?''

"போ, ஜெபமாலே. என் மானத்தையே வாங்குகிருய்."

"நான் அறிந்து கொண்ட இந்த உண்மைகளை, ஊரார் தெரிந்து கொண்டால், பிறகு தெரியும் உன் செல்வாக்கு.'

"பயம் காட்டாதே, ஜெபமாலே."

"பயம் காட்டவில்லே; நானே பயப்படுகிறேன். நீயும் கூடச் சேர்ந்துதானே எங்களே ஏய்த்தாய் என்று ஊரார் என்னையும் துன்புறுத்துவார்கள் என்று எண்ணிப் பயப் படுகிறேன்"

"போதும் உன்னுடைய வாதம். வா, ஜெபமாலே. உன்னைப் பெற்றபிறகு நான் இழக்கத் துளியும் சம்மதியேன், உன்னை விடமாட்டேன்; முடியாது. நீ இல்லாவிட்டால், என் கதி என்ன ஆகும்? எனக்கு இப்போதுள்ள உயர்நிலே இருக்குமா, பிறகு? ஜெபமாலே! ஜெபமாலே! வா, வா! என்னேடு இரு! கைவிடாதே! ஜெபமாலே, வா, வா!"

"ஏ! புதுமடத்தாண்டி, என்ன இது, குளறிக்கொட்டறே. ஜெபமாலே ஜெபமாலேன்னு கூச்சலிட்டு எங்க தூக்கத்தையும் பாழ்செய்யறே. என்ன இழவு, கனவு கண்டு கூவினே?"

பக்கத்தில் படுத்து உறங்கிக் கொண்டிருந்த பண்டாரங் கள், புது மடத்தாண்டி, தூக்கக் கலக்கத்திலே ஜெபமாலே, என்று உளறியது கேட்டு, தட்டி எழுப்பி, என்ன விஷயம் என்று கேட்டனர்.

திடுக்கிட்டு எழுந்த புதுமடத்தாண்டி, முதலிலே தன் திருவோட்டைத் தேடினன். அதிலே தன் ஜெபமாலே இருக்கக் கண்டு, "அப்பா! இருக்கு!" என்ருன். பிறகு சொன்னுன், கனவிலே ஜெபமாலே ஒரு பெண்ணுகத் தோன்றி என்னிடம் வாது புரிந்ததையும், வம்புக்கு நின்றதையும். அதுதான் மேலே இருப்பது.

புது மடத்தாண்டியை மற்றவர் கேலி செய்தனர், பித்தமா உனக்கு, என்று. அவன் மட்டும் கோபத்தோடேயே, "கண்டது கனவுதான். ஆனுல் ஜெபமாலே பேச முடியுமானுல் என்னை மட்டுமா உங்களே எல்லாம் கூடத்தான், அதே கேள் விகளைக் கேட்டுத் திணறவைக்கும்" என்று சொன்னுன். மேலும் சற்று உரத்த குரலிலே சிரித்தனர் பண்டாரங்கள். 'டே! புது மடத்தாண்டி. திருவாவடுதுறை, தருமபுரி, சிருங்கேரிமுதலிய

இடங்களிலே கேள்வி கேட்கத் துணிவில்லாத ஜெபமாலை, போயும் போயும், போக்கிடமற்ற நம்மிடமா கேள்வி கேட்கும்? அங்கே அல்லவா, உன் கனவிலே நடந்த காட்சி நடக்க வேண்டும்!" என்றனர்.

"அது சரி. ஆமாம்." என்று கூறிவிட்டு படுத்தான் புதுமடத்தாண்டி. ஒரு புதிய பயம் அவனைப் பிடித்துக் கொண்டது. ஜெபமாலை ஒரு நாளும் பேசப்போவதில்லை. ஆனால், ஜனங்களே அதுபோலப் பேச ஆரம்பித்தால், கேள்வி கேட்கத் தொடங்கினால், ஆபத்தாக முடியுமே என்று நினைத்தான். பயம் கொஞ்ச நேரம்தான் இருந்தது. பிறகு அவனும் மற்றவர்கள் போலவே,—ஆனால், மனதிற்குள் சொல்லிக் கொண்டான்: "அந்தப் பெரிய இடங்களை'க் கேள்வி கேட்டு, என்னென்ன செய்யவேண்டுமோ அவைகளைச் செய்துவிட்டுப் பிறகுதானே நம்மைப் போன்றவர்களைக் கேட்க வருவார்கள்; பார்த்துக் கொள்வோம் அப்போது" என்று, தூங்கினான் நிம்மதியாக.



COURTESY
SERVICE
HELPFULNESS
ARE THE GUIDELINES
IN

SOUTHERN ROADWAYS PRIVATE LTD

(A UNIT OF TVS)

To Solve the Paper Famine in India;

COMES PROPOSED

Suraj Paper & Pulp Ltd.,

MAILANI--LAKHIMPUR—KHERI, U.P.

Production : 500 TONS PER DAY

Promot d by

Suraj Industrial Packing Ltd.,

Gokulgram-Chandrawal, Lucknow.

Only Place for Producing Fire & Water Proof Packaging :

Regd. Office :

"SRINIKETAN"
GURDWARA ROAD,
LUCKNOW.

Phone : 22802
Gram : "SRINIKETAN"
GURDWARA ROAD.

NOW INDIGENOUSLY MANUFACTURED

CAMPHOR

(Technical and Pharmaceutical)

Available in the form of POWDER, TABLETS, & THALS.

AND ALSO

0 Distilled Turpentine
0 Dipentene
0 Pine Tar (Light, Medium & Heavy)
0 Isoborneol
0 Isobomnyl Acetate (Tech. & Perfumery)
0 Synthetic Camphor Oil
0 Fenchinol
0 Terpene B—X
0 Terpene B—T
0 Terpene G
0 Delta—3—Carene
0 Longifolene
0 Pine Oil
0 Terpineol
0 Terpineolene C
0 Meracene
0 Capinone
0 Alpha Floral
0 Laformal
0 Lamerol
0 Terpin Hydrate
0 Sodium Formate
0 Camphor Monobromide
0 Camphor Sulphonic Acid

Manufactured by

CAMPHOR & ALLIED PRODUCTS LIMITED

Head & Registered Office : 133 Mahatma Gandhi Road, Bombay-1.
Factory : Clutterbuckganj, Bareilly (U.P.)

Tel : AMRUTHAM P.B No. 1382 Phone : 26006

THE ARYA VAIDYA PHARMACY [COIMBATORE] LTD.

Regd. & H.O.
366, TRICHY ROAD, COIMBATORE-18.

An ideal house for best of ayurvedic medicines and treatments

OUR NEW DELHI BRANCH
23-B, PUSA ROAD, KAROLBAGH,
Phone : 585687

Our Physician Sri S. SASIDHARAN NAIR, D.A.M.
will be at your service on all days.
For further details please contact:

Arya Vaidyan P. V. RAMA VARIER
(Managing Director & Chief Physician)

FOR QUALITY WRITING & PRINTING DEPEND ON

ROHIT

Manufacturers :

ROHIT PULP & PAPER MILLS LIMITED

Mills :
KHADKI,
UDVADA R. S.
DISTRICT BULSAR,
GUJARAT STATE.
Tel : 37

Office :
HASSAN CHAMBERS,
PARSEE BAZAAR STREET,
FORT
BOMBAY 1.
Tel : 257422/257425

Grams : ROHITMILLS

WITH THE BEST COMPLIMENTS FROM

S. R. P. TOOLS LIMITED

Manufacturers of:

METAL CUTTING TOOLS

Lattice Bridge :: Madras-41.

Grams: DIEHEADS Phone: 75031

AS YOUR
RESPONSIBILITIES
INCREASE
SO DOES
YOUR NEED FOR
SAVING:

The future holds uncertainties, responsibilities. Are you prepared to face them? Start saving now. Save to meet your future needs. Save to face the challenge of tomorrow. Save with the State Bank of India OVER 2,800 Branches of the Bank and its subsidiaries to assist you.

STATE BANK FOR SERVICE

INDIAN BANK

(Wholly owned by the Government of India)

Head Office, MADRAS.

UNIQUE GIFT OF THE 1970s TO BANK DEPOSITORS.

The Budget proposals presented by the Prime Minister of India provide that:

1. Income derived by any taxpayer from interest on deposits with banking companies will be exempt from income—tax to a maximum of Rs. 3,000.
2. Deposits with banking companies upto Rs. 1,50,000 will be exempted from Wealth Tax.

DEPOSIT WITH INDIAN BANK AND REAP THE BENEFITS OF

a. exemption from Income—Tax.
b. exemption from Wealth—Tax.
c. keeping your money safe and watching it grow.
d. assisting country's economic growth by channelling your savings through Indian Bank.
e. banking service of every description at 273 Branches of Indian Bank.

YOUR ACCOUNT WITH INDIAN BANK IS YOUR PASSPORT TO PROSPERITY.

CALL AT THE NEAREST BRANCH OF INDIAN BANK.

G. LAKSHMINARAYANAN,
Custodian.

RUBEX FOR COLDS

PROTECTS AS WELL AS RELIEVES FROM COLDS

STRONG-ACTING, NON-BURNING.

everest/1022/ACW

வரலாறு கண்ட காஞ்சி

வெ. சாமிநாத சர்மா

(தமிழ்ப் பத்திரிகை உலகின் முன்னோடியாகிய திரு. வி. க. வுக்கு எல்லா வகையிலும் "தம்பியாக இருந்து தமிழ்ப் பெரும் பணியாற்றிய சிறப்புக்குரியவர் திரு. சாமிநாதசர்மா அவர்கள். தமிழர்களின் பழம் பொற்காலமாகிய சங்ககாலம் போலவே கிரேக்கர்களுக்கும் ஒரு பொற்காலம் இருந்தது. இந்த இரண்டு பொற்காலங்களுமே சற்றேறக்குறைய ஒரே காலத்தைச் சேர்ந்தவை. நமது பொற்காலத்தைப் பற்றி நமக்குக் கிடைப்பன சங்க இலக்கியங்கள் மட்டுமே; கிரேக்கப் பொற்காலத்தைப் பற்றிய பலதுறைச் செய்திகளும் கிடைக்கின்றன. அவைகளைப் பற்றிய விரிவான பல நூல்களைத் தமிழில் எழுதித் தமிழ்ப்பழம் பொற்காலம் பற்றிய விரிவான ஆய்வுக்கு விளக்கமான வழிகாட்டியுள்ளார் சர்மா அவர்கள். சிறந்த தேசியவாதியும், நாடகாசிரியரும், பத்திரிகாசிரியரும், எழுத்தாளரும், திரு. வி. க. வின் இனிய நினைவை நம் நெஞ்சில் பொழிந்து கொண்டிருப்பவருமான இப்பெருமகன் இப்போது தம்முடைய வாழ்க்கை வரலாற்றை எழுதிக்கொண்டிருக்கிறார். அந்த நூலின் ஒரு பகுதியாகிய (சர்மா அவர்களின் ஊரைப் பற்றிய) வரலாறு கண்ட காஞ்சி என்னும் குறிப்பை அண்ணா மலரில் வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.)

கோசலநாட்டின் தலைநகராகிய அயோத்தியை 'நிலமகள் முகமோ?' என்று தொடங்கி வருணிக்கின்ற கம்பன், 'ஊழியின் இறுதி உறையுளோ!' என்று சொல்லி அந்த வருணனைக்கு முத்திரையிடுகிறான். இந்த முத்திரை, தொண்டைநன்னாட்டின் தலைநகரும், தென்னாட்டின் அணிநகருமாகிய காஞ்சிபுரத்திற்கு எவ்வளவு அழகாகப் பொருந்துகிறது! யுகப் பிரளயம் ஏற்பட்டு, அதில், சர்வ ஜீவராசிகளும் முழுகிப் போய்விட, காஞ்சிபுரம் மட்டும் எஞ்சி நின்று, பிரம்மன், விஷ்ணு, சிவன் ஆகிய மூவருக்கும் தஞ்சம் கொடுத்து, அது காரணத்தால் மும்மூர்த்திபுரம் என்ற பெயரைப் பெற்றதாகப் புராணங்கள் கூறும். அயோத்தியை உலகப் பிரசித்தி பெற்ற நகரம் என்று வால்மீகி கூறுவது, காஞ்சிபுரத்திற்கு முற்றிலும் பொருந்துவதாக இருக்கிறது. அயோத்திமாநகரின் உலகப் புகழுக்குக் கற்பனை செறிந்த

காவியம் சான்று பகர்கிறது; காஞ்சிமாநகரின் உலகப் புகழுக்கு உண்மையான சரித்திரமே சான்ருக நிற்கிறது.

தலையாய காஞ்சி

காஞ்சிபுரத்திற்கு, கச்சி, கச்சிஏகம்பம், திருவேகம்பம் என்று இப்படிச் சில பெயர்களுண்டு. ஆழ்வார்களும் நாயன் மார்களும் இந்தக் கச்சிமாநகரத்தைப் புகழத் தவறவில்லை. உதாரணமாக, "மணிமாடங்கள் சூழ்ந்த அழகு ஆய கச்சி" என்று திருமங்கையாழ்வாரும், "குருந்தம் மல்லிகைகோங்கு மாதவி நல்ல குராமரவம் திருந்து பைம்பொழில் கச்சி ஏகம்பம்" என்று சம்பந்தப் பெருமானும் அருளியிருப்பதைக் கொண்டு இம்மாநகரத்தின் சிறப்பை ஒருவாறு அறியலாம்.

ஆனல் வெகு காலந்தொட்டு, காஞ்சிபுரம் என்ற பெயரா லேயே இந்த நகரம் வழங்கப்படுகிறது. காஞ்சியென்பது, பெண்கள் இடுப்பில் அணியும் ஓர் அணிக்கு—ஒட்டியாணத்

> **இன்றைய வாழ்க்கை**
>
> அர்த்தமற்ற திருப்தியும் வெறுப்பான வாழ்வும், சாவை எதிர் நோக்கிய சஞ்சலபுத்தியும் கொண்ட சத்தற்ற வாழ்வும்தான் இன்றைய மக்களின், பெரும் பகுதி மக்களின் வாழ்க்கை நிலை; வாழ்க்கைத்தரம்.

திற்கு—பெயர். நிலமகளுக்கு இந்த நகரம், ஒட்டியாணம் அணியும் ஸ்தானமாக, அதாவது மையமான இடமாக இருப்பதால் காஞ்சிபுரம் என்று அழைக்கப்படுவதாக அறிஞர் கூறுவர்.

பாரதநாட்டின் முக்திதரும் தலங்கள் ஏழு என்பர். அவை முறையே மாயா (ஹரித்துவாரம்), காசி, காஞ்சி, அவந்தி, பூரி, துவாரகை ஆகும். இந்த ஏழினுள் தலையாயது காஞ்சிபுரம். "நகரேஷு காஞ்சி" என்பர் வடநூலார். "முக்தி தரும் நகரேழுள் முக்கியமாம் முதற்காஞ்சி" என்பர் தமிழ் நூலார்.

கோயில் நகரம்

காஞ்சிபுரத்தில் நூற்றுக்கணக்கான கோயில்கள் இருந்த தாகச் சொல்வர். ஆனல் இப்பொழுது அத்தனை கோயில்கள் இல்லை. இப்பொழுதுள்ள கோயில்களில் சிறப்புப் பெற்றவை ஏகாம்பரநாதர் கோயில், வரதராஜப் பெருமாள் கோயில், காமாட்சி அம்மன் கோயில், குமரகோட்டம், கைலாசநாதர் கோயில், இப்படிச் சில. இவற்றின் அருமைபெருமைகளைக் கண்டுகளிக்க, உலகத்தின் பல பகுதிகளிலிருந்து பக்தர்களும் கலாரசிகர்களும் வந்து போகின்றனர். பொதுவாக, காஞ்சி புரத்தில் "கால்வைத்த இடமெல்லாம் கோயில்தான்" என்று

சொல்வதுண்டு. தவிர, "காஞ்சிபுரத்தில் வருஷம் முந்நூற்றறுபத்தைந்து நாட்களும் திருவிழாதான்" என்று சொல் வழக்கும் உண்டு.

பல சமய தெய்வங்களுக்குக் காஞ்சிபுரத்தில் கோயில்கள் இருந்ததைப் பற்றியும், எப்பொழுதும் திருவிழாக்கள் நடைபெற்று வந்ததைப் பற்றியும் பெரும்பாணாற்றுப்படை தெரிவிக்கிறது. "பலர்தொழ விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர்" என்பதற்கு, "பல சமயத்தாரும் தொழும்படி எடுத்த விழாக்களாலே ஏனைய நகரிகளின் மேலான பழைய வெற்றியினையுடைய பழைய ஊர்" என்று நச்சினார்க்கினியர் கூறும் உரையால், இந்த நகரின் பழமையையும் இதன்கண் எடுக்கப்பட்ட விழாக்களின் மிகுதியையும் நன்கு அறியலாம். "பரமசிவன் சக்தி குமரர் மால் புறத்தோர் பலரும் வீற்றிருக்கும் அப்பதியே" என்பது கந்த புராணம்.

இந்தக் காஞ்சிபுரத்தில்தான், திருவொற்றியூரில் சங்கிலியாருக்குக் கொடுத்த வாக்கை மீறியதன் விளைவாகப் பார்வை இழந்த சுந்தரமூர்த்திநாயனார், ஏகாம்பரநாதனைத் துதித்து இடதுகண் பார்வை பெற்றார் என்றும், சிவனடியார்களுக்கு ஆடை துவைத்துக் கொடுத்து அதன் மூலம் சிவபிரானிடத்தில் பக்தி செலுத்தி வந்த திருக்குறிப்புத் தொண்ட நாயனார், அழுக்

> **முறித்தெறியுங்கள்**
>
> ஆணவம், அகங்காரம், அதிகாரச் செல்வச்செருக்கு ஆகியவை எந்த உருவத்தில் ஆதிக்கம் செலுத்தத் தலை தூக்கினாலும், அந்த ஆதிக்கக் கொடுமையை, அடக்குமுறைப் பிடியினை அடியோடு முறித்தெறியுங்கள் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய சமரசக் கருத்தூட்ட வாழ்விற்கு, ஆதிக்கவுணர்வு பேரெதிரி என்பதால்.

காடையோடு எழுந்தருளிய ஏகாம்பரநாதருடைய ஆடையை, அதிக மழை காரணமாகத் துவைத்துக் கொடுக்க முடியாமற் போக, அதற்குத் தாமே விதித்துக் கொண்ட தண்டனையாக, தம்முடைய தலையைக் கல்லில் மோதிக்கொள்ள முயன்றபோது, இறைவன் தோன்றி அவருக்கு அருள்காட்டினார் என்றும் பெரிய புராணம் கூறுகிறது.

வரலாற்றில் காஞ்சி

காஞ்சிபுரத்திற்கு சத்தியவிரத க்ஷேத்திரம் என்ற ஒரு பெயருண்டு. இதனால் இந்த நகரம் உண்மைக்கு உறைவிடமாயிருந்ததென்பது பெறப்படுகிறது. அசோகன் பொறித்த கல்

வெட்டுக்களில் சத்தியபுத்ரர்கள் என்று குறிப்பிடப்படுகிறவர்கள், காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்ட தொண்டை நாட்டினரே என்று கொள்ளலாம்.

கி. பி. 642-ஆம் ஆண்டு காஞ்சிபுரத்திற்கு வந்து போன ஹ்யூன் த்வான் என்ற சீன யாத்திரிகன் "இங்குள்ள ஜனங்கள் வீரமிக்கவர்களாகவும் உண்மை கடைப்பிடிப்பதில் தீவிரப் பற்றுடையவர்களாகவும் இருக்கிறார்கள்" என்று தனது நூலில் குறிப்பிடுகிறான். "வையம் பெறினும் பொய் சொல்லமாட்டார் தொண்டைநாட்டாரே" என்று புகழேந்தி பாடியிருப்பது வெறுங் கற்பனையன்று என்பது தெளிவாகிறது.

கி. பி. மூன்றாவது நூற்றாண்டிலிருந்து ஒன்பதாவது நூற்றாண்டு வரை, சுமார் ஆறு நூற்றாண்டுகள் காலம் தமிழகத்தில் பல்லவர் ஆட்சி ஓங்கியிருந்தது. இவர்களுக்குத் தலைநகரமாக விளங்கியது காஞ்சிபுரம். இவர்கள் ஆட்சிக்காலத்தில், காஞ்சிபுரம் அருட்செல்வத்திலும் பொருட்செல்வத்திலும்

அய்நாவில் அண்ணா

கல்விச் செல்வத்திலும் நிறைவுற்றிருந்தது. இவர்களிற் பலர், சிறந்த அரசர்களாக இருந்ததோடு பெரும்புலவர்களாகவும் விளங்கினர். கி. பி. ஏழாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில்

ஆண்ட முதலாவது மகேந்திரவர்மன், முதலில் சமண சமயத்தில் பற்றுள்ளம் கொண்டவனுயிருந்து பிறகு சைவ சமயத்தில் ஈடுபாடு கொண்டவனுனன். இங்ஙனம் இவனை ஈடுபடுத்தியவர் அப்பர். இவன், சிற்பம், ஓவியம், காவியம், இசை, நாடகம் இப்படிப் பலதுறைகளுக்கு ஆதரவு அளித்து அவற்றை வளம் பெறச் செய்தான். இவனே ஓர் இலக்கியகர்த்தனுகவும் பெயர் பெற்றிருந்தான். இவன் எழுதிய 'மத்தவிலாச பிரகசனம்' என்ற நகைச்சுவை நாடகம், துறவறம் பூண்ட சமணர்களின் வாழ்க்கையைப் பரிகசிக்கின்ற முறையில் அமைந்திருக்கிறது.

மகேந்திரவர்மன் வழிவந்த ராஜசிம்மன், மகாபலிபுரத்தில் தற்போது கடலோரத்திலுள்ள கோயிலையும் காஞ்சிபுரத்திலுள்ள கைலாசநாதர் கோயிலையும் கட்டுவித்தான். இவன் காலத்தில் சிறந்த புலவராக விளங்கியவர் தண்டியலங்காரம் ஆசிரியர் தண்டி என்பவா.

இந்த ராஜசிம்மன் காலத்தில், காஞ்சிபுரத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கொடிய பஞ்சம் ஏற்பட்டு ஆயிரக்கணக்கான பயிர்களைக் கொள்ளை கொண்டது. மணிமேகலைக் காப்பியத்தில் இந்தப் பஞ்சத்தைப் பற்றிய நிகழ்ச்சி சொல்லப்பட்டிருக்கிறது. பஞ்சத்தின் கொடுமையைத் தாங்கமாட்டாமல் அரசனும் அவனது பரிவாரத்தினரும் காஞ்சியை விட்டு வெளியேறி இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதாகத் தெரிகிறது.

காஞ்சி அறிஞர்கள்

பல்லவர் ஆட்சிக்காலத்தில், காஞ்சிபுரத்தில் கடிகஸ்தானங்கள் என்ற பெயரால் உயர்தரக் கல்விநிலையங்கள் பல ஏற்பட்டு ஆயிரக்கணக்கான இளைஞர்களைக் கற்றுத் தேர்ந்த சான்ரோர்

> **பகுத்தறிவு**
>
> நம்பகமற்ற, ஊசலாட்டமான, நம்பிடும் தகுதியுமற்ற முறைகள் நெறிகள், செயல் விளக்கங்கள், செயற்படுமுறைகள், ஐயுறவுக்குரிய சிந்தனைகள்—தெளிவற்ற எண்ணங்கள்—ஏற்பாடுகள் எனப்படுவனவெல்லாம் உடலூட்டமும் உயிரூட்டமும் அற்றுப் பூண்டோடு அழிக்கப்பட வேண்டும் என்பதே பகுத்தறிவு

களாக்கின. இந்தக் கடிகஸ்தானங்களில் பயின்றவர்களுக்கு உண்டியும் உறையுளும் இலவசமாக அளிக்கப்பட்டன. இங்ஙனம் பயின்று சென்ற பலர், வடஇந்தியாவில் மட்டுமன்று, வெளிநாடுகளிலும் சிறப்பிக்கப்பட்டிருக்கிறுர்கள். இவர்களில் ஒருவனை தர்மபாலன் என்பவன் நாளந்தைப் பல்கலைக்கழகத்திற்கு அநேக ஆண்டுகள் வரை தலைவனுக இருந்தான்.

கி. பி. எட்டாவது நூற்றுண்டில், காஞ்சிபுரத்தைச் சேர்ந்த போதிசேனன் என்பவன் சீன வழியாக ஜப்பானுக்குச் சென்று, அங்கு ஆண்டுகள் கணக்கில் தங்கி பௌத்த மதத்தின் தலைமைப் பீடாதிபதியாக விளங்கினுன். ஜப்பானியர்களுக்கு வடமொழியை கற்பித்து, அதில் பலரைத் தேர்ச்சிபெறச் செய்தான். ஜப்பானிய மொழியில் எழுத்துக்கள் ஒழுங்குற அமைவதற்குப் பாடுபட்டான்.

புகழ் அழியாக் காஞ்சி

கி. மு. ஆருவது நூற்றுண்டிலிருந்து கி. பி. பதினேழாவது நூற்றுண்டின் பிற்பகுதி வரை ஏறக்குறைய இரண்டாயிரத்து இருநூறு வருஷ காலத்தில், காஞ்சிபுரத்தைப் பல்வேறு மதத்தினர் இருபத்து ஐந்து தடவை படைகொண்டு தாக்கியிருக்கிருர்கள். கி. பி. பதினேழாவது நூற்றுண்டின் இடைக்காலத்திற்குப் பிறகு ஆறு படையெடுப்புக்கள் நடைபெற்றிருக்கின்றன இவை மட்டுமா? பிரெஞ்சுக்காரரும், முஸ்லிம்களும். பிரிட்டிஷாரும் முறையே மூன்று தடவை இந்த நகரத்தைத் தீயிட்டுப் பொசுக்கியிருக்கிருர்கள். பிரிட்டிஷ் ராணுவத்தைச் சேர்ந்தவர்கள், ஒரு சமயம், ஏகாம்பரநாதர் கோயிலின் திருச்சுற்றுலையைக் குதிரை லாயமாக உபயோகித்திருக்கிருர்கள். இவ்வளவுக்கும் தாக்குப் பிடித்திருக்கிறது இந்த நகரம். அழித்தும் அழிபடாத நகரம் காஞ்சிபுரம்.

'காஞ்சிபுரத்திற்குச் சென்ருல் காலாட்டிக் கொண்டு சாப்பிடலாம்' என்று ஒரு பேச்சு வழக்கு உண்டு. இதன் பொருள், துணி நெய்யும் தறியில் காலாட்டி வேலை செய்தால் பிழைப்பு நடக்கும் என்பதேயாகும். காஞ்சிபுரம் நெசவுத் தொழிலில், — இன்று நேற்றல்ல, — கிறிஸ்துவ சகத்திற்கு முந்திய காலத்திலிருந்தே பிரசித்தியடைந்திருந்தது என்பதையே இது காட்டுகிறது.

இங்ஙனம் பல வகைகளிலும் சிறந்து மிக்கோங்கியிருந்த காஞ்சிபுரத்தின் பெருமையைச் சொற்களுக்குள் கட்டுப்படுத்திக் காட்ட முடியுமா? "இன்ன பரிசென்ன எழில் அன்ன மேய இறையாலும் எவராலும் இயம்பவொண்ணு அந்நகரின் வளர் பெருமை சொன்னல் அடங்குமோ? அடங்காதால்!

ARUNA SUGARS LIMITED

Registered Office:

"DHUN BUILDING", 175/1, MOUNT ROAD,

MADRAS-2.

Telephone: 83615 (2 JNS.) Telegrams: "ANUSHAM"

FACTORY:

PENNADAM

(Vriddhachalam Taluq. South Arcot District)

Telephone: 23 & 42 (Pennadam) Telegrams: ARUNASUGAR

Our Molasses are best for cattle feeds and

Pharmaceutical Industries

13830

PLEASE NOTE THAT ALL ENQUIRIES FOR PURCHASE OF SUGAR ARE TO BE ADDRESSED ONLY TO OUR REGISTERED OFFICE AT "DHUN BUILDING" 175/1, MOUNT ROAD, MADRAS-2. AND NOT TO OUR FACTORY AT PENNADAM.

"LAMP IN HAND HE WENT OUT NOT ALONE. ON THE WAY THE LAMP WENT OUT AND SO HE FELL. WILL YOU NOT IN KINDNESS TAKE HIS HAND AND RAISE HIM UP. WILL YOU NOT IN MERCY WAIT FOR HIM ONE MOMENT, FRIENDS. LET HIM KINDLE HIS LAMP FROM YOUR OWN LIGHT. LET HIM GO FORWARD HOLDING YOUR HAND. IF YOU LEAVE HIM HERE IN THE MUD IN DARKNESS, HE WILL FOR EVER REMAIN PLUNGED IN THE DARKNESS OF NIGHT."

—— SAROJINI NAIDU

FROM

TATA CHEMICALS

THE WEST COAST PAPER MILLS LTD.

Manufacturers of

"SUDARSHAN CHAKRA" BRAND QUALITY PAPER-WRITING, PRINTING, BOND, MANILA, KRAFT, MAP LITHO AND POSTER.
WEST COAST PAPER PRODUCE MORE THAN 40,000 TONNES OF PAPER ANNUALLY PAPER FOR INDIA'S MANY, GROWING NEEDS.

Registered Office
SHREENIWAS HOUSE
WAUDBY ROAD
BOMBAY-1
(268241/260041)

Mills at
DANDELI
(DIST : NORTH KANARA)
MYSORE STATE

PLASTICIZERS

for the Plastics Paint and Perfumery Industries

DOP — Dioctyl Phthalate
DIOP — Di-iso Octyl Phthalate
DAP — Dialphanyl Phthalate
610P — Dialfol 610 Phthalate
DBP — Dibutyl Phthalate
DMP — Dimethyl Phthalate
DEP — Diethyl Phthalate

available form
Pioneers in manufacture of Phthalate Plasticizers

Indo-Nippon Chemical Company Limited

ALICE BLDG. 339, D.N. ROAD, BOMBAY-1.
Gram : PLASTCIZER Phones : 251723—252269
Telex : INNIPON 011(2081)

look—it shows...
Tinopal® whitens best!



Results tell. Just a little Tinopal in the final rinse—and what brilliant whiteness! Tinopal whiteness! It shows on your shirts, sarees, sheets, towels—everything!

And what does it cost? Not even a paisa per garment! Buy Tinopal. Regular Pack. Economy Pack. Or Packet-for-a-Bucket.

® Tinopal is the registered trademark of J.R. Geigy S.A., Basle, Switzerland

மலேசியத் தேசிய இலக்கியம்

—தமிழவேள் கோ. சாரங்கபாணி

(இன்று சிங்கப்பூர்—மலேசிய நாடுகளில் தமிழ் மொழி செல்வாக்குடன் இருக்கிறது என்ருல்,—அங்கும் தமிழ் இலக்கியம் உள்ளது என்று சொல்லிக் கொள்ள முடிகிறது என்ருல்,—அதற்குக் காரணமானவர்களில் முக்கியமானவர் "தமிழ் முரசு" ஆசிரியர், தமிழவேள் கோ. சாரங்கபாணி அவர்கள். அங்கே உள்ள தமிழர்களிடையே, ஒரு தமிழ் ஓர்மையும் மலேசியத் தேசிய உணர்வையும் உண்டாக்கியவரும் அவற்றைக் கட்டிக் காத்துவருபவரும் இவரே என்ருல், அது மிகையாகாது: "எந்த மலேசியாவில் பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களோ, எந்த நாட்டில் உங்கள் வியர்வை சிந்தப்படுகிறதோ, அந்த மலேசியாவே உங்கள் சொந்த நாடு—அதனிடம் பற்ருேடு நடவுங்கள்" என்று மலேசியத் தமிழர்க்குச் சொன்னுர் அண்ணு. அந்த உணர்வை வளர்ப்பதற்குத் தேவையான மலேசிய இலக்கியத்தை இங்கே விளக்கி வலியுறுத்துகிருர், தமிழவேள்.

மனிதர் தம் அன்ருட வாழ்க்கையை நடத்த அவசியமான தேவைகள் பல. இருக்க இடம், உடுக்க உடை, உண்ண உணவு மனிதர்களுக்குத் தேவை. இவற்றைப் பெற ஆதிகால மக்கள் என்ன செய்தார்கள் என்பதை வரலாறு கூறும். அவர்கள் வாழ்ந்த ஆதி காலத்திற்கும், நாம் வாழும் இக்காலத்திற்கும் வேறுபாடு மிக அதிகம். இப்போது நாம் அனுபவிக்கும் நாகரிக வாழ்வு பலகாலமாய்ப் படிப்படியாக வளர்ந்து வந்த பெரு வாழ்வாகும். இந்த வாழ்க்கை முறையைத்தான் பண்பட்ட நாகரிக வாழ்வு என்று கூறுகிருேம்.

இலக்கியம்

நாம் வசிக்கும் வீடுகள். புழங்குங் கருவிகள், உடுக்கும் உடைகள், உண்ணும் உணவுகள், பூணும் அணிகள், பேசும் மொழிகள், செய்யும் தொழில்கள், அனுசரிக்கும் வழக்கங்கள், போற்றும் கொள்கைகள், பேணும் நெறிமுறைகள், விளையும் மனப்பாங்கு ஆகிய அனைத்தும் படிப்படியாய்ச் சீர்பட்டு. செம்மையுற்று வந்தவையாகும். இவை அனைத்தும் நாகரிகத்தை எடுத்துக் காட்டுவன. இவை அனைத்தும் ஒன்று திரண்ட கருவூலமே இலக்கியம்.

கலையைப் பற்றி, கலாசாரத்தைப் பற்றி, அரசியலைப் பற்றி, பொருளியலைப் பற்றி, விஞ்ஞானத்தைப் பற்றி, வாழ்க்கையைப் பற்றி விவரமாகவும், விளக்கமாகவும் எடுத்துக் கூறுவது இலக்கியம். இலக்கியம் செய்யுட்களால், உரைநடைகளால் ஆக்கப்பட்டுள்ளது. எழுத்துருவில் இல்லாமல் வாய்மொழியில் உலவுகிற இலக்கியமும், மண்ணுக்கடியில் புதைந்து கிடக்கும் இலக்கியமும் உண்டு. ஆராய்ச்சியாளர்கள் அகழ்த்தெடுத்த பொருட்கள் முழங்கிய நாகரிகமும், அதன் இலக்கியமும் ஏராளம் என்பதை யாவரும் அறிவோம். இலக்கியத்திற்குக் கருப்பொருளாய் ஏராளப் பொருட்கள் மண்ணுக்கடியில் புதைந்து கிடக்கின்றன என்பதே அறிஞர் பெருமக்களின் முடிபு.

காடு திருத்திக் கழனியாக்கிய கதையைச் சொல்லும் இலக்கியம்; குகையை விட்டு வெளி வந்து, கோபுரங்களையும் வானளாவும் மாடமாளிகைகளை நிர்மாணித்த கதையைச் சொல்லும் இலக்கியம்; சைகையையும் சத்தத்தையும் கொண்டு மொழி வளர்ந்த, எழுத்து வளர்ந்த, ஏடு வளர்ந்த கதையைச் சொல்லும் இலக்கியம். இவற்றைப் போல் தொழில் இலக்கியம், பொருள் இலக்கியம், அகத்துறை இலக்கியம் ஆகியவை வளர்ந்தன, வளர்ந்துகொண்டே இருக்கின்றன.

மனித வாழ்வுக்கு வழிகாட்டியாக இருக்கும் இலக்கியம் சாகாவரம் பெற்றது. கால ஓட்டத்தாலும், அறிவு முதிர்ச்சியாலும் இலக்கியம் வளரும், பெருகும். பரவெளி செல்லும் இலக்கியத்தை இன்று படிக்கிறோம். 'நொடியில் ஜெகத்தை அழித்திடுவோம்!' என்று பயமுறுத்தும் இலக்கியத்தையும் இன்று படிக்கிறோம். இவை யாவும் உலக மக்களுக்குப் பொதுவான இலக்கியம்.

மலாயாவின் இலக்கியம்

மலாயாவில் வாழ்கின்ற நம்மைப் பற்றி, நம் முன்னோர்களைப் பற்றிக் கூறும் இலக்கியம் மலாயாவின் இலக்கியமாகும். இப்படிப்பட்ட இலக்கியங்கள் நமக்கு என்னென்ன இருக்கின்றன என்பதைச் சரியாக அறியாதவர்களாய் இருக்கிறோம். இதற்கு முதற் காரணம் மலாயா இலக்கியம் உண்டா என்ற ஐயப்பாடு. ஆங்கிலேயர் சிலர் ஓரளவு தெரிந்துகொள்ள முடிகிறது. மலாய் மொழியிலும் மலாயா இலக்கியம் சில இருக்கலாம். ஆனால் சீன மொழியிலோ, தமிழ் மொழியிலோ மலாயா இலக்கியம் முழுமையாக உருவாகி இருப்பதாகச் சொல்ல முடியவில்லை.

இன்று மலாயாவின் குடிமக்களாகிய நாம் பல சமூகங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கிறோம். வெள்ளைக்காரர்கள் ஆட்சிக்கு முற்பட்ட மலாயா மக்களைப் பற்றிக் கூறும் இலக்கியம் எழுத்தில் அதிகம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் மண்ணுக்குள் மறை

பட்டுக் கிடக்கும் இலக்கியத்தைக் கூறும் கருப்பொருட்கள் மலாயாவில் கிடைக்கலாம். கர்ணபரம்பரையாக வந்த பழக்கங்களைக் கொண்டு மலாயா இலக்கியம் உருவாக்கபபடலாம். இதைச் செய்ய அயராத முயற்சியாளர்களும், அரசாங்க உதவி—ஒத்தாசைகளும், போதிய பொருள் உதவியும் வேண்டும்.

பலநாட்டு மக்களும் வந்து குடியேறிய மலாயாவில் பல பண்பாடுகள் கலந்தும் தனித்தும் கிடப்பதை இன்று காண முடிகிறது. ஆனாலும் மலாயாக் குடிமக்களாகிய நாம் மலாயாவிலுள்ள ஒவ்வொரு சமூகத்தினரின் பண்பாடுகளை நன்றாய்த் தெரிந்துகொண்டிருக்கிறோம் என்று சொல்வதற்கில்லை. இந்த நிலை இனியும் நீடித்துக் கொண்டிருப்பதற்கில்லை.

மலாயாவில் தேசிய கலாசாரம் உருவாக வேண்டும். இந்த தேசிய கலாசாரம் தேசிய இனத்தின் பலத்தைப் பேணிக் காப்பதாகும். எனவே, தேசிய கலாசாரத்வையும், தேசிய இனத்தையும் உருவாக்கிப் பாதுகாக்கும் மலாயா இலக்கியம் உருவாக வேண்டிய அவசியத்தை நாம் இப்போது நன்றாய் உணர முடிகிறது.

நமது முன்னோரின் வீரச் செயல்களையும், அவர்களின் அரிய சாதனைகளையும் அவற்றால் நாட்டிற்கு ஏற்பட்ட புகழையும் மக்களுக்கு உண்டான நலன்களையும் விவரித்துரைக்கும் இலக்கியத்தைப் படிக்கும்போது நமது தலையும் தோளும் உயரும். பெருமிதமும் புத்துணர்ச்சியும் பிறக்கும். 'நம் முன்னோரின் ஆற்றலை நாமும் பெற வேண்டும், நாட்டிற்குப் புகழையும் மக்களுக்கு

> **வழுக்கு நிலம்**
>
> இன்றைய சமுதாயம் வழுக்கு நிலம் போன்றது. வழுக்கு நிலத்திலே ஒருவன் எத்துணைக்காலம் விழிப்போடு நடக்க முடியும்? கனத்த காற்றடித்தால் அவன் வழுக்கி விழுவது திண்ணம். ஆகவே, வழுக்கு நிலத்தைச் செம்மைப்படுத்துவதுதான் சிறந்த வழி; மாற்றியமைப்பதுதான் மனதுக்குகந்த மார்க்கம்; அதுதான் என்றும் வழுக்கி விழாதிருக்க வழி.

நலன்களையும் தருகின்ற காரியங்களைச் செய்ய வேண்டும்' என்ற விழிப்புணர்ச்சியும் பொறுப்புணர்ச்சியும் தானாகவே எழுகின்றன. இத்தகைய உணர்ச்சியையும், எண்ணத்தையும் உண்டாக்கும் இலக்கியம் நமக்கும் நம் சந்ததிகளுக்கும் சுடரொளியாகும். பண்புள்ள செயல் எது, பண்பற்ற செயல் எது என்பதை விளக்கப்படுத்திச் சொல்வது இலக்கியம். மனிதர் வாழ்வாங்கு வாழ வழித் துணையாக இருப்பது இலக்கியம்.

பல வம்சாவழிகளைச் சார்ந்தவர்களாய், பல மொழிகளைப் பேசுகின்றவர்களாய், பல மதங்களைச் சார்ந்தவர்களாய் இருக்கும்

நாம் அனைவரும் மலாயா தேச இனத்தினர். மலாயாவின் குடி மக்கள். வம்சாவழியாய் உள்ள இலக்கியங்கள் நமக்கிருந்தாலும் மலாயாவின் தேசிய இலக்கியம் நமக்கு வேண்டுமென்ற அவா, இப்போது நம்மிடை எழுந்துள்ளது.

நல்ல வாய்ப்புக்கள்

இந்தத் தேசிய இலக்கியத்தை உருவாக்குவதில் சிரமங்கள் நிறைய இருக்கலாம். ஏற்கனவே நாம் மலாய்க்காரர்களாய் சீனர்களாய், இந்தியர்களாய் சமூக அடிப்படையில் நம் வாழ்க்கையை மேற்கொண்டிருந்தோம்; அப்போது, மலாயா நம்நாடு, நம்

நெருப்பழிவு நிவாரண நிதி

வாழ்வும் தாழ்வும் மலாயாவோடு இணைந்திருக்கிறது என்ற உண்மையை மறந்தவர்களாய் இருந்து வந்தோம். இப்போது 'மலேயா நம் நாடு, அதன் ஏற்றமே நம் ஏற்றம்; அதன் செழிப்பே நம் செழிப்பு; அதன் புகழே நம் புகழ்' என்பதை உணர்ந்துவிட்டோம். இதற்குத் தக்கதாக நம் வாழ்க்கை முறை துலங்க வேண்டும். இதற்கேற்ற இலக்கியங்களை நாம் இப்போது உருவாக்க வேண்டும். இந்த இலக்கியம் தேசிய மொழியில் இருக்கலாம். சீன மொழியில், தமிழ் மொழியில், ஆங்கில மொழியிலும் இருக்கலாம். இம்மொழிகள் மலாயாவில் பேசப்படும்

மொழிகளாகும். எனவே மலாயா இலக்கியங்களை உருவாக்க மலாயா எழுத்தாளர்களுக்குப் பெரும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

மலாயா இலக்கியம் பேரிலக்கியங்களாலும், சிற்றிலக்கியங்களாலும் ஆக்கப்பட்டதாகவே இருக்கும். அறிஞர்கள் ஏற்றிப் போற்றக் கூடிய கருவூலமாய் இருப்பது பேரிலக்கியம். எழுதப் படிக்கத் தெரிந்த சராசரி மனிதர்கள் படிக்கத்தக்க கதைகள், நாடகங்கள், கவிதைகள், விரிவுரைகள் முதலானவை சிற்றிலக்கியங்கள். இவை மாணக்கர்களுக்கும், இளைஞர்களுக்கும் அறிவூட்டத் தக்கனவாய் இருக்கும். பேரிலக்கியங்களும் சிற்றிலக்கியங்களும் அறிவை வளர்க்கும் ஊற்றுக்கண்கள் ; பக்குவமான வாழ்க்கை வாழ்வதற்கு வழிகாட்டிகள்.

இலக்கியத்தின் ஆற்றல்

நாம் ஒவ்வொருவரும் ஒரு துறையில் வல்லவராக இருக்கலாம் அந்த வல்லமை பொருளீட்டவும், புகழீட்டவும் பெருந்துணை செய்யலாம். ஆனால் இலக்கியத்தின் சக்தி வேறானது. இலக்கியம் நம் வாழ்க்கையையே மாற்றி அமைத்துவிடும். பக்குவமடைந்த நிறைவான வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்வாங்கு வாழ வைத்துவிடும். நாம் எப்படி இருந்தோம், எப்படி இருக்கிறோம் என்பதை விட எப்படி இருக்க வேண்டும் என்பதை அறிவுறுத்தி அவ் வழியில் நம்மை இழுத்துச் செல்லும் பேராற்றல் இலக்கியத்திற்கு உண்டு எனவே இலக்கியம் ஒவ்வொரு நாட்டிற்கும், ஒவ்வொரு இனத்திற்கும் உயிர்நாடியாகும்.

இதுகாறும் நான் கூறிவந்த கருத்துக்களிலிருந்து இலக்கியத்திற்குச் சமூகத்தில் ஏதேனும் விழிப்பை உண்டாக்கும் ஆற்றல் இருக்கிறதா, நாட்டிற்கும் மக்களுக்கும் புகழை ஈட்டக் கூடியதா, பல வம்சாவழியில் வந்தவர்களான மலாயா தேசிய இனத்தவர்களாகிய நம்மைப் பாதுகாக்கக் கூடியதா என்ற கேள்விகளுக்கு விடைகளைக் காணக் கூடும் என்று நினைக்கிறேன்.

(மலர் ஆசிரியர் குறிப்பு : இந்தக் கட்டுரையின் ஆசிரியர் மற்றும் மலேசிய இந்தியத் தலைவர்களின் இடையறாத முயற்சியாலும் சிங்கை—மலேசியத் தமிழ் எழுத்தாளர்கள் மற்றும் பத்திரிகாசிரியர்களின் ஒத்துழைப்பாலும், அங்கே அண்மைக் காலமாக, மலேசியக் கலாச்சார உணர்ச்சியும் மலேசியத் தமிழ் இலக்கிய எழுச்சியும் வலுவாகக் காலூன்றி வருகின்றன என்பது மகிழ்ச்சிக்குரியது.)

age alone is not the yardstick of knowledge and progres

Age alone is not the criterion of knowledge or progress ; what counts is sound experience. We grow with our experience, which accrues from study, observation and research.

Dey's

px/dm/ep-35/70

VOX POPULI VOX DEI

At FACT, we realise we've a social responsibility which goes beyond our boardroom. Beyond our shareholders. Beyond our employees. And even beyond our customers. Quite often, therefore, we respond to impulses stemming from the community as a whole. For, in the voice of the people, we recognize the authentic voice of God.

FACT *...Foremost name in fertilisers!*

THE FERTILISERS AND CHEMICALS TRAVANCORE LIMITED
Udyogamandal, Kerala

WITH THE COMPLIMENTS OF

The Rampur Distillery & Chemical Co. Ltd.

RAMPUR (U.P.)

One of the foremost manufacturers of

WHISKY, GIN, BRANDY & RUM.

Also representatives of

Reputed foreign manufacturers of

A DALMIA ENTERPRISE

CSOMETICS/PERFUMES AND TOILETRIES, CIGARETTES AND TOBACCO PRODUCTS, WINES, BLADES, DOMESTIC ENGINEERING ITEMS, ETC IN INDIA

H.O.: **4, Scindia House, New Delhi-1.**

With compliments from

RECKITT & COLMAN OF INDIA LTD.,

Manufacturers of

PHARMACEUTICALS, FOODS, TOILETRIES, & HOUSEHOLD PRODUCTS,

Best wishes to

DELHI TAMIL SANGAM

from

Shivji V. Kothari
Nitin Shivji Kothari

அண்ணாவிற்கு எமது அஞ்சலி ... ...

தாய் மொழி தமிழுக்கு தமிழகத்தில் தலையாய இடம் தர வேண்டும் என்பது அண்ணாவின் மொழிக்கொள்கை. தமிழின் உயர்விற்காக தமிழ் எழுத்துக்களாலும், மேடைப்பேச்சுக்கள் மூலமும் அயராது பணிபுரிந்தார் அவர்.

சாதிகள் அற்ற ஒரு சமுதாயம் உருவாக வேண்டும் என்பது அன்னாரின் விருப்பம். எனவே சாதிப் பூசல்களைப் போற்றி வளர்பவற்றை சாடினார்.

பகைவர்களிடத்தும் அன்பு காட்ட வேண்டும் என்பது அவரது பண்பு. மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதைப் பறை சாற்றினார்.

மொழி, சமுதாய, நற்பண்புகளின் உயர்விற்காக பாடு பட்ட அண்ணாவின் பிறந்த தின விழாவின் போது அவர் நினைவுக்கு எமது அஞ்சலி!

ஈ·சன் குரூப்

ஈ·சன் இஞ்சினியரிங் கம்பெனி லிமிடெட்

ஹாக்பிரிட்ஜ்·ஹிவிடிக் அண்டு ஈ·சன் லிமிடெட்

ஈ·ஸ்வரன் அண்டு ஸன்ஸ் இஞ்சினியர்ஸ் பிரைவேட் லிமிடெட்

இண்டஸ்டிரியல் இஞ்சினியர்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்

ஈ·சன் பிராடக்ட்ஸ் ஆப் இந்தியா பிரைவேட் லிமிடெட்

சென்னை –1

WE PUBLISH BOOKS ON A VARIETY OF SUBJECTS AND IN LOW-COST EDITIONS

WRITE FOR A FREE CATALOGUE

WILEY EASTERN PRIVATE LIMITED

J41 SOUTH EXTENSION 1

NEW DELHI 49

WITH COMPLIMENTS FROM

PHARMED PRIVATE LTD.

MANUFACTURERS & DISTRIBUTORS OF :

BIOLOGICALS & PHARMACEUTICALS

REGISTERED OFFICE

25-31, Rope Walk Lane,

P.O. Box No. 1185,

BOMBAY.

Phone: 254244-254260

சமுதாயப் பணியில் திருப்பம்

எஸ். அய். பிள்ளைப்பாண்டியன்

(தமிழகப் பகுத்தறிவு இயக்கத்தாருக்கு நன்கு அறிமுகமான எழுத்தாளர், பேச்சாளர், கவிஞர், பகுத்தறிவு அறிவுப்பாதை, குத்தூசி, விடுதலை முதலான இதழ்கள் மூலம் இவர் ஆற்றி வந்துள்ள எழுத்துப் பணி கணிசமானது. தமது சொற்பொழிவுகளால் தமிழகத்தில் பகுத்தறிவுப் பணி புரிந்துவரும் இவரைப் பெரியார், குருசாமி முதலியோரின் வழி வந்த பகுத்தறிவு முனைவராக இளைஞர் உலகம் வரவேற்று மகிழ்கிறது. கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு, எதையும் ஆழமான—அழுத்தமான கருத்துணர்வோடு ஆராய வேண்டும் என்னும் நோக்கு உடையவர் திரு. பிள்ளைப் பாண்டியன். அவருடைய கட்டுரை தற்கால இந்தியாவின் ஒரு முக்கியமான நிகழ்ச்சியை விவரிக்கிறது.)

சமுதாயத்தின் பல்வேறு பகுதியினரையும் ஒன்றிணைத்துச் செயற்படுத்தும் முழுமைத் திட்டங்களை மனிதனால் இன்று வரையில் வகுத்துக்கொள்ள முடியவில்லை; மனிதக் குலத்து ஒவ்வொருவரின் விருப்பங்கள். நோக்கங்கள் என்பவை இணைந்து இயங்கத் தக்கதான .விரிந்த பாதை இல்லாததால், காலந்தோறும், சமுதாயத்தின் ஒவ்வொரு பகுதியினர் உயர்வு பெறவும் மற்றப்பகுதியினர் நெரிசல்பட்டுத் துன்புறவும் ஆன கேடு நிகழ்ந்துகொண்டே இருக்கிறது. இந்தக் கேட்டை நீக்கிச் சமுதாயச் செயற்பாட்டிற்கு ஓர் ஒழுங்கு நடையை ஊட்டும் முயற்சியும் தொடர்ந்து நடந்துகொண்டேதான் இருக்கிறது, இந்த முயற்சியையே சமுதாயச்சீர்திருத்தம் என்று சொல்லுகின்றார்கள்.

விரிந்த வரலாறு

வரலாற்று வழியிலே நெடுந்தூரம் வந்துள்ள மனிதச் சமுதாயம் தனது பயணப்படிகளைத் திரும்பிப் பார்த்தால், வியப்புணர்ச்சியே அதன் இதயக் கால்களில் பொங்கிப் பாய்கிறது .. என்றோ,—வரலாற்றின் விடிவுக் காலத்திலே,—கூனிக் குறுகிக் கும்பியைக் கழுவிக்கொண்டு, தற்பாதுகாப்புக்காக கொலைக் கருவிகளைச் சுமந்துகொண்டு மண்ணிலே திரிந்தான் மனிதன்; இன்றோ, மண்ணையும் அதைச் சுற்றிப் பரந்துகிடக்கும் கடல்களையும் அடக்கி மிதித்து, விண்ணிலே தாவும் வீறுகொண்ட

புதுமானுடனாக நிமிர்ந்து நிற்கிறான்! இருவருக்கும் இடையே உள்ள காலவெளியிலே நிகழ்ந்துள்ள ஆக்கங்களும் அழிவுகளும், அவைகளை நெறிப்படுத்தும் முயற்சிகளாகிய சீர்திருத்தங்களும் எத்தனை எத்தனையோ!

உயிரோடு இருப்பது, அதற்காகவே உண்பது—உறங்குவது என்ற அளவில் இயங்கிய மனித நோக்கு, பலப்பல தத்துவங்களையும் இலட்சியங்களையும் அவற்றைச் செயற்படுத்துவதற்கு ஆன நடைமுறைகளையும் வகுத்து, விரிந்து பரந்த வரலாறு நினைக்க நினைக்க வியப்பையே தருகிறது.

ஒட்டு மொத்தமாக...

இந்த வரலாற்றுப் பெருநடையின் ஊடேயே, உழைப்புக்கு அஞ்சி ஒதுங்கியவர்களும், மனிதக்குலத்தின் உரிமை நடையிலே கயமைகளைப் புகுத்தியவர்களும் அங்கங்கே முகங்காட்டுகின்றார்கள். அவர்களாலேயே, இந்த நெடுவரலாற்றின் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும், அந்த வளர்ச்சியானது முழுமையும் நெடுமையும் பெற்றுவிடாதபடித் தடுக்கின்ற கேடும்

வழிகாட்டிகள்

உலகத்திலேயே நம்முடைய நாட்டில்தான் பெரும் பெரும் மகான்கள் வழிகாட்டிகள் தோன்றி இருக்கின்றார்கள். நான்கூட சில சமயம் நினைத்துப்பார்ப்பேன், 'அப்படிப்பட்ட பெரியவர்கள் தோன்றாமல் இருந்திருக்கலாம்; அவர்கள் தந்த அந்த நல்ல சிந்தனைகள் தோன்றாமல் இருந்திருக்கலாம்' என்று. பெருமைக்குரிய வழிகாட்டிகள் பலர் இருந்தும்கூட, நாம் இந்த அளவுக்குக் கெட்டுப் போயிருக்கிறோமே—உயர்ந்த நிலையில் இல்லையே என்பதால்தான், அப்படி கருதத் தோன்றியது.

புகுத்தப்பட்டு வந்திருக்கின்றது. சமுதாய அமைப்பிலும் அதை தழுவிய ஆட்சி முறை, தத்துவம், சமயம் முதலானவற்றிலும் நெடுக நடந்து வந்துள்ள சீர்திருத்த முயற்சி சமுதாயத்திலே மேற்குறித்த கேடுகள் நிகழ்ந்தன என்பதற்குச் சான்று பகர்கின்றது. கடந்த ஒன்றிரண்டு நூற்றாண்டுகளில் நமது நாட்டில் எழுந்த சீர்திருத்தப் பேரலையும், இங்கே, சமுதாயக் கேடுகள் மிகக் கடுமையாக, மிக நெடுங்காலமாகத் தடித்துப் போயிருந்தன என்னும் உண்மையையே உணர்த்துகின்றது.

நெடுங்காலமாகத் தும்பை விட்டு வாலைப் பிடித்துப்பிடித்து உதைபட்டு விழுந்த இந்த நாட்டுச் சமுதாயச் சீர்திருத்த இயக்கம் இந்த நூற்றாண்டிலேதான், தனது நெடுந் தவற்றை உணர்ந்து வீறுகொண்டது; இப்போதுதான், அதற்கேற்ற

பேருருவமும் பேராற்றலும் கொண்டு எழுந்தது. அதனாலே தான், இந்த நூற்றாண்டின் சீர்திருத்த இயக்கம்,—முன் போல்,—(சாதி, மதம், ஆட்சி என்னும்) ஏதாவது ஒரு துறையை பற்றியதாக ஒடுங்கி நலிந்து போகாமல், சமுதாயத்தின் எல்லாக் கூறுகளிலும் ஒருமுகமாகக் கவனம் செலுத்தியது.

முன்பெல்லாம், எங்கோ சிலர் தோன்றுவார்கள்; அரசியல் அமைப்பில் புதுமை வேண்டும் என்று குரல்கொடுப்பார்கள்; அதற்கு ஆன ஆற்றலைத் திரட்டுவார்கள்; அவ் ஆற்றலின் திரட்சிக்கு ஏற்ப, வெற்றியோ தோல்வியோ பெறுவார்கள்.



அண்ணா நினைவு அஞ்சல் தலை

அரசியலை மாற்றுவதற்கு அவ்வளவு வேகமாக எழுந்த அவர்கள் சமுதாயத்தை ஊடறுத்துக் கிடக்கும் சமயம், பொருளாதாரச் சீர்கேடு முதலான பிறவற்றில் கவனமே செலுத்தமாட்டார்கள். அதேபோல், எங்கோ ஒரு சமயச் சீர்திருத்தவாதி தோன்றுவார்.

"பழைமையான, சமயக் கொள்கைகளிலே மாசு படிந்து விட்டது" என்றும் "அதைத் தூய்மை செய்ய வேண்டும்" என்றும் முழக்கஞ்செய்வார்; தமது படிப்புக்கும், தம்மை ஆதரிப்போரின் தொகைக்கும் துணிவுக்கும் ஏற்ப, வெற்றியோ தோல்வியோ பெறுவார். அவருடைய சீர்திருத்தப் போரில் அரசியலுக்கோ மற்றும் சமுதாயச் சிக்கல்களுக்கோ இடமே இருந்திராது.

துண்டுதுண்டாக நடந்த இத்தகைய சீர்திருத்தப்பணிகளால் பயனே விளையவில்லை என்றும் சொல்ல முடியாது. சிறிது பயன்.—சிறிது நேரப் பயன்—விளைந்துதான் வந்தது. அவ்வத் துறைகளில் மலிந்த கேடுகளின் வலிமை சற்றே குறைந்ததோடு, அந்தத் துறையினர்,—காலத்தையும் அதற்கு ஏற்ற கருத்து வீச்சையும் அடியோடு புறக்கணிக்க முடியாத நிலையில்,— தங்கள் போக்கில் சற்றேமாறுதலுக்கு இடம்கொடுத்தார்கள் என்பதும் உண்மையே. ஆயினும் அந்த மாறுதல்கள் நிலையானவையாக

> **நமது வேலை**
>
> புதிய எண்ணங்கள், புத்தம்புது ஆராய்ச்சிகள், கால வேகத்தையொட்டி ஏற்பட்டுள்ள கருத்துமாற்றங்கள் நமது சிந்தனைப் பூங்காவினுள் தென்றலென வீசித் தெளிவும் தெம்பும் பிறந்திட வழியமைப்போம்; வாரீர்! வாரீர்! இதுவே நமது வேலை, வேலைச்சுமை என்பேன்.

இல்லை. புதிய கேடுகள் தோன்றாதபடித் தடுத்து நிறுத்தும் ஆற்றல் உள்ளவைகளாகவும் அவை இருக்கவில்லை. ஒரு துறையில் சற்றே புதுமை ஏற்பட்டாலும், அதை ஒட்டியதும் அதை நிலைபெறுத்தக் கூடியதுமான மாறுதல்கள் மற்ற மற்றத் துறைகளில் ஏற்படாததால், அந்தச் சிறு புதுமையும் கடலில் கரைத்த புளியாற்று, இந்தப் பற்றாக்குறை வரலாறு, இந்த நூற்றாண்டிலேதான், இந்த நாட்டில் தெளிவாக உணரப் பட்டது. அதன் விளைவாகவே, ஒருபெரும் சமுதாயச் சீர்திருத்த படை திரண்டு, சமுதாயத்தின் அனைத்துத் துறைகளையும் செம்மை செய்யப் புறப்பட்டது.

எதிர்ப்போர் உணர...

இருபதாம் நூற்றாண்டு இந்தியாவில் முனைப்புற்ற இயக்கங்கள் பல. அவை விடுதலை இயக்கம், சமயச் சீர்திருத்த இயக்கம் பகுத்தறிவு இயக்கம், சாதி ஒழிப்பு இயக்கம் எனப்பல பெயர்களைப் பெற்றிருந்தாலும், அவை அனைத்தும் ஒட்டுமொத்தச் சமுதாயச் சீர்திருத்த இயக்கத்தின் பல்வேறு கூறுகளே. காந்தியடிகள் காலம் முதற்கொண்டு, நமது இந்திய விடுதலை இயக்கம் நமது நாட்டிலுள்ள சாதி சமயக்கேடுகளை நீக்கும் பணியிலும்

நலிந்தவர்களைக் கைதூக்கிவிடும் திசையிலும் (தனது நோக்கில்) விரிந்து பரந்து படர்ந்ததை நாம் அறிவோம்; சென்னை மாகாணத்தில் தோன்றிய தென்னிந்திய நலஉரிமைச் சங்கம், நீதிக் கட்சியாக அரசியலிலும் தன்மான—திராவிடர்

பெரியாரும் அண்ணாவும்

இயக்கங்களாகச் சமுதாயக் கேடு நீக்கும் பணிகளிலும் ஈடு பட்டதையும் வரலாறு காட்டிக் கொண்டிருக்கிறது. இது போலவே—இந்தியாவின் வேறுபல பகுதிகளிலும்—சமுதாயச் சீர்திருத்த இயக்கங்கள் அரசியலில் கவனஞ் செலுத்தியதையும் அரசியல் எழுச்சிகள் சமுதாயப் பணியைத் தம்மில் ஒரு கூறாக ஏற்றுக் கொண்டதையும் காண்கிறோம்.

இவற்றுள் ஓர் இயக்கத்தை ஆதரித்து மற்றொரு இயக் கத்தைக் கண்டிப்போர் சிலர் இன்னும் இருக்கவே செய் கிறார்கள்; பன்னெடுங்காலமாகப் போற்றிக் கடைப்பிடிக்கப் பட்ட நம்பிக்கைகள், நடைமுறைகள் முதலியவற்றை ஒழிக்கப் புறப்படும் இயக்கத்தை, அவைகளிலேயே ஊறி அவைகளுக்கே பழக்கப்பட்டுவிட்டவர்கள் பழிப்பது இயல்பே. ஆனால், "இப் பக்கம் சாய்கிறதே என்று தாங்கி ஏதேதோ செய்து நிலைநிறுத் தும் போதில், அப்பக்கம் சாய்கிறது வாழ்க்கை வண்டி!" என்பது கடந்த காலத் துணுக்குச் சீர்திருத்த இயக்கங்கள்

நமக்குத் தந்துள்ள அனுபவம். அதுவே, ஒரு பகுதியில் ஏற்படும் சீர்திருத்தத்துக்கு ஏற்ப மற்றப் பகுதிகளும் செப்பம் அடைய வேண்டியதன் அவசியத்தை உணர்த்தி, பல நெடும் பழமைகளை ஒழிக்கும் திசையில் நம்மை ஏவுகிறது என்பதை நாம் உணர வேண்டும்.

பெரிய திருப்பம்

குறிப்பிட்ட சில அடித்தளங்களின் மீது இயங்குகின்ற ஒரு சமுதாயத்தில், ஒன்றுக்கு ஒன்று இசைவாகவே அதன் (அரசியல், சமயம், தத்துவம் முதலான) பல கூறுகளும் அமைந்துள்ளன. அவற்றுள் ஏதாவது ஒன்று புத்துருவம் பெறும் போது, மற்றவையும், இந்தப் புதுமையோடு இணங்கி நிற்பதற்கு வாய்ப்பாக மாறியே ஆகவேண்டும். மேசையின் மேற்பகுதியைப் பெரிதாக்கினால், அதன் கால்களையும் அதற்கேற்பப் பெரிதாக்க வேண்டும் அல்லவா? ஒரே மாடியுள்ள வீடு இருந்த இடத்தில் மூன்று மாடி வீடு கட்ட விரும்பினால், பழைய அடிப்படையை மாற்றிப் புதிய, விரிந்த அடிப்படை போட வேண்டும் அல்லவா? இந்த நூற்றாண்டின் சமுதாயச்செம்மல்களுக்கே இது தெளிவாகத் தெரிந்தது. அந்தத் தெளிவோடு அவர்கள் செயற்பட்டு, பழமையின் பல்வேறு கூறுகளையும் புதுக்கப் புறப்படுகிறார்கள். சும்மா, கண் துடைப்புக்காகவே, ஏதாவது ஒரு பகுதியில் சிறிய மாறுதலைச் செய்து, அதையும், மாறாத பிற பகுதிகளின் துணையால் பழமை போல் கட்டிக் காத்து வந்தவர்கள் இதைக் கண்டு அஞ்சுவதும் அபயக்குரல் எழுப்புவதும் இயல்பே. ஆயினும், அந்தக்குரல் களைப் புறக்கணித்து, சமுதாயம் என்னும் பாத்தியின் எல்லாப் பகுதிகளிலும் ஒரே சீரான வளர்ச்சிநீர் பாய்ச்சும் முழுமையான சமுதாயச் சீர்திருத்தப்பணி, இங்கும் எங்கும் வெற்றிநடை போட்டே வருகிறது.

முன்பெல்லாம் வீழ்ந்துவிட்ட இந்த இடத்தில், இன்று சமுதாயச் சீர்திருத்தப் பணி வெற்றிக்கால் வைத்து ஏறிவிட்டது என்பதே அதன் வரலாற்றில் ஏற்பட்டுள்ள பெரிய திருப்பம். இப்போது ஏற்பட்டுள்ள இத்தெளிவு தொடர்ந்து வளர்க்கப் பட்டு வருமானால், சமுதாயச் சீர்திருத்தப்பணி இனிவரும் காலத்தில் மிக எளிதான, சுமுகமான பணியாக இருக்கும் என்று நம்ப இடம் உண்டு.

VOLUME CONTROLS AND MINIATURE ROTARY SWITCHES

The volume control and miniature rotary switches are now being manufactured in India, in technical collaboration with Alps Electric Company Limited, Tokyo, Japan — world's Largest manufacturers of volume control and rotary switches.



Manufacturer's inquiries can be directed to

KEL COMPONENTS LIMITED

B 12A, INDUSTRIAL ESTATE
AMBATTUR, MADRAS.

For Genuine Rajdoot Motor Cycle and Scooter spares contact

British Motor Car Co. (1934) Pvt. Ltd.

CONNAUGHT CIRCUS
NEW DELHI-1.
Telephone: 44086

AUTHORISED DEALERS

NARANG BROS.
16/1, Arya Samaj Road, Karolbagh,
NEW DELHI-5.
Telephone: 561200

With best compliments of :

M. R. Electronic Components Limited.

9, MOUNT ROAD, MADRAS-2.



MANUFACTURERS OF MORGANITE POTENTIOMETERS WITH & WITHOUT SWITCH

Other types available are :

AM (Dual)
AM (Ganged)
A-56 (Miniature)
A-24 (24 mm dia.) and
Slider Switches

ALSO MANUFACTURERS OF CAR RADIOS
(Model 786 - Single Band and
Model 302CR—5 Bands)

Telegrams : FORTHRIGHT   Telephone : 44-7691/92   Telex : CA 7853

Space donated by

BERTRAMS - SCOTT (INDIA) LIMITED

PAPER MILL PLANT AND CHEMICAL ENGINEERS
P. O. Box No. 2812, Calcutta-1.

Works :	*Delhi Office* :	*Regd. Office* :
TITAGHUR	47/1, FRIENDS COLONY	1/1, KIMBER STREET
WEST BENGAL	NEW DELHI 14.	CALCUTTA-17.
Tel : Barrackpore-366	Tel : 632042	

லாயல் டெக்ஸ்டைல் மில்ஸ் லிட்.,

பதிவு அலுவலகம். 94/3, மில் தெரு,
கோவில்பட்டி (தமிழகம்)

தந்தி : "மில்ஸ்" தொலைபேசி எண் : 266

20 முதல் 100 வரை ஒற்றை இரட்டை நூலும் செயற்கை இழைப்பஞ்சு நூலும், காடா துணியும் தயாரிக்கப்படுகின்றன.

நிர்வாக இயக்குநர் :

திரு. தி. மாணிக்கவாசகம் செட்டியார்

இயக்குநர்கள் :

திரு. கருமுத்து தியாகராசன் செட்டியார்
திரு. தி. சுந்தரம் செட்டியார்.
திரு. எம். ஏ. எம். முத்துராமன் செட்டியார்.
திரு. எஸ். எல். என். சாத்தப்ப செட்டியார்.
திரு. பி. சி. எம். பாலகிருஷ்ணன்.
திரு. டி. ஜி. சுப்பிரமணியன்.

WITH THE COMPLIMENTS OF

INDIANOIL

Indian Oil
Corporation Limited

IOC. 7120

With the Compliments of

UNION CARBIDE

UNION CARBIDE INDIA LIMITED

நாவிற்கினிய நல்ல உணவு,
அன்பான உபசரிப்பு,
சிறப்புமிகு சிற்றுண்டி வகைகள்

தென் தில்லியில் தென்னக உணவு வகைகள்
அனைத்தும் கிடைக்கும் அன்பு இல்லம்
(தமிழ்ச் சங்கக் கட்டிடத்திற்கு வெகு அருகில் உள்ளது)

வி. மகாலிங்கம்

தமிழக உணவு விடுதி

கடை எண்: 4, செக்டர்–1 மார்க்கட்,
இராமகிருஷ்ணபுரம்
புதுடெல்லி–22

கூட்டி எறி!

வெள்ளியங்காட்டான்

அறுபது வயதைத் தாண்டிய திரு. வெள்ளியங்காட்டான் அவர்கள், இன்று வாழும் தமிழ்க் கவிஞர்களிலே குறிப்பிடத் தக்க ஒருவராகத் திகழ்கிறார். கோவைப் பகுதியில், ஆரவாரமற்ற ஒரு தனியிடத்தில், குடத்துள் விளக்காக உள்ள இவருடைய இதயம் பிலிற்றியுள்ள கவிதைகள் ஆயிரக்கணக்கானவை. இவருடைய கவிஞன் என்னும் கதைக்கவிதை நூலாக வெளிவந்துள்ளது; அறிஞன் வெளிவர உள்ளது. இன்னும் அச்சேறாத தாய்நாடு என்னும் கவிதைத் தொகுப்பில் உள்ள வீறு கமழும் ஒரு பாடலை அண்ணா மலரில் வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம்.

கூட்டி எறியடா கூட்டிஎறி!—கூடும்
குப்பைகூ ளங்களைக் கூட்டிஎறி!
'நாட்டில் நலிவுகள் யார்செய லோ?—என்னும்
நாயகக் குப்பையைக் கூட்டிஎறி!
'வீட்டில் வெறுமை விதிப்பய னே'யெனும்
வேதியக் குப்பையைக் கூட்டிஎறி!
கூட்டி எறிந்திடக் கூசிடின் நாடொரு
குப்பைமே டாய்விடும், கூட்டிஎறி!

கூட்டி எறியடா கூட்டிஎறி—கூடும்
குப்பைகூ ளங்களைக் கூட்டிஎறி!
பாட்டைப் படித்தும் பயன்படப் பாடாத
பாவலர் குப்பையைக் கூட்டிஎறி!
ஏட்டில் இதயத் தியல்பெழு தாத
எழுத்தாளர் குப்பையைக் கூட்டிஎறி!
கூட்டி எறிந்திடக் கூசிடின் நாடொரு
குப்பைமே டாய்விடும், கூட்டிஎறி!

கூட்டி எறியடா கூட்டிஎறி!—கூடும்
குப்பைகூ ளங்களைக் கூட்டிஎறி!
பாட்டாளி மக்களைப் பட்டினி போடும்
பணக்காரக் குப்பையைக் கூட்டிஎறி!

கூட்டாளி யாகுநற் கொள்கை குலைக்கிற
கோழையை வேருடன் கூட்டிஎறி
கூட்டி எறிந்திடக் கூசிடின் நாடொரு
குப்பைமே டாய்விடும், கூட்டிஎறி !

கூட்டி எறியடா கூட்டிஎறி !—கூடும்
குப்பைகூ ளங்களைக் கூட்டிஎறி !
காட்டும் அறத்தைக் கடைப்பிடிக் காமலே
கல்லைக்கும் பிட்டுக் கடைதிறந்து
கூட்டி விலைகளைக் கூறியே விற்றிடும்
கொள்ளையர் குப்பையைக் கூட்டிஎறி !
கூட்டி எறிந்திடக் கூசிடின் நாடொரு
குப்பைமே டாய்விடும், கூட்டிஎறி !

கூட்டி எறியடா கூட்டிஎறி !—கூடும்
குப்பைகூ ளங்களைக் கூட்டிஎறி !
தோட்டந் தொழிலில் தொழும்பர் களாகித்
தொழில்புரி வோர்களைத் தொட்டுவிடின்
தீட்டெனப் பேசித்தீண் டாமை திணிக்கிற
தேசிகக் குப்பையைக் கூட்டிஎறி !
கூட்டி எறிந்திடக் கூசிடின் நாடொரு
குப்பைமே டாய்விடும், கூட்டிஎறி !

கூட்டி எறியடா கூட்டிஎறி !—கூடும்
குப்பைகூ ளங்களைக் கூட்டிஎறி !
நீட்டி முழக்கி அளந்திட என்றுமே
நேர மெனக்கில்லை, கூட்டியெறி !
வாட்டும் பசிக்கொரு காரண மாகவே
வந்த தனத்தையும் கூட்டிஎறி !
கூட்டி எறிந்திடக் கூசிடின் நாடொரு
குப்பைமே டாய்விடும், கூட்டிஎறி !...

Serving the Nation from 1932

Union Dairy Regd.

97, BAIRD ROAD - NEW DELHI

வீட்டுக்கு வேண்டும் வெண்ணெய்
வெண்ணெய்க் காகும் புது கிரீம்
நாசியை ஈர்க்கும் நறுநெய்
நல்சுவை நல்கும் டெய்ரி.

வெண்ணெய் வேண்டுமா ? நெய்க்காகும் வெண்ணெய் உப்புக் கலப்பற்ற தூய வெண்ணெய், சமையலுக்கு உதவும் " பனீர் ", பழங்கள், காபி இவற்றுடன் கலந்து உண்ண புத்தம்புது கிரீம், — இவை அனைத்தும் உங்கள் விரலசைவில் வீடு தேடிவரும் !

உங்கள் தேவைகளுக்கு

45263

என்ற எண்ணைத் தொலைபேசியில் சுழற்றுங்கள்

WE SELL

- FRESH COOKING BUTTER FOR GHEE
- PURE GHEE
- FRESH CREAM FOR FRUITS
- COOKING CHEESE

யூனியன் டெய்ரி

(பதிவானது)

97, பங்களா சாகிப் மார்க் (பேர்டு ரோடு)

புது தில்லி – 1

Telephone : 45263 தொலைபேசி எண் : 45263

prevention is better than cure

IODYL

IODYL is an ointment of Iodine with Methyl Salicylate for sprain and stiffness of ligaments, joints and muscles ; & other local inflammatory conditions.

PACKING . Glass Jar of 28 G. In Carton.

BURN CURE is a Soothing, Antiseptic, Anæsthetic ointment for local application in Burns, Scalds, Cuts, Wounds, Abrasions and Inflammatory skin conditions.

PACKING Collapsible Tube of 25 Gm. in a Carton.

BURN CURE



STANDARD PHARMACEUTICALS LTD. CALCUTTA-14

"MASCHMEIJERS FOR MUSKS & PERFUMERY COMPOUNDS"

A. Maschmeijer Jr. (India) Private Ltd.,

G.S.T. ROAD, — MADRAS-44.

Grams : SYNTHESE—CHROMEPET Phone : 89645 (3 Lines)

"ஏழையின் கண்ணீரும் வேர்வையும் இங்கே அகற்றப்படுகின்றன!"

நிலவரி நீக்கம்

நீள்புவி மாந்தர்நிலைதனை உயர்த்திடும் கல்விச்சலுகை

ஊழியர் தமக்கு ஊதிய ஆதாயம்

உண்மைப் பறவைக்குஇது ஆகாயம்

எளியவர்க்கு நிலப்பட்டா!

எரிந்த குடிசைகளைப் புதுப்பித்தார்!

இவ்வாறு

"ஏழையின் கண்ணீரும் வேர்வையும்

இங்கே அகற்றப்படுகின்றன"

(தமிழ்நாடு அரசாங்கச் செய்தித்துறை வெளியீடு)

HEALTH
CARE
WORLD
WIDE

Abbott Laboratories
(India) Private Limited
133, Mahatma Gandhi Road,
BOMBAY-1.

இன்றைய அரசியல்

சோ. இலக்குமிரதன் பாரதி

(நாவலர் சோமசுந்தரபாரதியாரின் மகனாராகிய இவர் 1942 விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்ற பழம்பெரும் தேசியவாதி. வழக்கறிஞர் ஆகவும், தமிழக அரசின் கிராமநலத் திட்டத்தில் துணை இயக்குநர் ஆகவும், காந்திகிராமம் கிராமியக் கலைக்கல்லூரியின் முதல்வர் ஆகவும் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இளமை முதலே சாதி ஒழிப்பிலும் தீண்டாமை ஒழிப்பிலும் தீவிரமாகப் பங்கு கொண்டார். எனவே, தமிழகத் தன்மான இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு உழைத்து வருகிறார். அரசியல், சமுதாய இயல் ஆகிய துறைகளில் தெளிவும் தேர்ச்சியும் மிக்கவர். இவரது "இறைமாட்சி" என்னும் நூல் மிகு சிறப்புப் பெற்றது; "நமது சமுகம்" என்னும் மற்றொரு பெருநூல் 1969ல் வெளிவந்து தமிழுக்கு வளம் சேர்த்துள்ளது.)

உலகில் வன்முறைச் செயல்களும் அமைதியின்மையும் இன்று மிகுதியாகக் காணப்படுகின்றன. மேற்கு ஆசியாவிலும், தென் கிழக்கு ஆசியாவிலும் போர்களே நடக்கிறதாகச் சொல்லலாம்.

சோவியத்தும் சீனவும் பொதுஉடைமைக்கட்சிகளையும்,—அமெரிக்காவும் பிரிட்டனும் மக்களரசு, தனிஉடைமைக் கொள்கைகளையும் ஆதரிக்கும் வகையில்,—பிற அரசுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டுக் கேடு விளைவிப்பதுடன், பெரும் போர்கள் மூளுவதற்கும் இடமேற்படுத்துகின்றன. ஐக்கிய நாடுகளின் அமைப்பின் முயற்சிகளால் இப்போக்கினைத் தடுத்து அமைதியைக் காக்க முடியவில்லை. அனைத்துலகையும் அழிக்க வல்ல அணுகுண்டுகளின் அபாயமே இப்பேரரசுகளின் ஆதிக்க வெறிப் போக்கை அச்சுறுத்தி நிறுத்துகின்றது.

எல்லை விரிகிறது

எண்ணியல்கள் விரைந்து வளரும் ஏற்றத்தால் எழுந்த செய்நேர்த்தித் திறன்கள் பரந்த உலகை இன்று மிகச் சிறிதாக்கி நிலவையும் எட்டிப் பிடித்துள்ளன. பொறிகளும் சக்திகளும் வாழ்க்கை வளம்படு நலன்களுடன் பல தீமைகளுக்கும் காரணமாகின்றன. இனம், சாதி, குடும்பம், சமயம், நாடு முதலிய எல்லைகளுக்குள் அடங்கியிருந்த பற்றுக்களும் உறவுகளும்

இன்று பயனற்றுப் போயின. புறஉலகில் தோற்றுவித்த மாற்றங்களுக்கிடையே மனித உள்ளம் விரிவோ பக்குவமோ அறிவோ அடையவில்லை. மண்டல, உலக நிறுவனங்கள் இன்று அவசரமான தேவைகள். மனித உள்ளமும் அதன் அடித்தளமும், பழைய சுற்றம், சூழல்களிலேயே உறைந்துபோய், தேசீய இன அரசுகளுக்கு மேல் எட்டவில்லை. 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்பது வெறும் ஏட்டுச் சுரைக்காய்தான்!

தனிமனிதனுக்கும் அவன் சார்ந்த சமூகத்திற்கும் இடையே எழுந்து பெருகும் உறவுகளின் இணக்கத்திற்கும் இசைவிற்கும் அன்பும் அறிவும் கூடி அறன்செய்யும் வழிகாட்டவேண்டும். தனிமனிதனின் உள்ளம் உலகமெலாம் அளாவும் விரிந்த பொது உள்ளம் ஆகலாம். மலைப்புறப் பூர்வீக இனத்தொகுதியின் மனம் மிகக் குறுகியதாகவிருக்கலாம். சமூக ஆட்சிக்குத் தனி மனிதன் எக்காலும் அடிபணிய வேண்டுமென்ற வாதம் சரியாகாது. "எண்பதத்தால் யார் மாட்டும் எய்துதற்கெளிய வழக்காகிய பண்புடைமை" மட்டுமே அன்புடைமையையும் ஆன்ற குடிகளையும் பிறப்பித்து; அறத்தால் வரும் இன்பமாகிய பயனை இல்லில் இருந்து உலகம் வரை அளிக்கவல்லது.

இருவகை உரிமைகள்

பிறப்பால் பெறப்பட்ட பதவி, ஒருவன் விரும்பித் தேடி அடையக் கூடிய பற்றுரிமையாக மாறும் பான்மையே இன்று தனிமனிதனின் மாண்பிற்கு அறிகுறியாகும். அதனாலேயே மக்களரசுகள் அடிப்படையான மனித உரிமைகளை ஒப்பி ஏற்று, அவற்றிற்கு அரன்செய்து காப்பதே தங்கள் கடமையாகக் கருதுகின்றன. மாறாக, இல்லாதவர்களின் சர்வாதிகார ஆட்சிகள், வாழ்க்கை பூராவிலும் பரவி, எல்லோருக்கும் உணவு, உடை உறையுள், வேலை முதலிய தேவைகளை உரிமைகளாக்கி அதற்காகப் பொருளைப் பொதுவுடைமையாக்கி மற்ற மனித உரிமைகளை மறுக்கின்றன. இவ்விருவகைகளையும் மனித உரிமைகள் பட்டியலில், ஐக்கிய நாடுகளின் அமைப்பு ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. "சமவாய்ப்புக்களை மட்டும் உரிமானம் கோரவில்லை; பல்வேறு வகையான வாய்ப்புக்களையும் அது கோருகிறது என்பதும், அதே போன்று தெரிந்துகொள்ளப்படுவதில்லை" (J.B.S.Holdane). ஐசுவரிய மக்களாட்சிகள், இல்லாதவர்களின் இன்றியமையாத் தேவைகளுக்கு ஈடுசெய்யும் பொறுப்பை ஏற்கும் ஆக்கநல அரசுகளாயின. அத்துடன் மனித உரிவைகளுக்கு ஆட்சிகள் ஊறு விளைவிப்பின் அதற்கு அரசுகளின் மண்டல அமைப்புகளும், நீதிமன்றங்களும் பரிகாரம் தேட வழிவகுக்கப்படுகின்றன. இவ்விருவகைப்பட்ட மனித உரிமைகளின் வேறுபாடுகளை உணர்ந்து, முன்னவற்றை, நீதி

மன்றங்களில் வழக்காடிப் பெறக் கூடிய அடிப்படை உரிமைகளெனவும், பின்னவற்றை அரசுகள் கைக்கொண்டு நிறைவேற்ற வேண்டிய கொள்கைகளெனவும் இந்திய அரசியலமைப்புச்சட்டம் வகுத்துள்ளது.

அரசியல் உலகில் இன்று காணும் அமைதியின்மை, பிணக்குகள், போர்கள், மக்கள் நிலையிழந்த அயலுணர்வுகள் (Alienation), எதிலும் பொருள்காணப் பேதலிப்புகள் (Anomie) முதலியவற்றிற்கு, தனிமனிதனும், சமூகமும், அரசும், மனித உரிமைகளுக்கு இணங்க உறவுகளை நேர்மைப்படுத்திக் கொள்ளும் பக்குவமும் திறமும் பெருமையே பெரிதும் காரணமாக கூறலாம். தனிமனிதன், சமூகம், அரசு ஆகிய மூன்றையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பும் தத்துவங்கள் இன்று மலிந்துள்ளன. மனித வரலாற்றின் முன்னேற்றத்தில் முனைப்பாக நிற்பது தனிமனித மாட்சியின் காட்சி. ஒவ்வொரு ஆளின் தன்மானம், விடுமானம், உரிமானம், ஆற்றல் முதலியன சமூகமும், அரசும் அரண்செய்து வளர்க்க வேண்டிய பெறுமானங்களாம்; அவனுக்கு அவை அளிக்கும் வெகுமானங்களல்ல.

அரசின் பயன்பாடு

இறைமைக்கும் குடிமைக்கும் இடையான இணைப்பாகவும் இறைமையின் வலிமைக்குச் சான்றாகவும் ஒன்றாக உள்ளது, அதன் இன்றியமையாப் படைவலியே ஆகும். ஆனால் இன்று அரசுகளின் பயன்களும், நலன்களும், அவற்றை ஆக்கித்தரும் சாதனங்களும் வரம்பிறந்து விரிந்துவிட்டன. ஒரு சமூகம், "முறைசெய்து காப்பதற்கு வைத்த இறைமையை" எல்லா நலன்களையும் தேடித் தருவதற்குக் குடிகள் பயன்படுத்திக் கொள்வது தவறாகாது. "முற்றிலும் வலுக்கட்டாயம் செய்வதும் முற்றிலும் அனுமதிப்பதும் ஆகிய, ஆட்சிக்கும் குடிகளுக்குமிடையே உள்ள உறவுகளில், அறியப்படுத்துவதும் இணைத்துக் கூட்டுவதும் படிப்படியானதும் வரிசையானதுமான நடவடிக்கைகள் எவ்வளவோ ஆட்சிக்குள்ளன". எதனை, எதனால், எப்படி முடிக்கலாம் என்ற பகுத்தறிவு இன்றி முறை செய்து காப்பதற்கான படைவலியை, மக்களின் அறிவு ஆற்றல், பொருள்களைப் படைப்பதில் செலுத்துவது, கிணறு வெட்டப் பூதப் புறப்பட்டது போன்ற மாறான விளைவுகளை உண்டு பண்ணி, வேலியே பயிரை மேய்ந்த கதையில் முடியும். அரசு தலையிடுவது அழிப்பதற்கல்ல, கூட்டுவிப்பதற்கே என்பதை மறக்கக் கூடாது.

குடியாட்சி

சுற்றுப்புறச் சூழ்நிலைகளையும் பகைப்புலன்களையும் தன் அறிவாற்றல்களால் வென்று வாழ முற்பட்ட பல்லாயிர ஆண்டுக

ளான மனித வரலாற்றில், தனிமனிதன் தன்னைப் பீடித்திருந்த பொதுஉள்ளப் பிடிப்பை மெள்ள மெள்ளத் தளர்த்தி விடுபட்ட போக்கு ஒரு சிறந்த பகுதியாகும். அப்பகுதியில் அவன் ஆக்கிக் கொண்ட மக்களரசு அரசியலில் ஒரு பெருநிதியாகும். மக்களரசே அவ்விடுமானத்தை ஒவ்வொருவரின் உரிமானமாக்கி அரண் செய்ய வல்லது.

குடிஅரசுகள், வாதப்பிரதிவாதங்களைக் கேட்டு ஆட்சி நடத்தும் மன்ற அரசாகவும், (Parliamentary), தெரிவான்மை யாளர்கள் அரசாகவும் (Representative) சமன்மையுடைய சட்ட ஆட்சியாகவும் (Rule of law) பெயர்பெற்றன. பெரும்பான்மை யினரின் ஆட்சி (Majority rule) என்பதுமுண்டு. எனில், அவற்றைக் கட்சி அரசு என்று கருதுவதோ சொல்வதோ தகாது.

மக்களின் அரசியலறிவைப் பெருக்கி, அவர்களுடைய ஆதரவைத் திரட்டி (Mobilize) காரியங்களைச் செய்து முடிப்பதற்காகப் பல நாடுகளிலும் முதலில் கட்சிகள் தோன்றின. குடியரசியலமைப்பு ஏற்பட்ட பின்னர், அக்கட்சிகள் தங்கள் திட்டங்களை மக்களிடம் கூறி, அவர்களுடைய வாக்குகளைப் பெற்று, தெரிவாண்மையாளராகி, பெரும்பான்மையராகவிருந்தால், ஆட்சிப்பொறுப்பை ஏற்பதற்கும் உதவின. சட்டமன்றங்களில் தங்கள் கோரிக்கைகள், திட்டங்கள் பற்றிய வாதப் பிரதிவாதங்களில் பெரும்பான்மை வாக்குகளைப் பெறத் தவறினால், அப்பொழுது பெரும்பான்மை பெறுபவர்களிடம் ஆட்சிப் பொறுப்பை விட்டுவிடவேண்டும். பெரும்பான்மை என்பதும் சிறுபான்மை என்பதும் சட்ட மன்றங்களில் பெறும் ஆதரவைப் பொறுத்தே மாறி மாறி இயங்கும். பெரும்பான்மையினரின் ஆட்சி மக்கள் எல்லோர்க்குமாகும். ஆனால் அரசின் இவ்வடிப் படைக்கருத்து 'பெரும்பான்மைக் கட்சி ஆட்சியாக'க் கொள்ளப் படும்பொழுது, சிறப்பாக நம் நாட்டில் அறவே கைவிடப்பட்டு, ஆட்சியின் நலங்கள் தம் கட்சியினருக்கே கிடைப்பதால், ஏனையோர், ஆட்சிக்கு விரோதமாகச் சட்டமன்றங்களிலும் வெளியிலும் கிளர்ச்சிகளும் கலகங்களும் செய்வது சர்வ சாதாரணமாகி விட்டது. கட்சியினரும், பொதுநலத் திட்டங்களையும் கொள்கைகளையும் புறக்கணித்து, கட்சி நலங்களையே நாடுகின்றனர். கட்சி ஆட்சியை மக்களரசாகக் கொள்ளுதல் சடங்குகளையே மணவாழ்க்கையாக நினைக்கும் தவற்றைப் போன்றதாகும்!

கட்சிகள் பெரும்பாலும் நன்றாகப் பணியாற்றும் மேல்நாட்டு நடப்புகளை வைத்துக் கொண்டு—அதன் வரலாற்றுச் சூழ்வுகளை மறந்து—குடிஅரசுகளுக்குக் கட்சிகள் இன்றியமையாதன என்றும் இருகட்சிகள் இருப்பதே ஏற்றது என்றும், (இந்தியாவில் பலதிறப்பட்ட சமூகங்களும் (Multiple Society) அவற்றைப்

பிரதிபலிக்கும் தெரிவான்மையாளர்களும் பல கட்சிகள் அமைப் பதைத் தடுக்கமுடியாதென்பதை எண்ணுமல்) பல கட்சிகள் குடிஅரசுக்குக் கேடு என்றும் பேசப்படுகிறது. ஒரே கட்சி, திறமான மாற்றுக் கட்சியின்றித் தொடர்ந்து ஆட்சிசெய்வது மக்களரசைச் சர்வாதிகார ஆட்சிநிலையாக்கிவிடும் என்பதையும் கருதுவதில்லை. இந்திய மக்களின் நிலையை உன்னிப்பார்த்து பிரிட்டன், அமெரிக்க நாடுகளில் காணும் கட்சி ஆட்சி வழக்கை அகற்றி, சட்டமன்றங்களின் தீர்மானங்களை நிறைவேற்றி வைக்க அவை நியமிக்கும் மந்திரிகள் பொறுப்பேற்று ஆட்சி நடத்தும் முறையை ஏற்படுத்த வேண்டும் என்றும், கட்சிகள் சட்டமன்றங்களுக்கு வெளியில் மட்டுமே இயங்கவேண்டு மென்றும் கூறப்படுகிறது. நாள்தோறும் தன்னலம் பற்றிக் கட்சிமாறி ஆட்சியைக் கவிழ்க்கும் நிலை இக்கூற்றை வலுப் படுத்துகிறது. எவ்வாற்ருனும் ஆட்சியைப் பிடிக்கும் அதிகார வெறியுடைய தெரிவாண்மையாளர்கள், அரசையே அழிக்கும் 'கொல்குறும்பு'களாகிறதைப் பார்க்கிரேும்.

நம் நாட்டு நிலை

மன்னர்கள், அயலர்கள் ஆளுகையில் இருந்துவந்த நம மக்கள், நாட்டுக்குக் கொள்கைகளை வகுத்துத் திட்டங்களைத் தீட்டுவதில் பயிலாததால், தனிப்பட்ட தலைவர்களையே தெய்வங் களாகப் போற்றி வழிபடும் வழக்கைக் (Personlity cult) காணு கிரேம். அதனுல் கட்சிகளோ, கொள்கைகளைவிட, தலைவர் களையே சார்ந்தனவாகக் காட்சி அளிக்கின்றன. தலைவர்களும் தங்கள் ஆதிக்கத்தைப் பெருக்கி, குடிஅரசுக்கு முரணுனவகையில் முடிசூட்டுவிழாக்களில் கலந்து கொள்வதிலும், செங்கோல்களைப் பெறுவதிலும்; முடிசூடா மன்னராவதிலுமே மகிழ்ச்சி அடை கின்றனர்!

நம்நாட்டு வாழ்க்கையில், ஆட்சி, பிறதுறைகளிலும் தலைமை பெற்று அவற்றின்மேல் ஆதிக்கம் செலுத்துவதினுல், எல்லாத் துறைகளிலும் இணக்கமாக மக்களின் ஆற்றல் பெருகி வளம்படு வதற்கு ஊறு விளைகின்றது. ஆட்சியில் அதிகாரமும் வலுக் கட்டாயமும் பெரிதும் பயன்படுத்தப்படுவதால் தன்மானமும் விடுமானமும், அறிவும், பண்பும் வளர்க்கக் கூடிய துறைகள் எல்லாம் நலிவுற்று மடிகின்றன. இவ்வாற்ருல், அதிகாரவர்க்க மும், சிவப்புநாடாக் குறிப்புத் தொகுப்புகளும், கையூட்டம் போன்ற சீர்கேடுகளும் மற்றக் குடிஅரசுகளினும் மிகையாக நம் அரசியலில் மலிந்து கிடக்கின்றன. நம் நாட்டில்தான் அரசியல் கட்சிகள், தொழிலாளர்கள், வழக்குரைஞர்கள், மருத்துவர்கள். ஆசிரியர்கள், மாணவர்கள் போன்ற வகுப்புக்களில், கட்சிவாருக பிரிவுபடுத்தும் அநாகரிகத்தையும் கேட்டையும் காண்கிரேும்.

மதச்சார்பற்ற அரசு என்று பெயரளவில் சொல்லிக் கொண்டு, நடைமுறையில் ஆட்சியாளரும் அதிகாரவர்க்கமும் மதச்சடங்குகளிலும் பிரார்த்தனைகளிலும் பங்குகொள்வது குழப்பத்தை உண்டுபண்ணும் ஒரு விநோதப் போக்காகும். அங்கிகழ்ச்சிகள் பிற சமயத்தினரிடையே நம்பிக்கையின்மையும் வெறுப்பும் உண்டுபண்ணுகின்றன.

நாம் யார் ?

இறுதியாக, ஆனால் முக்கியமான தான ஒரு கேடு குறிப்பிட வேண்டியதாகும்; மக்களும் தெரிவாண்மையாளரும் பொதுவாக அதன் அமைப்பையும் முறையையும் ஒத்துக் கொண்டால் மட்டிலுமே, எந்த மக்களரசும் திறம்பட இயங்க முடியும். அத்தகைய ஒன்றுபட்ட ஒப்புதல் (Consensus) நமது அரசிய லமைப்பிற்கு இல்லை. நாம் ஒன்றுபட்ட ஒரு தேசிய இனமும் (Nation) அல்ல. சட்டமன்றங்களில் தெரிவாண்மையாளராகப் புகுந்து உறுதிமொழியும் எடுத்து, உள்ளும் புறமும் கலகங்கள் செய்து, அரசியலமைப்பை உடைத்தெறிந்து அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கை, வெளிப்படையாகப் பறைசாற்றும் கட்சி களும் அவர்களுக்கு வாக்களித்து அனுப்பும் மக்களும், அக்கட்சி களுடன் கூடிக் குலாவி, கூட்டுச்சேரும் ஆளுங்கட்சிகளும் இன்றைய அரசியலின் விசித்திரமான போக்காகும்.

நல்ல அரசியலறிவு மக்களிடையே வளர்ந்து மாநிலங்கள், மய்யம் ஆகியவற்றில், சூழ்நிலைக்கு ஏற்றவாறு புதிய அரசிய மைப்பை வகுத்து அடுத்துவரும் இளைஞர்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்புவிப்பதே நலம் தரும்.

VISITING DELHI

Then Remember us for Excellent Boarding and Lodging in

SOUTH INDIAN STYLE

The South Indian Boarding House and for

Clean, Wholesome, Delicious North and South Indian Dishes

MODERN COFFEE HOUSE

(Opp. Telephone Exchange)

CONNAUGHT CIRCUS, NEW DELHI

Phone No. 48188 Grams: 'SIBHOUSE'

நிறைய உணவு
நிலையான விலைகள்

மக்களுக்கு நியாயமான விலைகளில் நல்ல 'தரமான உணவுப் பொருள்கள் கிடைக்கச்செய்வது .... விவசாயிகளுக்கு அவர்களுடைய உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான விலைகள் அளிப்பது .... எங்கள் கடமை.

உணவு தானியங்களை விவசாயிகளிடமிருந்து பெருமளவில் வாங்கி, பாதுகாப்பான சேமிப்புக் கிடங்குகளில் அவற்றைச் சேர்த்து, நிலையான விலைகளில் நிறைய மேலான உணவுப் பொருள்கள் மேலும் கூடுதலான மக்களுக்குக் கிடைக்கும்படி செய்வதற்காக, உணவுப் பொருள்களை வழங்குவதை முறைப் படுத்துவது மூலம் இந்தக் குறிக்கோளை அடைய நாங்கள் உறுதி பூண்டிருக்கிறோம்,

இந்திய உணவுக் கார்ப்பரேஷன்
1, பகதூர்ஷா ஜாபர் வீதி
புது தில்லி - 1

With best compliments

from the

ICI

GROUP OF COMPANIES IN INDIA

யாழ்ப்பாணக் கலாச்சாரத்தில்

இடதுசாரி இலக்கிய இயக்கம்

எஸ். பொன்னுத்துரை

நற்போக்கு இலக்கியம் பற்றிய ஆழ்ந்த ஆய்வுகளை நிகழ்த்தியவர், வீ, தீ முதலான நூல்களின் ஆசிரியர், ஈழத்து இலக்கிய உலகின் தனி ஓர் இயக்கம் என்னும் பல சிறப்புக்களுக்கு உரியவர் திரு. எஸ். பொன்னுத்துரை. தமிழில் இப்போது உருவாக வேண்டிய இலக்கியத்தைப் பற்றித் தமக்கென்று சில தனி நோக்குகள் கொண்டிருந்த அண்ணலைப் பாராட்டும் இம்மலரில், 'ஈழத்துச் சிறு கதை மன்னன்' பொனனுத்துரையின் எண்ணச் செறிவு மிக்க குறிப்பு ஒன்றை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம். அவருடைய நோக்கையும் போக்கையும், எழுத்து வாழ்விலே அவருக்குள்ள நேர்மைத் துணிவையும் உணர்ந்துகொள்ள இந்தக் குறிப்பு ஒன்றே போதுமானது.

யாழ்ப்பாணம் ஒரு தனி உலகம். அந்த மண்ணிற்கே உரித்தான தனித்துவக் கலாச்சாரப் போக்கும் அதற்குண்டு. உணர்ச்சிகளின் சொரூபங்களையும், எண்ணங்களின் முகங்களையும் வெளியே காட்டாது, ஏதோ மனோ சிக்கலிலும் மன அவசத்திலும் அவற்றைத் திரையிட்டு வாழும் பண்பு அக் கலாச்சாரத்திற்கு மட்டுமே உண்டு. அந்தத் திரைதான் தென்னோலை வேலிகள், Cadjan Curtain. இந்த வேலியால்,—'கறையான் பிடித்து உக்கிப்போன' செத்தையாக இருந்தாலும்,—தனது அம்மண வாழ்க்கையை மறைத்துவிடலாமென்பதில் யாழ்ப்பாணத்திற்கு அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு. அந்த நம்பிக்கையும், அது எழுந்து நிற்கும் 'கதிகால்'களும் யாழ்ப்பாணக் கலாச்சாரத்தின் பிரிக்க இயலாத அம்சங்களாகும்.

கிடுகு வேலி

ஆமைக்கு ஓடு எப்படியோ, அப்படித்தான் யாழ்ப்பாணத்திற்கு வேலி. வேலியே வேலிகள். இவ்வேலிகளும் பல வகைத்து. வேலிகள் கட்டி வாழும் மனோபாவத்தின் உருவமாகத்தான் கிடுகு வேலி அமைந்துள்ளது. பழைமைக்கு இசைந்தொழுகுவதாகக் காட்டிக்கொள்ளுதல்; தடிப்பான சாதி ஆசாரத்தைப் பேணுதல்; 'மணச் சடங்கு மூன்று நாட்கள் நடைபெறும்'

என்று அழைப்பிதழ் விடுதல்; மரக்கறி மனோபாவத்திற் பிரீதி யென நடித்தல்; உறவு முறைகளை இறுக்கி வைத்தல்;—எல்லாமே தாழ்வுச் சிக்கலில் அழுந்தும் ஒரு சமூகந் தன்னைப் பாதுகாப்பதற்கு ஏற்படுத்திய வேலிகளே. பணம் என்ற ஜடத்தையே உயிர்ப் பொருளாக்கி, அதைத் தெய்வ பீடத்திலமர்த்தி, அதையே பூஜை செய்துகொண்டு அதைப் பூஜை செய்யாதது போலக் காட்டிக்கொள்வது கூட,—அது பச்சையான மத்தியதர வகுப்பினைப் பிரதிபலிப்பதாக இருந்தாலும்—அதுவும் யாழ்ப்பாணக் கலாச்சாரத்தின் தனித்துவத்தைப் பிரதிபலிக்கவே உதவுகின்றது. உணர்ச்சிகளை மறைத்தும் அமுக்கியும், காப்புறுதியை உறுதிப்படுத்துஞ் சடங்குகளாகவே யாழ்ப்பாணக் கல்யாணங்கள் நிறைவேறுகின்றன. காணி பூமி—நகை நட்டு—சேனை சனம்—குலம் கோத்திரம்—எல்லாமே அவர்களுக்கு 'இன்சூரன்ஸ் பொலிஸி'களே. அத்தகைய வாழ்க்கை முறைகளும், வேலிகளும்.

பூச்சு வேடம்

இந்த வேலிகளை எஃகுலித்து, வீதிக்கு வரும் விவகாரங்கள் ஈழத்தின் சுவை மிகு வழக்குகளாகப் பிரபல்யமடைகின்றன. இவற்றைப் பிரபல்யப்படுத்தி, பழியைச் சம்பந்தப்பட்ட தனி நபர்கள்மீது சுமத்தி, இவை விதிவிலக்குகளே என்று பறைசாற்றுவதும் யாழ்ப்பாணக் கலாசாரத்தின் ஓரம்சமாகும். யாழ்ப்பாணம் இறுக்கமான கட்டுப்பாடான ஒழுக்க நெறிகளுக்கு இசைந்தொழுகிக் கற்புத்தனத்தைக் காப்பாற்றுகின்றது' எனப் பிறரை ஏமாற்ற இஃது உதவுகின்றது. பிறரை ஏமாற்றும் அதே நேரத்தில், அவர்கள் தங்களையும் ஏமாற்றிக் கொள்ளுகிறார்கள். இந்தப் போக்கும் யாழ்ப்பாணக் கலாசாரத்திற்கு இயல்பானதாகும். இந்தப் போக்குஞ் சேராமல் யாழ்ப்பாணக் கலாசாரம் பூரணமடைவதில்லை. இவையெல்லாம் யாழ்ப்பாணக் கலாசாரத்தின் பூச்சு வேலைகளே, சைவனொருவன் தன்னை அவ்வாறு காட்டிக்கொள்ள நெற்றியிலே தாராளமாக விபூதிப்பூச்சை அப்பிக் கொள்வதைப் போல! சைவர்கள் புனைந்து கொள்ளும் வேடமே விபூதிப்பூச்சு. அந்த விபூதிப் பூச்சினால் சைவத்தின் உயிர் மூச்சினை உணர்த்த முடியாது. ஆனால், இந்த வெளிப் பூச்சையே யாழ்ப்பாணக் கலாசாரம் என்று நம்பி ஏமாறுவதும் ஏமாற்றுவதும் யாழ்ப்பாணக் கலாசாரத்திற்கு இன்றியமையாத பண்பாகத் தேவைப்படுகின்றது.

நேர்மை உழவன்

உண்மையில், இந்தப் பூச்சு வேடங்களைக் கலைத்து, வேலித் திரைகளை அகற்றி, ஆழமான பார்வையை ஊடறுத்துச் செலுத்தினால்தான் யாழ்ப்பாணக் கலாச்சாரத்தின் மூல விக்கிரகத்தை

அல்லது உயிர்மூச்சினை நம்மால் தரிசிக்க முடியும். அவ்வாறு தரிசிப்பதற்கு நமக்குத் துணிவு வேண்டும்; தெளிவு வேண்டும்; யாழ்ப்பாணக் கலாசாரத்துடன் இரண்டறக் கலந்து வாழ்ந்து, அதனின்றும் தன்னை விடுவித்துக் கொள்ளும் ஒரு துறவறப் பக்குவமும் வேண்டும். இவை மூன்றும் அமையப்பெற்று, பேனவை நேர்மையாக உழுத்தெரிந்த பெற்றியனே உண்மை யான—வேடம் கலைக்கப்பட்ட சுயம்புவான யாழ்ப்பாணத்தைத் தரிசிக்கிறான்.

இடதுசாரி இயக்கம்

'புரட்சி ஓங்குக' என்ற சர்வதேசக் கோஷம் ஒன்றுடன் யாழ்ப்பாணத்திற்கு இடதுசாரி இயக்கம் வந்து சேர்ந்தது. அதன் இலக்கியக் கிளையாக முற்போக்கு இலக்கிய இயக்கந் தோன்றிற்று. இந்த இயக்கம் முற்போக்கு இலக்கியம்—, தேசிய இலக்கியம்—மண்வாசனை இலக்கியம்—என்ற சில கோஷங்களை இயக்கத்தின் தந்திரோபாய நடவடிக்கைகளாக அறிமுகப் படுத்தியது. இக்கோஷங்களை எழுப்பியவர்களால், இக்கோஷங் களை விளக்கக் கூடிய திருட்டாந்தங்களாக அமையவல்ல இலக் கியங்களைப் படைக்க முடியவில்லை, இதன் கோஷங்களின் தாற் பரியங்களை அதை எழுப்பியவர்களாலேயே உய்த்துணர முடிய வில்லையென்பதுதான் இந்த இயலாமைக்குக் காரணம். முற்போக்கு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இலக்கியப் பயிற்சி குறைந்தவர்களாகவும், தனித்துவப் பார்வை இல்லாதவர்களாக வும் இயக்கத்தின் பிரசார பலத்திலே சுயமனித முன்னேற்றங் காணவேண்டுமென்ற அவாவுடையவர்களாகவும் இருந்தமை மட்டுமே இக்கோஷங்களின் தோல்விக்குக் காரணங்களல்ல. இவை தோல்வியைக் கடுகதியிற் கொண்டுவர உதவின. ஆனால், இலக்கிய இயக்கத்திற்குக் குருபீடமாக அமைந்த அரசியல் இயக்கமே யாழ்ப்பாணக் கலாசாரத்தின் தனித்துவத்திற்குள் அமுங்கிவிட்டது. அப்படி அமுக்கும் வலிமை யாழ்ப்பாணக் கலாசாரத்திற்கு உண்டு இதன் காரணமாகத்தான் மத்தியதர வகுப்பைச் சேர்ந்த உயர்சாதி இந்துக்களின் தலைமை பீடமே இடதுசாரி இயக்கத்தை வழிநடத்த வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டது. சாதிக் கட்டுப்பாடுகளின் இறுக்கம் வர்க்க முரண் பாடுகளுக்குத் தவறான விளக்கங் கொடுக்கத் தூண்டியது. சக்கிலியனை ஸ்டாலினை ருஷியப் பெருமக்கள் ஒரு வர்க்கத்தின் பெருந்தலைவனாக ஏற்றுக்கொண்டனர். ஆனால், யாழ்ப் பாணத்துக் கலாசாரம் இதனைக் கற்பனை செய்து பார்க்கக்கூட அனுமதிக்கமாட்டாது! எனவேதான், சிருஷ்டி இலக்கியத்தில் ஓரளவு பயிற்சியுள்ளவர்களும், சாதித்தாழ்வின் சிக்கலுறுத்த, சிருஷ்டி இலக்கியப் பயிற்சி அற்றவர்களைச் சாதி மேண்மை காரணமாக இலக்கிய இயக்கத்தின் தலைமைப் பீடத்திற்கு உயர்த்த வேண்டியிருந்தது.

முரண்பாடு

தலைமைப்பீடம் யாழ்ப்பாணத்து வெளிடே கலாசாரத்தைப் பேணவிழைந்த பொழுது, மற்றவர்கள் அப்போக்கிற்கு இசைவாக எழுதினர். இந்த முரண்பாடு முற்போக்கு இலக்கியகாரரின் எழுத்துக்களில் மிகமிக அம்மணமாகத் தெரிகிறது. இவர்களுடைய சிருஷ்டிகள், தலைமைப்பீடம் இவர்களுக்கு விளக்க முடியாத கோஷங்களை விளங்கிக் கொண்டதான 'பாவலா' வையும், தங்களுடைய சாதியே தொழிலாளி வர்க்கமாக நிலை நாட்டிவிட வேண்டுமென்ற 'ருங்கி'யையுங் கொண்டு போலியாகி விடுகின்றன. மேலும், இலக்கியப் பயிற்சி அதிகமில்லாத இவர்கள் பிராந்தியத்திற் பயிலப்படும் சில சொற்களை மட்டும் பெயர்த்தெடுத்து ஒட்டுவேலை செய்துவிட்டால், தேசிய இலக்கியமும்—மண்வாசனை இலக்கியமுந் தோன்றிவிடுமெனத் திரிகரண சுத்தியாகவே நம்புகிருர்கள். இந்த நம்பிக்கை இவர்களுடைய படைப்புக்கள் போலியானவை என்பதை நிறுவவே உதவுகின்றது.

மீண்டும் வேலி

இலக்கியத்தின் தொனிப் பொருளே ஒரு பிராந்தியத்தின் உயிரைப் பிரதிபலிக்க வல்லது. அந்த உயிர் தனக்கு இசைவான உருவந்தாங்கி இலக்கியமாக உயர்கின்றது. இதைக் கூட உணராத தலைமைப்பீடம், இந்த போலிகளுக்கும் இலக்கிய அந்தஸ்து உண்டு என வாதாடி, தன்னைப் படித்த வர்க்கமாக உயர்த்திக் கொண்டது. மீண்டும் யாழ்ப்பாணக் கலாசாரத்தின் பிரிக்க இயலாத வேலி நுழைந்து கொண்டது சிருஷ்டி இலக்கிய ஆற்றலற்ற தலைவர்களுக்கும், எழுத்துப்பயிற்சியில் ஈடுபட்ட பாமர எழுத்தாளர்களுக்கும் இடையில் எழுந்த வேலி. வர்க்க போதத்தையூட்டி. சாதிகளை ஒழிக்க வந்த இயக்கம் புதிய சாதிகளைத் தோற்றுவித்துத் தோற்றது.

—யாழ்ப்பாணக் கதைகள்.

திருமண உதவி நற்பணி

(ஸ்மார்த்த பிராமணர்களுக்குமட்டும்)

ஜாதக பரிவர்த்தனை, ஜாதகப் பொருத்தம் பார்க்க அணுகுக

டி. ஜி. அனந்தவாமி

ரிஜிஸ்டர்டு டிரேட் மார்க் ஏஜண்ட்

38. ஐந்தாவது டிஸட் குறுக்குத் தெரு,

மந்தைவெளிப்பாக்கம், சென்னை—28:

YOU'RE COOLER WITH A Rallifan

M/s. Rallis India Limited.

UNITED INDIA LIFE BUILDING,
'F' BLOCK, CONNAUGHT PLACE,
NEW DELHI-1.



HOECHST PHARMACEUTICALS LIMITED

Why not consult us for your heat exchange problems?

Our Line of Manufacture Includes

RADIATORS, RADIATOR CORES, OILCOOLERS, INTERCOOLERS, RADIATOR PRESSURE CAPS AND ALLIED ARTICLES

For

All Types of Engines.

Forward your enquiries to :

Universal Radiators Private Ltd.

METTUPALAYAM ROAD, COIMBATORE–11

New from TATA FISON the makers of **Imferon**

Benogen

Tonic Capsules

Comprehensive Multihaematonic— Begins anaemia therapy with immediate freshness

Bottles of 25 & 100 capsules



Rheofin

Double-action Antidiarrhoeal

Intestinal Antiseptic Antispasmodic Capsules —Effectively controls diarrhoea and relieves colicky pain

Bottle of 12 capsules

Imfivit

Freeze Dried Neurotropic

Vitamins B12, B1, B6

Vials to make 5 ml. Solution

TATA FISON INDUSTRIES LIMITED

Pharmaceuticals Division

21 Ravelin Street, Bombay 1

ASP/TF/M-9

தமிழின் முதல் கலைக்களஞ்சியம்

சில விவரக் குறிப்புக்கள்

(இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டு முதல்முதலாக அண்ணா சிறை சென்றபோது அவருக்குத் துணையாகச் சென்ற புத்தகம் அபிதான சிந்தாமணி. "சிறை செல்கிறேன் என்பதறிந்த என் கெழுதகை நண்பர் புலவர் அருணகிரிநாதர், 'அங்கு நிரம்ப நேரம் கிடைக்கும்: பல்வேறு செய்திகளைப் படிக்க அது தூண்டுகோலாக இருக்கும்' என்று கூறி என்னிடம் அபிதான சிந்தாமணி என்னும் புத்தகம் கொடுத்தார். இப்போதும் அபிதான சிந்தாமணியைக் காணும்போதெல்லாம் எனக்கு அந்த நான்கு மாதக் கடுங்காவல் நினைவுக்கு வரும்; நினைவிலே அந்த நிகழ்ச்சி தோன்றியதும் எனக்குள்ளேயே மகிழ்ச்சி'' என்று குறிப்பிட்டுள்ளார் அண்ணா. அந்த நூலைப் பற்றிய சில சுவையான விவரங்களைத் தருகிறது இந்தக் கட்டுரை.)

"புத்தம் புதிய கலைகள், பஞ்சபூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்; மெத்த வளருது மேற்கே,—அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை! சொல்லவும் கூடுவதில்லை,—அவை சொல்லும் திறமை தமிழ்மொழிக்கில்லை!'' என்னும் குரல், இங்கே தமிழ் நாட்டில் ஒருகாலத்தில் ஓங்கி ஒலித்தது. இப்போது அந்தக் குரலின் வேகம் ஒடுங்கி விட்டது. "தமிழால் முடியும்!'' என்னும் எழுச்சிக்குரல், மண்ணகத்துக் கலைகளை எல்லாம் தன்னகத்தே கொண்டதாகத் தமிழ்மொழியை உருவாக்கிப் படைக்கும் திசையில் மக்களைத் தீவிரமாகச் செலுத்தியுள்ளது. இன்னும் நடக்க வேண்டியது மெத்த உண்டு என்றாலும், இதுவரை இத்துறையில் கிடைத்துள்ள வெற்றியை நாம் புறக்கணிக்க முடியாது.

கலைக்களஞ்சியம்

இந்த வெற்றியானது ஒருநாள் இரண்டு நாளில், ஓராண்டு ஈராண்டில், ஒருவர் இருவரால் ஏற்பட்டதன்று; பலரின் பலகால முயற்சிகளின் பெரும்பயனாகவே, இன்று, "அறிவியல்மொழியாக வளர்ந்து செழிக்கும் ஆற்றல் தமிழ்மொழிக்கும் உண்டு'' என்பது மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது. அந்தப் பல முயற்சிகளுள் ஒரு நாயக முயற்சியாக அமைந்திருப்பது தமிழில் கலைக் களஞ்சிய உருவாக்கம்.

பத்துத் தொகுதிகளாக இன்று வெளிவந்து (முதற்பதிப்பு) முற்றுப் பெற்றுள்ள தமிழ்க் கலைக்களஞ்சியம் பலருக்குத் தெரிந்திருக்கிறது. ஆயினும், இந்த முயற்சிக்கே அடி மூலமாக முன்னோடியாக அமைந்த அபிதான சிந்தாமணியைப் பற்றி அத்தனை பேருக்குத் தெரியவில்லை. இன்றைய புதிய கலைக் களஞ்சியம், பல உறுப்பினர் கொண்ட ஓர் ஆசிரியக் குழுவினரால் பலநூறு பேரறிஞர்களின் துணையுடன், சுமார் 8000 பக்கங்களில் விரிவாக வெளிவந்துள்ளது. அபிதான சிந்தாமணி சுமார் 1050 பக்கங்கள் கொண்ட ஒரே புத்தகம்தான். ஆனால், அது ஒரே ஒரு தனிமனிதரின் பல்லாண்டு உழைப்பின் தனிப்பெரும் பயன் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். தமிழுக்குப் புதிய வளம் தேவை என்னும் எண்ணம் இங்கே கால்கொண்ட விடிவு காலத்தின் முதற்பெரும் முயற்சி அது என்பதையும் நாம் உணர வேண்டும்.

அபிதான சிந்தாமணி

அபிதான சிந்தாமணியின் முதல் பதிப்பு, “131 பாரங்களுக்கு மேல் இராயல் எட்டுப்பக்கங்கள் கொண்ட (பெரிய) உருவத்தில் சற்றேறக் குறைய லெட் இல்லாமல் 1050 பக்கங்கள் கொண்ட ‘ஸ்மால் பைகா’வில் முடிந்து,” 1910ல் வெளிவந்தது. இதன் உருவாக்கம் பற்றி, இதன் ஆசிரியரான ஆ. சிங்காரவேலு அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்: “இந்த நூலைச் சற்றேறக் குறைய 1890ஆம் வருஷத்திற்கு முன்பு தொடங்கினேன். இது, எனது அரிய நண்பரும் சென்னை பச்சையப்ப முதலியார் ஹைஸ்கூல் எட்மாஸ்டருமாகிய மகா-ா-ா-ஸ்ரீ சி. கோபாலராயர் அவர்கள் பி.ஏ., எரமண்டரம் வேங்கடராமையரவர்கள் செய்த ‘புராணநாம சந்திரிகை போல் தமிழில் ஒன்று இயற்றின் நலமாம்’ என்று அந்தப் புத்தகமும் ஒன்று கொடுத்துதவ, அதை முதல் நூலாகக் கொண்டு புராண நாமாவலி என்று பெயர் புனைந்து எழுதத் தொடங்கினது. அந்நூல் எனக்குக் காட்சி மாத்திரையாயிற்றேயன்றிச் சாலப் போதாது. ஆதலின் அது நிரம்பிய நூலன்று எனத் தேறிப் பன்னூல் ஆராயத் தொடங்கினேன்...” இவ்வாறு அவர் தொடங்கிய பணி, இலக்கியம் புராணம் என்பவற்றின் எல்லையைக் கடந்து, விரிந்து பரந்து, அக்காலத்தில் அறியப்பட்டிருந்த பெரும்பாலான துறைகளை அளாவிப் படர்ந்தது; அபிதான சிந்தாமணி என்னும் பெயரையும் பெற்றது.

“தமிழ் நூல்களின் கண்ணே வழங்கிவரும் சிறப்புப் பெயர்களைக் குறித்தும் பழக்க வழக்கங்களைக் குறித்தும் எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சாதனமொன்றுமில்லை. திவாகரம், பிங்கலந்தை முதலிய நூல்கள் சொல்லுக்குப் பொருள் கூறுவன

வேயன்றிச் சிறப்புப் பெயர்களைக் குறிக்கவுமாட்டா; விவரிக்கவு மாட்டா. அக்குறையை நீங்க எழுந்தது அபிமான சிந்தாமணி என்னும் இந்நூல்...” இப்படி. இந்நூலின் இரண்டாம் பதிப்பு முன்னுரையில் சொல்லப்பட்டுள்ளது. ஆயினும், இதன் பயன் பாடு தமிழ்நூல் பயிர்வார்க்கு ஒரு கையேடு என்ற அளவோடு முடிந்துவிடாமல், கலைக்களஞ்சியம் என்னும் எல்லைக்குள்ளும் விரிவடைகிறது.

நூலின் உள்ளடக்கம்

அகத்திய முனிவரின் வரலாற்றோடு தொடங்கும் இந்நூல், அகப்பேய்ச்சித்தர், அணிகலன்கள், அப்பாஜி, அவிநயம், கற்பூரம் கலங்கரைவிளக்கம், கொக்கோகம், கொட்டாவி, சோழ நாடு, தமிழ் நாடு, துளசிதாசர். தூக்கணங்குருவி, நையாண்டிப் புலவன், பண், பாயிரம், மொழி, வஞ்ச இந்திரன், வெற்றி முதலான பல பொருள்களையும் பெரியோர்களையும் பற்றிய செய்திகளைத் தந்து, 939ம் பக்கத்தோடு முடிகிறது. 941 முதல் 972 வரை சிவசேத்திர மான்மியம், விஷ்ணுஸ்தல மான்மிய சங்கிரகம் முதலான செய்திகள் உள்ளன இதன்பின் (973 முதல் 1048 வரை) அனுபந்தம் என்னும் பிற்சேர்க்கை வருகிறது. இதன் முதற்பகுதியில், நூலில் விடுபட்ட (அகண்டானந்தர் முதல் க்ஷேமியன் வரை) சொற்கள் தரப்பட்டுள்ளன. அடுத்துள்ள பொது என்னும் பெருந்தலைப்பில் (1006—1031) அரச பரம்பரைகள், ஆழ்வார்—நாயன்மார் பற்றிய செய்திகள், மடங்களின் வரலாறுகள் உள்ளன. 1031 முதல் 1047ம் பக்கம் வரை, தென்னிந்தியக் கல்வெட்டு செப்பேடுகளில் உள்ளபடி அரச வரலாறுகள் தரப்பட்டுள்ளன.

இதிலுள்ள சில செய்திகளைக் கவனித்தால், ஆசிரியர் எவ்வளவு முயற்சியின் பேரில் இதனை ஒரு முழுமைக் கையேடாக்க விழைந்தார் என்பது புலப்படுகிறது: நிலம் என்னும் சொல்லுக்குத் தமிழ் இலக்கண இலக்கியங்களில் உள்ள அய்வகைப் பாகுபாட்டின்படி (குறிஞ்சி, முல்லை, மருதம் நெய்தல், பாலைஎன) விளக்கம் தந்தபின், “இந்நிலம் வன்பால், மென்பால், இடைப்பால் என மூன்று வகைப்படும்; அவற்றுள் வன்பாலாவது குழியின் மண் மிகுவது, மென்பாலாவது மண் குறைவது, இடைப்பாலாவது ஒப்பது” என்னும் குறிப்பும் சேர்க்கப்பட்டுள்ளது பரதம் என்பது அய்ந்து வகை. அவை. சமநிலை, உற்கடிதம், சஞ்சாரம், காஞ்சிதம், குஞ்சிதம் என்பன. மொழி மூன்று. அவை: மெய்கூறல், புகழ்கூறல், பழிகூறல் என்பன! பூதமதம் என்பது பூதர்கள் கொண்டாடும் மதம்.

இவர்கள் பாஷை ஹீப்ரு. இவர்கள் தேவன் ஒருவன் உளன் என்றும், மோசே சிரேஷ்டகுரு என்றும், இறந்தவர் மீண்டும் உயிர்த்தெழுவர் என்றும், பாவமன்னிப்பு உண்டு என்றும் கூறுவர். இவர்கள் தற்காலம் (20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில்) பலவீனம் பெற்றிருக்கிறார்கள்!! வஞ்ச இந்திரன் என்பவன் மகதநாட்டரசன் தேவியாகிய அகலிகையுடன் கள்ளப் புணர்ச்சி செய்து அரசனால் அகலிகையுடன் நாட்டைவிட்டு அகற்றப் பட்டவன். (நாம் கேட்டுவந்துள்ள பல அகலிகை கதைகளுக்கு இந்த நிகழ்ச்சியே ஆதாரமாக இருந்திருக்கும் போல் தோன்றுகிறது.)

"கோட்டான் கண்களை அசைக்காது; தலையைப் பல பக்கங்களிலும் திருப்பிக் காணும் பச்சோந்தி பலவிதமான வர்ணங்களை அடையும். முயலுக்குக் கண்ணிமைகள் கிடையா. தவளை வாய் திறந்திருக்கையில் சுவாசம் விடாது. ஆமைக்குப் பற்கள் கிடையா. குதிரைக்குக் கண்களில் கண் 'பாவை' இல்லை". இவை போன்ற சுவையான செய்திகள் அங்கங்கே உள்ளன.

"சுவதேச ஆசார விவகாரம்" என்னும் தலைப்பில் உள்ள 'தேசாசரங்கள்' என்னும் பகுதியும் பல அரிய செய்திகளைத் தருகிறது: "நாகபூர் முதலிய இடங்களில், ஆசிர்வதிப்போர் பாகை, அங்கி முதலியன தரித்தே ஆசிர்வதிப்பர் காசியில் இடையர் வீட்டில் பிராமணர் தீர்த்தம் உண்பர். ஜகந்நாதத்தில் எச்சில் தோஷமில்லை...நாட்டுக் கோட்டைச் செட்டிகள் தங்கள் வயதினும் மிக்கவரை மணந்துகொள்வார்கள். சீன தேசத்தவர் கிறிஸ்துவர்களைப் போலவும் மகம்மதியரைப் போலவும் முழங் காலிட்டுத் தேவனை வணங்குவர்; தலைமயிர்ப் பின்னலிடுவர்... ஜப்பானியர் தங்கள் 'சிகைகளைக் கயிற்றால் அழுந்தக் கட்டுவர்... ஆப்பிரிக்காவில் சில இடங்களிலுள்ளார் மரவுரி, மரங்களின் இலைகளை ஆடைகளாக்கிக் கொள்வர். ஆஸ்திரியாவின் சில பாகத்திலுள்ளார் புருஷர்களுக்கு யௌவந பருவம் வருகையில் முன் பல்லினைப் பிடுங்கிவிடுவர்..!"

எங்கெந்தப் பொருள்கள் பற்றி எழுதுகிறாரோ, அவற்றை அவை சார்ந்த துறையின் அடிப்படையில் எழுதுவது அபிதான சிந்தாமணி ஆசிரியரின் தனிச்சிறப்பு: அச்வலட்சணம் என்னும் பகுதி, குதிரையைப் பற்றிய பொதுவான செய்திகளையும் புராணச் செய்திகளையும் கூறுவதோடு, குதிரையின் வகைகளான பாடலம், கோடகம், இவுளி, வன்னி, குதிரை, பரி, கந்துகம், புரவி முதலியனவற்றையும் அவற்றின் தனித்தனி இயல்புகளையும் தருகிறது. இச்சொற்கள் அனைத்தும் குதிரைக்கு அமைந்த பல்வேறு ஒருபொருட் பன்மொழிகள் (Synonyms),—அதாவது குதிரை என்னும் பொருளையே உணர்த்துவன என்று கருதி வரும் நமக்கு, இங்கே புதிய விளக்கம் கிடைக்கிறது.

மதங்கள் என்னும் தலைப்பில் முப்பத்தாறு வெவ்வேறு மதங்கள் குறிக்கப்படுகின்றன. ஒவ்வொரு மதத்தின் முக்கியமான கொள்கைகள், அதைப் பின்பற்றும் மக்கள்; அவர்கள் வாழும் இடங்கள், அவர்களின் பழக்கவழக்கங்கள் முதலான பிற செய்திகளையும் ஒவ்வொரு பகுதியும் விரிவாகத் தருகிறது. (யூதமதம் பற்றி முன்பே குறிப்பிட்டோம்.) "கனடா மதத்தினர் ஆதியில் சூரியனை ஆராதித்துக் கொண்டிருந்தனர். பிறகு இவர்களிற் சிலர் நான்கு தேவர்களை ஆராதித்திருந்தனர். அதாவது மாதா, பிதா, புத்திரன், சூரியன் இவர்கள் நால்வரும் ஒரே தேவனென்று நினைத்திருந்தனர். ஒல்கான்ஸ் ஒகி என்பவன் படைப்புக் கடவுள். இவர்களில் பெண்கள் சூரியனை மாத்திரம் தியானிப்பர். யுத்த விரர்கள் சாயங்காலத்தில் நடனமாடித் தேவப்பிரீதி செய்வார்கள்..."

புலவர்களைப் பற்றிச் சொல்லும்போது, அவர்கள் பாடியவற்றுள் சுவையான ஒன்றிரண்டு பாடல்களை இவர் சேர்க்காமல் விடுவதில்லை. நையாண்டிப் புலவனைப் பற்றிய செய்தி பின்வருமாறு அமைந்துள்ளது: "இராமச்சந்திரக் கவிராயன் காலத்தவன். தொண்டை நாட்டவன். பள்ளிகொண்டான் என்னும் பரதவன் மீது,

"வள்ளிகொண் டான்மயில் ஏறிக்கொண்டான்,—
மதி போலும்மலை
வெள்ளிகொண் டான்விடை ஏறிக்கொண்டான்,—
விண்ணவர்க்குஅமுதம்
துள்ளிக்கொண் டான்புள்ளில் ஏற்றிக்கொண்டான்,—
சுபசோபனஞ்சேர்
பள்ளிகொண் டான்புகழ் ஏறிக்கொண்டான்என்று
பார்கவென்றே!'

என்று பாமாலை பாடிப் பரிசு பெற்றவன். "புலவனைப் பற்றிய செய்தி, அவனுடைய கவிதைப் படைப்பின் தொடர்பு பட்டால் தானே முழுமை அடைகிறது?.

இதன் பெருமை

ஒருவகையில், பழங்கால—இடைக்காலத் தமிழ் இலக்கியச் சிறப்புப் பெயர்களுக்கு விளக்கம் தருவதாக அமைந்திருந்

தாலும்,—அபிதான சிந்தாமணி,—நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல், வேறு பல துறைகளையும் அளாவியதாகவே வளர்ந்துள்ளது. இடைக்காலத்திய (வடமொழிச் சார்புடைய) தமிழ் இலக்கியங்களையும் மொழிபெயர்ப்பு மற்றும் தழுவல் நூல்களையும் படிப்போர், ஆய்வோர்களுக்கு இதிலுள்ள விவரங்கள் மிக மிகத் தேவை என்பது மிகையே ஆகாது. அல்லாமலும், "புராணநாம சந்திரிகை"யை அடியொற்றித் தொடங்கிய இச் சிந்தாமணி, பலதுறைச் செய்திகளையும் தொகுத்துத் தந்ததன் மூலம், கலைக்களஞ்சியம் தேவை என்னும் எண்ணத்துக்கு மூலக் கல் நட்ட பெருமையையும் பெறுகிறது.

இதுபோன்ற செய்தி விவர நூலாகிய கையேடு எளிய நடையில் அமைதல் வேண்டும். ஆசிரியரின் முன்னுரையைப் படிக்கும் போது, "நீண்ட தொடர்வாக்கியங்களை எழுதும் இவர் அமைத்த சிந்தாமணி எப்படி இருக்கப் போகிறதோ?" என்று அய்யுறுகிறோம். நூலின் உள்ளே சென்றதும், இந்த அய்யம், இருந்த இடம் தெரியாமல், மறைந்தே போகிறது. அவ்வளவு எளிய, இனிய, தெளிந்த சின்னஞ்சிறு வாக்கிய நடையே நூலை நடத்திச் செல்லுகிறது!

அபிதான சிந்தாமணி உருவாகி வந்த காலத்திலேயே, இதனோடு ஒருவாறு ஒப்புமை உடைய வேறு இரண்டு நூல்கள் வெளிவந்தன. அவற்றுள் ஒன்று, யாழ்ப்பாணத்து ஆ. முத்துத் தம்பிப்பிள்ளை அவர்கள் தொகுத்து (1902ல்) வெளியிட்ட அபிதான கோசம்; மற்றது, ஈக்காடு இரத்தினவேலு முதலியார் அவர்கள் தொகுத்து (1908ல்) வெளியிட்ட சிறப்புப் பெயர் அகராதி. இவை இரண்டுமே, அபிதான சிந்தாமணியைவிட அளவில் சிறியன; அவை பெரும்பாலும் இலக்கிய, புராணச் செய்திகளுக்கு அப்பால் உள்ள துறைகளைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. எனவே (1910ல் வெளிவந்த) அபிதான சிந்தாமணியே, தமிழின் முதல் கலைக்களஞ்சியமாகவும் அத்துறை ஓர்மையைத் தமிழரிடையே தோற்றுவித்த சிறப்புக்கு உரியதாகவும் விளங்குகிறது.

Cadbury-Fry

They saved the ancient banyan tree and now their daring knows no bounds



'Let it stand,' someone said of the banyan tree as the site was being cleared for the Hindustan Lever Research Centre, at Andheri.

So the tree still stands—and it stands for quite a lot. For one thing, the tree signifies that we can't easily get away from what is home-grown. Appropriately, therefore, the Centre will tackle problems rooted in India—the kind that can only be solved here:

Can we discover and exploit hitherto unused *local* sources of oil, thus cutting imports and saving foreign exchange? Can we develop milk foods that are ideally suited to *Indian* needs? How can we improve the nutritive value of protein-poor foods? Can we develop processes for the preservation of Indian type food dishes?

Research on all this can only begin at home. It has, at the Hindustan Lever Research Centre in Andheri. The sweep and thrust of the studies are daring. The scientists are producing new devices for old, making traditional things happen in new ways.

They have, of course, left the banyan tree alone to grow by itself.

Hindustan Lever

ntas-HLL. PR. 9A-537

MODI ENTERPRISES

MODINAGAR (U. P.)

A Record of Industrial Development

MODI INDUSTRIES LTD.

MODI SUGAR MILLS for Crystal Sugar.

MODI VANASPATI MFG. CO. for Kotogem, Boat, Vegetable & Aeroplane and other Brands of Vanaspati.

MODI GAS & CHEMICALS for Oxygen & Acetylene Gases, Glycerine and Stearic Acid.

MODI DISTILLERY (Distillery & Carbon-Di-Oxide Gas Plants) for Rectified Spirit, Denatured Spirit, Fusel Oil, Carbon-D.-Oxide Gas, Absolute Alcohol and Industrial Alcohol.

MODI SOAP WORKS for House hold & Laundry Soaps-Modi Special, Modi No. 1, 3, Cakes and Chips.

MODI PAINT & VARNISH WORKS for High Class Paints, Enamels, Varnishes and Distempers such as 'Surajmukhi' White Stiff Paint, 'Modilac' Synthetic Enamels, 'Modicem - Cement Paint, Stoving Enamels, Modilite Synthetic Enamels, Various Industrial Finishes, Acrylic emulsion Paints, Aarp Chemical Resistant and Epi-plex cold cure Enamels.

MODI LANTERN WORKS for Superior Quality Sun Brand Lanterns.

MODI TORCH WORKS for Chromium plated Sun Brand Brass Torches.

MODI ARC ELECTRODES CO for Welding Rods.

MODI STEELS for Alloy Steel, Rods & Wire.

MODI SPG & WVG MILLS CO. LTD.

MODI CLOTH MILLS for Dyed Poplins : "Sunbeam", "Madhukunj" Cleopatra Deep", Bleached poplins : "Snowhite" Poplin Prints "Rosanna" "Checklin" "Jackpot" "Screen Printed Poplins" "Swiss Beauty" "Anuradha", "Castle Queen", "Sea Queen", "Superfine Poplins", "Rupali", "Twinkle Star", Power-loom Voil" "Silver Beauty", "Pallu border Saree", "Rangawali", "Dyed Mercerised Voil", "Sheetings, Coatings : TwoXtwo and Sanf. Wash and Wear.
Terene Suitings : "1408", "Rajdoot", and "Meghdoot", Terene Shirtings "1184" dyed Print and "1274".

MODI RAYON & SILK MILLS for Modi 100% Terene Suiting, Modi Apollo Terene Suiting, Tereloba 80X20 Shirtings : "Papa Miland", "Commander", "Alert", Modi pure Chiffon La Parisian 28, Sarees-plain & prints, Nylon Georgette Saree : "Modi Juliet" etc.

MODI YARN MILLS 'A', 'B', 'C', & 'D', for Cotton yarn from 6s to 100s carded and combed, single and double on Hanks & Cones. Fine & Super Fine Cotton & Terylene & all kinds of Synthetic Yarn.

MODI HOSIERY WORKS for Goldfinger 007 Knitted Saree, Modi Kota Saree, Knitted Triplon Shirtings.

MODI SYNTHETIC FIBRE CORPN., JAGADHRI for Industrial Alcohol etc etc.

MODI COTTON PROCESSING CO., ABOHAR for Cotton Ginning & Pressing etc. etc.

MODIPON LTD., MODINAGAR - Manufacturers of best Nylon Yarn.

PATIALA FLOUR MILLS CO., (PVT.) LTD., PATIALA for Lion Brand Madia, Krishan Bhog Atta, Sooji, Rawa & Bran etc. etc.

MODI FLOUR MILLS OKHLA, NEW DELHI for Mandir Brand Atta, Sher Brand Maida, Sooji & Bran etc. etc.

SUTLEJ FLOUR MILLS. FEROZEPORE CITY for Three Keys Atta, Maida Rawa, Bran, Rice, & Oil.

ASSOCIATED TUBE WELLS (INDIA) PRIVATE LTD. for Mechanical & Electrical Railway Signalling equipment.

Chairman: **RAI BAHADUR SETH GUJAR MAL MODI**

Vice Chairman :
SETH K. N. MODI

Deputy Chairman :
SETH M L. MODI

பேச்சாளர் உலகம்

மா. சு. சம்பந்தன்

(சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிலும், மாநக ராட்சியிலும் மற்றும் பல பொது நிறுவனங்களிலும் உறுப்பினராக இருந்து நற்பணிகள் ஆற்றியுள்ள திரு. சம்பந்தன் அவர்கள் சிறந்த எழுத்தாளரும் பேச்சாளரும் ஆவார். தி. மு. க. உறுப்பினரும் சில இதழ்களின் ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளவரு மான இவர் இயற்றியுள்ள சிறந்த பேச்சாளர்கள், சென்னைமாநகர், திருச்சி விசுவநாதம், அச்சுக்கலை என் னும் நூல்கள் தற்காலத் தமிழுக்கு அணிகலன்களா கும். சிறந்த பேச்சாளர்கள், அச்சுக்கலை என்னும் இரண்டும், தமிழிலே, இத்துறைகளில் வெளிவந்த முதல் படைப்புக்கள். அடுத்து, "தமிழ்ப் பத்திரி கைகள்" என்னும் இவருடைய ஆய்வு நூல் வெளி வர இருக்கிறது.)

"ஒழுங்குபட்ட நன்மேடையை முதலிற் கண்டது கிரீஸ். அங் கிருந்து நன்மேடை ரோம், பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய இடங்களை நண்ணியது" என்று தமிழ்ப் பெரியோர் திரு. வி. க. சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறியுள்ளார்.

மேடைப் பேச்சைச் செப்பனிட்டுப் பல வழிகளிலும் பண் படுத்தி வளர்த்த நாடு இங்கிலாந்து. இங்கிலீஷ் பாராளுமன்றம், மேடைக் கலைக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. இங்கிலாந்தின் பாராளுமன்றத்தை உலகிலுள்ள பல நாடுகள், தங்களுக்கு வழிகாட்டியாகவும் முன்மாதிரியாகவும் கொண் டுள்ளன.

முன்னோர்கள்

சமயப் பரப்புதலுக்காகவே தொடக்கத்தில் பேச்சு மிகுதியும் பயன்பட்டது: பின்னரே அரசியலுக்கும் பிறவற்றிற்கும் தக்க தோர் அரிய சாதனமாக அது கையாளப்பட்டது; கையாளப் படுகிறது.

இந்தியாவில் புத்தர், தமது அரச வாழ்வை உதறித்தள்ளி, எளிய வாழ்க்கையை ஏற்று, நாடெங்கும் அலைந்து, பலநாள் சிந்தனைக்குப் பின் உலகிற்கு நல்லறத்தைப் போதித்தார். அவர் பேச்சு ஏழை எளியவர்களையும் பாமரர்களையும் அறிவாளிகளையும் கவர்ந்து தன் பக்கம் ஈர்க்கக் கூடியதாக இருந்தது. அவரது மொழி நடை, அக்காலத்திய அடித்தட்டில் உள்ளவர்களும் புரிந்துகொண்டு பின்பற்றக் கூடியதாக மிக எளிமையானதாக இருந்தது.

இயேசுகிறிஸ்துவின் மலைப்பொழிவு உண்மை, எளிமைப் பேச்சுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. இஸ்லாமிய மறையான திருக்குரானிலும் கருத்தைக் கவரும் அடுக்குத் தொடர்கள், அணிநயம்படக் காணப்படுகின்றன. உலகப் பொதுமறையாகக் கொள்ளப்படும் திருக்குறளிலும் பேச்சு வன்மையைக் குறிப்பிடும் பல அருமையான குறட்பாக்கள் உள்ளன.

பழங்காலப் பேச்சுக்கள் அனைத்தும், உரைநடையோடு பாடல்களும் இணைய, பண்ணோடு இசைத்துப் பாடப்பட்டு வந்தன. இம்முறையை யாழ்ப்பாண ஆறுமுக நாவலர் பெரிதும் கையாண்டு சைவ சமய மறுமலர்ச்சியை ஈழத்திலும் தமிழகத்திலும் உண்டுபண்ணினார். இவரைப் பின்பற்றி, திருப்பாப்புலியூர் ஞானியாரடிகள் தமது இனிய சொற்பொழிவால் சைவ சமய வாதிகளையும் அல்லாதவரையும் ஒருங்கே கவர்ந்தார்.

உரைநடைப் பாடல்கள் போன்று இராகமோடு பேசப்பட்ட பேச்சைத் தழுவி, காஜா மொய்னுதீன் சிஸ்தி எனும் இஸ்லாமியப் பெரியார், பாடலும் உரைநடையும் இசையோடு கலந்துவரும் 'கவால்' முறையை உண்டாக்கி வெற்றியடைந்தார். அதனைத் தற்போது வடநாட்டில் யாவரும் பின்பற்றி வருகின்றனர்.

செம்மை செய்தவர்கள்

மேடைப் பேச்சுக்கலையைச் செம்மை செய்த நாடுகளில் கிரீஸ் முதன்மை வகிக்கிறது. இங்குத் தோன்றிய சாக்ரிட்டீஸ், கிரேக்க நாட்டில் தாம் சந்தித்தவர்களையெல்லாம் கேள்விமேல் கேள்வி கேட்டு வாதிட்டு, நுண்மைப் பொருளின் உண்மையை விளக்குவதில் வல்லவராகத் திகழ்ந்தார். அவர் குள்ள உருவினராகவும், அழகற்ற தோற்றமுடையவராகவும், கவர்ச்சியற்றவராகவும்

இருந்தும்கூட, அவரது வாதிடும் பேச்சு வன்மையைக் கண்டு எண்ணற்ற இளைஞர் கூட்டம் திரண்டது; அறிவாளிகளும் அவரது சொல்லாற்றலை வியந்து போற்றினர்.

டெமஸ்தனீஸ் என்பவர் குளறுவாயராகப் பிறந்தும், விடா முயற்சியால் தமது பேச்சாற்றலைப் பெருக்கிக்கொண்டு பெரும் நாவலராக விளங்கினார். அவர் சொல்லில் வீரராக இருந்தது போல் வாள்பிடிப்பதில் வீரமுடையவராக விளங்காததால் அவரைக் கோழை எனப் பிறர் எள்ளி நகையாடினர்: He was hero in word but a coward in sword எனும் ஆங்கில வழக்கொன் றுள்ளது.

ஜூலியஸ் சீசரின் நண்பனான மார்க்ஸ் ஆண்டோனி என்பவன், காசியஸ், புருட்டஸ் என்பவர்களின் சதியால் சீசர் கொலையுண் டதை அறிந்து வெகுண்டான். தனது நாவன்மையால், சீசரின் பிணத்தைக் காட்டிப் புகழ்ந்தே, குழுமியிருந்த மக்களைத் தன் பால் ஈர்த்துக் கிளர்ச்சியுறச் செய்து, பகைவர்களை இருக்கும் இடம் தெரியாது அழிந்தோடச் செய்தான். இப்பொழுதும், கிளர்ச்சியூட்டும் உணர்ச்சிமிக்க பேச்சாற்றலை 'ஆண்டோனிப் பெரும்பேச்சு' என்றே சொல்வர்.

இடைக்காலம்

பாராளுமன்றத்தின் தாய் அவையாக மிளிரும் இங்கிலாந்து, பல நல்ல பேச்சாளர்களை உருவாக்கி உலகிற்கு அளித்துள்ளது. அவர்கள் தமது அறிவாலும் ஆற்றலாலும் நாவன்மையாலும் அதனை நன்கு வளர்த்துள்ளனர். அவர்களில் பெரும்பாலோர் தமது பேச்சை முன்கூட்டியே எழுதிப்படித்துத் தயாரித்துப் பேசுவர். இவர்களில் கிளாட்ஸ்டன், மெக்காலே, பர்க், கானிஸ், டிஸ்ரேலி போன்றவர்கள் புகழ்பெற்ற பேச்சாளராக விளங்கினர்.

சார்லஸ் பிராட்லா எனும் நாத்திகர் இங்கிலாந்தின் தலைசிறந்த பேச்சாளராகப் புகழ் பெற்றவர். அவர் பாராளுமன்றத்தில் தம் மனச்சான்று வழிப்படிதான் 'உறுதிமொழி' எடுக்க முடியும் என்று வாதிட்டுக் கிளர்ச்சி செய்து வெற்றி பெற்றவர். இவர் மறைபிசகாத பெரும் பேச்சாளராக இருந்தார். பெர்னாட்ஷா வும், இணையற்ற பெண் நாவலரான அன்னிபெசன்ட் அம்மை யும் இவரது சீடர்களாக இருந்தவர்களே.

பிரெஞ்சு நாட்டின் தலைவனாகத் திகழ்ந்த நெப்போலியன் சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பேசுவதில் வல்லவன்; அவன் மிகுந்த நினைவுத்திறன் மிக்கவன்; எல்பா எனும் தீவில் தன்னைக் கைது செய்ய வந்த பிரிட்டிஷ் வீரர்களைத் தனது சொல்லாற்றலால் கவர்ந்து, 'உங்களது சக்ரவர்த்தியை கொல்பவன் யார்?'' எனக்கேட்டு, பிரிட்டிஷாரது அரசப் பற்றினைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, தப்பித்துக் கொண்டான்!

அமெரிக்காவில் ஆபிரகாம் லிங்கன், ஜெபர்சன், உட்ரோ வில்சன், இங்கர்சால், ரூஸ்வெல்ட், கென்னடி, லூதர்கிங் போன்றவர்கள் சிறந்த பேச்சாளராக விளங்கியவர்கள். லிங்கன் விடாமுயற்சியாலும் பேச்சாற்றலாலும், நேர்மையாலும் அமெரிக்காவின் தலைவரானவர். இவரது 'கெட்டிஸ்பர்க் நகரப் பேச்சு' வரலாற்றில் இடம்பெற்ற புகழ்மிக்க பேச்சாக மிளிர்கிறது. இங்கர்சால் நாத்திகராக இருந்தும் தமது பேச்சாற்றலால், ஒழுக்கத்தால் எதிரியும் குறைசொல்ல இயலாத குணக்குன்றாக விளங்கியவர். இவரது பேச்சு இளைஞர்களைக் கவரக் கூடியது; அறிவாளிகளை ஈர்க்கக் கூடியது; சொல்லாற்றலுக்கும் தெளிவிற்கும், பேசிப் பழகுவதற்கும் நல்லதோர் எடுத்துக்காட்டாக இருக்கின்றது. உலகின் தலைசிறந்த பேச்சாளர்களின் பட்டியல் இங்கர்சாலின் பெயர் இடம்பெறாமல் நிறைவுபெறாது.

ஜெர்மனியில், மக்களுக்கு உணர்ச்சியை ஊட்டி, அவர்களைத் 'தந்தையர்நாட்டு'ப் பற்று மிக்கவர்களாகச் செய்து, ஜெர்மன் வெறி தலைக்கேறச் செய்தவன் அடால்ப் இட்லர். இவன் தனது பேச்சாற்றலால் ஜெர்மானியரே உலகினை அடக்கியாளக் கூடியவர் என்ற போதையை உண்டாக்கித் தலைவனாக—சர்வாதிகாரியாக உயர்ந்தவன். இவனுக்கு வலக்கரமாக இருந்த கொயபல்சும் மிகப்பெரிய வாய்ச்சாலகன். 'பொய்யைத் திருப்பித் திருப்பிச் சொன்னால், அது மக்களிடத்தில் நாளாவட்டத்தில் உண்மையாகிவிடும்' என்று திட்டமிட்டுச் சொல்லி அவர்களை நம்ப வைத்தவன்,—போர் உணர்ச்சியை உசுப்பிவிடுவதன் மூலம், மக்களை நல்ல பாதையின் பக்கம் திரும்பிப் பாராவண்ணம் செய்துவிட முடியும்' என்று வற்புறுத்தியவன் இவன்!

இத்தாலிய நாட்டில் கரிபால்டியும் மாஜினியும் சிறந்த பேச்சாளராக இருந்து மக்களை விழிப்புறச் செய்து அந்நாடு விடுதலை பெறச் செய்தவர்கள். இத்தாலியரைப் பிற்காலத்தில் கவர்ந்து தலைவனான முசோலினியும் வன்மை மிக்க பேச்சாளனாவான்.

இந்தியப் பேச்சாளர்கள்

சமுதாய, சமய மறுமலர்ச்சியின் ஊடே அரசியல் கிளர்ச்சியைத் துவக்கியது காங்கிரஸ். இதில் பல தலைசிறந்த பேச்சாளர்கள் இடம்பெற்று, தமது நாவன்மையால் மக்களைக் கவர்ந்து அவர்களை விழிப்புறச் செய்தனர். அத்தகையவர்களில், சுரேந்திர நாத் பானர்ஜி 'ஓராயிரம் மேடைவீரர்' எனப் புகழ்பெற்ற பேச்சாளர். கடல்மடை திறந்தது போல் எண்ணியதை எண்ணியாங்குப் பேசுபவர். கிளர்ச்சியூட்டும் பேச்சில் வெற்றி பெற்றது போல், இவர் வாதப் போரில் அவ்வளவாகப் புகழ்ப்பெறவில்லை. பாலகங்காதர திலகர், விபின்சந்திரபாலர், போன்றவர் தீவிரமிக்க பேச்சாளர்கள். சி. ஆர். தாஸ், புலாபாய் தேசாய், மோதிலால் நேரு, எஸ். சீனிவாச ஐயங்கார், எஸ். சத்தியமூர்த்தி போன்றவர் சட்டசபையில் வீரமுழக்கம் செய்த 'சுயராஜ்ய' பேச்சாளராக விளங்கியவர்கள். ஜவகர்லால் நேரு, சுபாஸ் சந்திர போஸ் போன்றவர் உணர்ச்சியூட்டும் துடிதுடிப்பு மிக்க பேச்சாளர்கள். ஆவேசம், கிளர்ச்சியூட்டுதல், சொன்மாரி பெய்தல் முதலிய உத்திகளை அதிமாகக் கையாளாது, நிதானமும் எளிமையும் அணிகலன்களாகக் கொண்டு மக்களைச் கவர்ந்தவர் காந்தியடிகள். மகமதலி ஜின்னு ஆங்கிலத்தில் சட்ட நுணுக்கத்தோடு உணர்ச்சியூட்டி மக்களைக் கிளர்ச்சி பெறும்படிச் செய்த பேச்சாளர். மறந்தும் கூட சட்ட விரோதமான சொற்கள் அவரது பேச்சில் வெளிவரா. சிறை செல்லாமலும், போராட்டங்கள் புரியாமலும் தமது வாதத் திறமை மிக்க பேச்சாலேயே முஸ்லிம் மக்களை ஒரே கொடியின் கீழ் திரளச்செய்து வெகுஜனக் கொந்தளிப்பையும் பிரமிப்பையும் உண்டாக்கி, தாம் வலியுறுத்தியபடி இந்தியத் துணைக் கண்டத்தை இருகூராகப் பிரிக்கச் செய்து, பாகிஸ்தானை உலகப் படத்தில் புதியதாகப் படைத்துவிட்டு சென்றுள்ளார்.

தமிழ்நாட்டில் காங்கிரசை வேரூன்றச் செய்த பெருமக்களில் வ. உ. சிதம்பரனர், திரு. வி. க., வரதராஜுலு நாயுடு, ஈ. வெ. ராமசாமி முதலியோர் குறிப்பிட்டுச் சொல்லதக்கவராவர். வ. உ. சி. தீவிரவாதி; மக்களைத் தேசிய ஆர்வம் கொள்ளும்படி செய்வதில் முன்னேடியாக நின்றவர். தமிழாசிரியராக இருந்து, விடுதலையார்வம் மிகுந்து பத்திரிகையாளராக மாறி, தமிழகத்தைத் தமது நாவன்மையாலும், எழுத்தாற்றலாலும் தட்டி எழுப்பியவர் திரு வி.க. அவரது அரசியல் நுழைவிற்குப் பின்னர்தான் தமிழ்நாட்டுக் காங்கிரசில் தமிழ்மணம் மிகுதியாகக் கமழ்ந்தது. வரதராஜுலு நாயுடு மிகவும் எச்சரிக்கையோடு எழுச்சியூட்டும் பேச்சாளராக விளங்கியவர். கற்றது கையளவாக இருந்தும் தம்முடைய கொச்சைமொழியால், நீண்டகால அனுபவத்தால், தமிழ்மக்களைத் தட்டியெழுப்பி, மூடத்தனங்களைச் சலிக்காமல் சாடி, தன்மானத்தை நாடெங்கும் பரப்பிவருபவர் ஈ.வெ.ரா.

ஆவர். அவரிடம் தனியான ஒரு துணிச்சல், கிழவராகியும் காணப்படுகிறது. அதனால் அவர் யாரையும் எதனையும் பாராது துடுக்காகவும் துணிச்சலாகவும் பேசி வருகிறார். ஆண்டுபல ஆகினும் அவர் பேச்சில் முடுக்குத் தளராதது வியப்பாக உள்ளது.

இவரைப் பின்பற்றியவர் அறிஞர் அண்ணா. இவர், எடுத்துக் கொண்ட தலைப்புக்கு ஏற்புடைய வாதங்களை அடுக்கடுக்காக எழுப்பி, அவைகளை இலகுவாகவும் பொதுமக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் நடையிலும் வைத்து, அவர்களின் உள்ளங்களைக் கொள்ளைகொண்டு பேசுவதில் ஈடு இணையற்றவர். தொடக்கத்தில் இவரிடம் அடுக்குத்தொடர்களும் எதுகை மோனைகளும் அடுக்காக எழும்பிவந்தன. ஆனால் நாளாவட்டத்தில் அவைகள் குறைந்து எளிமையும் இனிமையும் மிக்க சொல்லோவியங்களும் விளக்கவுரைகளும் வெளியாயின. அவரது நளினமான பேச்சைக் கேட்ட எதிரியும், அவர்பக்கம் மெல்லமெல்லச் சாய்வான் என்பது நாடு கண்ட உண்மை. அவர் பேச்சு மென்மையானதாகவும், சீரானதாகவும், தொடர்பானதாகவும், கருத்தோட்டமிக்கதாகவும் மிளிர்ந்தது. எனவேதான் அவர் நிகரற்ற பேச்சுமன்னனாக விளங்கினார். இவரால் உருவாகக்கப்பட்டவர்களில் பலர், தமக்கே உரிய பேச்சாற்றலால் பல துறைகளில் முன்னுக்கு வந்துள்ளனர். அவர்களில் நாவலர் நெடுஞ்செழியனும் கலைஞர் கருணாநிதியும், கி. மனோகரனும் குறிப்பிடத்தக்கவராவர்.

இவர்கள் தவிர வேறு அரசியல் கட்சிகளிலும் பல நல்ல பேச்சாளர்கள் உள்ளனர். அவர்களுள் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சரங்கோத்தது போல வீராவேசமாகப் பேசுவார். இவர் பேச்சில் பழமொழிகள் மிகுதியாக இடம்பெறும். சில சமயங்களில் சுடுசொல் வரம்புகடந்து போவதுண்டு. ப. ஜீவானந்தமும் ம. பொ. சிவஞானமும் உரக்கப் பேசி மக்களுக்கு உணர்ச்சி ஊட்டுவதில் வல்லவர்கள்.

கனத்தது இளைப்பதா?

பொதுவாக நோக்குமிடத்து, தொடக்க காலத்திலும், இடைக்காலத்திலும் அண்மைக்காலத்திலும் பேச்சில் ஆழ்ந்த படிப்பும் அஞ்சாமையும் காணப்படுகின்றன. தற்காலப் பேச்சாளர் பலருக்கு ஆழ்ந்த படிப்பு இல்லை. எனவே பேச்சில் தெளிவும் செறிவும் மிகுதியாக இல்லை. சுருக்கமாக, மேடைப் பேச்சு முன்பு கனத்திருந்தது; இப்பொழுது இளைத்திருக்கிறது. பேச்சுக்கலை சிறப்புற்று வளர வேண்டுமானால், பேசுவோர் தொகை அதிகரிப்பதோடு, அவர்களின் கல்வி, கேள்வி பொறுப்புணர்ச்சி ஆகியவையும் மிகுதிப்பட வேண்டும்.

அண்ணாவின் வாழ்விலே...

பிறந்த தேதி	—15—9—1909
படிப்பு	—ஐந்தாவது வகுப்புவரை பச்சையப்பா கிளைப் பள்ளி, சின்னக் காஞ்சிபுரம்; முதல் படிவம் முதல் ஆறும் படிவம் வரை பச்சையப்பர் உயர் நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்; இண்டர் முதல் எம். ஏ. முடிய பச்சையப்பா கல்லூரி, சென்னை.
1934	—அரசியல், பொருளாதாரம், சரித்திரம் மூன்றி லும் பி. ஏ. ஆனர்ஸ் பட்டம் பெற்றார். பட்ட தாரி ஆன பின்பு கோவிந்த நாயக்கர் பள்ளியில் ஆங்கில ஆசிரியர் பணி.
1937	—முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சாமி சண்முகானந்த அடிகள், ஈழத்து சிவானந்த அடிகள், சாமி அருணகிரிநாதர், திரு. கி.ஆ.பெ. விசுவநாதம், உயர்திரு பெரியார் ஆகியோருடன் கிளர்ச்சி செய்தபோது அரசாங்கத்தைக் கைப் பற்றிட அவதூருகப் பேசி வகுப்பு துவேஷத் தைத் தூண்டிவிட்டதாக அரசினரால் வழக்குத் தொடரப்பட்டுச் சிறையேகினார்.
26—9—1938	—இந்தி எதிர்ப்புப் படைத் தளபதியாக இந்தி மொழி எதிர்ப்பு மறியலில் ஈடுபட்டதற்காக நான்கு மாதம் வெறுங்காவல் தண்டனை பெற்றுச் சிறை சென்றார்.
24—8—1940	—திருவாரூரில் ஜஸ்டிஸ் மாநில மாநாட்டில் திராவிட நாடு பிரிவினைத் தீர்மானத்தை வழி மொழிந்தார்.
1940	—புரட்சிக் கவிஞருக்கு ரூ. 25,000 நிதி திரட்டி, நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் நிதி வழங்கினார்.
9—2—1943	—சென்னை, சட்டக் கல்லூரி மண்டபத்தில் திரு. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் 'இராமாயணத்தை எரிப்பதா? வேண்டாமா?" என்ற விவாதத்தில் எரிக்கவேண்டும் என்று, சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களுடன் வாதிட்டு வென்றார்.

1944	—நீதிக் கட்சியைத் திராவிடர்க் கழகமாக மாற்றத் தீர்மானம் கொண்டுவந்தார்.
மே, 1946	—கட்டாய இந்தி எதிர்ப்புப் படை முதல் தளபதி யாக நியமிக்கப்பட்டார்.
17—9—1949	—தி. மு. கழகத்தைத் துவக்கினர்.
செப். 1949	—'ஆரியமாயை' நூல் எழுதியதற்காகக் குற்ற வாளி என்று நீதி மன்றம் ரூ. 100 அபராதம் விதித்தது.
1—3—1951	—'ஆரியமாயை' நூலுக்கு விதிக்கப்பட்ட தடையை மீறி எழுத்துரிமைப்போர் வெற்றி பெற்றது. அரசு நடவடிக்கை ஒன்றும் எடுக்க வில்லை.
1957	—காஞ்சிபுரம் சட்டமன்றத் தேர்தலில் பழம் பெரும் காங்கிரஸ்காரர் டாக்டர் சீனிவாசனைப் பல்லாயிரக் கணக்கான ஓட்டு வித்தியாசத்தில் வென்றார்.
26—2—1962	—காஞ்சி சட்டமன்றத் தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்தார்.
20—4—1962	—பாராளுமன்ற மேல்சபைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.
27—10—1962	—சீனப் படையெடுப்பை முறியடிக்க அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று பண்புரை நிகழ்த்தினர்.
1965	—சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான், ஹாங்காங், கம்போடியா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்று திரும்பினர்.
30, 31—12—1966 1, 2—1—1967	—மாநில மாநாடு தலைமை. எதிர்க் கட்சியினரை யெல்லாம் ஒரணியில் திரளச் செய்து கூட்டணி அமைத்த மிகச் சிறந்த இராஜதந்திரம்.
6—3—1967	—சென்னை ராஜாஜி மண்டபத்தில், முதலமைச்ச ராகப் பதவி ஏற்றார்.
11—4—1967	—ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் ஊதாண்ட் அவர்களை டெல்லியில் சந்தித்து உரையாடினர்.

30—4—1967 —திருவண்ணுமலையில் படி அரிசி 90 காசுக்கு விற்ருர்.

15—5—1967 —ரூபாய்க்கு ஒரு படி அரிசி சென்னையிலும் கோவையிலும் அமுலு வந்தது.

18—7—1967 —தமிழகத்திற்குத் 'தமிழ்நாடு' என அரசியல் சட்ட ரீதியாகப் பெயர் வைக்கக் கோரும் தீர்மானம் ஒன்றைச் சட்ட மன்றத்தில் முன் மொழிந்தார்.

18—11—1967 —அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பேருரை.

23—1—1968 —தமிழ் நாட்டில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகள் மட்டுமே பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கற்றுக்கொடுக்கப்படும், மும் மொழித் திட்டம் ஒழிக்கப்படும், தேசீய மாண வர் படை (N. C. C.) கட்டளைச் சொற்கள் இந்தியில் கூறுவது நிறுத்தப்படும் என்று சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

12—5—1968 —ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்கா, ஜப் பான் முதலிய நாடுகளிலும் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு யேல் பல்கலைக் கழகத்தில் 'சப் பெலோஷிப்' எனும் அரிய கௌரவத்தைப் பெற்றுத் திரும்பினுர். யேல் பல்கலைக் கழகத் தில் இந்த மரியாதையைப் பெறும் அமெரிக்க ரல்லாத முதல் தலைவர் இவரே.

8—9—1968 —அண்ணுமலைப் பல்கலைக் கழகம் "டாக்டர்" என்ற பட்டத்தை வழங்கிப் பெருமைப்படுத் தியது.

2—2—1969 —சென்னையில் காலமானுர்.

தொகுப்பு : நாகை - தருமன்

பண்பு மிக்க தலைவன்

அடக்கம் என்னும் பண்பைப் போற்றியதோடு, தாமே அதை வாழ்வில் கடைப்பிடித்தார் அண்ணா; புகழும் பெருமையும் பெற்ற நிலையிலும் அவர் அதைக் கைவிடவில்லை. இப்பெரும் பண்பு அருகியே காணப்படும் இக்காலத்தில் அதன் வடிவமாகவே வாழ்ந்தார் அண்ணா.

அவர் ஏழைகளையும் செல்வர்களையும் ஒருங்கே மதித்தார். ஏழைகளை ஏறி மிதிக்கும் செல்வச் செருக்கை வன்மையாக கண்டித்தாலும், தனிப்பட்ட மனிதர்களிடம் அவர் தரக்குறைவாக நடந்து கொண்டதே இல்லை. தமது பகைவர்களை,—அவர்கள் எத்தகைய இன்னல்களை விளைவித்திருந்தாலும்,—அவர் மனமுவந்து மன்னித்தார்; பழிக்குப்பழி வாங்கும் இயல்பு அவரிடம் தலைதூக்கியதே இல்லை. வசதியுள்ள பலர் அவருக்கு எதிரான பிரச்சாரத்தை முடுக்கிவிட்டு அவருடைய செல்வாக்கைக் குறைக்க முயன்றார்கள். தொடர்ந்து இந்தச் செயலில் ஈடுபட்டவர்களும் உண்டு. அப்போதும், அவர்களில் யாரையும், அவர், மனம் நோகத் திட்டியதில்லை. எல்லோரிடமும் அன்பு,—எல்லோரிடமும் மரியாதை,—இவைகளே அவருடைய வாழ்வின் இணைபிரியா நடைமுறைகள்.

இத்தகைய பண்புகளைப் பின்னணியாகக் கொண்டு பழமையையும் மூடத்தனத்தையும் அவர் எதிர்த்தார்: மதத்தின் பேராலும் அரசியலின் பேராலும் ஒடுக்கப் பட்டவர்களின் விடுதலைக்காகவே உழைத்தார். எனவே தாழ்த்தப்பட்டு, வாழ்வுரிமை பறிக்கப்பட்ட மக்களின் பண்புமிக்க தலைவராக உயர்ந்தார் அண்ணா. அவரை இழந்து விட்ட தமிழக மக்கள், தங்களுக்கு வாய்த்த தனிப்பெருந் தலைவனை இழந்துவிட்டார்கள் என்றே சொல்ல வேண்டும்.

டாக்டர் சௌந்தரராஜன்



கட்டிடம் எழுந்த கதை

கடந்த இருபத்து நான்கு ஆண்டுகளாகத் தில்லி மாநகரிலே இயங்கி, தன்னாலான தமிழ்ப்பணியைச் செய்து வருகிறது தில்லித் தமிழ்ச் சங்கம். இந்த அறுநான்கு ஆண்டுகளில், பல பெருந்தமிழர்களின் ஆதரவாலும் ஆர்வம் மிக்க இளைஞர்களின் உழைப்பாலும், சங்கம் நாளுக்கு நாள் வளர்ந்தோங்கி வந்துள்ளது.

சங்கத்தில் அறுநூறு—எழுநூறு உறுப்பினர்கள் இருந்து வருகிறார்கள். சங்கத்தில் பாதுகாத்துப் பயன்படுத்தப்பெறும் பழைய, புதிய தமிழ்ப்புத்தகங்களின் எண்ணிக்கை சுமார் எண்ணாயிரம். கடந்த சில ஆண்டுகளில் தலைமை நூலகம் ஒன்றும் கிளை நூலகங்கள் இரண்டுமாகத் தமிழ்ச்சங்கத்தின் புத்தக உதவிப்பணி விரிவடைந்துள்ளது.

காலஞ்சென்ற சத்தியமூர்த்தி அவர்களின் பேரால் படிப்பகம் ஒன்றையும் சங்கம் நடத்தி வருகிறது. தமிழில் உள்ள பல நாள், கிழமை, திங்கள் இதழ்களை இங்கே வந்து யாவரும் படிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. ஆங்கில, இந்தி, உருது இதழ்கள் சிலவும் இந்தப் படிப்பகத்திலே உண்டு. அயல் மொழியினருக்குத் தமிழ் கற்றுத் தரும் பணியிலும் சிலகாலமாகச் சங்கம் ஈடுபட்டுப் பலரின் வாழ்த்துக்களைப் பெற்றுள்ளது.

தமிழ்ப் பெருவிழாக்களையும், தமிழறிஞர்—தமிழ்ப்பெரியோர் விழாக்களையும் தமிழ்ச்சங்கம் விமரிசையாகக் கொண்டாடி வருகிறது. சங்கத்தின் ஆண்டு இதழாகிய சுடரை,

ஒவ்வோர் ஆண்டும் ஒரு பெரியவர் பெயரில் வெளியிட்டு மகிழ்கிறது. தமிழகத்திலிருந்து இங்குவரும் தமிழ்ப் பெரியோர் யாவருக்கும் உரிய வகையில் வரவேற்பு அளித்து, அவர்கள் தில்லித் தமிழ் மக்களோடு அளவளாவி மகிழவும் சங்கம் ஏற்பாடு செய்கிறது.



தில்லித் தமிழர் வரவேற்பில் முதல்வர் அண்ணா

இத்தனை பணிகளையும் தன்னலம் கருதாது செய்துவரும் தமிழ்ச்சங்கம், தனக்கென்று ஓர் ஆசையை வெகுகாலமாக வைத்துக் கொண்டிருந்தது. அந்த ஆசை தான் தனக்கு தில்லியிலே நிரந்தரமான கட்டிடம் ஒன்று வேண்டும் என்பது. இந்த ஆசையின் ஒரு பகுதி இப்போது நிறைவேறியுள்ளது.

'தமிழ்ச்சங்கத்திற்குச் சொந்தக் கட்டிடம் வேண்டும்' என்னும் திட்டம் ஏற்கனவே இருந்து வந்தாலும், திரு. கெ. வீ. வெங்கடாச்சலம் அவர்கள் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றதிலிருந்து இத்திட்டம் சுறுசுறுப்பு அடைந்தது. நல்லோர் உறவும் நாகரிக நடையும் பெற்ற பண்பாளராகிய திரு வெங்கடாச்சலம் அவர்கள் பொறுப்பை ஏற்றது, இளைஞர்களுக்கும் புதிய ஊக்கத்தைத் தந்தது; பல்லோரிடமும் கொடி வீசிப் படர்ந்துள்ள அவருடைய செல்வாக்கு சங்கத்திற்குத் தங்க நிழலாயிற்று! அவருடைய அன்பான வழிநடத்துதலில், பலரும், ஒருங்கிணைந்து தீவிரமாக வேலை செய்தார்கள்; தமிழக அரசாங்

கத்தாரும் மத்திய அரசினரும் உதவ முன்வந்தார்கள். மத்திய அரசு 50,000 உதவுவதாக அறிவித்து, இதுவரை ரூ. 34,000 தந்துள்ளது. திரு. பக்தவத்சலம், கலைஞர் கருணாநிதி ஆகியோரின் முதன்மைக் காலங்களில், தமிழக அரசு, முறையே ஒரு லட்ச ரூபாயும் 50,000 ரூபாயும் உதவியுள்ளது.

இத்தனை பேர் செய்த கூட்டு முயற்சி—உதவிகளின் குவிபலனாக, சுமார் மூன்றரை லட்ச ரூபாய் செலவில் சங்கக் கட்டிடம் எழுந்துள்ளது. ஆயினும் சங்கக் கட்டிடப் பணி இன்னும் முற்றுப் பெறவில்லை.

தலைவர்
திரு. கே. வி. வெங்கடாசலம்

இப்போது எழுந்துள்ள மூன்றடுக்குக் கட்டிடம் மூன்று விருந்தினர் அறைகளையும் நூலகம், படிப்பகம், கலைநிகழ்ச்சிகளுக்குரிய சிறிய அரங்கு ஆகிய பகுதிகளையும் கொண்டுள்ளது. இன்னும், சுமார் 800 பேர் உட்கார்ந்து நாடகம், திரைப்படம் பார்ப்பதற்கு வசதியான கலை அரங்கம் ஒன்று உருவாக வேண்டும். அழகிய சுற்றுமதில் ஒன்று எழுப்புவதோடு, சங்கத்தில் பயன்படுத்துவதற்குத் தோதுவான இருக்கைகள், மேசைகள், அலமாரிகள் முதலியவைகளும் பிற துணைப்பொருள்களும் வாங்க வேண்டும். இவற்றை நிறைவேற்றிச், சங்க அன்பர்களின் நெடுநாள் விழைவான சொந்தக் கட்டிடத்தை முழுமையடையச் செய்வதில் தமிழ் நல்லோர் அனைவரின் ஆதரவையும் சங்கம் எதிர்நோக்கி நிற்கிறது. பெரும் தொகைகள் கொடுக்க விரும்புவோர்கள் தயவு செய்து வருமானவரி இலாகாக் கடிதத்தைப் (பக்கம் ஐந்தை) பார்க்கும்படி சங்கம் கோருகிறது.

சங்கத்தின் வளர்ச்சியில் ஆர்வம் காட்டி ஆதரவு தந்து வந்துள்ள தமிழக அரசு முன்னாள் முதல்வர்கட்கும் இந்நாள் முதல்வர் கருணாநிதி அவர்கட்கும் சங்கம் தன் நன்றியறிதலைத் தெரிவிக்கிறது. தங்கள் செல்வாக்காலும் அயரா உழைப்பாலும் துளித்துளியாக உறுதி சேர்த்துச், சங்கக் கட்டிடப் பணிக்குத் துணைநின்ற பலநூறு இளைஞர்களையும் சங்கம் உவகைப் பெருக்கோடு வாழ்த்துகிறது. இப்பெருமக்களும் ஏனையோரும் காட்டப் போகும் ஆதரவால், தனது வெள்ளிவிழா ஆண்டிலேயே முழுமை பெற்றுத், தான் கொள்ளப் போகும் ஒள்ளிய கோலத்தையும், சங்கம் இப்போதே தன் அகக்கண்ணிலே கண்டு களிகொள்ளுகிறது.

வெளிச்சம் வேண்டும்

ஓர் இனத்தின் பண்பாடு அவ்இனத்தின் கொள்கைகளாலும் நடைமுறைகளாலுமே வாழ்வு பெறுகின்றது. சில போது, இவை பிறரின் கோட்பாடு—நடைமுறைகளில் கலந்து கரைந்து போவது உண்டு; போற்றிப் பரப்புவார் இன்றி, அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிச் சிந்திப்போன அந்த நடைமுறைக் கோட்பாடுகள் தனித்துச் சுருங்கி நின்று வற்றிப் போவதும் உண்டு. இந்த நிலையில், அந்த இனத்தை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டுமானால், அதற்கே உரிய இயல்புகளையும் கொள்கைகளையும் புதுப்பிக்க வேண்டும்; அதன் வீழ்ந்துபோன அம்சங்களைத் தட்டி எழுப்பி, அவைகளை மக்களிடையே பரப்ப வேண்டும்.

தமிழைப் பொறுத்தவரை இந்தச் செயலை இனிது நிறைவேற்றியவர் அண்ணா. அண்ணா தோன்றியிராவிட்டால் தமிழும், வெகு விரைவில், சமஸ்கிருதம் போல வழக்கிழந்த மொழியாகி இருக்கும் என்று கூடச் சொல்லலாம்!

ஒரு மொழியானது வளர்ந்து செழித்து, அதைப் பேசும் மக்களின் பண்பாட்டுக்கு ஊட்டம் அளிக்க வேண்டுமானால், அதிலே பெரும்புலமை பெற்றவர்கள் மட்டும் இருந்தால் போதாது. அவர்கள் வளரும் செடிக்கு தண்ணீர் மட்டுமே பாய்ச்சுவார்கள்; சிலபோது அதிகமான தண்ணீரைப் பாய்ச்சி விடுவார்கள்! செடியின் வளர்ச்சிக்குத் தேவையான சூரிய வெளிச்சத்தை அவர்களால் தரமுடியாது. அந்த எழுச்சிப் பண்பை அண்ணா போன்ற மக்கள் தலைவர்களாலேதான் தர முடியும். தமிழ் என்னும் செடிக்குச் சூரிய வெளிச்சமாக விளங்கிய தலைவர்களிலே ஒருவர் அறிஞர் அண்ணா.

எஸ். எம். பாலசுப்பிரமணியம்

தில்லித் தமிழ்ச் சங்கம்

1970ம் ஆண்டுச் செயற்குழு

தலைவர்	:	திரு. கெ. வி. வெங்கடாச்சலம்
துணைத்தலைவர்	:	,, என். கிருஷ்ணமூர்த்தி
நிருவாகத் துணைத்தலைவர்	:	,, அ. வி. குப்புசாமி
பொதுச் செயலாளர்	:	,, சேது கிருஷ்ணமூர்த்தி
இணைச் செயலாளர்	:	,, ஆர். எஸ். வேங்கடேசன்
பொருளாளர்	:	,, எஸ். குருசாமி
உறுப்பினர்கள்	:	,, கே. கஸ்தூரிரங்கன்
		,, தி. வை. நாராயணசாமி
		,, சி. என். ரங்கநாதன்
		,, ரா. விசுவநாதன்
		,, எஸ். ரங்கராஜன்
வட்டாரச் செயலர்கள்	:	,, ஆர். ஆர். சாரி
		,, எம். நாகப்பன்
		,, எஸ். சங்கரன்
		,, எஸ். வைத்தீசுவரன்
		திருமதி. யோகா கணபதி
நூலகர்கள்	:	திரு. பி. ஆர். வெங்கடகிரி
		,, சி. ராகவன்
		,, எஸ். பஞ்சாபகேசன்
தணிக்கையாளர்	:	,, ஆர். சுப்பிரமணியன்
சுடர் நிருவாக ஆசிரியர்	:	,, தி. கோ. அனந்தசாமி
சென்னை முகவர்	:	,, வீ. செ. கந்தசாமி
அண்ணா மலர் ஆசிரியர்	:	,, சாலை இளந்திரையன்

நன்றி

சுடர் 19வது மலர்' காலஞ்சென்ற தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்களின் நினைவாக வெளிவருகிறது. நமது 'நிலையும் நினைப்பும்' உயருவதற்கே உழைத்து வந்த அவருடைய நிலையும் நினைப்பும் விளங்கும் முறையில் இம் மலரை உருவாக்கி வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

மலரின் கருத்து நலத்துக்குக் காரணர்கள், எம்பால் அன்புகொண்ட எழுத்தாளர் பெருமக்கள்; அவர்களோடு தொடர்புகொண்டு, மலரின் இதழ்களை அடுக்கி அமைத்து உதவியவர், திரு சாலை இளந்திரையன் அவர்கள். அண்ணா வின் கையெழுத்தால் மலர் உயர்வு பெற்றிருப்பதற்குக் காரணர் கள், அண்ணா கடிதத்தின் அச்சேடு தந்துதவிய "விடுதலை!" நாளிதழ் பொறுப்பாளர்கள். மலரின் அளவுக்கும் செழுமைக் கும் காரணர்கள், தேடித் தேடி விளம்பரங்களைச் சேகரித்துச் கொணர்ந்த ஆர். விசுவநாதன், எஸ். ரங்கராஜன், சி. ராகவன் எஸ். சங்கரன், பி. ஆர். வெங்கடகிரி, ஆர். ஆர். சாரி. எம். பா. சுப்பிரமணியன், கே. பி. பாலன் ஆகிய திருவாளர்கள். மலரின் அழகிய அச்சமைப்புக்குக் காரணர்கள், சிட்டி பிரிண்டிங் அச்ச கத்தாரும், திரு. தி. கோ. அனந்தசாமியும் சங்கத்தின் சென்னை முகவர் திரு. வீ. செ. கந்தசாமியும் ஆகிய நல்லோர்கள். சுடர் மலர் தொடர்ந்து அவிழ்ந்து மணம் பரப்பிவரக் காரணர்கள், விளம்பரம் என்னும் பெயரால் தங்கள் ஆதரவைப் பொழிந்து வரும் பலதுறைப் பெருமக்கள். சங்கம் தனது பணிப்பயணத் தில் தளராது முன்செல்வதற்குக் காரணர்கள், நன்கொடை யாலும் அன்பார்வ ஆலோசனைகளாலும் எங்களை ஊக்கிவரும் எங்குமுள்ள தமிழர்கள்; அவர்களில் முன்னணியில் நிற்போர் தில்லித் தமிழ்ப் பெருமக்கள்.

இந்த நேரத்தில், இவர்கள் அனைவரையும் உவகையோடு நினைவுகூர்ந்து, எங்கள் இதயப் பொய்கையின் நன்றி மலர்களை அவர்கள் திருமுன் படைக்கிறோம்.

செயற்குழு,

தில்லித் தமிழ்ச் சங்கம்